உலக ஆன்மீக, நாகரீக, வரலாற்றுக் கண்ணோட்டத்தில்

ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன்

ஞா. இராஜன் சிகாமணி

உலக ஆன்மீக, நாகரீக வரலாற்றுக் கண்ணோட்டத்தில்

ஆதிமனிதன்
ஆதாம் ஒரு திராவிடன்

ஞா. இராஜன் சிகாமணி

நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர்	:	உலக ஆன்மீக, நாகரிக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் **ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்**
ஆசிரியர்	:	ஞா. இராஜன் சிகாமணி, பி.ஏ.,
வெளியீட்டு முகவரி	:	நூலாசிரியர் நற்பொருள் பதிப்பகம் 2-60, சானல் தெரு, ஜேம்ஸ்டவுண் & அஞ்சல் கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சல் எண் : 629 504
உரிமை	:	ஆசிரியருக்கு மட்டும் இந்நூலின் கருத்துகளை ஆய்வேடுகளிலோ, நூல்களிலோ, பத்திரிகைகளிலோ, வேறு எந்த முறையிலோ உபயோகிக்க விரும்புவோர் ஆசிரியரின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.
பதிப்பு	:	முதற்பதிப்பு
ஆண்டு மாதம்	:	ஏப்ரல் 2005
பிரதிகள்	:	1000
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	xxii + 188
நூல் அளவு	:	டெம்மி 1/8
எழுத்து உருவ அளவு	:	10.5 புள்ளிகள்
தாள்	:	13.2 சேசசாய்
பைண்டிங்	:	பெர்பெக்ட் பைண்டிங்
அச்சிட்டோர்	:	நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், 67/1 கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 629 001 ✆ : 04652 - 233853
விலை	:	ரூ. 60/-

கடவுள் வான் நீத்தார். ஏன்?



ஆதியிலே தேவன் ஆதாமையும் ஏவாளையும் பூமியின் மண்ணினாலே தேவசாயலாக உருவாக்கினார். அவர்களுக்கென்று ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை, தேவன் உண்டாக்கினார். அத்தோட்டத்தின் நடுவே முளைத்திருந்த விருட்சங்களில் ஒன்றின் கனியைப் புசிக்கவேண்டாம் என்று விலக்கி, தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆதாமும் ஏவாளும் தேவன் கொடுத்த கட்டளையை மீறி அக்கனியைப் புசித்தனர். தேவனுடைய கட்டளையை மீறி அவர்கள் செய்த செயல் பாவம் என்பதால் அவர்களுக்கும், அவர்கள் மூலமாய் மனிதர் யாவருக்கும் தண்டனை உண்டாயிற்று. பாவத்தின் தண்டனையிலிருந்து மனிதரை மீட்கும்படி, வானத்திலிருந்த கர்த்தராகிய இயேசுகிறித்து வானத்திலிருந்திறங்கி, உலகத்தில் வந்து, மனிதருடைய மீட்பை உண்டுபண்ணினார் என்று கிறித்தவ சமய நூலில் செய்தியாகக் கூறப்பட்டுள்ளது.

கிறித்தவரின் சமய நூலாகிய பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள அதே மீட்பின் செய்தியை திருவள்ளுவரும் தனது நூலாகிய திருக்குறளில் கூறியுள்ளார். அச்செய்தியைக் கூறுவதற்குத் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ள சில சொற்களும், சொற்றொடர்களும் ஆராயப்பட்டு விரிவாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. அதுபோலவே, சிவஞான போதத்தில் காணப்படும் சில சொற்களும் ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

நீங்கள் புசிக்கவேண்டாம் என்று சொல்லி, தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் விலக்கின கனியை '**நஞ்சு**' என்று கண்ணோட்டம் எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அதனைப் புசித்ததனாலேயே '**ஆதாம் ஒரு திராவிடன்**' என்று இந்நூலின் செய்தியாக அறிவிக்கப்படுகிறது.

உலகின் முதல் திராவிடன் எனப்படும் ஆதிமனிதன் ஆதாமின் வழித்தோன்றல்களாகிய மனிதர் அவர்களுக்கு உண்டான தண்டனையிலிருந்து மீட்கப்பட்டு, நல்வாழ்வாகிய நீடுவாழ்வை அடையும்பொருட்டு, அவர்களுக்கு பாவமன்னிப்பாகிய மீட்பை அருளுவதற்குக் கடவுள் வானத்திலிருந்திறங்கி இவ்வுலகத்திற்கு வந்த செய்தியையே கடவுள் வான் நீத்தார் என்றும், மலர்மிசை ஏகினான் என்றும், நிறைமொழி மாந்தரானார் என்றும், அன்பின் உயர்நிலையடைந்து (மிகுதியால்), சிவிகை பொறுத்தான், ஒடு ஊர்ந்தான் என்றும், ஐந்தவித்தல் எனும் செயற்கரிய செயலைப் பொறிவாய் எனும் சிலுவை (சிவிகை) யில் தம்மைத்தாமே பலியாக்கியதால் நிறைவேற்றி, தன் இன்னுயிரைத் துறந்து, மரித்த பின்னும் உயிர்த்தெழுந்து, அதனால் அந்தணர் எனப்பட்டு, மீண்டும் பெருமையிற்சிறந்த கடவுளேயாகி பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதால் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே எனப்படுகிறார் என்றும், அவரது மாணடி சேர்ந்தார் பொய்தீர் ஒழுக்க நெறிநின்று நீடுவாழ்வார் என்றும் கர்த்தராகிய இயேசு கிறித்துவைக் குறித்து, திருவள்ளுவர் தெளிவாகக் கூறியிருப்பதை இந்நூலினுள்ளே விரிவாக விளக்கப்பட்டிருக்கக் காணலாம்.

ஆசிரியர்

உரிமைகளுக்குத் திரும்புவோம் (Back to Human Rights) என்ற உழைக்கும் வர்க்கத்தின் குரலும் எழும்பத் தொடங்கியுள்ளன.

இந்தப் பின்னணியில்தான் நூலாசிரியர், படைப்பும் படைத்தவரும் சந்திக்கும் ஆதி மனிதனாகிய ஆதாமுக்குத் திரும்புவோம் (Back to Adam) என்று கூறுமாற்போல, எழுதியுள்ள 'ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்' என்ற இந்நூலை நான் காண்கிறேன்.

ஆய்வின் ஆழம், உயரம், அகலம் ஆகியவற்றிற்கு எல்லையே இல்லை. பல்வேறு நாடுகளில் தோன்றிய ஆய்வு நூல்களுக்குக் கணக்கில்லை. எண்ணுக்கடங்கா ஆய்வுநூல்களின் நடுவில், 'ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்' என்ற ஒரு ஆய்வுநூல் தேவையா என்று பலர் கருதலாம். நிச்சயமாக தேவை உண்டு. படைப்பின் உச்சக்கட்டம் ஆதாம். படைத்தவரும் படைப்பும் சங்கமித்த இடம் ஆதாம். உலக அறிவும் (Material Knowledge) ஆன்மீக ஞானமும் (Divine Wisdom) சங்கமித்து வெளிப்பட்ட இடம் ஆதாமின் குடும்பமும் ஏதேன் தோட்டமும் ஆகும். நன்மையும், தீமையும் சங்கமித்த இடம் ஆதாமின் தோட்டம்.

எனவே ஆதாம் யார்? அவரது வரலாறு என்ன? அவர் படைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? ஆதாமின் வாரிசுகளின் முடிவு என்ன? என்றறிதல் ஆதாமின் வழித்தோன்றிய அனைத்து மக்களுக்கும் மிக மிகத் தேவை. இந்தக் கோணத்தில் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நிலைத்திருந்து உலகளாவிய அறிவையும் ஞானத்தையும் விளக்கும் இலக்கியங்களை கட்டிக்காக்கும் தமிழ் மொழிக்கும், ஆதி மனிதனின் வரலாற்றுக்கும் தொடர்பு உண்டு என்று ஆய்வு செய்ய முயலும் இந்த ஆய்வு நூலின் ஆசிரியரை நான் பாராட்டுகிறேன்.

வரலாறு சுழன்றுவரும் (History repeats) என்பர். திராவிட இன வரலாறு மறந்து மறைக்கப்பட்டு கிடந்தது. இருபதாம் நூற்றாண்டில் திராவிட வரலாறு தோண்டியெடுக்கப்பட்டு, இருபத்தோராம் நூற்றாண்டில் அது விரிவுபட்டு விளக்கம் பெற உள்ளது என்பது உலகளாவிய ஆய்வாளர்களின் கருத்து. திராவிட இனத்தவராகிய கருப்பு நிற மக்கள் மீதும் அவர்தம் நாகரிகத்தின் மீதும், ஆன்மீகம் குறித்தும் உலக ஆய்வாளர்களின் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

திராவிடம் என்ற சொல்லுக்கு இதுவரையிலும் நாம் அறிந்திராத பல விளக்கங்களை ஆதி மனிதனாகிய ஆதாமுடன் தொடர்புபடுத்தி

எம். சுந்தர் ஏசுவடியான் (எ) எம்.எஸ். மங்காடு,
நிறுவனர்,
உலக திராவிட மையம், நாகர்கோவில்.
ஓய்வுபெற்ற மாநில இயக்குநர்,
கதர் கிராம கைத்தொழில் ஆணையம்,
இந்திய அரசு, மும்பை.
நிறுவன உறுப்பினர்,
திராவிட மெய்ப்பொருளியல் ஆய்வு நிறுவனம்,
ஹைதராபாத்.

இந்தியன் அனாரிய சமாஜ் ஊழியங்கள்,
16-A, சிதம்பரநாதன் தெரு,
இராமவர்மபுரம்,
நாகர்கோவில் - 629 001
செல் : 98651 90390

அணிந்துரை

'உலக ஆன்மீக, நாகரீக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன்' என்று திரு. ஞா. இராஜன் சிகாமணி அவர்கள் எழுதிய நூலைப் படித்தேன். தமிழ் மொழி கற்றறிந்த அறிஞர்களையும் ஆன்மீக ஆய்வாளர்களையும் இந்நூல் சிந்திக்கத்தூண்டும்.

கடவுள் மனிதனைப் படைத்தார் என ஆத்திகரும், மனிதன்தான் கடவுளைப் படைத்தான் என நாத்திகரும் கூறி அதை நிலைநாட்டச் செய்யும் முயற்சிதான் உலக வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. இம்முயற்சியில் நாத்திகர்கள் படைப்பையும், ஆத்திகர்கள் படைத்தவரையும் குறித்து ஆய்வு செய்து தங்கள் வாதங்களுக்கு வலுக்கூட்டுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டு உலகாயவாதிகளின் (Materialists) நூற்றாண்டாகத் திகழ்ந்தது. படைக்கப்பட்ட பொருட்களை ஆய்வு செய்து அறிவியலின் உச்சக்கட்டத்தை அடைந்து ஒரு அறிவு வெடித்தலையே (Knowledge explosion) நிறுவியது. அதன் மூலம் படைத்தவரின் தேவை உள்ளதாக சிந்திக்கவே உலகாயவாத அறிவர்களுக்கு நேரமில்லாமற்போனது. ஆன்மீகவாதிகளின் வாதங்கள் வலுவிழந்ததாகக் காட்சியளித்தது.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஆன்மீகவாதிகளின் குரல் பொங்கத் தொடங்கியிருக்கின்றது. வேதங்களுக்குத் திரும்புவோம் (Back to the vedas) என்ற இந்தியர்களின் குரலும், விவிலியத்திற்குத் திரும்புவோம் (Back to the Bible) என்ற ஐரோப்பிய கிறிஸ்தவரின் குரலும், மனித

நூலாசிரியர் விளக்கியுள்ளார். தமிழ் மொழியிலிருந்தே தமது விளக்கங்களை முன் வைத்துள்ளார். திராவிட வேதங்கள் எனக் கருதக்கூடிய திருக்குறள், சிவஞானபோதம் ஆகியவற்றை அடிப்படையாக்கி, விவிலிய ஒளியில் நூலாசிரியர் தமது கருத்துகளை முன் வைத்துள்ளார். ஏற்பதும், மறுப்பதும் வாசகர்களின் உரிமை. ஒருமுறை வாசித்தவரை இந்நூல் சிந்திக்கத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

தரா + விடம் = திராவிடம் என்றும், விடம் = விஷம் = நஞ்சு என்றும் விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்த விஷத்திற்கும், பாம்புக்கும், தரை அல்லது மண்ணினால் உருவாக்கப்பட்ட மனிதனுக்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுகிறது. இந்த நஞ்சுண்ட கேட்டை நீக்க, கடவுள் வான் நீத்து வந்து திராவிடனின் விடத்தை (விஷத்தை) நீக்கி திரமிடத்தில் (மோட்சத்தில்) தேவர்களைப் போல வாழும் நிலமிசை நீடு வாழ்விற் சேர்ப்பதையே ஆதாமின் கண்ணோட்டம் வழியாக திருவள்ளுவர் விளக்குவதாக ஆசிரியர் விளக்குகிறார். இரண்டாயிரம் ஆண்டுகள் மறைந்து கிடந்த திருவள்ளுவரின் சிறப்பு, இருபத்தோராம் நூற்றாண்டில் ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்தப்படுவதில் இறைவனின் திட்டங்கள் ஏதோ இருக்கத்தான் வேண்டும் என்று நான் கருதுகிறேன். திருக்குறளில் வரும் சில சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் ஆசிரியர் தரும் விளக்கங்கள் வியப்பை விளைவிக்கின்றன. தமிழ் அறிஞர்கள் நிச்சயமாக இந்நூலை மிகவும் விரும்பிப் படித்து இன்புற்று பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன். இவ்வாசிரியர் தொடர்ந்து பல நூல்களை எழுதவேண்டும். ஆசிரியருக்கு எனது நல்வாழ்த்துகள்.

நாகர்கோவில் அன்புடன்
12-03-2005

H. Sunder Yesuvadian

Institute of Asian Studies

Chemmancherry, Sholinganallur P.O
Chennai - 600 119, INDIA
Tel. : 2450-0831, 24502212
Res : 2496-4831
Cell : 9840526834
Fax : (91) 44-24964831
E-mail : ias@xlweb.com

Dr. G. JOHN SAMUEL,
M.A. (English), M.A. (Tamil), Dip.in Ling., Ph.D.
Founder Director and Secretary
Editor-in-Chief of the Encyclopedia of Tamil Literature

வாழ்த்துரை



இந்திய நாட்டில் தூய தோமா கிறித்தவ அறக்கோட்பாடுகளை ஆற்றலுடன் விதைத்துச் சென்றார் என்ற வரலாற்று உண்மை பல்வேறு நாட்டு அறிஞர்களாலும் தக்க சான்றுகளோடு ஆராய்ச்சிப் பூர்வமாக நிலைநாட்டப்பட்டுள்ளது. இதனால், ஏறத்தாழ 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் ஆன்மீகக் கலாச்சார பாரம்பரியங்களை இந்திய மண்ணில் பெற்றுத்திகழும் பழைய சமயங்களுள் கிறித்தவமும் ஒன்று என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

எனினும், மிகப்பிற்காலத்தில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களால் கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டுச் சமயம் தான் கிறித்தவ சமயம் என்று பலரும் தமது ஆதாரமற்ற மதிப்பீடுகளை ஆய்வுக்கண்ணோட்டமின்றித் தருவது வரலாற்று உண்மையினை இருட்டடிப்புச் செய்யும் முயற்சியாகும். இந்நிலையில், ஆதிக் கிறித்தவத்தின் வரலாற்றினை விரிவாக ஆய்ந்து மேலும் தெளிவுபட நிலைநாட்ட வேண்டிய கடமை பல அறிஞர்களுக்கும் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றது. இந்நிலையில், ஆதிக்கிறித்தவம் பற்றிய வரலாற்று ஆய்வு இந்திய நாட்டில் மட்டுமின்றி உலகெங்கிலும் தற்போது ஆழமாகக் கால்கொள்ளத் தொடங்கியுள்ளது.

2000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்திய மண்ணில் பரவியிருந்த ஆதிகிறித்தவம் இந்திய சமயங்கள் மீதும், இலக்கியங்கள் மீதும், மொழிகள் மீதும், பண்பாட்டின் மீதும் ஏற்படுத்திய தாக்குரவுகளைப் பல்வேறு அறிஞர்களும் விரிவாக ஆய்வு செய்யத்தொடங்கினர். திருக்குறளில் தொடங்கி, பக்தி இலக்கியங்களில் தொடர்ந்து, சித்தர்களின் பாடல்கள் வரை கிறித்தவ சமயத்தின் தாக்குரவுகள் மிக

ஆழமாக ஏற்பட்டிருப்பதைப் பலரும் தொடர்ந்து கண்டும், காட்டியும் வருகின்றனர். அந்த வரிசையில் தோன்றிய ஒரு நூலே திரு.ஞா. இராஜன் சிகாமணி அவர்களின், 'ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்' என்ற நூலாகும்.

திராவிட மொழிகளின் கண்டுபிடிப்பும், ஹரப்பா, மொகஞ்சதாரா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாய்வுகளும், ஆதி கிறித்தவம் பற்றி ஆராய்ந்த அறிஞர்களின் ஆய்வு முயற்சிகளுக்கு மேலும் சில புதிய பரிணாமங்களை தந்து நின்றன. ஒரு பக்கத்தில் திராவிட மொழிகளைப் பேசுகின்ற மக்கள் மத்தியதரைக் கடற்பகுதிகளிலிருந்து வந்திருக்கலாம் என்று பேசப்பட்டபோதிலும், கடலால் அழிக்கப்பட்ட குமரிக்கண்டத்திலிருந்து திராவிட இனம் மத்தியதரை கடற்கரைப் பகுதிகளுக்குச் சென்றிருக்கலாம் என்ற கருத்தும் தற்போது வலுப்பட்டு வருகின்றது. கிறித்தவத் திருமறையின் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே திராவிட நாகரிகம் பாலஸ்தீனப் பகுதிகளிலெல்லாம் பரவியிருந்ததற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகளும், மொழி ஆதாரங்களும் உள்ளன. தமிழ்மொழியின் வேர்களும் விழுதுகளும் எபிரெய மொழியிலும் எபிரெயப் பண்பாட்டிலும் ஆழமாகப் பதிந்திருப்பதைப் பல ஆராய்ச்சியாளர்களும் தக்க சான்றுகளுடன் காட்டியுள்ளனர். ஆபிரகாம் என்பவர் 'ஊர்' என்ற பகுதியிலிருந்து வந்ததாகக் கூறப்படும் பழைய ஏற்பாட்டுப் பகுதியும் 'ஊர்' என்பது திராவிட மொழிச் சொல்லே என்ற மொழியியலாளரின் துணிபும் நம்மை வியக்க வைக்கின்றன. இந்நிலையில், இந்திய நாட்டிலிருந்து சென்ற திராவிடர்கள் புகுத்திய வழிபாட்டு முறையே பழைய ஏற்பாட்டுக்கால வழிபாட்டு முறையாகும் என்ற எண்ணமும் ஆராய்ச்சியாளர்களிடம் பரவத் தொடங்கியது. இந்த வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு முயற்சிகளின் பின்னணிகளில் தோன்றிய பல நூல்களில் திரு. ஞா. இராஜன் சிகாமணி அவர்களின் நூலும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

முனைவர் மு. தெய்வநாயகம் உள்ளிட்ட பலர் இத்துறையில் பல முன்னோடி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் ஆய்வுப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டு மலர்ந்த இந்நூலின் ஆசிரியர் வேறு பல புதிய விளக்கங்களையும் கருதுகோட்களையும் தருவது சுட்டத்தக்கது. இவை ஏற்புடையனவா அல்லவா என்பதை இவற்றைத் தொடர்ந்துவரும் எதிர்கால ஆய்வுகள் தெளிவுபடுத்தும். இவர்தரும் ஆராய்ச்சிக் கருத்துகள் முடிந்த முடிபல்ல என்பதையும், அவை விரிவாக

மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியவை என்பதையும் ஓர் ஆராய்ச்சியாளன் என்ற நிலையில் நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். ஆய்வுகள் என்பது முடிந்த முடிபல்ல என்பதையும், மெய்ப்பொருளை நோக்கி மேற்கொள்ளப்படும் தேட்ட முயற்சிகளே அவை என்பதையும், எப்போதும் மறுபரிசீலனைக்கு அவை உரியவை என்பதையும் நாம் மறந்துவிடத் தேவையில்லை. திரு. ஞா. இராஜன் சிகாமணியின் ஆய்வு முடிவுகளும் அப்படிப்பட்டவையே என்பதில் ஐயமில்லை. இத்தகைய ஆய்வுகள் பல தொடர்ந்து தோன்ற வேண்டும் என்பதும், அவ்வாறு தோன்றும் போது மறைந்துபோன உண்மைகளின் மீது சில புதிய வெளிச்சங்கள் தோன்றும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.

"எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் - அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற தமிழ்ச் சிந்தனைக்கேற்ப மெய்ப்பொருளைக் காண்பதற்கு இத்தகைய ஆய்வுகள் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டுள்ள இந்நூலின் ஆசிரியர் இந்நிலையில் நமது பாராட்டுக்குரியவர் ஆகின்றார். அவர் இத்துறையில் பல ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதும் புதிய பல தேட்டங்களுக்குத் துணைபுரிய வேண்டும் என்பதுவும் நமது எதிர்பார்ப்பு. நூலாசிரியரின் இப்பணி மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

அன்புடன்

(ஜி. ஜாக் சாமுவேல்)

அருள்திரு. **முனைவர். ஜாஷ்வா சிரோன்மணி,** B.A., B.D., M.Th., D.Th.,
முதல்வர்,
கன்கார்டியா இறையியல் கல்லூரி,
நாகர்கோவில் - 629 001
கன்னியாகுமரி மாவட்டம்
தமிழ்நாடு, இந்தியா.

வாழ்த்துரை



திராவிடமும் தமிழ் மொழியுமின்றி பாரம்பரியம் மிக்க இந்தியாவை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாது என்பது கடந்த நூற்றாண்டிலேயே நிலைநாட்டப்பட்டுள்ள உண்மை. இதனால், ஆரிய பிராமணியம் மற்றும் சமசுகிருத இலக்கியங்களால் மட்டும் இந்தியாவை அறிந்திடமுடியும் என்ற மேற்கத்திய கருத்து பொய்த்துவிட்டது. தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றவர்கள் தமிழ்த் திராவிடம் சமசுகிருத ஆரியத்தைவிட காலத்தால் முந்தியது; அதிக பதப்படுத்தப்பட்டிருப்பதால் உலகத் தரம் வாய்ந்தது, செம்மையானது எனக் கண்டறிந்து உலகுக்கு உணர்த்தி வருகின்றனர். இந்த வரிசையில் சேர்ந்துள்ள மற்றுமோர் படைப்புதான் “ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்” என்ற இந்நூல்.

வாழ்க்கை காலங்களும் குடியிருப்பின் எல்லைகளும் மாறுபட்டிருப்பினும்; திராவிட, ஆரிய, மங்கோலிய, ஏனைய மனிதக் குழுக்கள் யாவுமே “ஆதாம்” என்னும் ஒன்றிலிருந்தே உண்டு பண்ணப்பட்டிருக்கின்றனர். வேறெந்த மனிதக் குழுக்களையும் போன்று திராவிட இன மக்களும் ஆதாமின் வழித் தோன்றல்களே. எனவே, ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன் எனும் கூற்று எல்லோருக்கும் ஏற்புடையதுதான். ஆதி மனிதன் ஆதாம் தென் இந்தியாவில், தமிழ் மண்ணில் வாழ்ந்தவன் என்பது இவர் கூற்று. அவர் ஓர் தமிழன், திராவிடன் எனவும் சாதிக்கின்றார். அந்த தமிழ்த் திராவிடனிலிருந்து தான் இதர மனிதக் குழுக்கள் யாவும் தோன்றியுள்ளன என்கிறார். ஆய்வு முடிவுகள் யாவும் காலத்தால் மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை என்றாலும், செய்து முடித்த ஆய்வுகள் பாராட்டுதற்குரியனவே.

ஆதாம் ஓர் தொடக்கத்தைக் குறித்து நிற்கும் சொல். மனித வாழ்க்கையின் தொடக்கத்தைக் குறித்த திருமறை விளக்கத்தில்

இப்பெயர்ச் சொல் வருகின்றது. மனித வரலாற்றின் ஒளிமயமானதோர் புதிய தொடக்கத்தைக் குறிக்க "இரண்டாம் ஆதாம்" என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. விலக்கப்பட்ட பழத்தைத் தின்று வாழ்க்கையைப் பாழும் கசப்பும் ஆக்கி நம்மையெல்லாம் தம் வாரிசுகளாகப் பெற்றிருக்கும் ஆதி மனிதன் "முதல் ஆதாம்". பாழும் கொடுமையுமான இந்நிலை நீங்கும் பொருட்டு சிலுவையில் தம்முயிர் நீத்த இயேசு நம்மையெல்லாம் தன்னுடலாக்கிக் கொண்டு தலையாக வாழும் "இரண்டாம் ஆதாம்" எனத் திருமறை கூறுகின்றது.

இயேசுவின் சீடர்களில் ஒருவர் இந்தியாவுக்கும் வந்தார்; பொது மக்களையும் பெரியார்களையும் சந்தித்தார்; ஏறக்குறைய 20 ஆண்டுகள் நற்செய்திப் பணியாற்றி இறந்துபட்டார் என்பது வலுப்பெற்று வரும் பாரம்பரியம். அதன்படி, கிறிசுதவ நற்செய்தி திருவள்ளுவர் காதுக்கும் எட்டியிருக்கவேண்டும். அவர் தம் படைப்புக்களில் இடம் பெற்றிருக்கவேண்டும். இந்நிலையில் இயேசு சம்பவமும் அதைச் சார்ந்த அறநெறி போதனையும் தான் திருக்குறளில் கருவாக அமைந்துள்ளது என்பது ஆசிரியரின் முடிவு.

"கடவுள் வான் நீத்தார்" எனும் வாசகத்தினை திருக்குறளின் முதல் மூன்று அத்தியாயங்களிலிருந்து பக்குவமாக வடித்தெடுத்து, 'கடவுள் இயேசுவில் உலகினை மீட்க வந்தார்' எனும் நற்செய்தியை வள்ளுவர் இப்படிக் கூறியுள்ளார் என்கிறார். உலகின் பாவம் போக்க ஒரே பலியாக தம்மை ஒப்புக்கொடுத்த இயேசுவை "ஐந்தவித்தான்" எனவும்; இயேசுவை கொலை செய்ய ரோம அரசு பயன்படுத்திய சிலுவையை "சிவிகை" எனவும் வள்ளுவர் கூறியுள்ளார் என்கிறார்.

மொழி மற்றும் கலாச்சார பின்னணிகளுக்கேற்ப ஒரே சம்பவத்தை விளக்கும் தொடர்களும் இறையியல் வடிவங்களும் மாறுபட்டிருப்பது இயல்பு. உலக மீட்பர் இயேசுவை "உலகத்தின் பாவத்தைச் சுமந்து நீக்கும் தேவ ஆட்டுக்குட்டி" என முழுக்கு முனிவர் யோவானும், "வாக்களிக்கப்பட்ட மேசியா" என பவுல் அடியாரும் யூதர் உள்ளிட்ட மேற்கு ஆசிய மக்களுக்கு அறிமுகப்படுத்தினர். "வார்த்தையானவர் மாமிசமானார்" என தூய யோவான் கிரேக்க மெய்யியல் பின்னணியில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கும், "கடவுள் வான் நீத்தார்", "பொறிவாயில் ஐந்தவித்தான்" என திருவள்ளுவர் தமிழ் மக்களுக்கும் அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். இந்த ஒரே இயேசு சம்பவம் வேறு எந்தெந்த மொழி, மெய்யியல் மற்றும் கலாச்சார பின்னணிகளில் எப்படியெல்லாம் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன எனும் ஆராய்ச்சி தொடர

வேண்டிய ஒன்று. கிறிசுதியலின் முழுவடிவம் அப்பொழுதுதான் கிடைக்கப்பெறும்.

ஆசிரியரின் ஆய்வுப் பணிகள் தொடரவேண்டும்; வாசகர்கள் திறந்த மனதோடு படித்து ஏற்புடையவைகளை பிறர்க்கும் அறிவிக்கவேண்டும்; தமிழ் மொழிவழி செய்யப்படும் இவ்வாய்வுகளின் பயன் உலகறியும் வகையில் பிற மொழிகளிலும் ஆக்கப்படவேண்டும் என்பவை எமது கனவுகள். ஆய்வுப்பணி தொடர வாழ்த்துக்கள்.

நாகர்கோவில்,
மார்ச், 2005.

அன்புடன்

ஜாஷ்வா சிரோன்மணி

பேராசிரியர் முனைவர் **யா.தா. பாசுகரதாசு**
பாடத்திட்ட இயக்குநர்,
தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்,
சென்னை - 600 080

01-03-2005

அணிந்துரை

'உலகப் பொதுமறை'யாம் திருக்குறள் பற்றிய ஆய்வுகள் ஏராளமாக வெளிவந்த வண்ணம் உள்ளன. திருக்குறள் பற்றிய ஆய்வுகளில் பழைய உரையாசிரியரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவருள்ளும் பரிமேலழகரின் உரையைப் பன்மாணும் சிறப்பித்துக் கூறும் அறிஞர் உளவாறுபோல அன்னாரின் உரையிலுள்ள நச்சுத்தன்மையையும் திரிபுரைகளையும் புலவர் குழந்தை, பாவாணர் போன்ற அறிஞர் பலர், தகுந்த ஏதுக்கள் பல காட்டி மறுத்தும் உள்ளனர்.

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான கருத்துகளே திருக்குறளில் பொதிந்து கிடக்கின்ற காரணத்தால் அஃது உலகப் பொதுமறையாயிற்று என உரைப்பார் பல்கி வந்த நிலையில் திருக்குறளின் 'பாயிரம்' பற்றிய ஆய்வுகளில் அறிஞர் பலரின் மனம் ஈடுபடலாயிற்று.

கடந்த இருபதாம் நூற்றாண்டின் ஒரு பகுதியிலும் அதற்கு முன்னும் பௌத்த சமணக் கருத்துகளும் சைவ, வைணவக் கருத்துகளும்தாம் திருக்குறளின் மையக் கருத்துகள் எனப் பல நிலைகளில் பரப்பப்பட்டு வந்த காலகட்டத்தில், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில், கிறித்தவமே திருக்குறளின் அடிப்படை என்னும் ஆய்வும் வாதமும் வலுப்பெறத் தொடங்கின. இதனடிப்படையில் பாயிரத்தின் அதிகாரம் ஒவ்வொன்றும் தனித்தனி ஆய்வு நூலாக வெளிவந்துள்ளன. அவற்றில் திருவள்ளுவர் கையாளும் தொடர்களும் பெயர்களும் கூடக் கட்டுரைகளாகவும் ஆய்வு நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

திருக்குறள் முழுமைக்கும் கிறித்தவ நோக்கில் 'திருக்குறள் - புத்தாய்வு' என்னும் உரை நூலொன்றை முன்னாள் சென்னை - மயிலைப் பேராயர் பேரருள்திரு. அருளப்பா ஆண்டகை 1017 பக்கங்களில் 1987 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டிருக்கிறார்.

'திருக்குறளின் உட்கிடக்கை கிறித்தவமே' என்னும் நோக்கில் எழுந்த ஆய்வுகள் கி.பி. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி தற்போது வரை மிகுதியும் வளர்ந்து வருகின்றன. இந்த வரிசையில், "ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன்" என்னும் நூலைத் திரு. இராசன் சிகாமணி இயற்றியுள்ளார்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்றார் பொய்யில் புலவர்.

ஆய்வுக் கருத்துகள் வரவேற்கப்படவேண்டும். ஏற்பதும் ஏற்காததும் வேறு நிலை. புதிய கருத்துகள் வெளியானவுடனே பலர் அவற்றை ஏற்றுக் கொள்ளத் தயங்குவதும் எள்ளுவதும் மறுப்பதும் இயல்புதான். பரிமேலழகரின் உரையை மறுத்துப் புதிய புதிய உரைகள் வந்த பிறகும் அப்புதிய உரைகளை ஏற்றோ, தழுவியோ பாடநூல் நிறுவனமோ பல்கலைக்கழகங்களோ, அரசு நிறுவனங்களோ அவற்றை இன்று நடைமுறைப்படுத்தியுள்ளனவா எனக் கேள்வி எழுப்பினால் அதற்கு விடை என்ன?

'அறிதோறறியாமை கண்டற்றால்' என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு, அவர்தம் நூலே சான்றாக அமைந்துள்ளது என்பதை இத்தகு புதிய நூல்கள் எண்பிக்கின்றன.

தரா+விடன் → தராவிடன் என்னும் சொல்லின் திரிபு திராவிடன்; தமி+எழு+மொழி = தமிழ்மொழி; கண் + நோட்டம் = கண்ணோட்டம்; நா+கரி+இகம்=நாகரிகம்; கார்+இகை=காரிகை; மல்+அர்=மலர்; பரம்+அண+அர்=பிராமணர் என்பன போன்ற வேர்ச்சொல்லடிப்படையில், நூலாசிரியர் புதிய கோணத்தில் சிந்தித்துப் புதுப்பொருள் காணமுனைந்துள்ளார்.

'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்' என்பது முதல் மாந்தன் ஆதாமைச் சுட்டுகிறது என அவர்காட்டும் காரணங்கள் இன்னும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

'ஆதன்' (ஆதாம்) ஔவை (ஏவாள்) என்னும் முதல் மாந்தப் பெயர்கள் பழந்தமிழ்ப் பனுவல்களுள் பல்லாற்றானும் பயின்று

வருகின்றன. இவைபோல ஏராளமான தரவுகளை நாம் திரட்டியாக வேண்டும். நில நூல், மாந்தவியல், வரலாறு, அறிவியல், ஒப்பாய்வு என்பன போன்று பலப்பல கோணங்களில் செய்யப்படும் ஆய்வுக் கருத்துகளையும் துணையாகக் கொண்டு திராவிட இனத்தின் சிறப்பினை உலகியல் நிலையிலும் ஆன்மீக நிலையிலும் உலகிற்கு வெளிப்படுத்தும் அறிவுத்திறன் சார்ந்த ஆய்வுகள் இன்னும் பெருக வேண்டும். அப்போதுதான் திராவிட இனத்தின் பூரண விடுதலை என்பது நனவாகும்.

திரு. இராசன் சிகாமணியின் கருத்துகள் முடிந்த முடிபல்ல. நேற்று ஏற்கப்பட்ட கருத்துகள் இன்று மறுக்கப்படலாம்; இன்று மறுக்கப்படும் கருத்துகள் நாளை ஏற்கப்படலாம்; அல்லது புத்தாக்கம் செய்யப் பெறலாம். ஆய்வுகள் வெளிவர வேண்டும். இந்நூலாசிரியரின் முயற்சி கன்னிமுயற்சியாக இருந்தாலும் பாராட்டுதற்குரியது. இன்னும் அவரது சிந்தனைகள் வளர வேண்டும்; பெருக வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புடன்

01.03.05

நன்றியுரை

'உலக திராவிட மையம்' என்ற அமைப்பின் நிறுவனர் திரு. எம். சுந்தர் ஏசுவடியான் அவர்கள், இந்திய மக்கள் சாதீய அடிமைத்தளை அவிழ்ந்து விடுதலையடைய விரும்பி ஆற்றிவரும் ஆன்மீக சார்புடைய அரும்பணிகள் பல. அவற்றுள் ஒன்றாக 'உலக திராவிட வேத ஆகம ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம்' என்ற அமைப்பின் நிறுவனர் முனைவர் மு. தெய்வநாயகம் மற்றும் முனைவர் தெ. தேவகலா ஆகியோரையும், தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனப் பாடத்திட்ட இயக்குநர் பேராசிரியர் முனைவர். யா.தா. பாசுகரதாசு அவர்களையும், அவர்களுடன் இணைந்து பணியாற்றும் கருத்தாளர் குழுவினரையும் அழைத்து, கிறித்தவ நற்செய்திப் பணி குறித்து 2003 மே மாதம் முதல் குமரி மாவட்டத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தினார்கள்.

பயிற்சி வகுப்புகளில் பயிற்றுவிக்கப்பட்ட ஆய்வுரைகளுக்குத் தெளிவான விளக்கங்களை அறிந்துகொள்ள விரும்பி சிந்தித்துக் கொண்டிருக்கையில், திராவிடன் என்பதற்கும், திருக்குறளுக்கும், கிறித்தவர் சமயப் புனித நூல் (திருமறை) செய்திக்கும் தொடர்பு உண்டென்று இறையருளால் உணர்த்தப்பட்டேன். இறைவன் சுட்டிக்காட்டி உணர்த்திய,

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" - குறள் 580

எனும் குறளையே எனது ஆய்வுக்குத் திறவுகோலாகக் கொண்டு இந்நூலில் விளக்கப்பட்டுள்ள கருத்துத் தெளிவினை அறிந்துணர்ந்து வெளியிட்டுள்ளேன். ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன் என்றும், அறன் வலியுறுத்துவதற்குக் கடவுள் வான் நீத்தார் என்றும் உலக ஆன்மீக, நாகரிக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் எனக்கு அறிவுறுத்திய என் வணக்கத்திற்கும் வாழ்த்திற்கும் உரிய இறைவனாகிய கடவுளாம் கர்த்தருக்கு என் உளம் நிறைந்த நன்றி.

'உலக ஆன்மீக, நாகரிக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்' எனும் எனது இந்நூலை அச்சிட விரும்பிய எனக்கு அச்சகத்தாரை அறிமுகம் செய்து, இந்நூல் அச்சிடப்படுவதற்குத் தேவையான நல்லாலோசனைகள் வழங்கி துணை நின்று, இந்நூலுக்கு அணிந்துரையும் வழங்கி சிறப்பித்துள்ள அன்புக்குரிய திரு. எம். சுந்தர் ஏசுவடியான் அவர்களுக்கு என் உளம் கனிந்த நன்றி.

2003 மே மாதம் முதல் நடைபெற்ற கிறித்தவ ஆன்மீக நற்செய்திப் பணி குறித்த பயிற்சி வகுப்புகளில் தங்கள் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுரைகளின் அடிப்படையில் பயிற்சியளித்த ஆய்வாளர்கள் முனைவர் மு. தெய்வநாயகம் மற்றும் முனைவர் தெ. தேவகலா அவர்களுக்கும் என் நன்றி. அவ்வகுப்புகளில் பயிற்சியளித்த தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனத்தின் பாடத்திட்ட இயக்குநர் பேராசிரியர் முனைவர் யா.தா. பாசுகரதாசு அவர்கள் எனது இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கும் அவர்களுடன் இணைந்து பயிற்சியளித்த கருத்தாளர் குழுவினருக்கும் என் நன்றி.

ஆசியவியல் நிறுவனத்தின் நிறுவனரும், இயக்குநருமான முனைவர் G. ஜாண் சாமுவேல் அவர்களும், கன்கார்டியா இறையியல் கல்லூரி முதல்வர் அருள்திரு. முனைவர். ஜாஷ்வா சிரோன்மணி அவர்களும் வாழ்த்துரை வழங்கி எனது இந்நூலைச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கும் என் நன்றி.

எனது இந்நூலின் தட்டச்சுப் பிரதியைப் படித்து, பிழை திருத்தம் செய்து பாராட்டிய எனது மதிப்பிற்குரிய முன்னாள் பள்ளி தமிழ் ஆசிரியர் திரு. ந. இராமன் பிள்ளை அவர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றி.

கணினி மூலம் இந்நூலின் அட்டைப்பட வடிவமைப்பு செய்து தந்து உதவிய திரு. M. லியோன் ஜெர்ால்டின் இராய் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்த நாஞ்சில் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

ஞா. இராஜன் சிகாமணி

பொருளடக்கம்

நூன்முகம் பக்கம்

அத்தியாயம் 1

1. இந்தியாவும் திராவிடரும் 1
2. ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன் 9

அத்தியாயம் 2

3. திருக்குறள் கண்ணோட்டத்தில் திராவிடர் - ஆதாம், ஏவாள் 20
4. திருவள்ளுவர் கூறும் பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் - விளக்கம் 42
5. உலகின் முதல் நாகரிகம் - திராவிடர் நாகரிகம் அதன் தோற்றம் 53

அத்தியாயம் 3

6. மண்ணோடியைந்த மரத்தனையர் கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் 58
7. ஒறுத்தாற்றும் பண்பினாரும் பொறுத்தாற்றும் பண்பும் 66
8. கண்ணோட்டம் பண்பா? செயலா? - கழிபெருங்காரிகை... 70

அத்தியாயம் 4

9. கடவுள் வான் நீத்தார் 82
10. திருவள்ளுவர் சுட்டும் 'ஐந்தவித்தான்' கிறித்து இயேசுவே 86
11. திருக்குறள் உணர்த்தும் 'பொறிவாய்' - சிலுவை 104
12. திருவள்ளுவர் சுட்டும் 'அந்தணர்' இயேசு கிறித்துவே 108
13. பொய்தீர் ஒழுக்க நெறி 116

அத்தியாயம் 5

14. திருவள்ளுவர் கூறும் 'வான் சிறப்பு' 121
15. அகல் விசும்பு உளார் கோமான் இந்திரன் 124
16. திருவள்ளுவர் கூறும் 'நீத்தார் பெருமை' 126

அத்தியாயம் 6

17. கடவுளைச் சுட்டும் திருக்குறள் சிறப்புச் சொற்றொடர்கள் 142

ஆ) வேண்டுதல் வேண்டாமை இலான் 142

ஆ) மலர்மிசை ஏகினான் 146

18. திருவள்ளுவரின் 'கடவுள் வாழ்த்து' 155

19. கிறித்தவர் சமயப் புனித நூலில் நீடுவாழ்வு 161

20. சிவஞானபோதம் சுட்டும் ஆதிமனிதர் ஆதாம் ஏவாள் 168

21. பாவம் என்பது 'மலம்' என்னப்பட்டது ஏன்? 172

முடிவுரை 175

நூன்முகம்

இந்தியா ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடு. திராவிடர் சிந்தனை நிறைந்த நாடு. குறிப்பாகத் தென் இந்தியாவின் தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள் தோன்றி வலுவடைந்துள்ளன. அரசியல் அளவில், திராவிடர் முன்னேற்றம் முக்கியத்துவம் அடைந்து, திராவிடர் என்ற சொல் உலக நாடுகளிலும் நன்கு அறியப்பட்டுள்ளது. ஆயினும் திராவிடர் எனும் சொல்லின் பொருள் தெளிவு காணப்படவில்லை எனலாம். அதனைத் தேடியதன் பயனே இந்நூல் உருவானதாகும்.

திராவிடர் எனும் சொல் ஆன்மீகம், நாகரிகம் மற்றும் மொழியுடன் தொடர்புடையது. அச்சொல்லுக்குரிய மொழி தமிழே. தமிழ் மொழியில் காணப்படும் இலக்கியங்கள் பல. தமிழ்மொழியில் இயற்றப்பட்டு உலக அளவில் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு வரும் திருக்குறள் குறிப்பிடத்தக்க சிறந்த நூலாகும்.

திருக்குறள் இயற்றப்பட்டு ஏறக்குறைய 2000 ஆண்டுகள் ஆகிறதென அறிஞர்கள் கருதுகின்றனர். ஆயினும், அது ஒரு ஆன்மீக நூல் எனும் தெளிவு சமீப காலமாகத்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றன. உலகப்பொதுமறை என வழங்கப்படும் அந்நூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அதன் உரையாசிரியர்கள் தந்துள்ள பொருள்கள், கருத்து விளக்கங்கள் யாவும் பலவாறு ஆராயப்பட்டு வருகின்றன. அவ்வுரைகள் தெளிந்த தெளிவாகவும் முடிந்த முடிவாகவும் இருப்பவையல்ல என்பதை அவைகள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். புத்தாய்வுக் கருத்துகள் பல வெளிவந்தவண்ணமுள்ளன. உரையாசிரியர்கள் திருக்குறளுக்கு உரை கூறுமிடத்து பல இடங்களில் மயங்குகின்றனர் என்றும், தடுமாறுகின்றனர் என்றும் பல சொல்லாட்சிகளுக்குப் பொருள் காணக்கூடாத சிக்கல்கள் நீக்கப்பட வேண்டுமென்றும் அறிஞர் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆகவே, திருக்குறள் இயற்றப்பட்டு 2000 ஆண்டுகள் ஆகியும் அதன் பொருள் அறியக்கூடாத சிக்கல்கள் உண்டென்று விளங்குகிறது. இவ்வித சிக்கல்கள் அகற்றப்பட்டு எவ்வித சிக்கலுமின்றி தெளிவான பொருள் விளக்கம் பெற்றால் மட்டுமே திருக்குறளின் உண்மைப் பயனை அடைய இயலும்.

உரையாசிரியர்கள் எவ்விதத்திலும் தாங்கள் அறியும், கூறத்தக்க, பொருத்தமுடைய கருத்துகள் தங்களுக்கு ஏற்புடையதல்லாத

சமயத்தையோ அல்லது அது போன்ற அரசியல் அமைப்பையோ சார்ந்து விடக்கூடாதெனும் மரபு சார்ந்து நிற்றலை ஊன்றப்பற்றியிருத்தலும் திருக்குறளின் உண்மைப் பொருளை உலகு அறியாதிருக்கக் காரணமாயிருக்கலாம். மரபு வழி சார்ந்து நிற்றல் எனும் அழுத்தமான அம்மனப் போக்கினைத் தாண்டிய நிலையில் உண்மைப்பொருள் விளங்கும் பொழுது மெய்மையைச் சார்ந்தே ஆக வேண்டும். ஆகவே, இந்நூல் சிக்கல்கள் அகன்ற தெளிவாகக் கருத்துகளைத் தருவதால் தமிழுலகிற்கும், திராவிடர் ஆன்மீகத்திற்கும் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றேன்.

திராவிடர் நம்பிக்கைக்கு எதிரிடையான கருத்துடையவர்களின் மரபினைக் காத்து நிற்றல் என்பது திருக்குறள் பொருள் தெளிவினைக் காத்து நிற்கக் கூடாத தடைக்கல்லாயிருத்தல் கூடாதென எண்ணி அம்மரபு தாண்டிய நிலையிலேயே இந்நூலில் திருக்குறள் தெளிவு பெற்ற கருத்துகள் கூறப்பட்டுள்ளன. தாங்கள் சார்ந்து நிற்கும் மரபு, திராவிடர் மரபோ, மாற்றாருடையதோ என ஆராய்தல் அவசியமும், காலத்தின் கட்டாயமுமாகும்.

திராவிடர் என்பதற்கு ஆன்மீகம் சார்ந்த பொருள் விளக்கம் இந்நூலில் தரப்பட்டுள்ளது. திருவள்ளுவர் திருக்குறளில் ஆண்டுள்ள **கண்ணோட்டம், காரிகை, நாகரிகம், ஐந்தவித்தான், பொறிவாய், சிவிகை, அந்தணன், இந்திரன், மலர், ஏகினான்** எனும் சொற்களும் சிவஞானபோதத்தில் காணப்படும் **அவன், அவள்** எனும் சொற்களும் விளக்கப்பட்டுள்ளன. **கடவுள் வான் நீத்தார்** என்று திருவள்ளுவர் கூறும் உலக ஆன்மீக, வரலாற்றுக் கிறித்துவாகிய இயேசுவைப் பற்றிய செய்தி இந்நூலில் விளக்கப்பட்டு, திருக்குறள் ஒரு கிறித்தவ நூல் எனும் உண்மை உறுதி எனத் தெளிவுபடுத்தப்படுகிறது.

உலகத் தோற்றம் முதலாய் **ஆன்மீகம், நாகரீகம்,** இவற்றின் வரலாறும் தொடர்புடைய **கண்ணோட்டமும்** இந்நூலில் விளக்கப்பட்டுள்ளதால், **'உலக ஆன்மீக, நாகரீக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்'** எனும் பெயர் இந்நூலுக்கு ஆயிற்று.

ஜேம்ஸ்டவுண்,
12-01-2005

- நூலாசிரியர்

அத்தியாயம் - 1

1. இந்தியாவும் திராவிடரும்

இந்தியநாடு ஆசியாவின் துணைக்கண்டம் எனப்படும். பெரும் நிலப்பரப்பைக் கொண்ட இந்நாட்டின் வரலாறு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கால்ட்வெல், தேயிலர் எனும் பாதிரியார்கள், டாக்டர் போப், பண்டிதர் மாக்ஸ் முல்லர் போன்றோரது ஆராய்ச்சிகளின் பலனாக இந்திய வரலாறு ஒரு திருப்பு முனையைக் கண்டது. பின்னர் 1921ம் ஆண்டு சிந்து வெளியில் புதையுண்டு கிடந்த மொகஞ்சதாரோ, அரப்பா என்னும் இரு பண்டைய நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவ்விடங்களில் கிடைத்த பழம்பொருள்கள் ஆராயப்பட்டதன் பயனாக அத்திருப்புமுனை மேலும் வலுப்பெற்று, பழம்பெரும் இந்தியாவின் பண்டைய வரலாற்று உண்மைகள் வரலாற்று ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மற்றும் பல அறிஞர்களால் ஐயந்திரிபற எழுதப்பட்டு வருகின்றன. அவர்களது கூற்றுக்கள் நம் கவனத்தில் கொள்ளத் தக்கனவாயுள்ளன.

வரலாற்று ஆய்வுக் குறிப்புகள்

“நிலநூலார் கருத்துப்படி தென் இந்தியா மிகப் பழமையானது. இந்தியாவின் வடபகுதியும் இமயமலைத்தொடரும் கடலிலிருந்து வெளித்தோன்றியதற்கு நெடுங்காலத்திற்கு முன்பாகவே, தென் இந்தியாவில் மக்கள் வாழ்ந்து வந்தனரென்பது ஆராய்ச்சியாளர்கள் முடிவு”[1] என கே.கே. பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

“திராவிடர்கள் என்ற ஒரு இனம்தான் இந்தியாவில் ஆதிகாலத்தில் இருந்தது. என்று சர் ஹெர்பர்ட் ரிஸ்லி என்ற அறிஞர் கூறியுள்ளார்”. என்றும் . . . . “திராவிடர்கள் என்போர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் அது போன்ற மொழிகளைப் பேசித் தென்னிந்தியப் பகுதியில் வாழ்ந்த மக்களாவர்”[2] என்றும் டாக்டர் ஏ. சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார்.

“திராவிடம்” என்பது நமது நாட்டினுடைய பெயராகும் ‘திராவிடர்’ என்பது இந்நாட்டின் பழங்குடி மக்கள் இனத்துக்கு ஏற்பட்ட

---

1. கே.கே. பிள்ளை - தென் இந்திய வரலாறு 1994 பக் 1
2. தென்னிந்திய வரலாறு (எம்.ஏ. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மேற்பட்டப்படிப்பிற்குரியது) டாக்டர் ஏ. சுவாமிநாதன் 1987 பக் 20

உலகப்பெயராகும் . . . . இராமாயணத்தில், பாரதத்தில் கூட இதற்கு ஆதாரம் உண்டே"[3] என்று பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் கூறியுள்ளார்.

அவர் கூறியுள்ளாற்போல உலகமறிய இந்திய தேசிய கீதத்திலும், தமிழ்த்தாய் வாழ்த்திலும் கூட அதற்கான சான்றைக் காணலாம். இந்திய தேசியகீதம் எழுதிய மகாகவி இரவீந்திரநாத் தாகூர் அக்கீதத்தில்

பஞ்சாப் ஸிந்து குஜராத் மராட்டா
திராவிட உத்கல பங்கா"[4]

எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே பஞ்சாபையும், சிந்துவையும் கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், ஒரிசாவையும் வங்காளத்தையும் போல் மற்றுமுள்ள ஒரு அங்கமாக திராவிடத்தையும் கொண்டுள்ளது இந்தியா என அறியலாம். இத்திராவிடத்தைத் தமிழ்த்தாய் வாழ்த்து எழுதிய மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்"[5] எனக் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியா மூன்று புவிஇயற் கூறுகளை உள்ளடக்கிய ஒரு உபகண்டமே . . . . மேற்கே சிந்துவெளி, வட கிழக்கே கங்கை சமவெளி, தெற்கே தீபகற்ப இந்தியா ஆகியவையே இவையாகும் . . . . விந்திய மலைதான் கலாசார ரீதியில் தனித்துவமான மூன்று பிராந்தியங்களாக இந்தியாவை ஆக்கியுள்ளது என்றால் மிகையாகாது. இவை முறையே 'ஆர்யவர்த்த' 'தக்ஷிணாபத' திராவிட தேச ஆகும்"[6] என பேராசிரியர் திரு. சி.க. சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

"திராவிட" என்ற சமஸ்கிருதப் பெயர் 'தெற்கு' என்ற பொருளுடையது என்பார் 'கில்பர்ட்சிலேட்டர்' என்னும் ஆங்கில நூலாசிரியர். பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் குறிப்பிடுகையில்,

"விந்தியா மலைக்குத் தெற்கே உள்ள பகுதிதான் தக்ஷிணாபதமாகும் . . . . பொதுவாக திராவிட தேசம் என்பது இன்றைய மொழி வழக்கில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளைப் பேசும் மாநிலங்களைக் குறித்தாலும் கூட மொழி,

---

3) பெரியார் சிந்தனைகள் முதல் தொகுதி 1974 பக் 547
4) மகாகவி ரவீந்திரநாத் தாகூர் தேசிய கீதம்
5) மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை - தமிழ்த்தாய் வாழ்த்து
6) சி.க சிற்றம்பலம் - பண்டைய தமிழகம் 1999 பக் 20

கலாச்சார தொல்லியற் பின்னணியில் நோக்கும் போது இக்குறிப்பானது தமிழகத்திற்குப் பெரும்பாலும் பொருந்தும் எனலாம்"[7] என்று கூறியுள்ளார்.

திராவிடம் குறிக்கும் இடங்களைக் குறித்து எம். வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு;

"தென் இந்தியாவில் ஐந்து மாநிலங்களையும் அதனதன் மொழிகளையும் பரந்த அளவில் குறிக்கும்

1. திராவிடம் - தமிழ் தேசம்
2. ஆந்திரம் - தெலுங்கு அல்லது தெலுகு
3. கன்னடம் 4. மகாராட்டிரம் 5. கூர்ச்சரம் (குஜராத்)"

அதன் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு பின்வருமாறு:

'திரவிடம்' என்பது இம்மாநிலங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள மக்களுக்கும் அவர்கள் மொழிகளுக்கும் பொருந்தும். குறிப்பாக தமிழகத்திற்கும் தமிழுக்கும் பொருந்தும். சிலர் மலையாளம், சிங்களம் இவைகளையும் சேர்த்துக்கொள்வர். வில்சன் அகராதியில் 'திராவிட' என்பது சென்னையிலிருந்து கன்னியாகுமரி (Cape comorin) வரையிலுள்ள தேசத்தைக் குறிக்கும்."

இவ்வாறு எம். வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதியில் காணும் விளக்கமும் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்களின் கூற்றுக்கு இசைவாய் உள்ளது. பேராசிரியர் அவர்கள் மேலும் பல விரிவான தகவல்களைத் தருகிறார்.

"திராவிட மொழி பேசப்படும் மாநிலங்களில் மிகப் பழைய இலக்கிய பாரம்பரியமுடைய மாநிலம் தமிழகம்தான். . . . .
. . . .

தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசம் தமிழகம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. சங்க இலக்கியங்களில் இப்பதம் மொழியையும், நாட்டையும், ஈற்றில் நாட்டில் வாழ்ந்த மக்களையும் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுவே தமிழ்நாட்டகம், தமிழ் கூறும் நல்லுலகம் எனப் பழைய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது"[8] எனக் குறிப்பிடுகின்றார்.

---

7) பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - பண்டைய தமிழகம் 1999 பக் 21
8) பேராசிரியர் சி.க சிற்றம்பலம் - பண்டைய தமிழகம் 1999 பக் 21

மேலும் "இவ்வடிவம் தான் கிரேக்கரால் தமிரிகை (Smith V.A. 1912-439) எனவும், உரோமர்களால் தமிரிக்க தமிரிகே (warmington E.H. 1928:114-115) எனவும் வழங்கப்படலாயிற்று. ஈழத்துப்பாளி இலக்கியங்களில் தமிழ் என்பது தமிளெ (தெமள) எனப் பயிலப்பட்டுள்ளதோடு, கிறிஸ்துவுக்கு முந்திய ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளிலும் 'தமெட' எனவும் இது இடம் பெற்றுள்ளது (சிற்றம்பலம் சி.க. 1998 பக் 29-43)

இச்சந்தர்ப்பத்தில் 'தமிழ்' 'தமிள' என்ற பதங்களுக்கும் 'திராவிட' என்ற பதத்திற்குமிடையே உள்ள தொடர்பு ஆராயற்பாலது . . . . நீண்ட வரலாற்று வழக்கில் 'தமிழ்' என்ற வடிவமே தொன்மையானதாகக் காணப்படுவதால் தமிழிலிருந்து திராவிட வடிவம் பிறந்தது எனலாம். வடமொழி, பாளி போன்ற பிராகிருத மொழிகள், ஆகியனவற்றில் தமிழுக்குரிய சிறப்பான எழுத்தாகிய 'ழ' காணப்படாததால் 'ழ' வுக்குப் பதிலாக 'ட' அல்லது 'ள' என்ற எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டது. இதனையே வடமொழியிலுள்ள திராவிட வடிவமும் பாளிப்பிராகிருதத்திலுள்ள 'தமிள' வடிவமும் எடுத்துக்காட்டுகின்றன. இக்கூற்றையே வலிதவிஸ்தாரம் என்ற பௌத்த சமய நூல் கூறும் 64 வகையான எழுத்து வகைகளில் தமிழகத்து வரிவடிவம் 'திராமிளி' என அழைக்கப்படுவதும் கி.மு., 2ம் நூற்றாண்டுக்குரிய காரவேலனின் காதி கும்பாக் கல்வெட்டில் தமிழகம் 'திரமிள தேச' என அழைக்கப்படுவதும் உறுதி செய்கின்றன. இதனால் இன்று இவ்வடிவம் ஒரு பரந்த அடிப்படையில் தென்னிந்திய மொழிகளைக் குறிக்கும் ஒரு வடிவமாகவே பயன்படுத்தப்பட்டு வருவதாலும்கூட ஆரம்பத்தில் இவ்வடிவம் இன்றைய கேரள மாநிலத்தை உள்ளடக்கிய பண்டைய தமிழகத்தையே குறித்து நின்றது. இதனையே 'வடமொழியாளர்' திராவிட என அழைத்தனர் என்பதும் உறுதியாகும்"[9] எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"அண்மைக் காலத்தில் சிந்துவெளி நாகரிகமக்களது மொழிபற்றி நடைபெற்றுவரும் ஆய்வுகள் மெருகூட்டுவனவாக அமைந்துள்ளன. (I.T.S. 1970) இம்மொழியை ஆராய்ந்தோர் இதைப் பேசியோர் திராவிடரே எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். (Heras H. 1953 - Mahadevan 1977, 1977-78) . . . . பெரும்பாலானோர் திராவிட மொழியே சிந்துவெளி மக்களின் மொழி எனக் கூறியுள்ளனர்

9) பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் - பண்டைய தமிழகம் 1999 பக் 22

(Koskenaiemi, K. Parapola A, and Parapolas 1973) இன்றும் பாகிஸ்தானிலுள்ள பலுசிஸ்தான் பகுதியில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பிராகு மொழி பேசப்படுவதும் ஈண்டு அவதாணிக்கத்தக்கது"[10] என தேவகோட்டை பி. நாராயணன் கூறியுள்ளார்.

"திராவிடர் கருநிறத்தவர்"[11]

"சிந்துவெளி மக்களும் திராவிடர்களைப் போன்று கருநிறமுடையவர் . . . . தென்னிந்தியாவிலிருந்து தரை வழியே இந்தியாவின் பல பகுதிகளுக்கு அலைந்து, பின்னர் சிந்து சமவெளியில் குடியேறி, அங்கு நாகரிகத்தை ஏற்படுத்திய பின்னர் மேலும் தரை வழியேயும், கடல் வழியேயும் பலுசிஸ்தான் சுமேரியா, எகிப்து போன்ற பகுதிகளுக்குச் சென்று திராவிட நாகரிகத்தைப் பரப்பினர். இவர்கள் பீகார், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, பம்பாய் போன்ற பல வட மாநிலங்களில் இருந்தனர்.[12] என்பதைக் குன்றத்தூரில் நடத்திய அகழ்வாராய்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது திரு. ஜே. ற்றி. கர்னீலியர் கூறுகின்றார்" என டாக்டர் எ. சுவாமிநாதன் தமது நூலில் எழுதியுள்ளார்.

"ஹெரஸ்பாதிரியார் மொகஞ்சதாரோ, அரப்பா என்னும் இடங்களில் கிடைத்த 1800 முத்திரைகளை அணுகி ஆராய்ந்தார். ஆராய்ந்த பின்னர், இதுவரையிலும் மத்திய தரை மக்களே வந்து இந்தியாவிற் குடியேறினார்கள் எனக் கருதப்பட்டு வந்த கொள்கை தவறுடையதென்றும், தமிழர்களே இந்தியாவினின்றும் சென்று மத்திய தரைநாடுகள் முதல் எகிப்து, ஸ்பெயின், அயர்லாந்து வரையிற் குடியேறினார்களென்றும் பல சான்றுகள் காட்டி எழுதியுள்ளார்[13] என திரு. ந.சி. கந்தையாபிள்ளை தமது நூலில் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் ஏ. சுவாமிநாதன் அவர்கள் தென்னிந்திய வரலாறு பற்றிக் கூறும்போது,

"பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய பகுதிகள் ஒரே நிலப்பரப்புடன் லெமூரியா கண்டமென விளங்கியது. ஆனால்

10) தேவகோட்டை பி. நாராயணன் - இந்திய சரித்திர வரலாற்றுக் குறிப்புகள் 1983 பக்30
11) டாக்டர் ஏ. சுவாமிநாதன் - தென் இந்திய வரலாறு பக் 22
12) டாக்டர் ஏ. சுவாமிநாதன் - தமிழக வரலாறு பக் 23
13) ந.சி. கந்தையாபிள்ளை - தமிழக இந்தியா 1995 பக் 6

கடல்கோளால் அவைகளின் இடையே பல நிலப்பகுதிகள் நீருக்குள் மூழ்கிவிட்டன. நீருக்குள் மூழ்கிய கோண்டுவானாப் பிரதேசத்தில் திராவிடர் இருந்தனர் என்று தெரிகின்றது. கடலுள் மூழ்கிய பகுதிகளைப் பற்றியும் அங்கு தமிழ்ச்சங்கங்கள் இருந்ததைப் பற்றியும், பஃறுளி ஆற்றைப் பற்றியும், குமரி மலையைப் பற்றியும் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. மேலும் தமிழ்ப் பாடல்களில் தங்களைப் பற்றிக் குறிப்பிடும் தமிழர் தங்களைத் தென்னகத்திற்கே உரிய எல்லைகளுடன் குறிப்பிடுகின்றனர். ஆகவே, அவர்கள் தென்னிந்தியாவினின்று உலகின் பல பகுதிகளுக்குக் குடியேறி நாகரிகத்தைப் பரப்பினர் என்று திருவாளர்கள் வி.ஆர். இராமச்சந்திரன் தீட்சிதர், பி.டி. சீனிவாச ஐயங்கார் முதலியோர் கூறுகின்றனர்"[14] எனக் குறிப்பிட்டுள்ளார்.

"மெசபதோமியா, பாபிலோன், கல்தேயா, ஆசியா முதலியவிடங்களுக்குப் போய்க் குடியேறி இராச்சியங்களைத் தாபித்துப் பிரபலமாய் ஆண்டு கொண்டிருந்த தமிழர்கள் . . . . பேசிய தமிழ்மொழி, எபிரெய, கல்தேய, பாபிலோனிய, அசிரிய, சுமேரிய, பாரசீக, பலுச்சிய, போர்குயிய, பிராகிருத துருயித்திய, அங்கிலோ, சேர்மனிய, சமஸ்கிருத பாஷைகளில் மிக ஏர்ாளமாகக் கலந்து வருவதனால் தமிழ் மக்களே மிகப் பூர்வமக்களாய் உள்ள குடிகளென்றும், அவர்கள் பல கலைகளிலும் சங்கீதங்களிலும் தேர்ந்திருந்தார்கள் . . . ."

சுருங்கச் சொல்லுமிடத்துச் சரித்திரகாலம் ஆரம்பிப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னதாகவே லெமூரியா நாடு தமிழ்நாடாயிருந்த தென்றும் அதில் வசித்தவர்கள் தமிழர்களாயிருந்தார்கள் . . . ."[15] என்னும் ஆபிரகாம் பம்டிதரின் கூற்றினை திரு. ந.சி. கந்தையாபிள்ளை தமது நூலில் எழுதியுள்ள அடிக்குறிப்பில் காணலாம்.

இதுகாறும் எடுத்துரைக்கப்பட்ட அறிஞர் பலரது கருத்துக்களைத் தொகுத்து ஆராய்கையில் பின்வரும் உண்மைகளை முடிவாகக் கொள்ளலாம்.

தென் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இன்றைய இந்தியாவின் தென் பகுதியும் சேர்ந்து ஒரே

---

14) டாக்டர் ஏ. சுவாமிநாதன் - தமிழக வரலாறு 1993 பக் 23

15) ந.சி. கந்தையாபிள்ளை - தமிழ் இந்தியா (கருணாமிருத சாகரம் - ஆபிரகாம் பண்டிதர்) 1995 பக் 6+7

நிலப்பரப்பாக 'லெமூரியா' கண்டமென விளங்கியது என்றும், இந்தியாவின் வடபகுதி கடலுக்குள் மூழ்கியிருந்ததென்றும், அறியலாம். கடலில் மூழ்கியிருந்த வட இந்தியாவும் இமயமலைத் தொடரும் வெளித்தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாகவே பழம்பாண்டி நாடு எனப்பட்ட தென் இந்தியாவில் மக்கள் வாழ்ந்து வந்தனர். இப்பழங்குடி மக்கள் திராவிடர் எனும் ஒரே இனமாக வாழ்ந்தனர். விந்திய மலைக்கு தெற்கே அமைந்திருந்த அவர்களின் வாழ்விடம் திராவிடம் அல்லது திராவிட தேசம் என வழங்கப்பட்டது என்றும் அறியலாம். அக்காலங்களில் ஏற்பட்ட கடற்கோள்களால் பல நிலப்பகுதிகள் நீருக்குள் மூழ்கிவிட அம்மக்கள் குடிபெயர்ந்து, தென்னிந்தியாவிலிருந்து தரைவழியே சென்று சிந்து சமவெளியில் குடியேறி திராவிட நாகரிகத்தை ஏற்படுத்தி வாழ்ந்தனர். மேலும் தரை வழியேயும், கடல் வழியேயும் மெசப்பத்தோமியா, பாபிலோனியா, கல்தேயா, ஆசியா, சுமேரியா, எகிப்து போன்ற உலகின் பல பகுதிகளிலும் சென்று குடியேறி திராவிட நாகரிகத்தைப் பரப்பினர்.

இந்தியாவின் பிற பகுதிகளான பீகார், அஸ்ஸாம், ஒரிஸா, பம்பாய், போன்ற இடங்களிலும் குடியமர்ந்து திராவிடர் தம் வாழ்க்கையை மேம்படுத்தினர். ஆகவே, சிந்து சமவெளி உட்பட்ட பண்டைய இந்தியா திராவிடர் தேசம் என்பது முடிவு. திராவிடர்கள் பேசிய மொழி திராவிட மொழி எனப்பட்டது. தமிழ் மொழியே அவர்கள் பேசிய முதல்மொழி! எனவே தமிழ் திராவிட மொழி எனவும் 'திராவிடர்' 'தமிழர்' எனவும் குறிக்கப்படலாயிற்று. இந்தியா முழுமையும் வாழ்ந்திருந்தவர்கள் திராவிடர் ஆகிய தமிழரே என்பதால் இந்தியா தமிழ்த்தேசம் எனவும் கொள்ளலாம். எபிரேய, கல்தேய, பாபிலோனிய, அசிரிய, சுமேரிய, பாரசீக பலுச்சிய, பேர்குயிய, பிராகிருத, துருயித்திய, ஆங்கிலோ, சேர்மனிய, சமஸ்கிருத பாஷைகளில் தமிழ் சொற்கள் ஏராளமாகக் கலந்து வருவதனால் திராவிடர் எனும் தமிழரே பூர்வ குடிமக்களென்றும், தமிழ்மொழியே உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழி எனவும் கருதலாம்.

ஆதிமனிதன் தோன்றிய தென் இந்தியா!

'லெமூரியா' என்பது பண்டைக்காலத்தே ஆப்பிரிக்காவோடும், ஆஸ்திரேலியாவோடும் கூடிய பழம்பாண்டி நாடாகும். கடல் கோள்களால் பழம்பாண்டி நாட்டிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே இருந்த நிலப்பகுதிகள் கடலுள் மூழ்கித் தனித்தனி கண்டங்களாயின. இதன் பின்னர்தான் இமயமலை தோன்றியது. ஆகவே, பழம்பாண்டி நாடே மாந்தன் பிறந்தது என்றும், அவன்

மொழியே முதன்மொழி என்றும், அதனால் இந்திய வரலாறு முறைப்படி தெற்கிலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும் என்றும் பா.வி.ஏ. சிமித் அவர்களும் மொழிநூலறிஞர் பேரா. ஞா. தேவ நேயப் பாவணர் அவர்களும் வலியுறுத்திக் கூறுகின்றார்."[16] என தேவகோட்டை பி. நாராயணன் குறிப்பிட்டுள்ளார்.

"மனிதன் முதலில் தோன்றிய இடங்களில் தென் இந்தியா ஒன்று. எனச் சில நூலாரும், மானிட நூல் வல்லாரும் கருதுகின்றனர் . . . . ஆதி மனிதன் தோன்றியதே தென் இந்தியாவில் தான் என்று திட்டமாகக் கூற இயலாவிட்டாலும் இந்தியாவில் முதன்முதலில் மனிதன் குடியிருக்கத் தொடங்கிய இடம் தக்காணந்தான் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மையே. தக்காணத்திலுள்ள உயர்ந்த நிலப்பரப்புகளும், சிறு குன்றுகளடங்கிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளும், மக்கள் உணவிற்குரிய காய்கனி கிடைப்பதற்கு வசதியான இடங்களாயிருந்ததே அதற்குக் காரணம். பருவகால நிலைகளும் இந்த இடங்களில் அந்த காலத்தில் மிக்க வசதியாயிருந்திருக்க வேண்டும். கோதாவரி, நருமதை போன்ற ஆறுகளின் கரைகளில் இதுகாறும் எஞ்சி நிற்கும் பல்வகைப் பழம் பொருள்களின் தெளிவினால் இந்தியாவில் ஆதிமனிதன் தக்காணத்தில் வாழ்ந்திருத்தல் கூடுமென்று நிலநூல் வல்லுநர் கருதுகின்றனர்.[17]

16) தேவகோட்டை பி. நாராயணன்-இந்திய சுதந்திர வரலாற்றுக் குறிப்புகள் 1983 பக்10
17) கே.கே. பிள்ளை - தென் இந்திய வரலாறு 1994 பக் 10

2. ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்

இந்தியாவில் தான் ஆதிமனிதன் வாழ்ந்திருத்தல் கூடும் என்றும், அவன் பிறந்தது பழம்பாண்டி நாடே என்றும் கருத்துக் கூறும் அறிஞர் பெருமக்களில் எவரும் ஆதிமனிதன் இன்னானென்று குறிப்பாக எவரையும் சுட்டினாரில்லை. ஆயினும், உலக வரலாற்றில் கிறித்தவர்களின் சமய நூலாகிய பரிசுத்த வேதாகமத்தில்தான் ஆதிமனிதன் 'ஆதாம்' என்று தலைமுறை, தலைமுறையாகச் சுட்டப்பட்டு வந்துள்ளார். ஆகவே, இந்த ஆதாமிற்கும் இந்தியாவிற்கும் உள்ள தொடர்புகள் ஆராயப்படத்தக்கவையாகும்.

இந்தியா ஒரு திராவிட நாடு என்றும், இந்தியக் குடிமக்கள் திராவிடர் என்றும் வரலாற்று உண்மைகளால் நிரூபணமாகியுள்ளன. ஆகவே, அறிஞர்கள் கருத்துக்கு ஏற்ப ஆதிமனிதன் இந்தியாவில் தோன்றியிருந்தால் அவனும் ஒரு திராவிடன் என்றழைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லவா? ஆகவே, ஆதாம் இந்தியாவில் தோன்றிய ஆதிமனிதனானால் அவன் ஒரு திராவிடன் அல்லவா? ஆதாம் திராவிடன் எனப்பட்டால், ஆதாமின் படைப்பிற்கும் திராவிடன் என்று அவன் அழைக்கப்பட்டதற்கும் உண்டாயிருந்த வரலாற்றுத் தொடர்பு ஆராயப்பட வேண்டியதாகும்.

'ஆதாம்' என்பதற்கு மண்ணால் ஆனவன்[18] என்று பொருள். அதுபோல திராவிடன் எனப்படுவதற்கும் பொருள் இருந்தாக வேண்டும். இந்தியாவை திராவிடம் என்போர் திராவிடம் என்பதற்குப் பல்வேறு விளக்கங்களைக் கூறுவர்.

"வடநாட்டு ஆரிய (சமஸ்கிருத) நூல்களில் திராவிடம் என்னும் சொல் முதலாவது 'த்ரமிளம்' என்றே வழங்கி வந்தது. 'ழ'கரம் வடமொழியிலில்லை. சில உயிர்மெய் முதல்களை 'ர'கரஞ் சேர்த்து 'த்ர' 'ப்ர' எனப் புணரெழுத்துக்களாகத் திரிப்பது வடநூலார் வழக்கம். எடு. படி - ப்ரதி, பவளம் - ப்ரவளம். இதனால் தமிழம் எனுஞ் சொல் 'த்ரமிளம்' எனத் திரிந்தது இயல்பே. பின்பு அது நாளடைவில் த்ரமிடம் த்ரவிடம் எனத் திரிந்தது. ள-ட, ம-வ போலி. த்ரவிடம் என்பது மெய்ம்முதலாதலின் தமிழில் திரவிடம் என்றாகிப் பின்பு திராவிடம் என நீண்டு வழங்குகின்றது.

---

18) திருவிவிலியம் (அடிக்குறிப்பு காண்க) பக் 2

தமிழுக்குத் திரவிடம் என்னும் பெயர் தமிழ்நாட்டில் வழங்காமை யானும், தமிழ் என்னும் வடிவத்தையொட்டிய பெயர்களே மேனாட்டிலும், வடநாட்டிலும் பழங்காலத்தில் தமிழாகவேயிருந்தமையானும், தமிழம் என்னும் பெயரே திரவிடம் எனத் திரிந்தது என்று தெளியப்படும்[19] என்று மொழி ஞாயிறு. ஞா. தேவ நேயப்பாவணர் கூறுகின்றார்.

இவ்வாறு இச்சொல்லைப் பலரும் பலவாறு விளக்கிக் கூறுவர். எனினும், திராவிடம் எனுஞ் சொல் ஒரு மருஉச் சொல் என்றே பெரும்பாலோர் கருதுகின்றனர்.

திராவிடன் - சொல் பொருள் விளக்கம்

திராவிடன் என்ற சொல் ஆதிமனிதனைக் குறிக்க பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டிய காரணம் அறியும் பொருட்டு, அச்சொல் ஈண்டு ஆராயப்படுகிறது.

திராவிடன் என்ற சொல் **'தராவிடன்'** என்ற தமிழ்ச் சொல்லின் மருஉச் சொல்லாகவே இருக்க வேண்டும். தராவிடன் என்ற சொல் தரா + விடன் எனப்பகுபடும் (எ.டு. தரா + தலம் = தராதலம்) **'தரா'** என்றால் தராய், தரை, பூமி, நிலம் எனப் பொருள்படும். **'விடன்'** என்பதற்கு **'நஞ்சு'** என்பது பொருள். ஆகவே, **'தராவிடன்'** என்றால், **'நிலத்தின் நஞ்சு'** அல்லது **'நிலம் சார்ந்த நஞ்சு'** என்பது பொருளாகும். இப்பொருளைத் தரும் **'தராவிடன்'** என்ற சொல் **'திராவிடன்'** எனத் திரிந்து மனிதனுக்கு ஆகிவருவதால், **திராவிடன்** என்பதற்கு **நிலத்தின் நஞ்சு** (நிலம் சார்ந்த நஞ்சு) உடையவன் எனப் பொருள் கொள்ளலாம்.

ஆதிமனிதன் என உலக வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ள ஆதாம் இந்தியாவில் தோன்றியவன் எனக் கொள்வதாயின், அவன் **திராவிடன் (தராவிடன்)** எனப்படுகிறான். அதாவது **நிலம் சார்ந்த நஞ்சுடையவன்** எனப்படுகிறான். ஆகவே, ஆதிமனிதனாகிய ஆதாமை நிலம் சார்ந்த நஞ்சுடையவன் எனச் சொல்லக்காரணம் என்ன? அவன் நஞ்சுடையவன் ஆனது எப்போது? எங்ஙனம்? எனும் வினாக்கள் எழுகின்றன. ஆகவே, இவ்வினாக்களுக்கு உரிய விடையாகும் பொருள் விளக்கங்களை, ஆதிமனிதனாகிய ஆதாமின் வரலாற்றை ஆராய்ந்து அறிவதன் வழியாகவே பெற இயலும்.

---

19) மொழி ஞாயிறு ஞா. தேவநேயப்பாவணர் - திராவிடத்தாய் 2000 பக் 8

ஆதியிலே தேவனாகிய கர்த்தர் வானத்தையும், பூமியையும், ஆதிமனிதனாகிய ஆதாமையும், அவனது துணையான ஏவாளையும் உண்டாக்கின வரலாறு பரிசுத்த வேதாகமம் எனப்படும் கிறித்தவ சமய நூலின் பழைய ஏற்பாட்டுப் பகுதியில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

"பின்பு தேவன் : வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், 'வெட்டாந்தரை' காணப்படவும் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று.

தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும் . . . .
. . . .
. . . . பேரிட்டார்"[20]

என்று பரிசுத்த வேதாகமத்தில் கண்டறியலாம்.

வெட்டாந்தரையே பூமி என்று வழங்கப்படலாயிற்று என்று அறியப்படுகின்றது. தரை என்பதுவும் தராய் என்பதுவும் ஒன்றே. தராய்* என்பதற்கு மேட்டு நிலம் என்பது பொருள். உலக படைப்பின் வரலாற்றை நோக்குங்கால் 'ஜலம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந்தரை காணப்படவும் கடவது' என்ற வாக்கியம் கவனத்திற்குரியது. ஜலமாகிய சமுத்திரம் என்கிற கடல் பூமியின் மட்டத்திற்கு தாழ்வாக அமைந்திருப்பது யாவருக்கும் கண்கூடாக அறியப்பட்ட அமைப்பேயாகும். அதுபோல பூமியின் நிலப்பரப்பும் கடல் மட்டத்தைக் காட்டிலும் உயர்வாகவே அமைந்திருப்பதாகும். அதாவது கடல் பரப்பு பள்ளமாகவும் நிலவெளி பரப்பு மேடாகவும் அமைந்திருப்பது தெளிவான நிலவியல் உண்மையே. ஆகவே, தராய் அல்லது வெட்டாந்தரையை மேட்டுநிலம் என்று பொருள்படுத்துவதில் தவறேதும் இல்லை. பூமி என்றும் வெட்டாந்தரை என்றும் வழங்கப்படும் மேட்டுநிலம் என்பதையே **'தமெட'** என அக்கால மக்கள் வழங்கியிருக்கலாம். அதுவே முன்னர் குறிப்பிட்டுள்ளபடி ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் **'தமெட'** என இடம் பெற்றுள்ளதெனக் கருதலாம்.

தேவன் இம்மேட்டு நிலத்தினைக் காணப்பட உண்டாக்கின நாளில் அது வெட்டாந்தரையாயிருந்தது என அறியப்படுகிறது. அதாவது அத்தரையானது விளைபலன் ஏதும் தரா நிலையில் வெறுமையாய் இருந்தது.

---

20) ஆதி 1:9,10

* கழக அகராதி 1983

"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது"[21]

என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. வெறுமையாய் வெட்டாந்தரையாய் இருந்த பூமியில் புல்லையும், பூண்டுகளையும், கனி விருட்சங்களையும் தேவன் முளைக்கப்பண்ணினார்.

"பூமியானது புல்லையும் விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையை யுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று.

பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டு களையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது."[22]

இவ்வாறு வெட்டாந்தரையாயிருந்த பூமியானது தேவனுடைய வார்த்தையினாலே, புல்லையும் பூண்டுகளையும், கனி விருட்சங்களையும் முளைப்பித்து தானியங்களையும், கனிகளையும் விளையச் செய்து விளைநிலமாயிற்று என்பது தெளிவு. ஆகவே, தானியங்களையும், கனிகளையும் விளையச் செய்த நிலத்தை விளை எனக் குறிப்பிடுவது மரபு. ஆகவே, தரை எனும் '**தரா**' விளை நிலமான காரணத்தால் அது **தராவிளை** எனக் குறிக்கப்பெறும். **தராவிளை** எனும் இச்சொல்லே முன்பு **தராவிள, திராவிள** என்றும் **திரவிள, திரமிள,** என்றும் பின்னர் இடம் என்ற பொருள் குறிப்பிடும் பொருட்டு **திரமிட, திரமிடம்** என்றும் **திரவிட, திரவிடம் திராவிடம்** என்றும் திரிபுகட்குட்பட்டு வழங்கலாயிற்று எனக் கருதலாம்.

இவ்வாறு பல்வேறு திரிபுகுட்பட்ட '**தராவிள**' எனுஞ், சொல்லின் திரிபாகிய திரமிள என்ற சொல்லாலேயே, முன்னர் கூறப்பட்ட காரவேலனின் காதி கும்பாக் கல்வெட்டில் தமிழகம் "**திரமிள தேச**" என்று குறிக்கப்பட்டுள்ளது என அதனை ஒப்பு நோக்க தெளிவாக விளங்கும் (பக்கம் 4)

தேவன் ஜலத்திலிருந்து காணப்படப்பண்ணின வெட்டாந்தரையை விளைநிலமாக மாற்றின பின்பு சமுத்திரத்தையும், அதிலுள்ளவை

21) ஆதி 1:2 22) ஆதி 1:11,12

களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக, ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளுகை செய்வதற்கு மனிதனை உண்டாக்கினார்.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின்
மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன்
நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்"[23]

என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

தேவனால் உருவாக்கப்பட்ட ஆதிமனிதன் பூமியின் மண்ணினாலே ஆனான் என்பதால் அவன் நிலம் சார்ந்தவன் என்றாகிறான். முதல் மனிதனே மண்ணினால் ஆனவன் போல அவன் வழித்தோன்றல்கள் அனைவரும் மண்ணினாலேயே உருப்பெற்று வருதல் வரலாற்று உண்மையே. எப்படியெனில், ஆதிமனிதனை உண்டாக்கின தேவன்.

"இதோ, பூமியின் மேல் எங்கும் விதைதரும் சகல
விதப் பூண்டுகளையும், விதை தரும் கனிமரங்களாகிய
சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன்.
அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது"[24]

என்றார் என்பது பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் வரலாற்றுக் கூற்றாகும். அதுபோலவே பூமியிலே பிறந்து வளரும் ஒவ்வொரு மனிதரும் நிலத்தில் விளையும் பயிர் வகைகளில் தானியங்களையும், கனி மரங்களில் விளையும் கனிகளையும் உணவாக உட்கொண்டு உடல் வளர்ச்சி பெற்று வாழ்ந்து வருகின்றனர் என்பதே மறுக்க இயலா வாழ்வியல் உண்மை. மனிதர் தாம் உயிர்வாழும் பொருட்டு பல்வகையான பதார்த்தங்களைத் தயாரித்து உணவாக உட்கொண்டு வரினும், அப்பதார்த்தங்களை ஆக்கத் தேவையான மூல உணவுப் பொருட்கள் அனைத்தும் நிலமாகிய மண்ணின் விளைபொருட் களேயாகும்.

பூமியின் மண்ணில் பயிர்வகைத் தானியங்களும் கனிகளுமான விளைச்சல் உண்டாகாதாயின் மனிதன் புசிப்பதற்கு உணவு கிடையாமல், பஞ்சம், பசி, பட்டினி என்ற தொடர் துன்பத்திற்குட்பட்டு, உருவழிந்து போகுதலும் உயிர் பிரிதலுமாகிய இறப்பும் நேரிடும் என்பது யாவரும் நன்கு அறிந்ததே. ஆகவே, மனிதனைப் படைத்த தேவன் அவனைப் பூமியின் மண்ணினாலேயே உருவாக்கினார் என்பதுவும் அவன் வழித்தோன்றல்கள் யாவரும் மண்ணினாலேயே உருப்பெறுகின்றனர் என்பதுவும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மைகளே.

---

23) ஆதி 2:7 24) ஆதி 1:29

எனவே, மனிதனை 'நிலம் சார்ந்தவன்' எனல் மிகப் பொருத்தமுடையதும் ஏற்புடையதுமாகும்.

ஆதிமனிதனின் ஏதேன் தோட்டம் திரமிடம்

படைப்பினால் நிலம் சார்ந்த ஆதிமனிதனுக்கென்று தேவன் ஒரு தோட்டத்தை உண்டாக்கினார் என்னும் வரலாறும் பரிசுத்த வேதாகமத்தில் அறியக்கிடைக்கின்றது.

"தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும்
ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின
மனுஷனை அதிலே வைத்தார்.
தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும்
புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும்,
தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை
தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து
முளைக்கப்பண்ணினார்."[25]

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து அதைப் பயன்படுத்தவும், காக்கவும் வைத்தார்."[26]

என்று ஏதேன் தோட்டத்தைப் பற்றிய வரலாற்றை அறியலாம்.

தேவன் ஆதிமனிதனை அழைத்துக்கொண்டு வந்து குடியமர்த்தியிருந்த ஏதேன் சகலவித விருட்சங்களின் விளை நிலமாயிருந்ததென்றும், தோட்டம் என்றும் அறியக் கிடைப்பதாலும், **தோட்டம்** என்பதற்கு **'விளை'** என்பது பொருளாவதாலும் முன்னர் அறியப்பட்ட **'திரமிள'** என்ற சொல் **'தோட்டம்'** என்ற சொல் பொருள் உணர்த்துவதாய் வழங்கப்பட்டிருத்தல் கூடுமெனக் கருதலாம். ஆகவே, **திரமிளம்** என்றும் பின்னர் **திரமிழம்** என்றும் வழங்கப்பட்டிருக்கலாம்.

ஆதிமனிதன் ஆதாமைக் குறித்து,

"அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்தலிருந்து அனுப்பிவிட்டார்."[27]

எனவும்,

". . . . . . . வெளியின் பயிர் வகைகளைப் புசிப்பாய்"[28] . . .

என்றார் எனவும் அறியப்படுகிறது.

---

25) ஆதி 2:8,9 26) ஆதி 2:15
27) ஆதி 3:23 28) ஆதி 3:18

எனவே, ஆதிமனிதன் இருந்த தோட்டம் **'திரமிள' 'திரமிளம்'** என வழங்கப்படுமாயின், தோட்டத்திற்குப் புறம்பாக ஆதிமனிதனை உருவாக்க எடுக்கப்பட்ட மண் வெளியை சமவெளி என்று வழங்குவது போல், **'திரமிளி'** எனக் குறிப்பிட்டிருக்கலாமெனக் கருதவும் இடமுண்டாகிறது.

மண் வெளியாகிய தராவெளியைக் குறிப்பிடுவதற்கு வழங்கப்பட்ட **'திரமிளி'** எனும் சொல் அம்மண்ணின் மைந்தர்களின் வழி வெளிப்பட்ட மொழிக்கும் ஆகிவந்திருக்கலாம். அச்சொல்லே வலிதவிஸ்தாரம் என்ற பௌத்த சமயநூல் கூறும் 64 வகையான எழுத்து வகைகளில் தமிழகத்து வரிவடிவம் **'திராமிளி'** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் கூடும்.

வடமொழி, பாளி போன்ற பிராகிருத மொழிகள் ஆகியவற்றில் தமிழுக்குரிய சிறப்பான எழுத்தாகிய 'ழ' காணப்படாததால் 'ழ' வுக்குப் பதிலாக 'ட' அல்லது 'ள' என்ற எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டது என்று நாம் முன்னர் கண்ட அறிஞர் கூற்றை நோக்க, 'திரமிள' என்ற சொல் 'திரமிட' எனவும் 'திரமிடம்' எனவும் வழங்கப்பட்டதெனக் கருதலாம்.

ஆதிமனிதன் ஆதாம் குடியிருந்த தோட்டம் தராவிள எனுஞ் சொல் லின் திரிபாகிய '**திரமிள**' **திரமிளம்** '**திரமிட**' '**திரமிடம்**' எனும் சொற்களால் வழங்கப்படுவதாகலின், அச்சொற்களின் '**திரம்**' எனும் அடிச்சொல் உணர்த்தும் பொருள் சிந்தனைக்குரியது. ***திரம்** என்பதற்கு **வீடுபேறு**** அல்லது **முத்திபேறு** அல்லது **முத்தி** என்பது பொருள். ஏதேன் தோட்டம் தேவனால் உண்டாக்கப்பட்டதும் தேவனால் ஆதிமனிதனுக்கு அளிக்கப்பட்டதும், என்றைக்கும் உயிரோடிருக்கும் பலனாகிய நீடு வாழ்வைத் தரும் கனியை விளைவிக்கும் ஜீவ விருட்சத்தை முளைப்பித்திருந்ததுமான சிறப்புடையது. ஆகவே, அது முத்தி நிலையுடைய வீடு எனத்தக்க வாழ்விடமாயிருந்தது எனலாம். ஆகவே, ஏதேன் தோட்டம் '**வீடு பேறுடைய முத்தி**' எனும் பொருள் உணர்த்தியே **தராவிள** எனும் சொல் **திரமிள, திரமிளம்** எனவும் **திரமிட, திரமிடம்** எனவும் திரிந்து வழங்கப்பட்டு வந்துள்ளது எனும் தெளிவு விளங்குகின்றது. ஆகவே, **ஏதேன் தோட்டத்தை 'திரமிடம்' எனலாம்.**

ஆதிமனிதராகிய ஆதாமும் அவன் மனைவியாகிய ஏவாளும் ஏதேன் தோட்டமாகிய திரமிடத்திலிருந்தவராதலின் அவர்களை '**திரமிடர்**' எனக் குறிப்பிட்டு வழங்கலாம். '**திரமிளர்**' எனவும்

* கழகத்தமிழ் அகராதி 1983
** தமிழ் ஆங்கில அகராதி எம். வின்சுலோ 1995 வீடுபேறு - முக்திபேறு

வழங்கலாம். முத்தி வீடு எனும் பொருளுடைய **திரம்** எனும் வாழ்விடமாகிய ஏதேன் தோட்டம் உளராதலின் (உடையவராதலின்) அவர்களைத் '**திரமுளர்**' (திரம் + உளர்) எனவும் குறிப்பிடலாம். புசிக்க வேண்டாம் என்று தேவன் அவர்களுக்கு விலக்கின விருட்சத்தின் கனியை அவர்கள் புசித்ததினால் தேவனாகிய கர்த்தர் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தி வெளியே அனுப்பி விட்டார். ஆகவே, அவர்கள் ஏதேன் தோட்டமாகிய திரம் எனும் முத்தி வீடு இல்லாதவராயினர். ஏதேன் எனும் முத்தி வீடாகிய திரம் இலர் ஆனதால் '**திரமிலர்**' **(திரம் + இலர்)** என வழங்கப்பட்டிருத்தல் இயல்பு.

உலகின் முதல் மனிதன் ஆதாமின் மொழி - தமிழ்

திரமிலர் என அழைக்கப்படுபவர்களில் ஆதிமனிதன் ஆதாம் திரமிலன் ஆவதற்கு முன்னர் தேவன் அவனை உருவாக்கின நாளில், தேவனாகிய கர்த்தர் "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்".[29] ஆகவே, கர்த்தர் ஏவாளை ஆதாமுக்குத் துணையாக உருவாக்கிக் கொடுப்பதற்கு முன் ஆதாம் துணையின்றி தனிமையாயிருந்தவன் என அறியலாம். ஏகம் என்னும் துணையின்மையையும், தனிமையையும் குறிக்கும் சொல் தமி* என்பதாகும். ஆகவே, ஆதாமைத் **'**தமியன்**' **(தமியன் = தனியன்)** என்றழைக்கலாம். இவன் '**திரமுளன்**' என்றும் '**திரமிலன்**' என்றும் அழைக்கப்பட்டிருக்கலாமென்பதால் '**தமியன்**' என்னும் சொல் **தமிளன்** என்று திரிபடைதல் இயல்பு. மேலும் ஏவாள் அவனுக்குத் துணையாக கொடுக்கப்பட்டதனால் தனிமை நீக்கப்பட்டதாகலின் தனிமையிலனாகி '**தமிலன்**' எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதலாம்.

ஆதிமனிதன் ஆதாம் தனிமையாய் இருந்த பொழுது தன்னை உருவாக்கிய தேவனாகிய கர்த்தருடன் பேசியிருக்கிறான்.

> "தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.

---

29) ஆதி 2:18

* தமி-தனிமை ஒரு துணையுமின்மை, தமிழ் - ஆங்கில அகராதி எம். வின்சுலோ 1995

** தமியன் = தனியன், தமிழ் - ஆங்கில அகராதி எம். வின்சுலோ 1995

அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான், ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை"[30]

என்று பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால் ஆதாம் தனக்குத் துணையில்லாதிருந்தபோது மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் மற்றுள்ள ஜீவ ஜந்துக்களுக்கும் தேவனுடைய முன்னிலையில் பேரிட்டு அவருடன் பேசியிருக்கிறான் என்று விளங்குகின்றது. ஆகவே, ஆதாம் தனிமையாயிருந்தபொழுது அவனது நாவில் மொழி எழுந்து ஒலித்தது என்பது தெளிவு.

திரமிளன் என்ற தமிளனாகிய ஆதாமின் தனிமையில் எழுந்த மொழியாதலின், அம்மொழியை **தமி+எழு+மொழி** எனக் கொள்ளலாம். அதுவே '**தமிழு மொழி**' எனவும் '**தமிழ் மொழி**' எனவும் வழங்கலாயிற்று எனலாம். இத்தமிழ் மொழியை உடையவனாதலின் முன்னர் **தமிளன்** என்றும் **தமிலன்** என்றும், அறியப்பட்ட ஆதிமனிதன் ஆதாமைத் **தமிழன்** எனலாம்.

தமிழனாகிய ஆதிமனிதன் ஆதாம் '**திராவிடன்**' உண்டவன் (உடையவன்) என்பதால், **திராவிடர்** எனவும், **திரமிலர்** எனவும் வழங்கப்பட்ட அவன் வழித்தோன்றல்கள் அனைவரும் **தமிழர்களே. உலகின் முதல் மனிதனே தமிழன்,** அவன் மொழியே 'தமிழ்' எனத் தெரியப்படுவதால் **உலகிற்கு முதன்மொழி தமிழ்** என்றும், அதுவே பூமியெங்கும் ஒரே மொழியாக தனிமையாயிருந்து பின் அதனிடத்திலிருந்தே பிறமொழிகள் உருவாயிற்று என்றும் கருதலாம்.

ஆராய்ந்து அறிந்து மேற்கண்ட பொருள் விளக்கங்கள் உணர்த்தும் கருத்துக்களைக் கீழ்க்காணுமாறு உணரலாம். **திரமிடம்** என்பது முத்தி இடம். ஆகவே, **திரமிடர், திரவிடர்** என்போர், '**அப்பழம் உண்ணாதே**' என்று தேவனாகிய கர்த்தர் விலக்கிய பின்னும் முத்தி முதற்கொடியாகிய ஆதாம் ஏவாளுக்கு மோகக்கொடி எனும் ஆசை படர்ந்ததால், முத்தி எனும் ஏதேன் தோட்டத்திலிருந்த முதற்கொடியாகிய ஆதிமனிதன் ஆதாமும் அவன் மனைவி ஏவாளும் ஆகிய உலக முதல் மனிதர் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியாகிய பழத்தைப் புசித்து தராவிடத்தால் முத்தியை இழந்து **திரமிலராகினர்.** அவர்களின்

30) ஆதி 2:19,20

வழித்தோன்றல்களாகிய **சந்ததியாரும் திரமிலராயினர்.** ஆகவே, திரமிளர், திரமிலரான திராவிடர் தங்கள் ஆதி தகப்பனாகிய ஆதாம் 'முத்தி' இழந்ததால் தாங்களும் இழந்துபோன தங்கள் முத்தியாகிய வீடுபேறு அடைதல் வேண்டியும், நீடுவாழ்வு பெற வேண்டியும் தங்களையும், தங்கள் ஆதி பெற்றோரையும் உருவாக்கின தேவனாகிய கர்த்தரைத் தேடி, வாழ்வுக்கு உரிய வழி அறிந்து ஒழுக முனையும் திராவிட பலன்பற்றியதும் அமிழ்தின் பலனாகிய நீடுவாழ்வு பற்றியதுமான நம்பிக்கை உடைய ஆன்மீக சிந்தனையாளர்களேயாவர். இத்திராவிடர்களின் ஆதி தகப்பன் ஆதாம் இறைவனுடன் ஆன்மீக உறவு கொண்டிருந்த மூல முதல் மொழியே தமிழ். ஆகவே, **தமிழ் ஒரு உலகளாவிய தூய ஆன்மீக மொழியே** என்பது முடிவு.

ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்

தேவன் பூமியை உண்டாக்கின நாளில் காணப்பட்ட வெட்டாந்தரையை விளைநிலமாக்கின பின்பு, ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி, அதின் நடுவிலே நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை முளைக்கப்பண்ணியிருந்ததினால் அந்த ஒரே விருட்சத்தினாலேயே நன்மையும் தீமையும் ஆகிய இரு தன்மைகளும் அறியப்படலாயிற்று என்பது தெளிவு. ஆகையால், அந்த ஒரே விருட்சத்திலேயே நன்மையும் தீமையும் ஒன்றோடொன்று உடன் கலந்திருந்ததென்னும் உண்மைத் தெளிவும் அறியக்கிடைக்கின்றது.

நன்மையோடே சகசமாய் இருந்த தீமையினாலே தீய பலனே விளையும். 'சாவே' அத்தீய பலாபலனாயிற்று. அவ்விருட்சத்தை முளைக்கச் செய்த தேவன் அத்தீய பலனாகிய 'சாவை' விலக்கக் கருதியே, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என உறுதியாய் எச்சரித்து, அறிவுறுத்தி அதை புசிக்க வேண்டாம் என அவனுக்குக் கட்டளையிடலானார் என்பதும் பெறப்படுகின்றது.

நிலத்தின் விளைவாகிய விருட்சத்தில் நன்மையின் உடனிருந்த தீமை சாவைத்தருதலால் அதுவே '**விடன்**' எனப்பட்டது. அது நிலத்தின் விளைவாதலால் '**தராவிடன்**' என்னப்பட்டது. '**விடன்**' எனப்படுவது '**விடம்**' (விஷம்) என்னும் சொல்லாலும் குறிக்கப்பெறும். ஆகவே '**தராவிடன்**' என்பது **தராவிடம்** (விஷம்) எனவும் குறிக்கப்பெறும். **விடன்** அல்லது **விடம்** என்பதன் பொருள் '**நஞ்சு**' என்பதாம். தோட்டத்தில் முளைத்த நன்மை தீமை அறியத்தக்க அவ்விருட்சத்தின் கனி '**நஞ்சு**' ஆதலின் அக்கனியைப் புசித்த ஆதிமனிதன்

நஞ்சுண்டவன் என்றாகிறான். அந்நஞ்சானது நிலம் சார்ந்த விளைவானதினால் 'திராவிடம்' (துராவிடம்) எனப்படுவதால் திராவிடம் உண்ட அந்த ஆதிமனிதனை நிலம் சார்ந்த நஞ்சுடையவன் எனும் பொருள்பட 'திராவிடம் உடையவன்' எனக்குறிக்க ஆகிவந்த சொல்லே '**திராவிடன்**' எனலாம். உலக வரலாற்றில் ஆதாம் ஆதிமனிதனாகக் குறிக்கப்பெற்றே இவ்வரலாறு கிடைக்கப்பெற்றதால், இக்கருத்தாய்வுப் பொருளால் **ஆதாம்** '**திராவிடன்**' என அழைக்கப்படுகிறான்.

அத்தியாயம் - 2

3. திருக்குறள் கண்ணோட்டத்தில் திராவிடர் ஆதாம், ஏவாள்

மனிதர் வாழும் இவ்வுலகு 'கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை' இருப்பதனால் அமைவதாயிற்று எனவும், அக்கோண்ணோட்டத் துள்ளது உலகியல் எனவும் கருமஞ்சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு இவ்வுலகு உரிமையுடைத்து என்றும் கூறின திருவள்ளுவர் அக்கண்ணோட்டத்தினுள்ளே,

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

எனக் கூறியுள்ளமை சிந்தனைக்குரியது.

நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் தமக்கு ஏதாகிலுமொன்றை உண்ணக் கொடுக்கும் மற்றொருவர் அதனுள் நஞ்சைக் கலந்திட தாம் தமது கண்ணோட்டத்தால் காண்பாராயின் அதனைக் கண்ட பின்னும் நாகரிகம் வேண்டுவதன் காரணம் பற்றி தாம் அந்நஞ்சினை உண்டு அமைவர் என்பதே இக்குறள் வழி கிடைக்கப்பெறும் பொருளாகும்.

தீமைபயப்பதே நஞ்செனப்படுவது. அத்தீமை நன்மையுடன் கலந்திருப்பினும் தீமையே பயக்கும் என்பது உறுதி. ஆகவே, நஞ்சின் தீமையால் வரும் துன்பத்தை ஏற்று தம்மை வருத்திக் கொள்ள விளைபவர் யார்? ஆன்றோர் இக்கருத்தினை எங்ஙனம் ஏற்கக் கூடும்? நஞ்சுண்பாராயின் கருமஞ்சிதையாமல் கண்ணோட வல்லாராதல் எங்ஙனம்? உலகம் தமக்கு உரித்தாவது எங்ஙனம்? உரிமை இழப்பாரன்றோ? உலகியல் நிலைப்பது எங்ஙனம்? பின்னை 'நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் நஞ்சுண்டமைவர் என பொய்யாமொழிப் புலவர் எங்ஙனம் கூறலானார்? எனும் கேள்விகள் எழுகின்றன. நஞ்சுண்டமைதல் நயத்தக்க நாகரிகம் எனப்பட்டது எவ்வாறு எனவும் சிந்திக்கத் தூண்டுகிறது.

நஞ்சு பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்த நிகழ்வு ஒன்றினைத் திருவள்ளுவர் கண்டிருத்தல் வேண்டும். இல்லையாயின் கேள்வியுற்றிருத்தல் வேண்டும். அதனையே அவர் இங்கு சுட்டியிருக்க வேண்டும். அவ்வாறாயின் நாகரிகம் வேண்டுபவராய் நஞ்சுண்டமைந்த

அந்நிகழ்வின் நாயகன் யார்? அந்நிகழ்வுதான் யாதென வரலாற்றை நோக்க, கிறித்தவரின் பரிசுத்த வேதாகமம் கூறும் ஆதிமனிதன் நஞ்சுண்ட முன்னர் விவரிக்கப்பட்ட நிகழ்வே இக்குறள் எடுத்துக்காட்டும் செய்தி என விளங்குகின்றது.

நஞ்சுண்டமைந்த அந்நிகழ்வின் நாயகனான ஆதிமனிதனாகிய ஆதாம் நஞ்சுண்டவிதம் நோக்குதற்குரியது. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று அவனுக்குக் கட்டளையிட்ட தேவனாகிய கர்த்தர் "அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்"[31] என்றும் அவனுக்குச் சொல்லியிருந்தார். ஆகவே, அவன் புசித்த கனியில் சாவைத் தரும் நஞ்சு உண்டென்பது அவனுக்கு அறியப்படலாயிற்று. ஆயினும், ஆதாமின் மனைவியாகிய ஏவாள், அவனுடைய விலாவிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பினால் உருவாக்கப்பட்டதினால் மனுஷி என்னப்பட்ட ஸ்திரீயானவள், அக்கனியையே சர்ப்பத்தின் தூண்டுதலால் ஆதாமுக்குக் கொடுத்தாள். அது சாவைத் தரும் என்று அவன் அறிந்திருந்தும் அவனும் அதனைப் புசித்தான். ஆகவே, ஆதாமைப் பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவன் எனல் பொருந்தும்.

ஆதாம் உலகின் முதல் தராபதி

ஆதாமையும் அவன் மனைவியையும் (சிருஷ்டித்த) உண்டாக்கின தேவன் அவர்களை நோக்கி : 'நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.'[32] எனக் கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் வேதவசனம் ஆராயற்பாலது.

'பூமியைக் கீழ்ப்படுத்தி . . . . ஆண்டு கொள்ளுங்கள் என்று ஆதாமையும், ஏவாளையும் உண்டாக்கின தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் எனக்காணப்படுவதால் தேவன் ஆதாமை சமுத்திரத்தின் மேலும் பூமியின்மேலும் ஆளுகை செய்வதற்கு அரசனாக ஏற்படுத்தினார் என விளங்குகின்றது. ஆகவே, பூமியின் மேல் அரசனான ஆதிமனிதனாகிய ஆதாமை **'தராபதி'** அல்லது **'தராதிபன்'** எனலாம். அவனே ஆதிமனிதன் என்பதால், அவனே முதல் தராபதி எனவும் நஞ்சுண்டமைந்த காரணத்தால் **'திராவிடபதி'** எனவும் கொள்ளத்தகும். மேலும் தேவன்,

---

31) ஆதி 2:17 32) ஆதி1:28

"நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள்[33] என்றார் என்னும் வசனத்தில் மனுஷன் பூமியை ஆளுகை செய்வதே படைப்பின் நோக்கமாயிருந்தது எனும் தெளிவு கிடைக்கிறது. இதனால் ஆதிமனிதன் பூமியை ஆளுகைச் செய்யும் அரசியல் கருதியே, உலகு, உலகியல் என்பன கூறிய திருவள்ளுவர் உலகின் முதல் தராபதி நஞ்சுண்டு திராவிடபதியான செய்தியை மையக் கருத்தாக மனதில் தாங்கியே

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" - குறள் 580

எனும் குறளை பொருட்பாலின் அரசியல் பகுதியில் வைத்தார் எனும் உண்மை அறியக் கிடைக்கிறது.

திருவள்ளுவர் இக்குறளை கண்ணோட்டம் என்னும் அதிகாரத்தினுள் வைத்தார் எனினும்,

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
கண்ணோட்டம் வேண்டு பவர்"

எனக் கூறாமல் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் எனக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே நஞ்சுண்டமைந்த நிகழ்வின் கண்ணோட்டம் முழுமையும் ஆழ்ந்து ஆராய்தல் அவசியமாகிறது.

உலகின் முதல் தராபதியாகிய ஆதாம் எனும் ஆதிமனிதனே நஞ்சுண்டமைந்தவன் என அறியப்படுவதால், அந்நிகழ்வில் நயத்தக்க நாகரிகம் வேண்டியதன் அவசியம் நேரிடக் காரணம் யாது? எனவும் அவனுக்கு அந்நஞ்சு உண்ணக் கொடுத்தவள் அவனுக்குத் தேவன் துணையாக ஏற்படுத்தியிருந்த 'மனுஷி' எனப்பட்ட ஸ்திரீயானவளாதலின் அவளது கண்ணோட்டம் யாது? எனவும் அறிதலே அந்நிகழ்வின் கண்ணோட்டம் பற்றிய முழுமையை வெளிப்படுத்தும்.

ஆதாமுக்கு நஞ்சு உண்ணக் கொடுத்த அவன் மனைவி

ஆதிமனிதனாகிய ஆதாமுக்கு நஞ்சு உண்ணக் கொடுத்த ஸ்திரீயைக் குறித்துக் கிறித்தவர் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள

33) ஆதி 1:26

விளக்கங்கள் சிந்தனைக்குரியவை.

"தேவனாகிய கர்த்தர், மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்"[34]

". . . . . . . ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்.

அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்.

இதனித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்"[35]

புசிக்க வேண்டாம் என்று தேவன் விலக்கின நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை ஆதாம் புசித்த பின்பு தேவன் ஆதாமைக் கூப்பிட்டபோது, 'நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன்' என்று அவன் சொன்னதை அவர் கேட்டு "புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ' என்றார். அதற்கு ஆதாம் :

> 'என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்'[36] என்றான்.

எனப் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் மேற்கூறின பகுதிகளை நோக்க, சாவைத் தரும் கனியாகிய நஞ்சினை ஆதாமுக்குக் கொடுத்த ஸ்தீரியானவள் :

ஆதாமின் தனிமையைப் போக்குவதற்கென்று உண்டாக்கப்பட்டவள். அவனுக்கு ஏற்ற துணையாயிருக்கும்படி உண்டாக்கப்பட்டவள்.

---

34) ஆதி 2:18 35) ஆதி 2 : 21-25 36) ஆதி 3:12

'அவனுடைய விலா எலும்புகளிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பு ஒன்றினால் மனுஷியாக உருவாக்கப்பட்டவள்.'

'ஆதாமாகிய மனுஷனில் எடுக்கப்பட்டவள்' அதினால், 'ஆதாமின் எலும்பில் எலும்பும் அவன் மாம்சத்தில் மாம்சமுமாய் இருந்தவள்'.

'ஆதாம் இசைந்திருக்கவேண்டிய அவனுடைய மனைவியாக அவனுக்குக் கொடுக்கப்பட்டவள்'.

'ஆதாமுடனே இருக்கும்படி தேவன் அவனுக்குத் தந்த மனைவியாகிய துணை என்பன அந்த ஸ்தீரியைப் பற்றின விளக்கங்களாகப் பெறப்படுகின்றன.

திருவள்ளுவர் ஆண்டுள்ள கண்ணோட்டம் என்னும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் கூறும் பொருள் மேற்காணும் விளக்கங்களுடன் ஒப்புநோக்குவதற்குரியது.

கண்ணோட்டமாவது, 'தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை' எனப் பொருள் கொள்வார் உரையாசிரியர் பரிமேலழகர்.

ஆகவே,

'நஞ்சு பெயக்கண்டும் உண்டு அமைவர் என்பதற்குப்
பயின்றார் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண்
மறுக்கமாட்டாமையின் அதனையுண்டு பின்னுமவரோடு
மேவுவர்'[37] எனப் பொருள் கூறினார்.

ஏனைய உரையாசிரியர்கள் இச்சொல்லுக்குக் கூறும் பொருள் பின்வருமாறு அமைந்திருக்கக் காணலாம்.

"கவிராசர் : தன்னுடனே சினேகம் பண்ணியபேர் சொன்ன காரியங்களை மறுக்கமாட்டாமை. இது அவர்கள் மேல் கண்ணோட்டமாகிய தயையுண் டான படியினாலே அப்பெயர்த்தாயிற்று.

பழையை 2 : அஃதாவது பழகினவரைக் கண்டால் அவர் சொல்லும் மாற்றம்* மறுக்கமாட்டாமை கண்ணாற்கண்டு முகவாட்டஞ் செய்யாமை கண்ணோட்டம் (இன்மை) என்க. கண்

---

37) திருக்குறள் பரிமேலழகருரை 1939 பக் 232

* மாற்றம் - சொல்

மறுக்க மாட்டாமை, கண் மறுத்துச்
சொல்லாமை எனப் பெரியோர் சொல்லுஞ்சொல்.

வரத : கண் ஓட்டம் - கண்ணின் வழியாக அன்பைச் செலுத்துதல், மனதிற்கு முன்னே பழகின இடத்தில் அன்பைச் செலுத்துதல் என்பர்

. . . . [38]

. . . .

இராம : கண்ணோட்டம் - தாட்சண்யம், நட்பு, உறவு நன்றி, கருணை, ஒப்புரவு இவை காரணமாக ஒருவர்க்கொருவர் கட்டுப்பட்டு நடக்குங்குணம் அதாவது ஒருவரைக் கண்டவுடன் கருத்தால் அவரிடத்திற் பரிவு கொள்வது.

கா.சு : 'வேண்டியவர்களைக் கண்டால் அவர் சொன்னதை மறுக்க முடியாத நிலை' என்பர்.

சாமி. சிதம் : பழகியவர்களின் சொற்களை மறுக்காமை என்பர்[39]

இவ்வுரைகளை எடுத்தாளும் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர், 'கண்ணோட்டம் பழகியவர்களிடத்திற் காட்ட வேண்டிய பண்பு எனல் இயைபுடையதாகும்' எனவும், 'இனக்கனிவின் வெளிப்பாடு' எனலாம் எனவும் 'திருக்குறள் உரைக் களஞ்சியம்' (பொருட்பால் அரசியல்) எனும் தம் நூலில் கூறியுள்ளார்.

அறிஞர்களின் இவ்வுரைகளைத் தொகுப்பின்,

"தன்னோடு பயின்றவர்
தன்னுடனே சினேகம் பண்ணினவர்,
அன்பு செலுத்துதற்குரியவர்,
ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு,
நடக்கும் உறவுக்குட்பட்டவர்
ஆகவே, தனக்கு வேண்டியவர்
இனக்கனிவின் வெளிப்பாட்டுச் சூழலுக்குரியவர்
அவர் சொல் மறுக்கமாட்டாமை" எனும் கருத்தும் பெறலாகும்.

---

38) பத்மபூஷன் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம் 1990 பக் 659
39) பத்மபூஷன் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரை களஞ்சியம் 1990 பக் 660

எனவே, இவ்வாறாகப் பெறப்படுபவை ஸ்திரீயைப் பற்றி முன்னர் பெறப்பட்ட விளக்கங்களோடு ஒப்புநோக்க, புருஷனும் மனைவியுமாகிய சூழலில் ஆதிமனிதனாகிய ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் பொருந்தும் என்க.

'பெயக்கண்டும் என்பது கொணர்ந்திடக் கண்டும் என்றது'[40] எனும் பொருள் விளக்கம் தரும் காளிங்கர் உரை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

'. . . . . ஸ்திரீயானவள் . . . .
. . . .
கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும்
கொடுத்தாள்; அவனும் புசித்தான்'[41]

எனக் கிறிஸ்தவரின் புனித நூலான வேதாகமத்தில் காணும் ஆதி மனிதன் ஆதாம் நஞ்சுண்ட விதத்திற்கு ஏற்புடையதாயிருப்பதுமாகும்.

'பெயக்கண்டும்' என்பதற்கு நயங்கூற வந்த குழந்தை 'நஞ்சைக் கலப்பதைப் பார்த்தும் அவரை வருத்தாது அவர் மீது கண்ணோடி அதனையுண்டு பின்னும் அவருடன் கூடி வாழ்வார்' என்பர். 'நஞ்சுண்டான் சாம்' என்பது முடிபாகலின் பின்னர் கூடுவதெங்கே? வாழ்வது எங்கே? என எண்ணுக எனவும், '. . . . . பரிமேலழகர் தரும் சிறப்புரையாகிய 'பின்னும் அவரோடு மேவுவர்' என்பதற்கு நஞ்சுண்ட பின்னும் உயிர்பிரிகிற வரையில் நஞ்சூட்டிய அவரோடு விரும்பியிருப்பர் எனக் கருத்துக் கோடல் ஏற்புடையதாகும் எனவும் சு. தண்டபாணி தேசிகர் மேற்கோள் காட்டிக் கூறும் கருத்துக்களிலிருந்து உயிர் பிரிகிற சாவினைத் தரும் நஞ்சினைக் கருத்தில் கொண்டே உரையாசிரியர்கள் தத்தம் கருத்துக்களைக் கூறினர் எனக் கொள்ளலாம்.

ஆகவே, வாழ்வது எங்கே? கூடுவது எங்கே? எனும் நிலையில் உயிர் பிரிகிற சாவினைத் தரும் நஞ்சினைத் தமக்கு ஊட்டியவருடன் அவரை விரும்பியிருப்பது ஏது? உயிர் பிரிகிறவரையில் ஒருவரோடொருவர் கூடியிருக்கும் கூட்டுறவில் கட்டுப்பட்டவரே அவ்வாறமைவர் எனக் கொள்ளத்தகும். அவ்வாறாயின் அது இல்லற உறவில் அமைவதே என்க. ஆதிமனிதனுக்கு சாவினைத் தரும் கனியைக் கொடுத்தவர் அவனது மனைவியாதலின் தன் மனைவியாகிய அந்த ஸ்திரீயை அவன் விரும்பியிருத்தல் ஏதுவாயிற்று என்பது தெளிவு.

40) டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைக்களஞ்சியம் 1998 பக் 689
41) ஆதியாகமம் 3:6

நஞ்சுண்டமைவதற்கான காரணங்கள் - ஓர் ஆய்வு

புருஷனும் மனைவியுமாகிய இருவர் கூடி வாழும் வாழ்வில் மனைவியாயினும் புருஷனாயினும் நஞ்சு சேர்ந்த ஏதாகிலுமொன்றைக் கொண்டு வந்து ஒருவர் மற்றவர்க்கு உண்ணக் கொடுப்பாராயின் நஞ்சுண்டமையலாகுமா? அது முறையாகுமா? அறிவுடைமைக்குத் தகுதியாகுமா? வாழ் நிலைக்கு உகந்ததாகுமா? சாவைத் தருவதாயினும் ஏற்பரோ? தம்மை வருத்தி சாவைத் தரும் நஞ்சினை ஏற்று உண்பது நிகழ்தல் ஏது? இருவர் கூடிவாழும் இல்வாழ்வில் அவ்விருவரும் நஞ்சுண்டமைதல் அரிதேயாயினும் நஞ்சுண்ணற்குத் துணிவுகொள்ளத் தூண்டும் காரணங்கள் மூன்று உளதென உய்த்துணரலாம்.

எவையெனில்,

1. இருவர் ஒருவரையொருவர் விரும்பிக் கூடியிருக்குமிடத்து தம்மில் யாரேனுமொருவர் அகத்தூண்டுதலாலோ அன்றி புறத்தூண்டு தலாலோ தம் உயிரைப் பிரிக்கும் நஞ்சினை உண்டமைவராயின் அவருடன் மற்றுள்ளவர் தம் உயிருள்ளவரை தம்முடன் இசைந்திருக்க வேண்டிய தம் அன்புக்குரிய தம்மவர் - மனைவியோ, புருஷனோ (மற்றுள்ள இல்லற உறவின் முறையாரோ, பெற்றோரோ, மக்களோ) சாவினைத் தரும் நஞ்சினை உண்டு தம்மை வருத்திக் கொண்டதினால் அவரது பிரிவாற்றாமையினால் வருந்தி அவர்தம் வருத்தத்திற்குக் காரணமான அந்நஞ்சின் தீய பலனைத் தாமும் அவ்வாறே ஏற்று அவரோடேயாக விரும்பி, கொடிய அந்நஞ்சினையே தானும் உண்டு அதன் தீமையை அனுபவிக்க உடன்படுவர்.

2. தீதுடையது நஞ்சு என அறிந்தவர் எவரும் அதனை உண்ணார் என்பதும் திண்ணம். எனவே, நஞ்சு தீதிலது எனும் பொய்யுரைக்கப் பெறுமாயின், அஃதாவது அது நஞ்சல்ல அமிர்தமென பொய்மையும் வாய்மை போல் உரைக்கப் பெறுமாயின், கண்ணோட்டத்தில் தவறி, பொய்மையை வாய்மையென ஏற்று, அதன் வழி நற்பலனை அடைய வேண்டி, அதனை நஞ்சல்ல அமிர்தமென எண்ணி உண்ணல் ஆகும்.

3. நஞ்சு எத்தன்மையதாயினும் அது தம்மை எவ்வகையாலும் தீண்டாத அருளுடைமை தமக்குரித்தாயின் நஞ்சு உண்ணல் கூடும் எனும் இம்மூன்றும் ஒருவரை நஞ்சுண்டமையத் தூண்டும் ஏதுக்களாவன எனக் கருதலாம். ஆகவே, ஆதிமனிதன் நஞ்சுண்ட நிகழ்வு இம்மூன்று ஏதுக்களையுங்கொண்டு ஆராயப்படுதல் வேண்டும்.

மூன்றாம் ஏதுவைக் கொண்டு ஆராயுங்கால் ஆதிமனிதன் உண்ட நஞ்சு அவனுக்குத் தீமை விளைவித்ததா? இல்லையா? என்றறிதல் அவசியம். ஆதலின் அவன் நஞ்சுண்டதின் பின் விளைவுகள் நோக்குதற்குரியவை.

புசிக்க வேண்டாம் என்று தேவன் ஆதிமனிதனாகிய ஆதாமுக்கு விலக்கின கனியை அவன் புசித்த படியினால், தேவன் ஆதாமை நோக்கி,

"..................

....

நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத்
திரும்புவாய் என்றார்"[42]

....

....

"இதோ, மனுஷன் ......
.... தன் கையை
நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து,
புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச்
செய்ய வேண்டும் என்று,
அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த
தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து
அனுப்பி விட்டார்.

அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம்
வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே
கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி
பட்டயத்தையும் வைத்தார்"[43]

"ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம்
தொளாயிரத்து முப்பது வருஷம் அவன்
மரித்தான்"[44]

என்று ஆதிமனிதன் சாவைத்தரும் கனியாகிய நஞ்சினை உண்டதனாலான பின்விளைவுகள் பரிசுத்த வேதாகமத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

---

42) ஆதி 3:19   43) ஆதி 3:22-24
44) ஆதியாகமம் 5:5

'சாகவே சாவாய்' என்றும் 'மண்ணுக்குத் திரும்புவாய்' என்றும் தேவன் ஆதிமனிதனுக்குச் சொன்னது போல, நஞ்சு அவனுக்குள் இறங்கினதினால், தொளாயிரத்து முப்பது வருடத்திற்குப் பின் அவன் மரித்தான் என்று அறியப்படுவதால் நஞ்சு அவனைத் தீண்டியது என்பது தெளிவு. ஆகவே, மூன்றாம் ஏது ஆதிமனிதன் நஞ்சுண்ட நிகழ்விற்குப் பொருந்தாது என்க.

தேவனுடைய மனிதனாகிய மோசே தேவனை நோக்கி ஏறெடுத்த ஜெபத்தில்,

"உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த நாள்போலவும், இராச்சாமம் போலவும் இருக்கிறது"[45] என்று கூறியுள்ள திருவசனமும்

> "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம்
> வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும்
> இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள்
> அறியாதிருக்கவேண்டாம்"[46]

என்று இயேசுகிறித்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு கூறியுள்ள திருவசனமும் ஈண்டு நினைவுகூரத்தக்கவை.

கர்த்தருக்கு ஆயிரம் வருடம் ஒரு நாள் போல இருக்கிறதென்று அறியப்படுவதாலும், ஆதாம் தொளாயிரத்து முப்பது வருடம் மட்டுமே உயிரோடிருந்து மரித்தான் என்று அறியப்படுவதாலும், 'நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்ட கர்த்தருடைய வார்த்தையின்படியே, அவன் மரித்த தொளாயிரத்து முப்பது வருடம் என்பது கர்த்தருடைய பார்வையில் ஆதாம் புசிக்கக் கூடாத கனியைப் புசித்த அதே நாள் என்றும் ஒரே நாள் என்றும் கொள்ளப்படுகிறதெனக் கருதலாம்.

மனைவியின் சொல் மறுக்கமாட்டாமை

ஆதிமனிதன் நஞ்சுண்ட நிகழ்வை முதலாம் ஏதுவைக் கொண்டு ஆராய்ந்து தெளிவு பெற பரிசுத்த வேதாகமத்தில் அதன் வரலாற்றை நோக்கலாம்.

---

45) சங் 90:4
46) 2 பேது 3:8

ஆதிமனிதனாகிய ஆதாம் சாவைத் தரும் கனியைப் புசித்த பின்பு, தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு,

> "......................
>
> ....
>
> ....
>
> புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின
> விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.
> அதற்கு ஆதாம், என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த
> ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக்
> கொடுத்தாள் நான் புசித்தேன் என்றான்.[47]

ஆதிமனிதனாகிய ஆதாம் நஞ்சுண்ட நாளில் அவனுடனிருந்தவள் அவனது மனைவியாகிய ஸ்திரீ. ஆதாமும் அவன் மனைவியுமாகிய அவ்விருவரும் ஒருவரையொருவர் விரும்பிக்கூடியிருந்த சூழலில் அவனுக்கு நஞ்சுவாகிய சாவைத் தரும் கனியை உண்ணக் கொடுத்தது, ஆதாமுடனிருக்கும்படி தேவன் அவனுக்குத் தந்த ஸ்திரீயாகிய அவன் மனைவியே எனவும், அவன் மனைவி கொடுத்ததனால் அவன் புசித்தான் எனவும் விளங்குகின்றது.

ஆகவே, கண்ணோட்டம் என்னும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் கூறும்பொருள் விளக்கங்களின் தொகுப்பாய் முன்னர் பெறப்பட்டுள்ள

'தன்னோடு பயின்றவர்,
தன்னுடனே சினேகம் பண்ணினவர்,
அன்பு செலுத்துதற்குரியவர்,
ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு
நடக்கும் உறவக்குட்பட்டவர்
ஆகவே, தனக்கு வேண்டியவர்
அவர்சொல் மறுக்கமாட்டாமை' (பக்கம் 25)

எனும் கருத்து முன்னர் கூறப்பட்டதன்படி ஆதாம் தன் மனைவி கொடுத்ததனால் நஞ்சுண்ட மறுக்கமாட்டாமையின் சூழல் அமைவினை விளக்குவதற்கு மட்டுமே ஆதிமனிதனுக்கும் அவன் மனைவிக்கும் பொருந்துமேயல்லாமல் கண்ணோட்டத்திற்கு நேரான சொற்பொருளன்று.

---

47) ஆதியாகமம் 3:11,12

"நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்" என்று ஆதாமுக்குக்கட்டளையிட்ட தேவனாகிய கர்த்தர், 'அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்' என்றும் அவனுக்குச் சொல்லியிருந்ததால், அவன் புசித்த கனியில் சாவைத் தரும் நஞ்சு உண்டென்பது அவனுக்கு அறியப்படலாயிற்று. ஆயினும் அதைத் தன் மனைவி கொடுத்ததால் மறுக்கமாட்டாமையால் புசித்தான். ஆகவே, ஆதிமனிதனாகிய ஆதாம் பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவன் (பக் 21) எனவும் முன்னரே விளக்கப்பட்டது.

அவ்வாறு, அக்கனி சாவைத் தரும் என அறிந்தும், தன் மனைவி கொடுத்தாள் என்பதற்காக மறுக்காததினால் அவன் சாவைத் தவிர்க்க முயற்சிக்கவில்லை எனவும், அக்கனியை உண்டதினால் சாவை ஏற்கத் துணிந்தான் எனவும் விளங்குகின்றது. சாவைத்தரும் என அறிந்தும் அக்கொடிய சாவினை ஆதிமனிதன் ஏற்கத் துணிந்தது ஏன் ? என்பது சிந்தனைக்குரியது.

ஆதிமனிதன் புசித்த நஞ்சினையுடைய கனியை அவனுக்குக் கொடுத்த அவன் மனைவி, அந்த

". . . . .

. . . .

. . . .

கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள் அவனும் புசித்தான்"[48]

ஆகவே, அவன் அக்கனியைப் புசித்ததற்கும் முன்னே அவன் மனைவி அக்கனியைப் பறித்து புசித்தாள் என விளங்குகிறது. அக்கனியானது சாவைத் தரும் என அவன் அறிந்திருந்ததனாலும், அவனுக்கு அக்கனியைக் கொடுத்தபோது (வேளையில்) அவள் அதனைப் புசித்திருந்தாள் என அவனுக்குத் தெரிய நேரிட்டதாலும் சாவைத்தரும் அக்கனியை ஆதாமின் மனைவி புசித்ததினால் தன்னை வருத்தி துன்புறுத்தும் சாவுக்குள்ளானாள் என அறிந்து உணரலானான் எனக் கருத இடமுண்டாகின்றது. எனவே, தன் உயிருள்ளவரை தனிமையைப் போக்க என்றைக்கும் தன்னுடன் இசைந்திருக்க வேண்டிய தன் அன்புக்குரிய மனைவி சாவினைத் தரும் நஞ்சினை உண்டு, தன்னை வருத்திக் கொண்டதினால் உயிர் பிரிந்து அவளுக்கு சாவு நேரிடும், ஆதலின் அவள் இனி என்றைக்கும் தன்னுடன் இருக்க

---

48) ஆதியாகமம் 3:6

மாட்டாமல் தன்னை விட்டுப் பிரிந்து விடுவாள் என்று மனம் வருந்தி, அவளது பிரிவாற்றாமையால் அவ்வருத்தத்திற்குக் காரணமான அந்நஞ்சின் தீய பலனை எற்று அவளோடேயாக விரும்பி, அக்கொடிய நஞ்சினைத் தானும் உண்டு, தன்னுயிரைத் தியாகம் செய்ய எண்ணி அதன் தீமையை அனுபவிக்க மறுக்கமாட்டாமையால் உடன்பட்டு நஞ்சுண்டமைந்தான் எனக் கொள்ளலாம். இவ்வாறு பிரிவாற்றாமையானும், மறுக்கமாட்டாமையானும் நஞ்சுண்டமைவது முதலாம் ஏதுவுக்கு இயைபுடையதாகும்.

புறத்தூண்டுதலும், அகத்தூண்டுதலும்

ஆதி மனிதன் ஆதாமின் மனைவி, புசிக்க வேண்டாம் என்று தேவன் விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்து, அதினால் சாவுக்குள்ளானதால் அவளும் நஞ்சுண்டமைந்தவள் எனலாம். எனவே, அவள் நஞ்சுண்டது அகத்தூண்டுதலோ அன்றி புறத்தூண்டுதலோ என்றறிதல் அவசியமாகின்றது.

ஆதி மனிதனும் அவன் மனைவியும், நஞ்சுவாகிய கனியைப் புசித்த பின்பு, தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு,

> "......................
>
> ....
>
> புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம், என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்.
>
> அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்"[49]

ஆதிமனிதனின் மனைவியை சர்ப்பம் வஞ்சித்ததினால் அவள் சாவைத் தரும் கனியைப் புசித்தாள் என விளங்குவதால், அவள் அக்கனியைப் புசிப்பதற்கு, சர்ப்பம் அவளை வஞ்சித்தது புறத்தூண்டுதலாயமைந்தது என்பது தெளிவு. ஆகவே, சர்ப்பம் ஆதாமின் மனைவியை வஞ்சித்ததுவும், அவள் அக்கனியைப் பறித்து, புசித்ததுவுமான நிகழ்வு நோக்குதற்குரியது. அந்நிகழ்வு பின்வருமாறு:

49) ஆதியாகமம் 3:11-13

"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: 'நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ' என்றது.

ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து : நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி : நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான்"[50]

என்று ஆதிமனிதன் மனைவி, புசிக்க வேண்டாம் என விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் பறித்து, புசித்த நிகழ்வு கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

சர்ப்பமானது ஸ்திரீயை நோக்கி : நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்றதற்கு ஸ்திரீயானவள் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக்குறித்து, தேவன் "நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்" என அறியக் கிடைப்பதால், அக்கனி சாவைத் தருமென ஆதிமனிதனின் மனைவி, சர்ப்பம் அவளைத் தூண்டினதற்கு முன்னரே அறிந்திருந்தாள் எனவும் அவ்வாறு அறிந்திருந்த பின்னும் அதனைத் தன் புருஷனுக்குக் கொடுப்பதற்கு முன்னர் சர்ப்பத்தின் தூண்டுதலால் அதனைப் பறித்து, புசித்தாள் எனவும் விளங்குகின்றது.

50. ஆதியாகமம் 3:1-6

(பக்கம் 27(2) 38ல் 2,3 பத்திகள்) ஆகவே, நஞ்சுண்டமைந்த அந்த ஸ்திரீயை பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவள் எனலாம்.

ஆதிமனிதன், 'ஆதாம் பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவன்' (பக்கம் 21,31ல் 1ம் பாரா) என முன்னர் விளக்கம் பெறப்பட்டது போல அவன் மனைவியும், 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவள்' எனும் விளக்கம் பெறப்படுவதால், திருவள்ளுவர், ஆதிமனிதனையும் அவன் மனைவியையும் சேர்த்தே கருத்தில் கொண்டு

'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்' - குறள் 580

எனப் பன்மையில் கூறினார் என்பது தெளிவு.

ஆதிமனிதனின் மனைவி தான் புசித்த கனி சாவைத் தருமென அக்கனியை அவள் புசிப்பதற்கு முன்னரே அறிந்திருந்தும், சர்ப்பம் அவளை வஞ்சித்த புறத்தூண்டுதல் காரணமாய் அக்கனியை அவள் புசிக்கத் துணிந்தது ஏன்? என்பது ஈண்டு ஆராய்தற்குரியது.

சர்ப்பமானது புறத்தேயிருந்து தூண்டினதினால் ஆதி மனிதனின் மனைவி அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்கதுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்தாள் என்று அறியப்படுவதால், அந்த ஸ்திரீயானவள் பறித்து, புசித்த கனியாகிய உலகின் பொருட்பால் அவளது கண் ஓடியதுவும், அதனால் அவள் கண்டு உணர்ந்ததுவும் விளங்குகின்றன. அக்காரணம் பற்றியே வள்ளுவர் இந்நிகழ்வினை பொருட்பாலில் வைத்தார் எனக் கொள்ளத்தகும்.

உலகின் பொருளாகிய விருட்சத்தின் மீதும் அதன் கனியின் மீதும் ஆதிமனிதனின் மனைவியின் கண் ஓடியதனால், அவளது பார்வையுடன் புறத்தூண்டுதலாகிய கேள்வியும் இணைந்து அவள் உள்ளத்தில் "நோட்டம்"[51] உண்டாக்கிற்று எனக் கொள்ளலாம். "நோட்டம் பார்த்தல்"[52] என்பதற்குத் தகுதியறிதல் என்பது பொருள். நோட்டம் என்பது தன்மையும் தகுதியும் அறியும் நாட்டமும் நோக்கமும் உடைய பரீட்சை அல்லது ஆராய்வு எனலாம்.

ஈண்டு ஸ்திரீயானவள் உள்ளத்தில் உண்டான நோட்டம் யாதெனில், புறத்தூண்டுதலால் அவளது கண் ஓடி, கண்டு, பறித்த

51) நோட்டம் = கண் திட்டம் - கழகத்தமிழ் அகராதி 1991
52) நோட்டம் பார்த்தல் = தகுதியறிதல் - கழகத் தமிழ் அகராதி 1991

கனி தனக்குண்டான அப்புறத்தூண்டுதலுக்கு ஒத்த தன்மைத்ததோ, அத்தன்மைத்தன்றோ என அறியும் விருப்புடைய எண்ண ஓட்டம் அல்லது சிந்தனை ஓட்டம் எனலாம். அதாவது தான் கண்ணுற்ற விருட்சத்தின் கனியாகிய உலகின் பொருளின் தன்மையும் தகுதியும் பற்றிய புத்தித் தெளிவு அல்லது அறிவுத் தெளிவு பெற எண்ணிய சிந்தனைச் செயல்பாடு என்பது தெளிவு.

ஆகவே, புறத்தூண்டுதலால் அவள் கண் ஓடினது எனவும், நோட்டம் உண்டாயிற்று எனவும், அக்கனியை அவள் பறித்து, புசித்தாள் எனவும் அறியக் கிடைப்பதால், ஆதிமனிதனின் மனைவி புறத்தூண்டுதலால், அகத்தூண்டுதலடைந்தாள். ஆதலின் அக்கனியைப் பறித்து, புசித்தாள். அத்துணிவு புறத்தூண்டலின் செயல்பாடாகிய அகத்தூண்டுதலின் வெளிப்பாடே என உய்த்துணரலாம்.

ஏதாகிலுமொன்றைப் புசித்தலால் அது சாவைத்தருமெனின், அதனைப் புசித்துப் பின் தகுதியை அறியக்கூடுமோ? சாவைத்தரும் பொருளை உண்பதால் சாவுண்டான பின் தகுதியறிதல் ஏது? சாவினைத் தராதென அறிந்தாலன்றி தீவினைச்சம் நீங்குவது எங்ஙனம்? சாவு பற்றிய அச்சம் நீங்காமல் அதனைப் புசித்தல் ஏது? ஆகவே, ஆதிமனிதன் ஆதாமின் மனைவியை சர்ப்பம் வஞ்சித்த நிகழ்வு ஆராய்தற்குரியது.

சர்ப்பமானது ஸ்திரீயை நோக்கி :

"நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ?" என்றது.

ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து : நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் "நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம்" என்று சொன்னார் என்றாள்.

"அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி :

நீங்கள் சாகவே சாவதில்லை;

நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை, அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது"

நீங்கள் சாகவே சாவதில்லை என்று சர்ப்பம் கூறியதால், அது சாவு பற்றிய அச்சம் நீங்க உரைக்கப்பட்டதெனக் கருதலாம். யாதொன்றும் தீமை இலாததென சொல்லப்பட்டிருத்தலால், 'சாகவே சாவதில்லை' என்றது வாய்மையோ என எண்ணியிருத்தல் இயல்பு.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைக் குறித்து, நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று ஒழுகக் கூடாதனபற்றி தேவன் சொல்லியிருந்ததற்கு எதிரிடையாக சர்ப்பம் கூறியதால், அச்சொல் வஞ்சம் உடையதோ எனவும் எண்ணியிருத்தல் இயல்பு.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் - குறள் 271

எனக் 'கூடா ஒழுக்கம்' எனும் அதிகாரத்தில் காணும் குறள் நினைவிற்கொள்ளத்தக்கது. 'சர்ப்பம் என்னை வஞ்சித்தது' என்ற ஸ்திரீயின் கூற்று அவளது ஐயத்தினை உறுதிப்படுத்துவதேயாகும்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைக் குறித்து, சர்ப்பம் ஆதிமனிதனின் மனைவியை நோக்கி :

"நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்" என்றும் கூறியதால், புசிக்க வேண்டாமென்று தேவன் விலக்கின விருட்சத்தின் கனியைப் புசிப்பதால் 'புரைதீர்ந்த நன்மை பயக்கும்' என சர்ப்பத்தின் சொல்லை வாய்மை என எண்ணி, கண்கள் திறக்கப்படவும், நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பதற்கும் வேண்டி, அக்கனியை விரும்பி, அதனைப் பறித்து, புசித்தாள் என விளங்குகின்றது. (பக்கம் 38ல் 3ம் பத்தி, 27(2)) ஆகவே, சர்ப்பத்தின் சொல்லை அவள் வாய்மை என எண்ணி, புசிக்கக் கூடாத அக்கனியைப் புசித்த பின்பு, சர்ப்பம் என்னை வஞ்சித்தது என்று, அந்த ஸ்திரீ தேவனிடம் கூறினாளாதலின்,

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் - குறள் 292

எனும் குறள் இந்நிகழ்வையே எடுத்துக்காட்டுகிறது எனக் கருதலாம்.

உலகின் முதல் கண்ணோட்டம்

ஆதிமனிதனின் மனைவியை நோக்கி சர்ப்பம் கூறியது போல, புசிக்க வேண்டாம் என்று தேவன் விலக்கின விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளிலே, அவர்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், அவர்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பார்கள் என்றும் தேவன் அறிவாராதலின், அக்கனியைப் புசிக்க வேண்டாம் என்று அவர்களுக்கு அதனை விலக்கினார் என அவள் எண்ணி, அக்கனியைப் பறித்து, புசித்தாளாதலின், 'நீ அதனைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய்' என்று தேவன் உரைத்தது பொய்மையோ, என முன்பு தமக்கு உண்டாயிருந்த அறிவுடைமையை ஐயுற்றாள் எனவும், அவ்வறிவினைத் தந்த தேவனை பொய்யரோ என ஐயுற்றாள் எனவும் விளங்குகின்றன.

இவ்வாறு சாவுண்டாம் என்றும், சாவுண்டாக்காது என்றும் கேள்வியான எதிரிடையான உரைகள் பால் உண்டாம் ஐயத்தின் நீங்கி, தேவன் உரைத்ததுவோ, சர்ப்பம் உரைத்ததுவோ எது வாய்மை? எது பொய்மை எனவும், அக்கனியைப் புசித்தால் நன்மையுண்டாமோ? தீமையுண்டாமோ? வாழ்வுண்டாமோ? சாவுண்டாமோ? எனவும் மெய்யுணர்வு பெற்று, புத்தியைத் தெளிவிக்கிறதற்கு வேண்டியே அப்பொருளின் தன்மையும் திட்டமும் அறிய முயலுகையாகிய நோட்டம் ஆதிமனிதனின் மனைவிக்கு ஏற்பட்டதென்பது தெளிவு. இதுவே உலகின் முதல் கண்ணோட்டம் எனலாம்.

கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை இதனாலேயே விளங்கும். அக்கண்ணோட்டத்தின் கண் அமைவதே முதல் கருமமாகும். அவை பின்னர் விளக்கப்படும். (பக்கம் 70-81)

மெய்ப்பொருள் அறிவு

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு - குறள் 423

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு - குறள் 424

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு - குறள் 355

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும் - குறள் 214

எனும் குறட்பாக்கள் ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கவை.

தேவன் சொல்லக் கேட்டதுவும், சர்ப்பம் சொல்லக் கேட்டதுவும் குறித்து அவற்றின் மெய்ப்பொருள் அறியவும் ஆதிமனிதனும் அவன் மனைவியும் புசித்த கனி எத்தன்மையது என அதன் மெய்த்தன்மை அறியவும் ஸ்திரீயானவள் முயலுகையில் உயிர்வாழ்விற்கு ஒத்த மெய்ப்பொருளை அறிந்திருந்தால், ஆதி மனிதனும் அவன் மனைவியும் உயிர் வாழ்ந்திருக்கலாம். ஆனால் ஆதிமனிதன் ஆதாம் மரித்தான் என அறியப்படுவதால் அவன் புசித்த அதே கனியைப் புசித்த அவன் மனைவியும் செத்தாருள் வைக்கப்படும் என்றாற் போல மரித்தாள் என்பது தெளிவு. அதாவது நீ அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று தேவன் சொன்னதற்கு ஒத்த மெய்ப்பொருளைக் கண்டு, அவர் விலக்கின அக்கனியைத் துறந்து, அதனைப் புசிக்காமலும் பறிக்காமலும் தொடாமலும் இருந்திருந்தால், உயிர்வாழ்ந்திருத்தல் கூடும்.

'நீங்கள் சாகவே சாவதில்லை! என்று சர்ப்பம் கூறியதை, ஆதிமனிதனின் மனைவி வாய்மை என எண்ணி, அக்கனியைப் பறித்து, தானும் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். ஆகவே, அவர்கள் மரித்தார்கள். ஆதலின், அக்கனியைப் புசித்தால் நீங்கள் சாகவே சாவதில்லை' என்ற சர்ப்பத்தின் கூற்று பொய்ம்மையே அன்றி வாய்மையல்ல என்பதுவும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை "நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று தேவன் உரைத்த சொல் பொய்ம்மையல்ல வாய்மையே என்பதுவும் மெய்ப்பொருள் எனத் தெளிவு பெறும்.

ஆதிமனிதனின் மனைவி சர்ப்பத்தின் சொல்லைக் கேட்டு, தேவனால் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியாகிய உலகின் பொருள் மீது கண்ணோட்டம் கொண்ட பின்னும் மெய்ப்பொருள்தனைக் கண்டறிந்தாளில்லை. ஆகவே, அவள் கண்ணோட வல்லாரல்லள் எனலாம். கண்ணோடியும் மெய்ப்பொருள் காண்பது கூடாமற்போனது ஏனெனில், சர்ப்பம் அவளை நோக்கி 'நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் சொன்னதால், கண்கள் திறக்கப்பட்ட தேவர்களின் வாழ்வு போன்ற வாழ்வுண்டாம் என்றும், 'நீங்கள் சாகவே சாவதில்லை' என்றும் அது கூறியிருந்ததால், சாவாமையுடைய நீடு வாழ்வு பெறலாம் என்றும் எண்ணினாளாதலின் அக்கனியை அது நஞ்சு அல்ல அமிர்தம் என நம்பி, சர்ப்பத்தின் வாய்ச் சொல்லின் நுண்பொருள் அறியத் தவறியதாலேயாம் என்பது தெளிவு. (பக் 27(2), 36)

இவ்வாறு கண்ணோட்டத்தில் நுண்பொருள் எதுவென்றும், மெய்ப்பொருள் எதுவென்றும், மெய்ப்பொருள் எத்தன்மைத்து என்பதுவும் அறியத் தவறி, கண்ணோட்டத்தின் தவறுதலால், இது நஞ்சல்ல அமிர்தமென்றெண்ணி நஞ்சுண்டமைதல் இரண்டாம் ஏதுவிற்கும் (பக்கம் 27) பொருந்துமாறு எனலாம்.

முதலாம் ஏதுவின் வழிப் பெறலான தெளிவினையும் இரண்டாம் ஏதுவின் வழிப் பெறலான தெளிவினையும் நோக்க இரண்டாம் ஏது ஆதிமனிதனின் மனைவி நஞ்சுண்டமைந்ததற்குப் பொருந்துமாறு எனலாம். தேவனால் சொல்லப்பட்டபடி சாவினைத் தரும் கனியை ஆதிமனிதன் மனைவி புசித்துவிட்டாளாதலின் அவள் சாவதை எண்ணி, அவளின் பிரிவாற்றாமையாலும், அவள் சொல் மறுக்கமாட்டாமையாலும் சாவுண்டாயினும் ஆகுக எனவும், சர்ப்பம் சொன்னது போல வாழ்வுண்டாயினும் ஆகுக என நீடுவாழ்வினை விரும்பியும் அவன் நஞ்சுண்டமைந்தான் எனவும், தெளிவு உண்டாதலின், முதலாம் எதுவும் இரண்டாம் எதுவும் இணைந்து ஆதிமனிதன் நஞ்சுண்டமைந்ததற்குப் பொருந்துமாறு என்பது முடிவு.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை - **குறள் 327**

எனும் குறள் ஈண்டு நினைவிற்கொள்ளப் பொருந்தும் என விளங்குகின்றது.

நஞ்சுண்டமைந்தவர் கண்ணோட்டம்

நஞ்சுண்ணற்குத் துணிவுகொள்ள ஒருவரைத் தூண்டும் ஏதுக்களைக் கொண்டு ஆராய்ந்து அறிந்த ஆதிமனிதன் ஆதாமும் அவன் மனைவியும் நஞ்சுண்டமைந்த நிகழ்வின் கண்ணோட்டத்தின் தெளிவுகளால் கண்ணோட்டம் என்பது விளக்கப்பெறும்.

கண்ணோட்டமாவது கண்களால் காணப்படும் உலகின் பொருள்மீது கண் ஒடி பார்வையிடுவதால், அப்பொருளின் நன்மை தீமையினையும், அதன் தன்மையறிந்து அறிவாக உரைப்பாரின் சொல் பொருளின் வாய்மை, பொய்ம்மையினையும் பகுத்தறிந்து, பயன்பெற வேண்டி, மெய்ப்பொருள் அறிதல் பொருட்டு, அவற்றின் உட்பொருளாகிய நுண்பொருள் ஆராயும் சிந்தனைச்செயல் எனலாம்.

சுருங்கக்கூறின் 'கண்ணோட்டம்' என்பது கண் ஒடுதலின் விளைவாகிய கண் நோட்டம்* என்க.

---

* பக்கம் 34

'கண் + நோட்டம் - கண் + ஒட்டம் எனப் பிரித்துப் பிறரைத் தானறிவதற்கும் தன்னைப் பிறர் அறிவதற்கும் துணையாயிருப்பது'[53] எனும் ஜி. வரதராஜ பிள்ளை அவர்களின் கருத்தில் கண்ணோட்டம் என்ற சொல்லைப் பிரித்துள்ளமை ஆதிமனிதனும் அவன் மனைவியும் நஞ்சுண்டமைந்த நிகழ்வின் கண்ணோட்டத்திற்கும் பொருந்தும் எனலாம்.

ஆதி மனிதனின் கண்ணோட்டத்தினையும் அவன் மனைவியின் கண்ணோட்டத்தினையும் ஆராய்ந்து அறிந்து கொண்ட தெளிவுகளைத் தொகுப்பின், ஆதிமனிதன் ஆதாம் பூமியை ஆளுகை செய்யும்படி உண்டாக்கப்பட்ட மன்னன். ஆதலின் அவன் செய்தியை அரசியல் பகுதியில் வள்ளுவர் எடுத்துக் காட்டியுரைத்தார். ஆதி மனிதனும் அவன் மனைவியும் உலகின் பொருட்பால் கண்ணோடிய செய்தியாதலின் பொருட்பாலின் கண் சொல்லி வைத்தார்.

உலகின் பொருள் மீதும், அதன் தன்மையை அறிவித்து விலக்கினவர் மீதும், அதன் மீது விருப்பு உண்டாக்கின சர்ப்பத்தின் மீதும் கண்ணோடினராதலின், கண்ணோட்டம் எனும் அதிகாரத்தினுள் அச்செய்தியை வைத்தார்.

ஆதிமனிதனாகிய ஆதாம் பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவன். ஆதி மனிதனின் மனைவியும் பெயக்கண்டும் நஞ்சுண்டமைந்தவள்.

ஆதிமனிதனின் மனைவி உலகின் பொருள் தன்மையும் தகுதியும் பற்றின அறிவுத் தெளிவாகிய மெய்ப்பொருள் பெற விரும்பி நோட்டம் கொண்டாள்.

கண்கள் திறக்கப்பட்ட தேவர்களின் வாழ்வு போன்ற வாழ்வுண்டாம் என்றும், சாவாமையுடைய நீடு வாழ்வு பெறலாம் என்றும், அது வாய்மை எனவும் நம்பினாள். வாழ்வு தரும் என நம்பினாளாதலின் உலகின் பொருளை நஞ்சு அல்ல அமிர்தம் என ஏற்று நஞ்சுண்டமைந்தாள்.

நஞ்சினை அமிர்தமென நம்பி புசித்தாலும் சாவுண்டாம். எனவே தன் மனைவி புசித்த உலகின் பொருளால் வரும் சாவை எண்ணி, பிரிவாற்றாமையானும், அவள் சொல் மறுக்க மாட்டாமையானும் சாவுண்டாயினும் ஆகுக எனவும், நீடுவாழ்வு தருமாயினும் ஆகுக என விரும்பியும் ஆதிமனிதன் ஆதாமும் நஞ்சுண்டமைந்தான்.

---

53) தண்டபாணி தேசிகர் - திருக்குறள் உரைக்களஞ்சியம் (பொருட்பால் - அரசியல் 1990) பக்கம் 664

ஆதிமனிதனின் மனைவியும் அவனும் உலகின் பொருள் மீது கண்ணோட்டம் கொண்ட பின்னும் மெய்ப்பொருள் கண்டார்களில்லை.

ஆதிமனிதனும் அவன் மனைவியும் உலகின் பொருள் மீது கண்ணோடியும் நுண்பொருள் எதுவென்றும், மெய்ப்பொருள் எதுவென்றும், மெய்த்தன்மை எதுவென்றும் மெய்யுணர்வு பெறத் தவறினவராதலின் அவர்கள் கண்ணோட வல்லாரல்லர்.

ஆதிமனிதனும் அவன் மனைவியும் வஞ்சிக்கப்பட்டனரெனத் தெரிவதால், வாழ்வு தரும் அமிர்தமென எண்ணி, அவர்கள் நஞ்சுண்டமைந்தது கண்ணோட்டத் திறனில்லாமையையே எடுத்துக்காட்டி விளக்குகின்றது.

உலகின் பொருள் மீது கண் ஓடி அதனை விரும்பினதால், கண்ணோட்டம் தவறி, மெய்ப்பொருள் அறிந்து, உலகை ஆளும் கருமஞ் சிதைந்து, வஞ்சமனத்தானின் பொய் ஒழுக்க நெறி நின்று, செய்யக் கூடாதன செய்தொழுகினர் என அறிந்துணரலாம்.

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு **- குறள் 266**

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார் **- குறள் 246**

எனும் குறட்பாக்கள் ஈண்டு நினைவுகூரத்தக்கவை.

4. திருவள்ளுவர் கூறும் ‘பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்’ விளக்கம்

திருக்குறளின் பொருட்பாலில் கண்ணோட்டம் என்னும் அதிகாரத்தில் காணும்

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் - **குறள் 580**

என்னும் குறள் வழி வள்ளுவர் உணர்த்தும் கருத்தும், அதன் கண் அமைந்த கண்ணோட்டமும் ஆராய்தற்குரியவை. நஞ்சுண்டமைதலின் காரண காரியமும், ‘நஞ்சுண்டமைவர்’ என்றதன் கருப்பொருளும் ஆராய்தற்குரியவை.

பெயக்கண்டும் என்றது கண் ஒடியும் கண்ணால் பார்த்தும் என்பதாம். அது கண்ணோட்டம் பற்றியதாம். இக்குறளால் விளக்கப்படும் கண்ணோட்டத்தின் காரியம் நஞ்சுண்டமைதலாயிற்று. நாகரிகம் வேண்டியது நஞ்சுண்டதன் காரணமாயிற்று. ஆகவே, இக்குறள் விளக்கும் கண்ணோட்டத்தினை அறிந்துகொள்வற்கு அதன் காரண காரியமாய் எடுத்துக் கூறப்படும்,

‘நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்’ என்ற சொற்றொடரால் அறியப்படும் நஞ்சுண்டமைதல் ஆராயப்படுதல் அவசியம்.

பெயக்கண்டும் என்றதால் கண்ணால் கண்ட காட்சி கூறப்படுகிறது என அறியலாம். பெய்தவரும் அதனைக் கொடுப்பவருமாகிய ஒருவரும், கண்டவரும் அதனைப் பெறுபவரும் உண்பவருமாகிய மற்றொருவருமாக இருவர் இந்நிகழ்வில் சுட்டப்படுபவர் என விளங்குகின்றது. உண்ணக் கொடுத்தவர் நஞ்சு பெய்தார் எனவும், அதனை உண்பவர் அது நஞ்செனக் கண்டார் எனவும் தெளிவாக அறியலாம்.

பெய்தவர் கொடுத்ததும், நஞ்செனக் கண்டவர் அதனைப் பெற்று உண்டதும் ஆதலின் அவ்விருவர் நாவிலும் சொற்கள் பிறவாதிருந்திருக்குமோ? அவ்விருவர் மாட்டும் எழுந்த அல்லது எழும் நாவின் சொற்கள் யாதென்பது சிந்தனைக்குரியது.

'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல' - **குறள் 1100**

என்று சொல்லலாகுமோ? ஆகுமாயின் அந்நிகழ்வு யார்யார் மாட்டு நிகழ்வதாம் என எண்ணிப்பார்த்தல் அவசியம். இக்குறள் இன்பத்துப்பால் களவியலில் கூறப்பட்டிருத்தல் போல குறிப்பறிதலால் உணரப்படுதல் எனலாகும். ஆகவே, அது பால் இனக் கவர்ச்சிக்குள்ளாட்படும் பெண், ஆண் எனும் இருவருக்குள்ளும் நிகழ்தல் என உணரலாம். அவ்விருவரையும் தலைவி, தலைவன் எனக் கொள்ளத்தகும்.

தலைவியும், தலைவனும் எனக் கொள்ளப்படுவதாயின், காதலராயினும், மனைவியும் கணவனுமாயினும் இருத்தல் கூடும். ஆகவே, அவர்கள் அரசியும் அரசனுமாயிருத்தல், கண்ணோட்டம் என்னும் அதிகாரம் பொருட்பால் அரசியல் பகுதியில் வைக்கப்பட்டுள்ளமை கருதி, ஏற்புடையதாகும். அவ்விருவர் மாட்டும் சொற்கள் பிறந்திருக்குமாயின், நஞ்சு எனக் கண்டார் என்றதால் கண்டவர் அது பற்றி கேளாதிருப்பாரோ? பெய்தவர் பதிலுரையாதிருப்பாரோ? பெய்தது யாது என வினவாதிருப்பாரோ? பெய்தவர் அது நஞ்சுதானென பதிலுரைப்பாரோ? அது நஞ்சு எனச் சொல்வாராயின் விருந்து உண்பாரோ? நஞ்சுண்டமைவர் என்றதால் நஞ்சு வருத்தும் பின் கொல்லும் என அறியாதிருந்தால் நஞ்சு எனக் கண்டுகொள்வாரோ? கண்டும் நஞ்சுண்டமைவர் என்றதால் கண்டவர் அதனை நஞ்சு என்றே கண்டு அல்லவா பின்னும் அதனை உண்டமைபவராக விளங்குகின்றார். ஆகவே, நஞ்சு வருத்தும் பின் கொல்லும் என்று அறிந்தவரே நஞ்சு உண்பவர் என அறியலாம். நஞ்சினை அவர் உண்ணத் துணிவு கொண்டதால், அவர் அதனை உண்ணத்தக்க மனபக்குவமடைவதற்குரிய நாவின் சொற்கள் உண்டாயிருத்தல் இயல்பு.

கொடுப்பவர் கரிசனையுடன் பேசாதிருப்பாரோ? விருப்பூட்டி கொடுப்பாரோ? அன்றி வெறுப்புடன் கொடுப்பாரோ? வெறுப்புடனாயின் விருந்து ஏற்பாரோ? மறுக்க மாட்டாரோ? வெறுப்புடன் உண்பாரோ? விருப்புடன் உண்பாரோ? நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் என்று குறள் விளக்குவதால் நஞ்சுவும் வேண்டுபவர், ஆகவே விருப்புடன் நஞ்சுண்டமைவர் என்று பொருள் விளங்கும். நஞ்சுண்டமைவர் என்றதால் நஞ்சு உண்டெடன்பதும் உண்பது நஞ்சுதான் என்பதும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே, பெய்தது நஞ்சல்ல சாவா மருந்தெனும் அமிழ்தமெனக் கொள்ளுதலும் பொருந்தாதென

உணரலாம். நஞ்சு என்றதால் அமிழ்தமல்ல என்பது தெளிவு. ஆகவே, பெய்து கொடுத்தவர் நாவினால் சொல்லுங் கரி* யாதென அறிவது இன்றியமையாததாகும்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் என்றதால் பெய்தவர் உண்ணும் என்று சொல்லி, கொடுக்க அதனைப் பெறுபவர் அதனை உண்ண மறுப்பதற்கில்லை என விளங்குகின்றது. ஆகவே, நஞ்சு எனக் கண்டதினால் விரும்பக்கூடாததாயினும் நாவினால் சொல்லப்பட்ட கரி அதனை விரும்பத்தக்கதாக்கிற்று என்பதே அதன் உட்பொருளெனத் தெளியலாம். பெற்றுக்கொள்பவர் அதனை நயத்தக்கதென எண்ணி அது தனக்கு வேண்டுமென விரும்பியிருத்தல் இயல்பு. குறளை நோக்க இது தெளிவாக விளங்கும். ஆசிரியர் கண்ணோட்டத்தின் கண் இதனைக் கூறினதால் கண்ட காட்சியை மட்டும் கூறி நாவின் சொற்களைக் கூறாது விட்டாரோ? அன்றி நாவின் சொற்களையும் தம் சொல்லாலேயே உணர்த்துகின்றாரோ என்பது ஆராய்தற்குரியது.

நாவாலுளதாய நலத்தினை **'நாநலம்'** என பொருட்பாலில் அமைச்சியல் 'சொல்வன்மை' எனும் அதிகாரத்தின்கண் வள்ளுவர் கூறியிருப்பது போல, நஞ்சு கொடுத்தவர் கரியாய் உரைத்த அவரது நாவின் சொற்களாலாகிய கருப்பொருளை **'நாகரிகம்'** எனும் சொல்லாலே குறிப்பிடுவாரோ என்பது ஈண்டு ஆராய்தற்குரியது.

நஞ்சுண்டமைபவர் விரும்பிய நாகரிகம்

'நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்றதால் நஞ்சு உண்பது நாகரிகம் பெற வேண்டும் என விரும்பியதால் எனவும், நாகரிகம் வேண்டியது ஏனெனில் அது நயத்தக்கது என்பதால் எனவும் விளங்குகிறது. நாகரிகம் நயத்தக்கது என்றதால் அதன் சொல்பொருளை அறிந்து உணர்ந்த தெளிவு அதனை வேண்டியதெனக் கருதவும், விரும்பவும் காரணமாயிற்று எனலாம். நயத்தக்க நாகரிகம் நஞ்சு உண்பதால் பெறலாகும் எனும் காரணம் பற்றியே நஞ்சுவும் விருப்புடன் உண்பதற்கு எண்ணப்படலாயிற்று என்பது தெளிவு.

நஞ்சு தரும் பலன் நாகரிகம் என்று சொல்லப்படுவது என நஞ்சுண்டமையும் நிகழ்வினால் விளங்குகின்றது. ஆகவே, **நஞ்சுவினால் சாவல்ல நாகரிகம் உண்டாம்** என்பது **நாவின் கரி** ஆவது விளங்கும். நயத்தக்க அந்த நாகரிகம் யாதென அறிதற்கு நாகரிகம் எனும் சொல் ஆராய்தற்குரியது.

---

* கரி - சாட்சியம்

நாகரிகம் நயத்தக்கது எனக் கொள்ளப்படுவதாலும், வேண்டும் என விரும்பப்படுவதாலும் நாகரிகம் எனும் சொல்லுக்கு பண்பாடு, மரியாதை எனப் பொருள் கொள்ளப்படுமாயின், நஞ்சுண்டமைதல் மரியாதை எனக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆகவே, நஞ்சுண்டமைபவர் மரியாதைக்குரியவர் எனக் கருதப்படுவார். மரியாதைக்குரியவர் நஞ்சுண்டமைதல் மரியாதையின் மரியாதைக்குரியவருக்கு சாவுண்டாக்கும் நஞ்சுண்ணக் கொடுப்பதுவும் மரியாதையாமோ? அஃது அவமரியாதையன்றோ? அவமரியாதை செய்தலை வள்ளுவர் நல்லொழுக்க நெறி என்பாரோ? அவமரியாதையாகிய தீய ஒழுக்கத்தை ஏற்கச்சொல்லியா வள்ளுவர் இக்குறளை இயற்றினார்? மரியாதையும் அவமரியாதையும் கலந்து நிற்பதனையா நல்லொழுக்கம் என்று வள்ளுவர் கூறுவார்? சாவு தரும் நஞ்சினை உண்பதையா நல்லொழுக்கம் என்பார்? அங்ஙனம் அவர் கூறமாட்டார். ஆகவே, நாகரிகம் என்பது பண்பாடு, மரியாதை என்ற பொருளில் ஈண்டு ஆளப்படவில்லை என்பது தெளிவு.

நஞ்சுண்டமைதல் நல்லொழுக்கமாவது ஏது? எங்ஙனம்? நஞ்சு சாவு தருவதால், சாவு வேண்டி நஞ்சுண்டமைதல் எனவுங் கொள்ளலாகா. அதனை நல்லொழுக்கமாகவுங் கொள்ளலாகா.

குறள் இயற்றிய வள்ளுவர் நோக்கம் சாவு நிலை பெறுதற்கு வழி சொல்வதோ? வாழ்வு பெறுவதற்கன்றோ? ஆகவே, நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் என்றது நஞ்சு தருவது சாவல்ல என்று சொல்லப்பட்டிருத்தல் கூடும் எனக் கொள்ளத்தகும். நஞ்சு தருவது விரும்பப்படாத சாவுக்கு எதிரிடையான விரும்பத்தக்க பயன் எனப்படுவதால் நாகரிகம் என்பது மெய்வருத்தத்திற்கும் சாவுக்கும் எதிரிடையான பொருளும் செய்தியும் வாக்குறுதியுமாகுமென விளங்குகின்றது.

நாகரிகம் எனும் சொல்லை பகுக்க அது **நா+கரி+இகம் = நாகரிகம்** என அமைந்திருத்தலை அறியலாம். நா என்பது நாக்கு, கரி என்பது சாட்சியம், இகம் என்பதற்கு இம்மை என்பதும், இவ்வுலக வாழ்வு என்பதும் பொருள். அதாவது நிலமிசை வாழ்வு என்பது பொருள். நாகரிகம் என்பது நிலமிசை வாழ்வு ஆவதால், நஞ்சுண்டமைவர் நாகரிகம் வேண்டுபவர் என்பது நஞ்சுண்டமைவர் நிலமிசை வாழ்வு வேண்டுபவர் எனலாகும். ஆகவே, நஞ்சு சாவல்ல அது நிலமிசை வாழ்வு தரும் என நாவினால் நஞ்சுவின் பயன் பற்றி சாட்சியம் கூறப்படுவதெனக் கொள்ளலாம்.

"யாவரும் விரும்பத்தக்க நல்வாழ்வு
நாகரிகத்தின் பயன் நல் வாழ்வாகலாம்"[54]

என வரதராசனார் கூறியிருப்பது ஈண்டு பொருத்தமாகும்.

நிலமிசை வாழ்வு பெறுதற்கு நஞ்சு உண்ணுதல் அவசியம் ஏது? நிலமிசை வாழ்வு என்பது நஞ்சு உண்ணாமலேயே பிறவிப்பயனாகக் கிடைப்பதாகும். ஆகவே, நஞ்சு உண்ணக் கொடுப்பவர் சொல்லும் நாகரிகம் நயத்தக்கது என்றது நோக்குதற்குரியது. உண்ணக் கொடுப்பது நஞ்சுவாயினும் அது தருவது சாவல்ல வாழ்வு என சொல்லப்படுவதாக அறியக் கிடைப்பதால், நஞ்சுவாயினும், அது சாவாமையுடைய வாழ்வாகிய நிலமிசை நீடு வாழ்வு தரும் என வாக்குறுதியாய்ச் சொல்லப்படுவது தெளிவாக அறியக் கிடைக்கின்றது. அதனாலேயே நாகரிகம் நயத்தக்கது எனப்பட்டது எனவும், அதனாலேயே நஞ்சு உண்பதற்கு மறுக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்படுவதாகிறது எனவும் கருதலாம்.

வள்ளுவர் ஆளும் **நாகரிகம்** எனும் சொல்லை **நாகர் + இகம்** எனவும் பகுத்தறியலாம். இகம் என்பதற்கு நிலமிசை வாழ்வு என்பது பொருள் என முன்னர் விளக்கப்பட்டது. நாகர் என்பதற்குத் தேவர்கள் என்பது பொருள். ஆகவே, **நாகரிகம்** என்பதற்குத் தேவர்களின் வாழ்வாகிய **நிலமிசை நீடுவாழ்வு** என்பது பொருளாகக் கொள்ளப்பெறும். எனவே, நாகரிகம் வேண்டுபவர் என்பதற்குத் தேவர்களின் வாழ்வு போன்ற நீடு வாழ்வை நிலமிசை பெற விரும்பியவர் என்பது பொருளாகும்.

ஆகவே,

'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

என்றது, நஞ்சு தரும் என எண்ணிய நாகரிகம் என்பதன் சொல்பொருளாகிய தேவர்களின் வாழ்வு எனும் நிலமிசை நீடு வாழ்வு வேண்டுபவர் நஞ்சுவின் உட்பொருள் சாவுதான் எனும் மெய்யுணர்வு பெறாததினால் நஞ்சுண்டமைவர் என்றதாகும் என உய்த்துணரலாம்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைபவர், பெயக்கண்ட உலகின் பொருளால் சாவுண்டாமோ? வாழ்வுண்டாமோ எனும் ஐயவுணர்வினை

54. ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம் (பொருட்பால் அரசியல்) 1990 பக். 690.

அடைந்த பின்னும் மெய்யுணர்வு இல்லாததால் நஞ்சினைப் பற்றிய பயமின்றி அதனை உண்டமைவராதலின் மெய்யுணர்வின் நற்பயன் அவர்கட்கு இல்லை என்பதையே

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு" - **குறள் 354**

என்ற குறள் வழி வள்ளுவர் உணர்த்துகிறார் எனக் கருதலாம்.

நிலமிசை நீடு வாழ்வு தரும் என எண்ணி, அதனை விரும்பி உண்பவராயினும் முன்னர் விளக்கப்பட்டது போன்று பெய்தது நஞ்சு என்றே கண்டு பின்னும் நஞ்சுண்டமைபவர் என்றதால் சாவாயினும் ஆகுக, வாழ்வாயினும் ஆகுக என்ற நிலையில் நஞ்சுண்டமைபவர் எனவும் விளங்குகின்றது.

'சுவர்க்கம் வேண்டியும் பூமி வேண்டியும் இருக்கும் மன்னர்'[55] என்னும் பரிதியார் கூற்று ஈண்டு பொருந்தும் என்க.

நஞ்சு தருவது சாவு. சாவு விரும்பத்தக்கதல்ல. எனவே, நஞ்சு விரும்பத்தக்கதல்ல, உண்ணக்கூடாதது என விலக்கப்படுவது எனும் உண்மையை இயற்கை அறிவுடைமையால் உலகத்தார் யாவரும் ஒப்புக்கொள்வர். ஆனால், குறள் வழி அறியப்படுவது யாதெனின், நஞ்சு தருவது நாகரிகம், நாகரிகம் விரும்பத்தக்கது என்னப்பட்டதாதலின், நஞ்சுவும் அதன் பலனாக சொல்லப்படும் நாகரிகம் கருதி, விரும்பத்தக்கதாகி உண்ணப்படுகிறது என்பது.

இயற்கை அறிவுடைமையால் யாவரும் ஒப்பமுடிந்த கருத்தும், குறள்வழி பெறப்படும் கருத்தும் ஆகிய இவ்விரண்டு கருத்துக்களும் ஒன்றோடொன்று முரணாயிருக்கின்றன என அறியலாம். நஞ்சு சாவு பற்றியது. நாகரிகம் வாழ்வு பற்றியது சாவுக்கும் வாழ்வுக்கும் சம்பந்தம் ஏது? எனவே ஒன்றுக்கொன்று எதிரிடையான இவ்விரு சொற்களையும் ஒரே பயன் தருவனவாக ஒருமைப்படுத்தி ஒன்றொடொன்று பொருந்தி நிற்பனவாக ஏற்புடைமையாவது பற்றி எடுத்துரைப்பது சிந்தனைக்குரியது. சாவுண்டாம் என்பதால் நஞ்சு என்று வழங்கப்படுவதுவே வாழ்வுண்டாம் எனும் பொருளில் ஆளப்படுவது ஐயத்தின் நீங்கித் தெளியவேண்டியது. ஆகவே, அப்பொருளமைவு வாய்மையோ? அன்றி பொய்மையோ? என்பது ஆராய்தற்குரியது.

---

55 தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக் களஞ்சியம் (பொருட்பால் அரசியல்) 1990. பக். 689

நஞ்சுண்டமைதல் பொய் ஒழுக்கம்

வாழ்வு வேண்டுபவர் நஞ்சினை உண்ணார் என்பது உறுதி. சாவு வேண்டுபவரே நஞ்சு உண்டமைவர். ஆயினும் வள்ளுவர் குறள் இயற்றியது சாவு பெறுவதற்கு வழி சொல்ல அன்று. வாழ்வு பெறுவதற்கே அவர் வழி சொல்லலானார் என்பதாலும், வாழ்வு வேண்டுபவர் நஞ்சு உண்ணுதல் இல்லை என்பதாலும், அமிழ்தமென்னப்படாமல் நஞ்சு என்றே வழங்கப்படுவதாலும், நஞ்சுண்ணுமிடத்து வாழ்வு உண்டென்று எண்ணுதற்கு இடமுண்டாக்குதலாலும், அது பொய்மை உரைக்கப்பட்டிருத்தல் எனக் கொள்ளலாம். வள்ளுவர் பொய்மை உரைப்பதில்லை. ஆகவே, வாழ்வு வேண்டுபவரை நஞ்சு உண்ணச் செய்யும் பொருட்டு, நஞ்சு பெய்து உண்ணக் கொடுப்பவர் பொய்மை உரைப்பது என்பது தெளிவு.

வாழ்வுதரும் நஞ்சுவும் உண்டோ? ஆகவே, நஞ்சு நாகரிகம் எனும் சொல் பொருளாகிய நிலமிசை நீடு வாழ்வு தரும் என்பது மெய் நெறி அன்று. அது பொய் நெறி கற்பிக்கப்படுவது எனக் கருதலாம். ஆகவே, அந்நெறியை ஏற்று, நாகரிகம் வேண்டுபவராய் நஞ்சுண்டமைதல் மெய் ஒழுக்கம் ஆகா. அது பொய் ஒழுக்கம் எனலாம்.

திருவள்ளுவர் அரசனுக்குக் கூறும் அறிவுரை

பொய் நெறி கூறி பொய் ஒழுக்கம் ஏற்கவும் சாவு அடையவும் வள்ளுவர் குறள் இயற்றியதில்லை. நிலமிசை நீடு வாழ்வதற்கு மெய் ஒழுக்க நெறி கற்பிக்கவே வள்ளுவர் குறள் இயற்றினார். ஆகவே, அவர் இக்குறள் வழி உணர்த்துவது யாதெனில், பெயக்கண்டும் நஞ்சுண்டமைபவர், பெய்தவர் நாவின் சொல்பொருளாகிய நிலமிசை நீடுவாழ்வை விரும்பி, கண்ணோட்டத்தில் தவறுபவராகி மெய்யுணர்வு அடையாமல் நஞ்சுண்டமைதலாகிய செய்யக்கூடாத பொய் ஒழுக்க நெறிச் செயலைச் செய்தமைவர் எனப் பொய் ஒழுக்கம் எடுத்துக்காட்டி, கண்ணோட்டத்தின் தவறினை உணர்த்தி, பொய் ஒழுக்க நெறி நிற்றல் கூடாதென கற்பிக்கலானார் என்பதே.

நட்டோர் கொடுப்பினும் மாற்றோர் கொடுப்பினும் மன்னனேயாயினும் நஞ்சுண்டால் சாவானோ? மாட்டோனோ? சாவுண்டான பின் மன்னன் நாடாளுவது ஏது? அரசாளுவது ஏது? அரசியல் ஏது? நஞ்சுண்டமைபவர் தமக்கு உரித்தான எல்லாம் இழப்பர். அவருக்கு உலகியலும், அரசியலும் உரித்தாவதில்லை. ஆகவே, அரசன் அரசாளுகையை இழந்துவிடாதிருக்க கருமஞ்சிதையாமல் கண்ணோடல்

அவசியம் என உணர்த்த வேண்டியும், நஞ்சுண்டமையும் நிகழ்வின் கண்ணோட்டமின்மையாகிய தவறினை எடுத்துக்காட்டி பொய் ஒழுக்க நெறி நிற்றல் கூடாதென கற்பிக்கலானார்.

நஞ்சுண்டமைபவர் கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லாரல்லாததினால் நஞ்சுவின் தீய பலனையே அனுபவிப்பர். இவ்வுலகு அவர்க்கு உரிமையாவதில்லை. நஞ்சினை உண்டு அமைவர் என்றதால், நாவின் சொல் பொருளாகிய நாகரிகம் வேண்டி நஞ்சுண்பவர் நஞ்சுவின் உட்பொருள் சாவு ஆதலின், அதனை உண்டு அமைவரேயன்றி நாகரிகம் எனும் சொல் பொருளாகிய நிலமிசை நீடு வாழ்வு அடையார். ஆகவே, நிலமிசை நீடு வாழ்வு வேண்டுபவர் மெய் ஒழுக்க நெறிச் செயலையே செய்தல்வேண்டும். மெய் ஒழுக்க நெறியாவது பொய்தீர்ந்த ஒழுக்க நெறியாகும். ஒழுக்க நெறிகளில் பெய்த பொய்தீர்த்து வாய்மையால் உரைக்கப்பெறும் மெய் ஒழுக்க நெறி நின்றால் நீடு வாழலாம் என்று உணர்த்தி . . .

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் - **குறள் 6**

என்றார். பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நிற்க வேண்டுபவர் மலர்மிசை ஏகினான் மாணடி சேரவேண்டும். சேர்ந்தாராயின் பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி கற்று, அந்நெறி நின்று நிலமிசை நீடு வாழ்வர். எனவே,

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் - **குறள் 3**

என்றார். நாகரிகம் அடைவதற்கு அதுவே நெறியாம் என்பது முடிவு.

திருவள்ளுவர் உணர்த்தும் கண்ணோட்டம்

குறள்வழி ஆய்வு செய்யப்பட்டுக் கிடைக்கப் பெற்ற மேற்கண்ட தெளிவுகளால், வள்ளுவர் உணர்த்தும் கருத்தாக அறியப்படும் கண்ணோட்டமாவது:

'உலகின் பொருட்பயன் வழி நிலமிசை நீடு வாழ்வு பெற வேண்டுபவர் நற்பயன் வேண்டி ஆற்றும் செயல் வகைக்குரிய அறமும், பயனும் அறியவேண்டி இயற்பொருளாயினும், அது பற்றிய சொல் பொருளாயினும், செம்பொருள், மெய்ப்பொருள் எனும் அப்பொருள் பற்றிய மெய்யுணர்வு அடையும் பொருட்டு, நன்மை, தீமை எனும் பயன்

வகையும் மெய் ஒழுக்கம், பொய் ஒழுக்கம் எனும் நெறி வகையும் பகுத்துக் கண்டறியும் பகுத்தறிவுச் செயல்' என்பது,

இவ்வாறு குறள் வழி விளக்கப்படும் நஞ்சுண்டமைதல் நிகழ்வினை ஆராய்ந்து அறிந்த தெளிவுகளைத் தொகுப்பின்,

இந்நிகழ்வில் கண்ணால் கண்ட காட்சி கூறப்படுகிறது. கொடுப்பவரும், உண்பவரும் ஆகிய இருவர், தலைவி, தலைவன், அரசி, அரசன் என்ற நிலையில் சுட்டப்படுகின்றனர்.

திருவள்ளுவர் கூறுவது நஞ்சு பெய்த பொருள் மீது அரசன் கண்ணோடிய நிகழ்வு. நஞ்சு என்று கண்ட பின்னும் அதனை உண்டமைபவராதலின் பெயக்கண்டும் நஞ்சுண்டமைபவர் எனப்பட்டது.

நஞ்சு உண்டமைபவர் அதனை மறுப்பதற்கில்லை.

நஞ்சு தருவது சாவல்ல. அது நிலமிசை வாழ்வு தரும் என நாவினால் நஞ்சுவின் பயன் பற்றி சாட்சியம் கூறப்படுகிறது. சாவாமையுடைய வாழ்வாகிய நிலமிசை நீடு வாழ்வு தரும் எனப்படுகிறது.

தேவர்களின் வாழ்வு போன்ற நீடுவாழ்வு எனப்படுகிறது. அதனை வேண்டி நஞ்சுண்டமைபவர் நஞ்சுவின் உட்பொருள் சாவுதான் எனும் மெய்யுணர்வு பொறாததினால் நஞ்சுண்டமைபவர்.

நிலமிசை நீடு வாழ்வு தரும் என விரும்பி உண்பவராயினும், பெய்தது நஞ்சு எனக் கண்டதினால் சாவாயினும் ஆகுக, வாழ்வாயினும் ஆகுக என்ற நிலையில் உண்பவர்.

நஞ்சு தருவது சாவு. சாவு விரும்பத்தக்கதல்ல. எனவே நஞ்சு விரும்பத்தக்கதல்ல, உண்ணக்கூடாதது என விலக்கப்படுவது. ஆயினும் அதன் பலனாக சொல்லப்படும் நாகரிகம் எனும் வாழ்வு கருதி, விரும்பத்தக்கதாகி உண்ணப்படுகிறது.

சாவுண்டாம் என்பதால் நஞ்சு என்று வழங்கப்படுவதுவே அதனை உண்பதால் வாழ்வுண்டாம் எனப்படுதலின், அது வாய்மையோ பொய்மையோ எனும் ஐயத்தின் நீங்கித் தெளிய வேண்டிய ஆய்வு.

அமைவர் என்றதால், அமைவரேயன்றி நிலமிசை நீடு வாழ்வு அடையார். வாழ்வு வேண்டுபவரை நஞ்சு உண்ணச் செய்யும் பொருட்டு, நஞ்சு பெய்து கொடுப்பவர் பொய்மை உரைத்தார் என்றவாறு அறியலாம்.

கிறித்தவரின் புனித நூலாகிய பரிசுத்த வேதாகமத்தின் வழியாக அறியப்படும் ஆதிமனிதன் ஆதாம் நஞ்சுண்ட நிகழ்வினை ஆராய்ந்து தெளிந்த தொகுப்பினையும், அதன் வழிப் பெறலாகும் கண்ணோட்டத்தின் விளக்கத்தினையும், திருவள்ளுவரின் குறள் வழி விளக்கப்படும் நஞ்சுண்டமைதல் நிகழ்வினை ஆராய்ந்து தெளிந்த தொகுப்பினையும், அதன் வழிப் பெறலாகும் கண்ணோட்டத்தின் விளக்கத்தினையும் ஒன்றொடொன்று ஒப்பு நோக்க, அவற்றின் ஒப்புமை மிகுதியால் அவ்விரண்டு நிகழ்வும் ஒன்றே எனத் தெளிவாக அறிந்து உணரலாம். ஆகவே, திருவள்ளுவர் தம் குறள் வழி எடுத்துரைப்பது ஆதி மனிதன் ஆதாம் நஞ்சுண்டமைந்த நிகழ்வே என்பது முடிபு.

ஆகவே, ஆதிமனிதன் ஆதாமும், அவன் மனைவி ஏவாளும் தங்களுடைய கண்கள் திறக்கப்படவும், தாங்கள் தேவர்கள் போல இருக்கவும் விருப்பங்கொண்டதாலும், அதனையே நாகரிகம் எனும் சொல் உணர்த்துவதாலும் ஆதாமையும், அவன் மனைவி ஏவாளையும் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் என்று திருவள்ளுவர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டிருப்பது பொருத்தமானதே என உணரலாம்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி கற்பிக்கும் பொருட்டே திருவள்ளுவர் குறள் எழுதினார் என்பது திண்ணம். ஒழுக்கமில்லா இடத்தே ஒழுக்கம் கற்பித்தல் அவசியமாகி நெறிமுறைகள் எழுவது இயல்பு. ஆகவே, பொய்தீர் ஒழுக்க நெறியை வலியுறுத்தும் முகத்தான் திருக்குறளின் மையமாகக்கொண்ட வரலாற்று நிகழ்வே ஆதிமனிதன் நஞ்சுண்டமைதல். ஒழுக்கந்தவறிய அந்நிகழ்வு கிறித்தவர் புனித நூலின் வழி அறியப்படும் உலகப் படைப்பு வரலாற்றில் அமைந்த நிகழ்வே. திருவள்ளுவர் நஞ்சுண்டமைச் சொல்லார். ஆகவே, அந்நிகழ்வை எடுத்துக்காட்டுச் செய்தியாக வைத்தே ஒழுக்க நெறி கற்பித்தார் என்பது தெளிவு.

திருவள்ளுவர் தம் குறளில் ஆளும் '**நாகரிகம்**' என்னும் சொல்லின் **நாகர்** எனும் சொல் பதத்திற்கு தேவர்கள் எனும் பொருள் முன்னர் குறிப்பிடப்பட்டது. **நாகர்** என்பதற்கு '**சற்ப சாதியார்**'[56] எனவும் பொருள் உண்டு. நாகர் என்பதற்கு,

1. ஒரு மனித ஜாதியார் - இவர்கள் நாடு, நாக காடு, நாகர் மலை முதலிய உண்டு. வாசுகி முதலிய குல நாகங்களின் குலத்திற் பிறந்து நாகமுத்திரை பெற்றிருத்தலின் இப்பெயர் பெற்றனர். (மணிமேகலை)

---

56 கழகத் தமிழ் அகராதி (கழகப் புலவர் குழுவினர் தொகுத்தது) 1983.

2. தமிழ் நாட்டில் பண்டைக் காலத்துப் பரவியிருந்த ஒருவகைச் சாதியார். இவர்கள் தங்கள் முடிமேல் ஐந்தலை. முத்தலைகளையுடைய நாகவடிவமுடையதொன்றைத் தரித்து வந்தமையின் இப்பெயரடைந்தனர்.[57] எனும் குறிப்பு அபிதான சிந்தாமணியில் காணப்படுகிறது.

நாகம்* - என்பதற்கு **நல்ல பாம்பு, நாகலோகம், தேவலோகம்** என்பது பொருள். சர்ப்பத்தோடு பொருள் தொடர்புடைய சொல்லை வள்ளுவர் ஆளுவது சிந்தனைக்குரியது. அச்சொல் சர்ப்பத்தோடும், மனிதரோடும், தேவரோடும் பொருள் தொடர்புடையதென மேலே காணும் குறிப்பினால் தெளிவு பெறும்.

கிறித்தவர் புனித நூலில் விளக்கப்பட்டுள்ள ஆதிமனிதன் ஆதாம் புசிக்கவேண்டாம் என்று தேவன் விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்த நிகழ்வில் சர்ப்பம் தொடர்புடையதே. ஆகவே, சர்ப்பத்தோடும், மனிதரோடும், தேவரோடும் பொருள் தொடர்புடைய நாகர் எனும் சொல் வள்ளுவர் கூறும் நிகழ்வான நஞ்சுண்டமைதலிலும் தொடர்புபடக் கூறினாராதலின், வள்ளுவர் கூறும் அந்நிகழ்வு கிறித்தவர் புனித நூலின் ஆதி மனிதன் ஆதாம் நஞ்சுண்டமைந்த செய்தியே என்பதற்கு 'நாகரிகம்' எனும் சொல் மேலும் அரண் சேர்ப்பதாக உள்ளது.

---

57 அபிதான சிந்தாமணி - ஆசியன் எஜிக்கேஷன் சர்வீசஸ் 1993.

* கழகத் தமிழ் அகராதி 1983.

5. உலகின் முதல் நாகரிகம் - திராவிடர் நாகரிகம் - அதன் தோற்றம்

திருவள்ளுவர் திருக்குறள் வழி எடுத்துரைக்கும் நஞ்சுண்டமைதல் நிகழ்வு, புசிக்கவேண்டாம் என்று தேவன் ஆதாமுக்கு விலக்கின விருட்சத்தின் கனியை ஆதாமும் அவன் மனைவியும் புசித்ததாகக் கிறித்தவர் புனித நூலில் கூறப்படும் வரலாற்று நிகழ்வே என அறியப்படுவதால், குறள் வழிச் சொல்லப்படும் நாகரிகம் பற்றி அறிதற்கு, ஆதிமனிதன் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் சாவைத் தந்த நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசித்த பின்பு அதன் பலனாக அவர்கள் அடைந்த நிலை பற்றி கிறித்தவர் வேதாகமத்தில் கூறப்படுபவனவற்றை ஆராய்ந்து அறிவது பொருத்தமாகும்.

". . . . . ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப் படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்குக் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள்.

பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்.

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார்.

அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்[58]

என ஆதாமும் அவன் மனைவியும் புசிக்கக்கூடாத கனியைப் புசித்த பின் அடைந்த நிலை பரிசுத்த வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

58. ஆதியாகமம் 3 : 6-10

கண்கள் திறக்கப்படும் என்றும், நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருக்கலாம் என்றும் எண்ணி, புசிக்கக்கூடாத கனியைப் புசித்த பின்பு அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டன. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்தார்கள். ஆகவே, கண்கள் திறக்கப்படும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டதுவும், அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டன எனப்படுவதும் சிந்தனைக்குரியது.

கனியைப் புசித்த பின்புதான் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டதெனில், கனியைப் புசிக்கும் முன் கண்கள் திறக்கப்படவில்லை எனலாம். ஆகவே, காண்பது இயலாது என உணரப்படும். ஆனால் அக்கனியைப் பறிப்பதற்கு முன் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு . . . எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால், அக்கனியைப் புசிப்பதற்கு முன்னரே பார்வை உண்டாயிருந்தது என்றும் அதனாலேயே அக்கனி இன்பமுள்ளது எனக்கண்டு பறித்தாள் எனவும் தெளிவுற விளங்குகின்றது. ஆகவே, கண்கள் திறக்கப்பட்டது என்பது ஈண்டு முகத்தின் இரண்டு கண்களையும் அதன் பார்வையையும் பற்றியதல்ல என்பது தெளிவு. மேலும் கண்கள் திறக்கப்பட்டதற்கும் நிர்வாணிகள் என்று அறிந்ததற்குமே தொடர்பாய்க் கூறப்பட்டிருத்தலால் நிர்வாணத்தைப் பற்றிய கண்ணோட்டம் அவர்களுக்கு உண்டாயிற்றெனக் கருதலாம். நிர்வாணத்தைப் பற்றிய அறிவைத்தரும் அக்கண்கள் திறக்கப்பட்டதால், தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள் என்பதால் தங்கள் நிர்வாணத்தை மறைக்க வேண்டும் எனும் எண்ணம் அவர்களுக்கு உண்டாயிற்று என அறியலாம்.

ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள் என்பதாலும் 'நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக்கொண்டேன்' என்றான் எனக் குறிப்பிடப்படுவதாலும், அவர்களுக்கு பயம் உண்டாயிற்றென்றும், அதனால் மறைந்து வாழவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்றென்றும் அறியலாம். மறைந்து வாழ எண்ணியதால் விருட்சங்களுக்குள்ளே மறைவிடத்தைத் தேடினார்கள் எனவும் அறியலாம். இவ்வாறு ஆதிமனிதனுக்கும் அவன் மனைவிக்கும் நிர்வாணத்தை மறைக்க உடுத்திக் கொள்வதும்,

உடுத்திக் கொள்வதற்கானவைகளைத் தேடுவதும், அவைகளை அடைவதும், மறைந்து வாழ்வதுமான இயல்பு தோன்றி பாதுகாப்பான மறைவிடம் அமைத்தல் போன்ற செயல் நிலைகள் அவசியமாயிற்று. மனித வாழ்வில் இவ்வாழ் நிலைகள் அறிவுப்பூர்வமாய் வளர்ச்சியடைந்து முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையாய் அமைவதுவே நாகரிகம் என வழங்கப்படுகிறது. இந்நாகரிகம் உலகியல் எனவும் விளங்கும். ஆகவே, திருவள்ளுவர் தம் குறளில் ஆளும் நாகரிகம் எனும் சொல் வாழ்வு பற்றியதே. அது நல்வாழ்வு என்பதே. **ஆதாம் ஒரு திராவிடன்** என்பதால் அவன் வழி உருவான நாகரிகம் **திராவிடர் நாகரிகம்** எனலாம். இதுவே **உலகின் முதல் மனிதனின் நாகரிகம் என்பதால் உலகின் முதல் நாகரிகம் திராவிடர் நாகரிகம்** எனலாம். ஆகவே, திருமறை எனக் கிறித்தவர் வழங்கும் அவர் தம் புனித நூலும், திருவள்ளுவர் அருளிய திருக்குறளும் உலகுக்கு தெரியப்படுத்தும் **உலகின் முதல் நாகரிகம் திராவிடர் நாகரிகம்** எனக் கருதலாம்.

நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் விலக்கின பின்னும் அக்கனியைப் புசித்து, தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தியிலைகளைத் தைத்துத் தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணின பின்பு,

"தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும்
தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்."[59]

ஆகவே, இஃது ஆதிமனிதரது நாகரிகத்தின் வளர்ச்சி நிலை எனவும், அவ்வளர்ச்சி தேவன் தாம் படைத்த மனிதருக்கு அளித்த பராமரிப்பும், பண்பாட்டு செயலுமாம் எனக் கருதலாம். இது நாகரிக வளர்ச்சியில் தேவனுக்கு இருந்த தொடர்பாகும். ஆயினும்,

"பின்பு தேவனாகிய கர்த்தர் : இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப் போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.

59. ஆதியாகமம் 3 : 21,

அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவ விருட்சத்துக்குப்போம் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்கும் கிழக்கே கேரூபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.[60] எனவும் கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது சிந்தனைக்குரியது.

ஆதிமனிதன் ஆதாம் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிடப் பட்டான் என அறியப்படுவதால், அவன் தோட்டத்தில் நீடு வாழும் உரிமையை இழந்தான் எனலாம். ஜீவவிருட்சத்துக்குப்போம் வழி காவல் செய்யப்பட்டது என அறியப்படுவதால், அதன் கனியைப் பறித்து புசிக்கும் உரிமையை இழந்தான். ஆகவே, என்றைக்கும் உயிரோடிருக்கும், அருள் உரிமையையும் இழந்தான். அதாவது, நிலமிசை நீடு வாழ்வை இழந்தான் எனலாம். புசிக்கக்கூடாத நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசித்ததால் அதன் பலனாகிய சாவு நிலைத்தது. ஆயுள் சிதைந்தது. ஆதிமனிதர் தேவனால் அருளப்பட்ட ஆளுகையினையும், ஆயுளையும் இழந்தவராயினர் என அறியலாம்.

உலகில் ஆதிமனிதன் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் ஏற்பட்ட இவ்விழப்புகள் யாவும், அவர்கள் புசிக்கக்கூடாத கனியின் மீது கண்ணோடியும் பொருள் இன்பம் வேண்டினராதலின் கண்ணோட வல்லாராயிருக்க இயலாமல், நீடு வாழ்வுக்கும், ஆளுகைக்கும் உரிய அறிவுடைமையைக் காக்கும் கருமம் சிதைந்த காரணத்தாலேயே, அவர்களுக்கு நேரிட்டது. ஆகவே, ஆதி மனிதன் ஆதாமும் அவன் மனைவியும் நஞ்சுண்டமைந்த நிகழ்வையே திருவள்ளுவர் தம் குறளில் எடுத்துக்காட்டி,

> கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
> உரிமை உடைத்திவ் வுலகு **- குறள் 578**

என்றார்.

கண்ணோட வல்லார் அல்லாராயின், நஞ்சுண்டமைந்த ஆதிமனிதன் ஆதாமும் அவன் மனைவியும் உலக உரிமையை இழந்தார்போல் தாமும் இழப்பர் என்பது மறைபொருள்.

ஆதிமனிதன் ஆதாமும், அவன் மனைவி ஏவாளும் நஞ்சுண்டமைந்த நிகழ்வையே திருவள்ளுவர் தம் குறளில் எடுத்துக்காட்டியுள்ளார் என விளங்குவதால், திருவள்ளுவர் தம்

---

60) ஆதியாகமம் 3 : 22-24

குறளில் குறிப்பிட்டுள்ள நஞ்சு ஆதாமும், ஏவாளும் பறித்து, புசித்ததும் தேவனாகிய கர்த்தரால் புசிக்கவேண்டாம் என்று அவர்களுக்கு விலக்கப்பட்டிருந்ததும், புசிப்பவர்க்கு, நன்மை, தீமை இன்னதென்று அறியத்தக்கதும், பின்பு சாவுண்டாக்குவதுமான விருட்சத்தின் கனி என உணரலாம். அது நிலத்தின் விளைவானதினால் நிலம் சார்ந்த நஞ்சு எனவும் தராவிடம் எனவும் முதலாம் அத்தியாயத்தில் (பக்கம் 10-19) விளக்கப்பட்டது. ஆகவே, திருவள்ளுவர் தம் குறளில் தராவிடம் எனும் நஞ்சுவையே எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டுள்ளார் என்பதுவும் உலகின் முதல் திராவிடர் பற்றிய செய்தியையே எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார் என்பதுவும் தெளிவு.

அத்தியாயம் - 3

6. மண்ணோடியைந்த மரத்தனையர் கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர்

ஆதிமனிதன் ஆதாம் நஞ்சுண்டமைந்த செய்தியைக் குறள் வழிக் கூறும் வள்ளுவர் அச்செய்தியைக் கூறும் கண்ணோட்டம் எனும் அதிகாரத்தின் கண் வைத்துள்ள

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர் - **குறள் 576**

எனும் குறள் ஆராய்தற்குரியது.

கண்ணோடாதவர் மரத்தனையர் என்றதால் மரத்தையும் மனிதரையும் ஒப்பிட்டு மனிதருக்கு மரத்தை உவமையாக்கினார் என அறியலாம். ஈண்டு மரத்தனையர் என்றதால் கண்ணுக்கு உவமை கூறாமல் மனிதருக்கே உவமை கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

"இக்குறட்பாவில் 'மண்ணோடியைந்த மரத்தனையர்' என்ற உவமத்தொடர் உரையாசிரியர் பலரை மயக்குகிறது.

பரிப், மணக்குடவர் உரைகள் மரப்பாவையைக் குறிக்கின்றன. பரிதியார் உரை 'சித்திரத்தில் எழுதிய பழுத்த மாமரம்' என்கிறது.

காளிங்கர் உரை மண்மேல் எழுதிய கற்பதரு என்கிறது"[61] என்று டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மரத்தனையர் என்றும் கண்ணோடாதவர் என்றும் மிகத் தெளிவாகக் குறளில் காணப்படுவதால் அது கண் எனும் உறுப்பைப் பற்றியதல்லாமல் முழு மனிதரைப் பற்றியதேயாம். அதுபோல மண்ணோடியைந்த மரத்தனையர் என்றதால் மண்ணில் முளைத்து வளர்ந்து நிற்கின்ற மரத்தையே உவமையாக்கினார் என்பதும் தெளிவாக அறியப்படுகிறது. ஆகவே, மேற்காணும் உரையாசிரியர் கூறுவது போல் மரக்கணுவாகிலும், மரப்பாவையாகிலும் ஈண்டு உவமையாக்கப்படவில்லை என்பது தெளிவு.

---

61. ச. தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைக்களஞ்சியம் (பொருட்பால் அரசியல்) 1990 பக் 677

கண்ணோட்டம் பற்றி குறள் இயற்றிய வள்ளுவர் கண்ணோட்டம் இல்லாத கண் உறுப்பை மட்டுமே பற்றிக்கூறும் குறட்பாக்கள் மூன்று. அவை,

1. பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
 கண்ணோட்டம் இல்லாத கண் - **குறள் 573**

2. உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
 கண்ணோட்டம் இல்லாத கண் - **குறள் 574**

3. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
 புண்ணென்று உணரப் படும் - **குறள் 575**

கண்ணோட்டம் இல்லாத மனிதர் பற்றிக் கூறும் குறட்பாக்கள் மூன்று. அவை,

1. கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
 உண்மை நிலக்குப் பொறை - **குறள் 572**

2. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
 கண்ணோட்டம் இன்மையும் இல் - **குறள் 577**

3. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
 நாகரிகம் வேண்டு பவர் - **குறள் 580**

இம்மூன்றோடு நான்காவதாக,

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடோ தவர் - **குறள் 576**

எனும் குறளையும் கண்ணோட்டம் இல்லாத மனிதர் பற்றிக்கூறும் குறள் எனக் கொள்ளத் தோன்றினும் ஆராய்ந்து தெளிதல் இன்றியமையாததாகும்.

"பரிமேலழகர் பொழிப்பில்" ஒடுதற்குரிய கண்ணிருந்தும் கண்ணோடாதவர் மண்ணில் நிலைத்த மரம்போல்வர் என்றார். விளக்கத்தில் கண்ணோடாதவர் இயங்குவராயினும், இயங்காமலே 'நிலத்தொடு இயைந்துள்ள மரத்தை ஒப்பர்' என்றனர். இதனால் கண்ணோடுதலாகிய இயக்கமின்மையால் இயக்கமே இல்லாத மரத்தை ஒப்பாவார் என்பது அதாவது கண்ணோடாத இயங்கு திணையாயினும் நிலத்திணைப் பொருளோடு ஒப்பர் என்பதாம் . . . .

நிலைபெயராத் தன்மையால் - உணர்ச்சியற்றிருக்கிற தன்மையால் கண்ணோடாத மன்னனும் மண்ணோடியைந்த மரமும் ஒப்பாம் எனத் தொழில் உவமங் கொண்டு கூறினார்."[62] என டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இயங்குவராயினும் இயங்காமலே 'நிலத்தொடு இயைந்துள்ள மரத்தை ஒப்பர்' என்று பரிமேலழகர் உரை கூறினது, 'கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் என்பதற்குக் கண்ணோட்டமில்லாதவர் எனப் பொருள் கொண்டதே காரணம் எனக் கருதலாம். அதாவது, கண்ணோட்டமில்லாதவர் எனக் கொண்டதால், உணர்ச்சியற்றிருக்கிற தன்மையை மரத்தின் நிலைபெயராத் தன்மையுடன் ஒப்பிட்டார் எனலாம். ஒடுதற்குரிய கண்ணிருந்தும் கண்ணோடாதவர் என்று பொருள் கொண்டதும், கண்ணோட்டமில்லாதவரெனக் கருதி மரத்தின் நிலைபெயராத் தன்மையை பரிமேலழகர் ஒப்பிட்டதுவும் ஏற்புடையனவல்ல.

மரத்தனையர் எனக் குறளில் தெளிவுறக்கண்ட பின்னும் நிலத்தினைப் பொருளொடு ஒப்பர் என்பதும் ஏற்புடையதல்ல.

மண்ணோடு இயைந்த மரம் ஓடுவதில்லை. நின்ற நிலையில் நிற்பது, ஆயினும் வளர்தலும் துளிர்த்தலும் விளைவித்தலுமாகிய செயல் இயக்கம் மரத்திற்கு உண்டு. கண்ணிருந்தும் கண்ணோடாதவராயினும், கண் குருடாயினும் கண்ணில்லாதவராயினும் மற்றொருவர் துணை கொண்டால் நிலையினின்றும் நகரவும் ஓடவும் மனிதருக்கு இயலும். மரத்திற்கு இயலா.

மரத்தின் நிலைபெயராத் தன்மையும் நகரத்தக்க மனிதரின் இயங்குநிலையும் வேறுபாட்டால் ஒப்புமைக்கு ஒவ்வாதவை. ஆகவே, இயங்குவராயினும் இயங்காமலே நிலத்தொடு இயைந்துள்ள மரத்தை ஒப்பர் என்று பரிமேலழகர் உரை கூறினது ஏற்புடையதல்ல. அதுபோல கண்ணோடாதவர் எனக் கொண்டு உணர்ச்சியற்றிருக்கிற தன்மையைப் பரிமேலழகர் குறித்தாராதலின் மரத்தின் வளர்தல் துளிர்த்தல் விளைவித்தல் போன்ற உணர்ச்சி செயல்பாடுகளை விடுத்து நிலைபெயராத் தன்மையை ஒப்பிடுவது மாறுபட்ட வெவ்வேறு தன்மைகளை ஒன்றோடொன்று ஒப்பு நோக்கியிருத்தலாகும்.

ஆனால், வள்ளுவர் தம் குறளில் மனிதரின் நகரும் அசைநிலைத் தன்மையைக் குறிப்பிடாமல் கண்ணோட்டம் பற்றியே கூறியுள்ளார். ஆகவே, மரத்தின் நிலைபெயராத் தன்மையோடு ஒப்புமை அறிதற்கு

62. டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைக் களஞ்சியம் (பொருட்பால் - அரசியல்) 1990. பக். 677 - 678

அவசியம் ஏதுமில்லை. ஆகவே, பரிமேலழகர் உரை பொருந்தவில்லை எனலாம்.

கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர்

திருவள்ளுவர் கூறும் கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் எனும் சொற்றொடர் ஆழ்ந்து ஆராய்தற்குரியது.

பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் - **குறள் 573**

எனும் குறள் பொருள் விளக்கம் ஈண்டு கவனத்தில் கொள்ளத்தக்கது.

பாடலோடு பண் இயைந்திராவிட்டால் பண் என்னவாகும்? அதனால் பயன் ஏதும் இராது. ஆகவே,

'பாடலோடு பண் இயைந்திருக்க வேண்டும்.' அதுபோல கண்ணோடு கண்ணோட்டம் இயந்திருக்கவேண்டும். அவ்வியைபின்றேல், கண்ணானது கண் ஒடியும் கண்ணோட்டம் இல்லாத கண் எனப்படும் என்பது பொருள்.

கண்ணோட்டமாவது கண்ணோடு இயைந்து நடைபெற வேண்டியது என இதனால் தெளிவு பெறும்.

அதாவது கண்ணானது காணத்தக்க ஒரு பொருளின் மீது பார்வையைச் செலுத்த, அக்கண்ணோடு சேர்ந்து அவர் கண்ட அப்பொருளின் நன்மை, தீமை எனும் பயன் வகையும் பயன்பாட்டிற்குரிய நெறிவகை, மெய், பொய் தன்மையும் பகுத்துக் கண்டறியும் பகுத்தறிவுச் செயலாகிய கண்ணோட்டம் எனும் சிந்தனைச் செயல்பாடு இயைபுடைத்தாதல் வேண்டும் என்பது.

கண்ணோடாதவர் என வள்ளுவர் கூறினாராயினும் கண்ணோடியைந்து எனக் குறிப்பதால் இயைந்து எனும் சொல் பொருள் தொடர்பு மேலே கண்டவாறு கொள்ளல் இன்றியமையாததாகும். ஆகவே, கண்ணோடியைந்து கண்ணோடாதவர் என்றது கண்ணோட்டமின்மை பற்றியல்லாது, கண்ணோடு இயைபில்லாத கண்ணோட்டம் பற்றிக் கூறினார் என்பது தெளிவு. ஆகவே, கண்ணோடாதவர் என்றாராயினும் கண்ணோட்டமில்லாதவர் எனப் பொருள் கொள்ளல் பொருந்தாது எனலாம்.

கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் என்பது கண்ணோட்டமுடையவராயினும் அக்கண்ணோட்டம் கண்ணோடு இயைந்ததல்ல என தெளிவுறுத்துவதாகும்.

அதாவது கண்ணோடு கண்ணோட்டம் இயைந்திருத்தல் உண்டோ என நோக்கி, இயைந்திராதல் அறிந்து, இயைபில்லாத கண்ணோட்டம் எனக் கொண்டு அதனைக் கூறலானார்.

அதாவது கண்ணோடுபவராயினும் அவர் தம் கண்ணோட்டம் கண்ணோடு இயைந்திராதது, கண்ணால் கண்ட பொருள் ஒன்றன் மீது கண் ஓட (கண் ஒன்றைப் பார்த்திருக்க) கண்ணோட்டம் கொள்ளவேண்டிய அப்பொருளைத் தவிர்த்து மற்றொன்றன் மீது சிந்தனை (கண்ணோட்டம்) கொள்பவர் என்பதாகும்.

ஆகவே, மண்ணோடு இயைந்த மரத்தினையும், கண்ணோடு இயையாத கண்ணோட்டமுடைய மனிதரையும் வள்ளுவர் ஒப்பிடுகிறார் எனல் தெளிவு. இது முன்னர் விளக்கப்பட்ட

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் - **குறள் 580**

எனும் குறளின் கருத்தால் மேலும் தெளிவு பெறும்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைபவர் தாம் கண்ட நஞ்சு பெய்த பொருள்மீது கண் ஓடினாராயினும் (பார்த்தாராயினும்) அப்பொருள் பற்றிய தன்மையும், தகுதியும் அறிதலாகிய கண்வழி (கண்ணோடு இயைந்த) நோட்டம் உடையவராயிராமல் கண் காணாத நாகரிகம் எனும் பிரிதொன்றின்மீது கண்ணோட்டமுடையவராயினர். அதாவது கண்ணோடு இயைந்திராத கண்ணோட்டமுடையவராயினர். ஆகையால், பெயக்கண்ட நஞ்சுவைக் கண்ணோடத்தவறி, கண்ணோடும் வலுவின்மையால் கருமஞ் சிதைந்து நஞ்சுவினையும் நாகரிகத்தினையும் பகுத்தறிய இயலாமல் நஞ்சுவின் மெய்த்தன்மையாம் சாவினை உணராது அதனை உண்டமைபவராகி உலகுரிமையை இழப்பவராயினர்.

ஆகவே, கண் ஓடும் பார்வைக்குள்ளான ஒரு பொருள் மீது கண்ணோடுவதற்குப் பதிலாக மற்றொரு பொருள் மீது கண்ணோடுதலாகிய கண்ணோடு இயைந்திராத கண்ணோட்டமுடைய மனிதருக்கு உவமை கூற மண்ணோடு இயைந்த மரத்தனையர் என்றார் என்பது தெளிவு.

எனவே, கண்ணோட்டமுடையவரது கண்ணோட்டம் அவர் தம் கண்ணோடு இயைந்திருத்தல் வேண்டும் எனும் கருத்தை வள்ளுவர் வலியுறுத்திக் கூறினார் எனக் கருதலாம்.

கண்ணோட்டம் கண்ணோடு இயைந்திருத்தலை வள்ளுவர் வலியுறுத்தினாராதலின் 'கண்ணோடு தங்கண் கலந்த பின்பு கண்ணோட்டத்தைச் செய்யாதவர்'[63] என்ற மணக்குடவர் உரை பொருந்தா உரை எனலாம்.

நஞ்சுண்டமைதல் பற்றிக் கூறின வள்ளுவர், கண்ணோடு இயைந்து கண்ணோடதவர்க்கு மரத்தை உவமையாக்கிக் கூறுதல் ஈண்டு ஆழ்ந்து நோக்குதற்குரியது.

வள்ளுவர் கூறும் நஞ்சுண்டமைதலும், நஞ்சுண்டமைபவர் கண்ணோட்டமும் கிறித்தவரின் பரிசுத்த வேதாகமச் செய்தியாதலின், ஆதிமனிதன் ஆதாமும், அவன் மனைவியும் புசித்த நன்மை தீமை அறியத்தக்க கனியை விளைவித்த மரத்தின் தன்மையையும், நஞ்சுண்டமைபவர் கண்ணோட்டத்தையும் ஒப்பு நோக்குதல் ஏற்புடையதாகும்.

புசிக்கவேண்டாம் என்று தேவன் விலக்கின கனியையுடைய மரத்தை நோக்க, அம்மரம் நன்மை தீமை அறியத்தக்க கனியை விளைவித்த மரம் என அறியலாம். நன்மை தீமை அறியத்தக்க கனி என்றதால் அக்கனியில் நன்மையோடு தீமையும் கலந்திருந்தது என விளங்குகின்றது. ஆகவே, மண்ணின் நன்மை எதுவென்றும், தீமை எதுவென்றும் பகுத்தறிந்து, நன்மையை மட்டுமே விளைவிக்க அறியாதிருப்பது மரம் எனலாம். பகுத்தறியாத இயல்பே மரத்தின் இயல்பு என்பது தெளிவு. எனவே மண்ணோடு இயைந்த மரம் பகுத்தறிய இயலாததால் மண்ணோடு இயைந்து நன்மையோடே தீமையையும் விளைவிக்கும் என்க. நன்மை, தீமை, மெய்மை, பொய்மை எனப் பகுத்தறிதலே கண்ணோட்டம் என்பது முன்னர் பெறப்பட்ட விளக்கச் சுருக்கம். ஆகவே, மரத்தனையர் என்றது பகுத்தறியத் தெரியாத மரத்தைப் போல்வர் என்பது எனக் கருதலாம்.

நஞ்சுண்டமைபவர் கண்ணோட்டத்தை நோக்க, நஞ்சு பெய்தபொருள் மீது கண் ஓடினராயினும், அப்பொருள் பற்றிய தன்மையும் தகுதியும் நன்மையோ, தீமையோ என அறியாமல் நாகரிகம் எனும் பிரிதொன்றின் மீது கண்ணோடியதால், கண்ணோடு இயைந்து கண்ணோடாதவராகி, நஞ்சுவினையும் நாகரிகத்தையும் பகுத்தறிய இயலாமல் நஞ்சுவின் மெய்த்தன்மையாம் சாவினை உணராமல் அதனை உண்டமைபவராயினர் என அறியலாம்.

---

63. டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் - திருக்குறள் உரைக் களஞ்சியம் (பொருட்பால் - அரசியல்) 1990. பக். 676

நஞ்சு பெயக்கண்டதால், கண்கண்ட பொருளோடு இயைந்த கண்ணுடையவர் எனலாம்.

நஞ்சுவையும் நாகரிகத்தையும், தீமை, நன்மை என்று பகுத்தறியாதது கண்ணோடு கண்ணோட்டம் இயைந்திராதது என முன்னர் விளக்கப்பட்டது.

ஆகவே, 'பெயக்கண்ட நஞ்சுவை அறிந்து தெளியாமல் நாகரிகத்தைக் கண்ணோடியதால், நஞ்சு 'பெயக்கண்ட பொருளோடு இயைந்த கண்ணோடு கண்ணோட்டம் இயைந்திராதல்' எனலாம்.

எனவே, கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் என்றது பொருளோடு இயைந்த கண்ணுடைய மனிதரைக் குறித்தது என்பது தெளிவு.

ஆகவே, பொருளோடு இயைந்த கண்ணுடைய மனிதராதலின், மண்ணோடு இயைந்த மரத்தனையர் என்றது ஒப்புமைக்குப் பொருந்தும்.

இதுவரை ஆராய்ந்து அறிந்த பொருள் தெளிவினைக் கருத்திற்கொண்டு, மரத்தின் பகுத்தறியா இயல்புடன் கண்ணோடு இயைந்து கண்ணோடாதவரின் பகுத்தறிவின்மையை ஒப்புநோக்க, பகுத்தறியா இயல்பு பற்றியே திருவள்ளுவர் மரத்தை ஒப்புமையாக்கினார் என உணரலாம்.

ஆகவே,

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்

என வள்ளுவர் கூறும் குறள் உணர்த்தும் கருத்து யாதெனின்,

மரமானது மனிதருக்கு நன்மை தரும் கனி இன்னது தீமை தரும் கனி இன்னது என்று அறியாமல் மண்ணோடு இயைந்து நின்று மண்ணின் நன்மையோடே தீமையையும் விளைவிப்பது போல, கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர், தன் கண்ணானது பார்வையால் இயைந்திருக்கும் (கண் காணும்) பொருளின் நன்மை இன்னது தீமை இன்னது என்று அறியாமல், பகுத்தறிவில்லா இழிநிலை காரணமாக, நன்மையோடு தீமையையும் செய்பவராக அம்மரத்திற்கு ஒப்பாவர் என்பது தெளிந்த முடிவு.

கிறித்தவர்களின் குருவாயிருக்கிற கிறித்துவாகிய இயேசு தமது சீஷர்களுக்குப் போதிக்கையில்,

"நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட
மரமனது நல்ல கனி கொடாது
அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்
. . . .
. . . ." (லூக்கா 6:43,44)

என்று மரத்தைப் பற்றிய ஒரு உவமையைக் கூறினார் எனக் கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் கண்டறியலாம். அவ்வுவமையால் மனிதருக்கு மரத்தை ஒப்புமையாக்கிக் கூறினாரெனவும் அறியலாம்.

அதுபோல மனிதருக்கு மரத்தை ஒப்புமையாக்கி உவமையால் கருத்துணர்த்த முனைந்த திருவள்ளுவர் ஆதிமனிதன் ஆதாமும் அவன் மனைவியும் நஞ்சுண்டமைந்த நிகழ்வினைக் கூறும் அதிகாரத்தின் கண்ணே, கிறித்து இயேசுவின் உவமையில் உணர்த்தப்படுவது போல, கனியினால் அறியப்படும் நல்லது, கெட்டது பற்றிப் பகுத்தறியாத் தன்மை சார்பாய் மனிதருக்கு மரத்தை உவமையாகக் கூறினது ஆதிமனிதர் நஞ்சுண்டமைந்ததற்கும் அவர்கள் புசித்த நஞ்சுவாகிய கனியை விளைவித்த அம்மரத்திற்கும் உள்ள தொடர்பாக விளங்குகின்றது.

ஆதிமனிதன் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் புசிக்க வேண்டாம் என்று தேவன் விலக்கின மரத்தின் கனியை அவர்கள் புசித்த நஞ்சுண்டமைதல் நிகழ்வு, நஞ்சுவாகிய அக்கனியை விளைவித்த மரம், மரத்தின் விளைவாகிய கனி எனும் பொருள், அப்பொருட்பால் உண்டான கண்ணோட்டம், அப்பொருள் மீது கண்ணோட்டம் கொண்ட ஆதிமனிதன் உலகை ஆளும்படி தேவனால் உண்டாக்கப்பட்ட அரசன், அவனது அரசியல், உலகியல் என இவை ஏழும் ஒன்றாக இணைக்கப்பட்டு கூறப்படுவதால், 'மண்ணோடு இயைந்த மரத்தனையர்' எனும் உவமத் தொடரால் வள்ளுவர் உணர்த்தும் கருத்து கிறித்தவர் புனித நூல் செய்தியே என்பது உறுதி. ஆகவே,

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

எனும் குறளின் கருத்து கிறித்தவர் புனித நூல் கூறும் உலக வரலாற்று நிகழ்வுச் செய்தியே என்பதற்கு மேலே விளக்கப்பட்ட உவமைத்தொடர் மேலும் அரண் சேர்ப்பதாக அமைந்துள்ளது என்பது முடிவு.

7. ஒறுத்தாற்றும் பண்பினாரும், பொறுத்தாற்றும் பண்பும்

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் - குறள் 580

எனும் வள்ளுவரின் குறள் ஆதிமனிதன் ஆதாமும் அவன் மனைவியும் நஞ்சுண்டமைந்த செய்தியே என விளங்குவதால், அந்நிகழ்வினைக் கூறியுள்ள கண்ணோட்டம் என்னும் அதிகாரத்தில் அவர் வைத்துள்ள மற்றொரு குறளான,

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை - குறள் 579

என்பது ஆதிமனிதன் நஞ்சுண்டமைந்த நிகழ்வினைப் பற்றியே எழுந்த கருத்தெனக் கொள்வதற்கு இடமுண்டாதலின் இவ்விரு குறள்களுக்குமுரிய தொடர்பு அறிதல் அவசியம்.

இதுவரையிலும் ஆராய்ந்து கண்டறிந்த தெளிவின்படி நஞ்சுண்டமைபவர் தலைவியும் தலைவனுமாகிய அரசனும் அவன் மனைவியும் என அறியப்பட்டது கவனத்தில் கொள்ளத்தக்கது. மன்னன் நஞ்சுண்டமைவதற்கு அவன் மனைவி ஆற்றிய செயலே, அவன் கண்ட நஞ்சு பெய்தல் என அறியப்பட்டது. நஞ்சுண்பவர் இருவரில் ஒருவர் மன்னன் என்றறியப்படுவதுபோல, அம்மன்னனுக்கு நஞ்சு பெய்து கொடுப்பவர் அவன் மனைவியாம் தலைவியாகிய அரசி என அறியப்பட்டதும் நினைவிற்கொள்ளத்தக்கது. தலைவியாகிய அரசி மன்னனோடு பழகியவர், சினேகம் பண்ணினவர், இல்லறத்தில் வாழ்தலின் பொருட்டு உடனிருப்பவர். ஆகவே, தன் அன்புக்குரியவர். ஆதலின் பிரிவாற்றாமையாலும் அவள் சொல் மறுக்கமாட்டமையாலும் மன்னன் நஞ்சுண்டமைந்தான் எனவும் உய்த்துணரப்பட்டது.

நஞ்சு உண்பதால் அது தம்மை வருத்தும் பின் கொல்லும் என்பதை அறிவுடையார் அறிவர். ஆகவே, நஞ்சு பெய்து கொடுத்தல் வருத்தும் துன்பத்தைக் கொடுத்தலாம். ஆகவே, நஞ்சு பெய்து கொடுத்தல் என்பது ஒறுத்தாற்றும் செயலே. ஒறுத்தாற்றும் அச்செயலைச் செய்யும் பண்பினை உடையவர் மன்னருடன் இருக்கத்தக்க அவரது மனையாளே - இல்லத்தரசியே என்பது நோக்குதற்குரியது.

மாற்றார் தனக்கு நஞ்சிட்டாலும் அமிர்தம் என்று மன்னர் ஏற்பராயின், அரசாளுகை தனக்கு உரித்தாவது எங்ஙனம்? ஆகவே, மாற்றார் தனக்கு நஞ்சு இட்டதன் காரணமாய் அம்மாற்றாரை மன்னன் பகையாதிருக்கக்கூடுமோ? ஒறுத்தாற்றுதல் இயல்பன்றோ?

நட்டோர் தனக்கு நஞ்சிட்டாலும் மன்னர் உண்பராயின் தனக்குரித்தான அரசு நிலைத்திருத்தல் கூடுமோ? நட்டோர் தனக்கு நஞ்சிட்ட அத்தீச் செயல் காரணமாய் அவரது நட்பை மன்னன் விலக்காதிருப்பானோ?

மாற்றோராயினும், நட்டோராயினும் நஞ்சுண்ணப் பெய்து கொடுப்பராயின் தம்மை ஒறுத்தாற்றும் அவரது செயல் குற்றமாதலின் தண்டனைக்குரியதே. ஆகவே, அக்குற்றம் செய்தவர் மாற்றோராயினும், நட்டோராயினும் அவர் மாட்டு மன்னன் பொறுத்தாற்றுதல் அரிதே. அரசு நலன் கருதி மன்னன் தன்னை ஒறுத்தாற்றுபவரை தண்டித்தல் இயல்பே.

தண்டனைக்குரிய குற்றமேயாயினும், முன்னர் ஆதி மன்னன் ஆதாம் நஞ்சுண்டமைந்த நிகழ்வினை உய்த்துணர்ந்து விளங்கிக் கொண்டது போன்று, மன்னனுக்கு நஞ்சு பெய்து கொடுப்பவர் அவனது மனைவியாயின் இல்லறத்தினின்று ஒழுகும் மன்னன் என்ன செய்ய இயலும்? பொறுப்பானோ? மாட்டோனோ? நஞ்சு பெய்து கொடுப்பது ஒறுத்தாற்றுவதாயினும் நாகரிகம் எனும் முன்னர் விளக்கப்பட்ட நிலமிசை வாழ்வு பற்றிக் கொடுப்பாராயின் அதனை வேண்டுபவனாய் தன் மனைவி ஆற்றிய செயல்தனைப் பொறுப்பானல்லவா?

மன்னனேயாயினும் தன் மனையாளைத் தள்ளிவிடுதல் முறையாமோ? தன்னுடன் வாழ்ந்திருக்க வேண்டியவர் தனக்கு கொடுத்ததனை அவரது பிரிவாற்றாமையானும், மறுக்கமாட்டாமையனும் உண்பவன் அச்செயலைச் செய்தது பரிவாற்றாமையால் பொறுத்தாற்றியதன்றோ? தலைப்பண்பாகிய அதனைச் சுட்டியே,

'ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை' - **குறள் 579**

என்று திருவள்ளுவர் குறள் இயற்றினார் எனக் கருதலாம்.

ஆகவே, ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடி என்றது ஒறுத்தாற்றும் பண்பினார் நட்டாரோ, மாற்றாரோ, முந்தையிருப்பாரோ உடன் வாழ்தற்குரியவரோ என அவரது உறவின் தன்மையும் தகுதியும்

உடன்பட்ட பண்பினது நோக்கமும் அறிந்து தெளிதல். அதாவது, தம்மை ஒறுத்தாற்றுபவருக்குத் தம்முடனான உறவின் தன்மையும் தகுதியும், தமக்கு ஒறுத்தாற்றிய செயலின் உள்நோக்கத்தினது தன்மையும் இன்னதென்று பகுத்தறிந்து பிழை பொறுத்தாற்றும் பண்பே தலை என்பது தெளிவு.

இஃது இல்லறத்தில் நின்றார்க்கிடையில், அதாவது கணவன் மனைவி மக்களுக்கு இடையே நிகழும் ஒறுத்தாற்றுதலுக்கு அரசன் செய்யும் தீர்ப்பு முறைக்கும் சாலப் பொருந்தும் என்க.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் - குறள் 580

எனும் குறளுக்கு கவிராசர், பழைய 2, பரிமேலழகர் ஆகியோரது உரைகள் ஈண்டு நோக்குதற்குரியன.

"கவிராசர் : தம்முடன் சினேகிதமானபேர் நஞ்சையிட்டாலும் அவர்கள் மேலே கண்ணோட்டத்தினாலே அந்த நஞ்சைத்தள்ள மாட்டாமல் உண்டு பின்னையும் அவர்களுடனே சினேகமாய் இருப்பார்கள் . . . .
. . . .

பழைய 2 : தம்மோடு பழகினவர் தமக்கு நஞ்சு கூட்டி இடக்கண்டும் கண்மறுக்க மாட்டாமையால், அதனையுண்டு, பின்னும் அவரோடு மேவி அமைந்திருப்பர் 64

பரிமேலழகர்: "பயின்றார் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண் மறுக்க மாட்டாமையின் அதனையுண்டு பின்னுமவரோடு மேவுவர் . . . .
. . . ."65

"பரிமேலழகர் தரும் சிறப்புரையாகிய 'பின்னும் அவரோடு மேவுவர் என்பதற்கு 'நஞ்சுண்ட பின்னும் உயிர் பிரிகிற வரையில் நஞ்சூட்டிய அவரோடு விரும்பியிருப்பர் எனக் கருத்துக்கோடல் ஏற்புடையதாகும்.

64. ச. தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரை களஞ்சியம் (பொருட்பால் அரசியல்) 1990 பக் 689

65) திருக்குறள் (மூலமும் பரிமேலழகருரையும்) - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1939 பக் 232

'மேவல் விருப்பாகும்' . . . ." என்பார் மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்.

இக்கருத்துரைகள் யாவும் தன்மையும் தகுதியும் பகுத்தறிதலாகிய கண்ணோட்டத்திற்காகிலும் நிலமிசை நீடு வாழ்வாகிய நாகரிகத்திற்காகிலும் பொருளெனப் பொருந்தாதாயினும் பொறுத்தாற்றும் பண்பிற்குப் பொருந்தும் எனலாம்.

நஞ்சுண்டமைபவர் உண்பொருள் எனக் கொண்ட நஞ்சுவாகிய பொருள் மீது கண்ணோடியது மட்டுமன்றி அந்நஞ்சினை தமக்குப் பெய்து கொடுப்பவர் மீதும் கண்ணோடுவது பற்றி வள்ளுவர் கூறியுள்ளார். ஆகவே, கண்ணோட்டம் எனும் அதிகாரத்தைப் பொருட்பாலின் அரசியல் பகுதியில் வைத்த வள்ளுவர் உலகப் பொருளின்கண் கண்ணோடுவது பற்றிக் கூறினாரெனினும் பொருட்பால் கண்ணோடுவது மட்டுமன்றி அப்பொருளை உடையன மாட்டும், உடையார் மாட்டும் கண்ணோடுதல் அவசியமாதலின் அதுபற்றி 'பண்பினார் கண்ணும்' என வலியுறுத்தி,

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை

என்றுரைத்தார் என அறியலாம்.

8. கண்ணோட்டம் பண்பா? செயலா? கழிபெருங்காரிகை

திருவள்ளுவர் ஆண்டுள்ள 'கண்ணோட்டம்' எனும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் பலரும் பலவாறு விளக்கம் கூறியுள்ளனர்.

"கவிராசர் : தன்னுடனே சினேகம் பண்ணிய பேர் சொன்ன காரியங்களை மறுக்க மாட்டாமை. இது அவர்கள் மேல் கண்ணோட்டமாகிய தயை உண்டானபடி யினாலே அப்பெயர்த்தாயிற்று.

பழையை2: அஃதாவது பழகினவரைக் கண்டால் அவர் சொல்லும் மாற்றம் மறுக்க மாட்டாமை கண்ணாற் கண்டு முகவாட்டம் செய்யாமை கண்ணோட்டம் (இன்மை) என்க. கண்மறுக்க மாட்டாமை கண் மறுத்துச் சொல்லாமை எனப் பெரியோர் சொல்லுஞ் சொல்"[66]

என்றவாறு உரைகளை எடுத்துக்காட்டும் மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர்,

"இவ்வுரைகளால் கண்ணோட்டம் என்பது செயலா? பண்பா? எதனால் விளைவது என்பது தெளிய அறியக் கூடவில்லை. பொறுத்தலே கண்ணோட்டமாயினும், மறுக்காமையே அதுவாயினும் செயல் ஆகிறது"[67] எனக் கூறுகிறார். மேலும்,

"..............................

....

உறவினர், உதவியவர், முதலியவர்களுடைய ஆக்கவழி நன்மைகளை எண்ணிப் பொருள் கொடுத்தல், துணை நிற்றல், நியாயம் வழங்கல் முதலியவைகளால் குடிமக்களில் ஒருவருக்கும் இடையூறின்றிச் சலுகை காட்டுதலே கண்ணோட் டமாம் என்க.

66,67 ச. தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைக் களஞ்சியம் 1990. பக் 659

அங்ஙனமாயின், "ஒறுத்தாற்றும் பண்பினார்
கண்ணும் பொறுத்தாற்றும் பண்பே கண்ணோட்டம்
என்றது மாறுபாடாம் . . . .
. . . ."[68]

என்றும்,

". . . . .
. . . .
வள்ளுவர் "கண்ணோட்டம் என்னும் காரிகை"
'கண்ணோட்டம் இல்லாத கண்' என்ற குறட்பாக்
களில் கண்ணோட்டம் கண்ணின் பண்பாகச்
சொல்லப்படுகின்றனவேயன்றிச் செயலாகக்
கூறப்படவில்லை"[69அ]

என்றும் கூறுகின்றார்.

ஆயினும்

". . . . .
. . . .
. . . .
கொடுங்கோலனாகாமல் செய்க என்றதாம் . . . .
. . . .
. . . .
பழகியாரிடத்துக் கண்ணோடின்
செங்கோன்மைக்கு இடம் இல்லையாய்
விடும். ஆதலின் சிலருக்குக்கேனும்
கண்ணோட நேரின் அளவிற் செய்க
. . . .
. . . ."[69 ஆ]

எனவும் கூறுகின்றார்

கண்ணோட்டம் கண்ணின் பண்பாகச் சொல்லப்படுவதேயன்றிச் செயலாகக் கூறப்படவில்லை எனக்கருதிய பின்னும் செய்க என்று அவர் உரைத்திருப்பது நோக்குதற்குரியது.

---

68) ச. தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைக் களஞ்சியம் 1990 பக் 661
69அ, ஆ) ச. தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைக் களஞ்சியம் 1990 பக் 663

கண்ணோட்டம் பண்பாயின் செய்க என்பது எவ்வாறு பொருந்தும்? செயலைச் செய்க என்பதல்லவா பொருந்தும்?

கண்ணோட்டம் என்பதற்கு,

> "தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று . . . .
> . . . ."[70]

என்று பரிமேலழகர் பொருள் கூறியுள்ளார்.

நிகழ்வது என்றாராகலின் கண்ணோட்டத்தைப் பரிமேலழகர் செயல், எனக் கருதினார் என அறியலாம்.

அதுபோல 'கண்ணோட்டத்துள்ளது உலகியல்' என்பதற்கு,

> "உலக நடை கண்ணோட்டத்தின் கண்ணே நிகழ்வது
> . . . .
> . . . .
> உலகநடையாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தலென்றிவை முதலாயின. அவை நிகழாமையால் தமக்கும், பிறர்க்கும் பயன்படாரென்பது பற்றி, நிலக்குப் பொறை யென்றார்
> . . . .
> . . . ."[71]

எனவும் விளக்கம் உரைத்துள்ளார்.

ஆகவே, நிகழ்வு உடையதே கண்ணோட்டம் என்பது பரிமேலழகருக்கும் அறியப்பட்டிருந்த தெளிவு என விளங்குகின்றது.

கண் சென்றவழி நிகழ்வது கண்ணோட்டம் என அறிந்திருந்த, பரிமேலழகர் கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை என்பதற்கு

> "கண்ணோட்டமென்று சொல்லப்படுகின்ற சிறப்புடைய வழகு . . . . . ."[72]

என்று கண்ணோட்டத்தினைப் பண்பாகக் கருதி பொருள் கூறியுள்ளார். இது கண்ணோட்டத்திற்கு பொருள் கூறுவதில் பரிமேலழகருக்கு ஏற்பட்ட மயக்கத்தை தெளிவாக விளங்கச் செய்கின்றது.

70,71,72) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1939 பக் 229

காரிகை என்பதற்கு அழகு என்று பொருள் கொண்ட பரிமேலழகர் கண்ணோட்டத்தினை நிகழ்வது என்றாராகலின், அழகு நிகழ்வது என்பது பொருத்தமாவது எங்ஙனம்? நிகழ்வது யாவும் செயலே. திகழ்வதே பண்பு. ஆகவே, அழகு திகழ்வதேயன்றி நிகழ்வது அல்ல. ஆகவே, அழகு என்று பொருள் கோடல் பொருந்தாது என அறியலாம்.

இவ்வாறு உரையாசிரியர்கள் மத்தியில் கண்ணோட்டம் என்பது பண்பா? செயலா? எனும் பொருள் உணர்தலின் மயக்கம் காணப்படுகிறது.

காரிகை எனும் சொல்லுக்கு அழகு எனும் பொருள் கொண்டதுவும் வள்ளுவர் ஆண்ட 'கண்ணிற்கு அணிகலம்', 'பொறுத்தாற்றும் பண்பே தலை' எனும் சொற்றொடர்களும், கண்ணோட்டத்தைப் பண்பெனக் கருதியமைக்குக் காரணமாயிருந்திருக்கலாம். ஆகவே, கண்ணோட்டம் பண்பா? செயலா? எனும் மயக்கம் தெளிதல் இன்றியமையாததாகும்.

கண்ணோட்டம் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறி வைத்துள்ள குறட்பாக்களை முன்னர் (பக். 59) வகைப்படுத்தியது போன்று மேலும் ஐந்து விதமாக வகைப்படுத்தி அறியலாம். அவை,

1. கண்ணோட்டம் பற்றிக் கூறுபவை :

1. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
   உண்மையான் உண்டிவ் வுலகு - 571

2. கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
   உண்மை நிலக்குப் பொறை - 572

3. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
   புண்ணென்று உணரப்படும் - 575

2. கண்ணோட்டமுண்மை மட்டுமே பற்றிக்கூறுவது :

1. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
   உண்மையான் உண்டிவ் வுலகு - 571

3. கண்ணோட்டமின்மை மட்டுமே பற்றிக்கூறுவன :

1. கண்ணோட்டத்துள்ளது உலகியல் அஃதிலார்
   உண்மை நிலக்குப் பொறை - 572

2. பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் - 573

3. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் - 580

4. கண்ணோட்டம் உண்மையும் இன்மையும் கலந்துரைப்பன :

1. உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண் - 574

2. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும் - 575

3. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர் - 576

4. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல் - 577

5. கண்ணோடுதல் அவசியம் பற்றிக்கூறுவன :

1. கண்ணோட வலு உடைமை அவசியமாதலின்
கண்ணோட வல்லார் பற்றிக்கூறுவது :

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு - 578

2. பொருளின்கண் மட்டுமன்றி பொருள் உடையார்
கண்ணும் கண்ணோடுதல் அவசியம் பற்றிக்கூறுவது:-

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை - 579

கழிபெருங்காரிகை

மேலே கண்டவாறு வகைப்படுத்தப்பட்டவற்றுள், கண்ணோட்டம் பற்றிக்கூறும்

"கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு" - 571

எனும் குறளில் காணும் 'காரிகை' என்னும் சொல்லுக்கு 'அழகு' என்று பொருள் கொண்டும், கண்ணோட்டம் என்பது நிகழ்வது எனவும், பரிமேலழகர் உரை கூறியிருப்பதால் கண்ணோட்டம் என்பது பண்பா?

செயலா? என்பது பற்றி உரையாசிரியர்கள் மத்தியில் நிலவும் பொருள் மயக்கம் தெளிதற்கு, இக்குறள் ஆராய்தற்குரியது.

கண்ணோட்டம் பற்றிக்கூறும் மற்றொரு குறள்

"கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை" - 572

என்பதாகும். இக்குறளில், கண்ணோட்டத்துள்ளது உலகியல் என்று திருவள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். உலகியல் என்பது உலகத்தாருடைய வாழ்வின் நடைமுறை எனலாம். அது நிகழ்வாகும். கண்ணோட்டத்துள்ளது உலகியல் என்றதால், உலகத்தாருடைய வாழ்வின் நடைமுறை கண்ணோட்டத்துள்ளது எனக் கொள்ளத்தகும். ஆகவே, 'கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை' - யில் உலகியல் எனும் உலகத்தாருடைய வாழ்வின் நடைமுறை உள்ளது என்றாகிறது.

உலகியல் எனும் உலகத்தாருடைய வாழ்வின் நடைமுறை என்பது நிகழ்வதாகலின், **'கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை'** என்பது **செயலே** என உணர முடிகிறது. ஆகவே, 'காரிகை' எனும் சொல்லுக்கு, பண்பை மட்டுமே உணர்த்தும் 'அழகு' எனும் பொருள் கோடல் பொருத்தமாவதில்லை என விளங்குகின்றது. ஆகவே, **'கழிபெருங்காரிகை'யில் உலகியல் நிகழ்வு பற்றிய வேறு பொருள் உள்ளது** என உணரலாம். அந்நிகழ்விற்குக் 'கண்ணோட்டம்' எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது எனவும் உணரலாம். அதாவது, 'கழிபெருங்காரிகை' எனும் அந்நிகழ்வு காரண காரியம் பற்றிக் கண்ணோட்டம் எனப்பட்டிருத்தலாகும் எனவும் உணரலாம். ஆகவே, கழிபெருங்காரிகை எனுஞ் சொற்றொடருக்கு உரிய பொருள் அறியப்படுகையில் கண்ணோட்டம் எனப்பட்டதுவாகிய அந்நிகழ்வு தெளிவாக விளங்கும்.

'கழி பெருங் காரிகை' எனுஞ் சொற்றொடரில் உள்ள **'காரிகை'** எனுஞ் சொல்லை

காரி + கை எனப் பகுத்துக்கொள்ளலாம்.

இதில் **'கை'** என்பதற்கு **'உலக ஒழுக்கம்'**[73] என்பது பொருள். ஆகவே, அது கண்ணோட்டத்துள்ளது உலகியல் எனும் வள்ளுவர் கூற்றை மெய்ப்பித்து அமையும் சொல்லாக விளங்குகின்றது என அறியலாம்.

---

73 - கழகத்தமிழ் அகராதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1991.

'**காரி**' என்பதற்கு '**நஞ்சு**'[74] என்று பொருள். '**நஞ்சு**' எனும் **பொருள் கருமை, கரியது, கார்** எனும் சொற்களாலும் வழங்கப்படும். ஆகவே, '**காரிகை**' எனுஞ் சொல்லை,

கார் + இகை

எனவும் பகுத்து அறியலாம். '**கார்**' என்பது '**நஞ்சு**' எனப் பொருள்படுவதுமல்லாமல், 'அறிவு மயக்கம்'[75] எனவும் பொருள்படும். எனவே, அறிவுமயக்கம் உலக ஒழுக்கத்தோடு தொடர்புடையதுவாகக் கூறப்படுவதற்காக இச்சொல் ஆளப்படுவதாக உணரலாம்.

'இகை' என்பது '**இகைத்தல்**' ஆகும். '**கொடுத்தல்**'[76] என்பது அதன் பொருள். ஆகவே, **காரிகை** என்பது **அறிவுமயக்கம் கொடுத்தலும் நஞ்சு கொடுத்தலும்** எனப் பொருள் கொள்ளத்தகும். ஆதலின், அஃது உலக ஒழுக்கத்தில் உண்டான நிகழ்வு பற்றி உணர்த்த கூறப்படுவதாக விளங்குகின்றது.

'**பெருங் காரிகை**' என்பது **பெரும் அறிவுமயக்கம்** என்பதாம். ✣'**கழி**' என்பதற்குச் '**சா**' - **சாவு (இறப்பு, மரணம்)** என்பது பொருள்.

எனவே, '**காரி**' எனப்படும் நஞ்சு கொடுத்த நிகழ்வால் '**கழி**' எனும் '**சா**' நிலையாகிய இறப்பு உண்டாகியிருக்கிறது என விளங்குகின்றது. எனவே, '**கழிபெருங் காரிகை**' என்பது, '**நஞ்சு தரும் இறப்புடைய பெரும் அறிவு மயக்கம் கொடுத்தல்**' என்பதாகும். இந்நிகழ்வே, ஆதிமனிதன் ஆதாம் நஞ்சுண்டமைந்த நிகழ்வென,

> 'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்'

எனும் இவ்வதிகாரத்தின் இறுதிக் குறட்பாவில் கூறியுள்ளார் என ஆராய்ந்தறிந்த தெளிவு ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கது.

வள்ளுவர் 'கண்ணோட்டம்' எனும் இவ்வதிகாரத்தில் இதனைக் கூறத்துவங்கி, முன்னுரையாக, 'கழிபெருங் காரிகை உண்மையான் உண்டிவ் வுலகு' என்றது நஞ்சு தரும் சாவுடைய பெரும் அறிவு மயக்கம் உண்டாயிருத்தலால் இறப்புடைய இம்மையாகிய இவ்வுலக வாழ்வியல் உண்டாயிருக்கிறது என்பது எனத் தெளியலாம். உலகு என்பது ஈண்டு உலகத்தாரின் வாழ்வைக் குறித்தது.

74, 75, 76 - கழகத்தமிழ் அகராதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1991.

✣ கழகத்தமிழ் அகராதி, 2003

உலக வாழ்வின் நடைமுறை உண்டாவதற்கு இந்நிகழ்வு முதற்காரணமாயிருத்தலின் அதனைக் கூறி, அது கண்ணோட்டத்தில் நிகழ்ந்ததுவாதலின் அதனை 'கண்ணோட்டத்துள்ளது' எனவும் 'கண்ணோட்டம்' எனவும் வள்ளுவர் கூறினார் என்பது தெளிவு. நஞ்சு கொடுத்த செயலைப் பற்றின கண்ணோட்டத்தில் உண்டான சாவுடைய அறிவுமயக்கம் ஈண்டு 'கழிபெருங் காரிகை' எனப்பட்டது. இச்சாநிலை அறிவுமயக்கம் பற்றியே, நஞ்சுண்டமைபவர் கண்ணோட்டமாக இவ்வதிகாரத்தின் இறுதிக் குறட்பாவில் வள்ளுவர் கூறினார் எனத் தெளிவாக விளங்குகின்றது. ஆதாம், ஏவாள் ஆகிய இருவரும் நஞ்சுண்டமைவதற்கு இக்கண்ணோட்டமே காரணம் எனவும் விளங்குகின்றது.

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று உணரும் அறிவு மயக்கத்தால் சாவிலாது நீடுவாழும் சிறப்பு அற்ற இறப்புடைய பிறப்பு உண்டாம் என்ற கருத்துரைக்கும்,

"பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" - குறள் 351

எனுங் குறளும்,

"அறிவு மயக்கம் நீங்கி மாசற்ற காட்சியாகிய செம்பொருள் காண்பதாம் மெய்யறிவை அடைபவர்க்கு நற்பலனாக இறப்பு நீங்கி நீடுவாழ்வின் இன்பம் உண்டாகும் என்ற கருத்துரைக்கும்,

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு" - குறள் 352

எனும் குறளும்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற" - குறள் 34

எனுங் குறளும், கண்ணோட்டத்தின் அறிவுமயக்கம் பற்றிய கருத்திற்கு அரண்சேர்த்து ஈண்டு இந்நிகழ்வோடு பொருந்துவனவாகும்.

அறிவு மயக்கம் 'கண்ணோட்டம்' எனப்படுவது எங்ஙனம் என அறிதல் அவசியம். கண்ணோட்டம் பற்றி வள்ளுவர் கூறும் குறள்களில், கண்ணோட்டத்துடன் தொடர்புடையனவாக ஆளப்பட்டுள்ள '**காரிகை**' '**நாகரிகம்**' எனும் சொற்களுக்குப் பொருள் உணர்தலில் உண்டான பொருள் மயக்கத்தால் 'கண்ணோட்டம்' எனுஞ் சொல்லுக்கு

உரையாசிரியர்களால் உரிய பொருள் விளக்கம் அறிய இயலவில்லை எனக் கருதலாம்.

'கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப்படும்' - குறள் 575

எனும் குறளில், பொருள் மயக்கந்தரும் பிற சொற்கள் ஏதுமின்றி, கண்ணோட்டம் எனுஞ்சொல் தனிச்சொல்லாய் ஆளப்பட்டுள்ளதால், தனித்த அச்சொல் பொருளே ஏற்புடையதாகும் எனலாம். கண்ணோட்டம் எனுஞ்சொல்லை **கண் + ஓட்டம்** எனவும் **கண் + நோட்டம்** எனவும் பகுத்துப் பொருள் உணர்தல் முன்னர் ஆய்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

கண்ணோட்டம் என்பதற்குக் குறள் வழியும், குறள் கூறும் கிறித்தவர் புனிதநூல் செய்தியாகிய ஆதிமனிதன் ஆதாம் நஞ்சுண்ட நிகழ்வின் வழியும் பெற்ற பொருள் விளக்கம் ஈண்டு கவனத்தில் கொள்ளத்தக்கது. **கிறித்தவர் புனிதநூல் செய்தி வழி பெறலான பொருள் விளக்கம் யாதெனில்,**

"கண்ணோட்டமாவது கண்களால் காணப்படும் உலகின் பொருள் மீது கண் ஓடி பார்வையிடுவதால், அப்பொருளின் நன்மை, தீமையினையும், அதன் தன்மையறிந்த அறிவாக உரைப்பாரின் சொல் பொருளின் வாய்மை, பொய்மையினையும் பகுத்தறிந்து, பயன்பெற வேண்டி, மெய்ப்பொருள் அறிதல் பொருட்டு. அவற்றின் உட்பொருளாகிய நுண்பொருள் ஆராயும் சிந்தனைச் செயல்."

குறள் வழி அறியப்பட்ட பொருள் விளக்கம் யாதெனில்,

"கண்ணோட்டமாவது உலகின் பொருட்பயன்வழி நிலமிசை நீடு வாழ்வு பெற வேண்டுபவர், நற்பயன் வேண்டி ஆற்றும் செயல்வகைக்குரிய அறமும் பயனும் அறிய வேண்டி, இயற்பொருளாயினும் அதுபற்றிய சொல் பொருளாயினும், செம்பொருள் மெய்ப்பொருள் எனும் அப்பொருள் பற்றிய மெய்யுணர்வு அடையும் பொருட்டு, நன்மை தீமை எனும் பயன் வகையும் மெய் ஒழுக்கம், பொய் ஒழுக்கம் எனும் நெறி வகையும் பகுத்துக் கண்டறியும் பகுத்தறிவுச் செயல்."

கண்ணோட்டம் பற்றிய இப்பொருள் விளக்கங்களை நோக்க, கண்ணோட்டம் என்பது பகுத்தறிவுத் தெளிவு பெறுதல் என விளங்கும். ஆகவே, கண்ணோட்டம் அறிவுடன் தொடர்புடையது எனவும்,

அறிவுத்தெளிவு பெற முயலுஞ் செயல் எனவும் தெளிவாக அறியலாம். ஆனால் நஞ்சுண்டமைதலில் கண்ணோடியும் **காரிகை** உண்டாயிற்று. அஃதாவது **அறிவு மயக்கம்** உண்டாயிற்று. ஆகவே, அதனை அறிவின் மயக்க நிலைக் கண்ணோட்டம் என்றார் எனக் கருதலாம். அஃதாவது, இவ்வுலகின் இறப்புநிலை வாழ்வு ஒரு மயக்க நிலைக் கண்ணோட்டத்தால் உண்டானது என வள்ளுவர் கூறுகிறாரெனத் தெளிவாக அறியலாம்.

அவ்வறிவு மயக்கத்தால் கண்ணோட வல்லாரல்லாராயினவர் நஞ்சுண்டமைபவரே. கண்ணோட வலுவில்லா இக்கண்ணோட்டம் மயக்க நிலைக் கண்ணோட்டம் அல்லது அறிவு மயக்கக் கண்ணோட்டம் எனப்பட்டது. ஆகவே, அறிவு மயக்கக் கண்ணோட்டம் என்பது தன்மையும் தகுதியும், நன்மையும், தீமையும், பொய்மையும் மெய்மையும் இன்னதென்று அறியக்கூடாத நிலை எனலாம். பகுதி அறிந்தும் பகுதி அறியக்கூடாததினால் அறியாமலும் இருத்தலாகிய அறிவு மயக்கமாயினும், அது பொய்மை மெய்மை அறிய முயன்ற செயலாகலின், 'கண்ணோட்டம்' என்னப்பட்டது. அதாவது மயக்க நிலைக் கண்ணோட்டம் எனப்பட்டது என்பது தெளிவு.

கண்ணோடு இயைந்திராத கண்ணோட்டம் போலவும்,
உளபோல தோன்றியும் இல்லாத கண்ணோட்டம் போலவும்,
வலுவில்லா கண்ணோட்டம் போலவும்
அறிவு மயங்கிய கண்ணோட்டம். எனலாம்.

'கண்ணுடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்' என்றதன் பொருள் இதனால் நன்கு விளங்கும்.

அதாவது, கண்ணுடையார்க்கு கண்ணோட்டம் இல்லாமற் போவதில்லை. கண்ணோட்டம் இருக்கும். ஆயினும் பூரண கண்ணோட்டம் இருக்கும் என்பதில்லை. அவருடைய கண்ணில் உள்ள கண்ணோட்டம் "கண்ணோடு" இயைந்திராததாயுமிருக்கலாம், உளபோல முகத்தில் தோன்றியும் அகத்தில் இல்லாததாயுமிருக்கலாம். அறிவு மயக்கத்தால் பூரணமாகாததாயுமிருக்கலாம். எதுவாயினும் கண்ணுடையார்க்கு கண்ணோட்டம் இருத்தல் உண்டு. ஆகவே, கண்ணோட்டம் இல்லாத கண் என்பது பூரண கண்ணோட்டமில்லாத கண் என்பதாகும். பூரணமான கண்ணோட்டம் முதலாய் எவ்வகைக் கண்ணோட்டமும் இல்லாதவர் கண் இல்லாதவரே. ஏனெனில் கண்ணில்லாதவரிடத்தில் எவ்வகைக் கண்ணோட்டத்திற்கும்

பொருளில்லை. ஆகவே,

"கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்" - குறள் 577

என்றார்.

அறிவு மயங்காதாயின், கண்ணோட்டம் வலுவடைந்து பூரணப்படும். அறிவு மயக்கமில்லா பூரண கண்ணோட்டத்தில் கருமஞ்சிதையாது. கருமஞ் சிதையாதிருப்பின், இவ்வுலகில் தமக்குரிய வாழ்வையும், ஆளுகையையும் இழக்க நேரிடாது. ஆகவே,

"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு" - குறள் 578

என்று வள்ளுவர் கூறினார் என அறிந்து உணரலாம்.

கண்ணோட்டம் இல்லாத கண்

கண்ணோட்டத்துள்ளது உலகியல் என்றார் திருவள்ளுவர். ஆதலின், உலகியற்கண் வாழ்வோரது கண் உறுப்பின் தன்மை அறியப்படுவது அவசியமாகும். ஒருவன் முகத்திலுள்ள கண்ணானது கண்ணோட்டமுள்ள கண்ணோ? அல்லது கண்ணோட்டமில்லாத கண்ணோ? என அறியப்படுதல் அவசியம். அஃது அவன் செய்யும் செயலின் தன்மையும் தகுதியும் பற்றிய அளவினால் அறியப்படும்.

அதாவது, கண்ணோட்டமுள்ள கண்ணுடைய ஒருவன் செய்யும் செயலின் நன்மை தீமை பற்றிய தகுதியின் அளவினால் அவனது கண் கண்ணோட்டமுள்ள கண் என்று அறியப்படுவது போல கண்ணோட்டமில்லாதவன் கண்ணும் அவன் செய்யும் செயலின் தகுதியின் அளவினாலேயே கண்ணோட்டம் இல்லாத கண் என்று அறியப்படும்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைதலில், பெயக்கண்டவர் அது நஞ்சு என்று கண்டதால், அவரது கண் கண்ணோட்டம் உளது போலத் தோன்றினாலும் நஞ்செனக் கண்டும் வாழ்வு தருமென பொய்யுரைக்கப்பட்ட நஞ்சனைய நயவஞ்சகச் சொற்களை நம்பி நஞ்சுண்டமைந்த செயலளவினால், அக்கண் பூரண கண்ணோட்டம் இல்லாத கண் என்றறியப்படுவது ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கது.

ஈண்டு, முழு அல்லது பூரண கண்ணோட்டம் உள்ளதுபோல் தோன்றுதல் பொய்மை. பூரண கண்ணோட்டம் இல்லாததே மெய்மை.

ஆகவே, ஒருவன் செய்யும் செயலின் தன்மையும் தகுதியும் பற்றிய அளவினால் அவனது கண்ணோட்டமுண்மையும் கண்ணோட்டமின்மையும் அறியப்படுவது உறுதி.

ஆகவே,

"உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்" - குறள் 574

எனும் குறள் வழி வள்ளுவர் உணர்த்தும் கருத்து யாதெனில்,

கண்ணோட்டம் இல்லாத கண் எவன் ஒருவன் முகத்தில் கண்ணோட்டம் உள்ள கண் போல காட்சியளித்தாலும் அது கண்ணோட்டம் இல்லாத கண் என்பது அவன் செய்யும் செயலின் தன்மையும் தகுதியுமாகிய நன்மை தீமை பற்றிய அளவினால் அறியப்பட்டுவிடும் என்பது எனத் தெளிவாக அறியலாம்.

அத்தியாயம் - 4

9. கடவுள் வான் நீத்தார்

திருவள்ளுவர் தனது நூலாகிய திருக்குறளில் 'கிறித்தவர் சமயப் புனிதநூலில் கூறப்பட்டுள்ள உலகின் முதல் கண்ணோட்டத்தினைக் 'கண்ணோட்டம்' எனும் அதிகாரத்தின் கண் கூறுகையில், தான் கூறவந்த கருத்தினை உணர்த்தும் பொருட்டு எடுத்தாண்ட 'காரிகை', 'நாகரிகம்' போன்ற சொல்லாட்சி வியக்கத்தக்க சிறப்புடையன. அதுபோலவே, திருக்குறள் எனும் அவரது பனுவலும் பாயிரமும் மிகச் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. திருக்குறள் பாயிரத்தில் நான்கு அதிகாரங்கள் உள்ளன. முதல் அதிகாரம் 'கடவுள் வாழ்த்து' என்றும், இரண்டாம் அதிகாரம் 'வான் சிறப்பு' என்றும், மூன்றாம் அதிகாரம் 'நீத்தார் பெருமை' என்றும், நான்காம் அதிகாரம் 'அறன் வலியுறுத்தல்' என்றும் இனிதே பெயர் சூட்டப்பட்டுள்ளன. முதல் மூன்று அதிகாரங்களுக்கும் தரப்பட்டுள்ள தலைப்புகள் உள்ளத்தைக் கவரும் உலக உண்மையை பறைசாற்றுகின்றன. அவ்வதிகாரங்களில் காணும் குறள்களுடன் வியத்தகு அவ்வதிகாரத் தலைப்புகளும் ஆராய்ந்து அறியத்தக்கவை.

முதலாம் அதிகாரம் வாழ்த்தினையும், இரண்டாம் அதிகாரம் சிறப்பினையும், மூன்றாம் அதிகாரம் பெருமையையும் எடுத்தியம்புவதாகக் காணப்படுகின்றன. வாழ்த்துக்குரியவர் கடவுள் எனவும், சிறப்புடையது வான் எனவும், பெருமைக்குரியவர் நீத்தார் எனவும் எளிதில் அறியலாம். 'கடவுள்' எனும் சொல்லும், 'நீத்தார்' எனும்சொல்லும் ஆள் தன்மையை உணர்த்துகின்றன. ஆனால் 'வான்' எனும் சொல்லோவெனில் ஆள்தன்மையை உணர்த்தாதொரு சொல்லாய் மற்றுள்ள இரண்டு சொற்களையும் இணைத்து நிற்கும் சிறப்புடையதாய் ஆளப்பட்டுள்ளமை நோக்குதற்குரியது. இம்மூன்று சொற்களாலும் அமையப்பெற்ற பாயிரத்தின் முதல் மூன்று அதிகாரத் தலைப்புகளையும் அதன் வரிசைக்கிரமப்படியே ஒன்றன் தொடர்ச்சியாய் மற்றொன்று அமைந்துள்ள வண்ணம் அதன் அமைப்பினைக் கீழ்க்காணுமாறு கண்டறியலாம்.

கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை

இதனை,

கடவுள்	வான்	நீத்தார்
வாழ்த்து	சிறப்பு	பெருமை

என எழுதியும் நோக்கலாம். இங்ஙனம் நயமாய் அமைந்துள்ள இத்தலைப்புகளில் காணப்படும் பண்புப் பெயர்களான வாழ்த்து, சிறப்பு, பெருமை ஆகிய சொற்களை நீக்கி விட்டு எஞ்சி நிற்பவற்றை நோக்க

'கடவுள் வான் நீத்தார்'

எனும் ஒரு சக்தி வாய்ந்த சொற்றொடர் முழுமையடைந்த வாக்கியமாகி உலகிற்கு நற்செய்தி கூறும் உரத்த குரலாய் தொனித்து காட்சி தந்து நிற்பதைக் காணலாம்.

திருவள்ளுவர் பாயிரம் அமைக்க மேற்காணும் நற்செய்தி வாக்கியத்தை மூன்றுபகுதிகளாகப் பிரித்து பயன்படுத்தியுள்ளமை, அவரது பனுவல் இயற்றிய திறத்தின் சிறப்பைத் தெள்ளத் தெளிவாய் விளக்குகின்றது.

கடவுள் வான் நீத்தார் எனும் வாக்கியத்தின் பொருள் "கடவுள் வானுலகை நீத்தார்" என்பதாகும். அதாவது கடவுள் வான் நீத்தார் என்பது கடவுள் வான் விட்டுப் பிரிந்து, இறங்கி, நிலமிசை வந்தார் என்பதாகும். எனவே, கடவுள் வான் நீத்தார் எனும் வாக்கியத்தினை மூன்றாகப் பிரித்து மூன்று அதிகாரங்களை அமைத்த திருவள்ளுவர் வான் நீத்த கடவுளை வாழ்த்த 'கடவுள் வாழ்த்து'-ம் வாழ்த்துக்குரிய கடவுளின் உறைவிடமான வானுலகின் சிறப்பினைக்கூற 'வான் சிறப்பு'ம் வானவராகிய கடவுள் வானுலகை நீத்தாராதலின் உண்டான பெருமையைக் கூற 'நீத்தார் பெருமை'யும் என மூன்று அதிகாரங்களால் '**கடவுள் வான் நீத்தார்**' என்னும் உலக ஆன்மீக வரலாற்றுச் செய்தியினை ஆழ்ந்த அறிவுடன் கூறுகின்றாரென்பது தெளிவு.

கடவுள் வான் நீத்தார் என்று கூறப்படும் செய்தியைக் கேள்வியுறுவோர்க்கு, ஏன்? எதற்கு எனும் வினாக்கள் எழுவது இயல்பு. ஆகவே, அச்செய்தியைக் கேள்வியுறுவோர் கடவுள் வான் நீத்ததன் காரணம் அறிய வேண்டியது அவசியமாதலின், 'அறன் வலியுறுத்தல்' என்று காரணம் கூறி பாயிரத்தினை வள்ளுவர் இனிதே முடிவுறச்செய்துள்ளார்.

'கடவுள் வான் நீத்தார்' என்பது கிறித்தவர் நம்பிக்கையும், கர்த்தராகிய கிறிஸ்து எனும் இரட்சகராகிய இயேசுவின் பிறப்பும், ஒரு பொய்யுமுண்டாயிராத சத்தியமார்க்கத்தை, பொய்தீர் ஒழுக்க நெறியாக வலியுறுத்தி, போதித்து வந்த வாழ்வும், உலக மனுக்குல மீட்புக்காக, மீட்கும் பொருளாக தம்மையே சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்து

மரித்தபின், உண்டான உயிர்ப்புமாகிய செய்தியையே குறிப்பால் உணர்த்துகின்றது எனலாம்.

கிறித்தவர் புனிதநூல் செய்தி :

கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று சொல்லப்படுகின்ற கர்த்தராகிய இயேசுவின் பிறப்பும், வாழ்வும், உயிர்ப்பும் பற்றிய வரலாற்றுச் செய்தியைக் கிறித்தவர் சமய நூலாகிய பரிசுத்த வேதாகமத்தில் காணலாம். இயேசுவைத் தேடிக்கொண்டு கப்பர்நகூம் என்ற ஊருக்கு வந்த ஜனங்கள் கடலின் அக்கரையில் அவரைக்கண்டு, அவரோடு பேசுகையில் அவர்,

> " . . . . [77]
> . . . .
> நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்"

என்று கூறியதாக அறியலாம்.

இயேசுவைக் குறித்து அவருடைய ஊழியக்காரராக செயல்பட்ட அப்போஸ்தலராகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில்,

> "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச்
> சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,
> தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து,
> மனுஷர் சாயலானார்."[78]

என்றும், கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில்,

> " . . . .
> . . . .
> வானத்திலிருந்து வந்த கர்த்தர்"[79]

என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, கடவுள் வான் நீத்தார் என்று திருவள்ளுவர் கூறுவது கிறித்தவர் நம்பிக்கை என உறுதியாகக் கொள்ளலாம்.

ஆகவே, 'கண்ணோட்டம்' எனும் அதிகாரத்தில் கிறித்தவர் புனித நூல் செய்தியைக் கூறிய திருவள்ளுவர் தனது நூலின் பாயிரத்திலும் கிறித்தவர் நம்பிக்கையான வரலாற்று ஆன்மீக செய்தியையே குறிப்பிடுகின்றார் என நம்பலாம். ஆகவே, திருவள்ளுவர் பாயிரத்தில்

---

77) யோ 6 : 38
78) பிலிப் 2 : 6, 7
79) 1கொரி 15 : 47

கூறும் கருத்துக்கள் கிறித்தவர் சமயக் கருத்துக்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்ந்தறியத்தக்கவையாகும்.

கடவுள் வாழ்த்து எனத் தனி அதிகாரமும், நீத்தார் பெருமை எனத் தனி அதிகாரமும் அமைத்து வள்ளுவர் குறள் இயற்றியுள்ளார். ஆயினும், கடவுள் வானுலகை நீத்தார் என்ற செய்தியைக் கூறும் 'கடவுள் வான் நீத்தார்' எனும் வாக்கியத்தால் கடவுளும் நீத்தாரும் ஒருவரே என்று மிகத் தெளிவாக விளங்குகிறது. அதுபோலவே, இவ்வாக்கியத்தில் பயனிலையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள 'நீத்தார்' எனும் வினைமுற்றுச் சொல்லே 'நீத்தார் பெருமை' எனும் அதிகாரத் தலைப்பில் வினையாலணையும் பெயராக பயன்பட்டு, வள்ளுவர் கூறும் செய்தி வாக்கியம் சிதைவுறாமல் நின்று, வாழ்த்துப்பகுதியில் சுட்டப்படும் கடவுளும், பெருமை கூறப்படும் பகுதியில் சுட்டப்படும் நீத்தாரும் ஒருவரே எனும் உண்மை உணர்த்தப்படுகிறது. வேறு விதமாகச் சொல்வதானால், ஒருவரே கடவுளாகவும், நீத்தாராகவும் சுட்டப்படுகிறார் எனலாம். இக்கருத்திற்கு அரண் சேர்ப்பதாகக் கடவுள் வாழ்த்திலும் நீத்தார் பெருமையிலும், 'ஐந்தவித்தான்' 'அந்தணன்' எனும் இரு சொற்கள் அவ்விரு அதிகாரங்களையும் ஒருமைப்படுத்தி பொருள் தருவதைத் தெளிவாக அறியலாம்.

10. திருவள்ளுவர் சுட்டும் ஐந்தவித்தான் கிறித்து இயேசுவே

திருக்குறளின் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில்

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" - குறள் 6

என்ற குறளிலும், நீத்தார் பெருமை கூறப்படும் அதிகாரத்தில்

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி" - குறள் 25

என்ற குறளிலும் '**ஐந்தவித்தான்**' எனும் சொல்லைத் திருவள்ளுவர் ஆண்டுள்ளார்.

'**ஐந்தவித்தான்**' என்னும் இச்சொல்லை **ஐந்து + அவித்தான்** எனப் பகுத்து அறியலாம்.

"அவி" யென்னும் சொல் இருவிதமாகப் பொருள் கொள்கிறது.
அவி - பக்குவப்படுத்து (உணவுப் பொருட்களை அவிக்கிறோம்)
அவி - அழி (தீயை அவிக்கிறோம்; அணைக்கிறோம்)

இறைவன் ஐம்புலன் வேட்கைகளை அழித்தாரெனினும், முறைப்படுத்தினாரெ (பக்குவப்படுத்தினார்) னினும் அந்நிகழ்ச்சி எப்போது செய்தார் என்ற கேள்வி எழுகிறது. வள்ளுவர் யாரை இச்செய்யுளில் குறிப்பிடுகின்றார் என்பது ஆராய்ச்சிக்குரியது. மானிடர் யாவருடைய ஐம்புலன் வேட்கைகளை நெறிப்படுத்தினார் என்று நாம் கொள்ளலாமா? பொறிவழியே புலன் செல்லாது, அவர் ஐந்தனையும் அடக்க இறைவன் மானிடருக்கு அருள்கின்றமை முக்காலத்துக்கும் உரிய தொன்றன்றோ!!

திருவள்ளுவர் அதனை இறந்த காலத்தில் "அவித்தான்" என்று ஏன் கூறுகின்றார்?

. . . .

. . . .

. . . .

. . . .

'அவி' என்ற சொல்லுக்கு "பலிப்பொருள்" என்ற பொருளுமுண்டு.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று - 259

செவியுணவிர் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து - 413

பலிப்பொருள் என்னும் பொருளிலேயே வள்ளுவர் "அவி" என்ற சொல்லை இவ்விரு குறட்பாக்களிலும் கையாண்டுள்ளார்."[80]

என்று அ. வேதமுத்து என்ற ஆசிரியர் தனது நூலில்* விளக்கம் கூறியுள்ளார்.

ஆகவே, '**அவி**' என்பதற்குப் '**பலிப்பொருள்**' என்பது பொருளாவதால், இறந்த காலத்தை உணர்த்தும் '**அவித்தான்**' என்ற சொல்லிற்குப் **பலியிட்டான்** என்றும் **பலியாக்கினான்** என்றும் பொருள் கொள்ளலாம். எனவே, வானுலகை நீத்தாராகிய கடவுளை 'ஐந்தவித்தான்' என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளதாலும், அவித்தான் என்பதற்குப் பலியாக்கினான் என்பது பொருளாவதாலும் வானுலகை நீத்து நிலவுலகில் வந்து பலியிட்ட கடவுளாக வரலாற்றில் அறியப்பட்டவர் கர்த்தராகிய கிறித்து இயேசுவே என்பதாலும் ஐந்தவித்தான் எனும் சொல்லால் கிறித்துவாகிய இயேசுவையே கடவுளாகவும், நீத்தாராகவும் ஈண்டுத் திருவள்ளுவர் சுட்டியுள்ளார் என்று கருதலாம். கிறித்துவாகிய இயேசுவைக் குறித்து கிறித்தவர் சமய நூலில் கூறப்பட்டுள்ள செய்திகள் நோக்குதற்குரியன.

"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில்
வந்தார் . . . ."[81]

"எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த
மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே . . . .
. . . ."[82]

அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு,
தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச்

---

80) அ. வேதமுத்து - இந்தியா ஒரு கிறித்தவ நாடு 1974 பக். 2, 3
81) 1தீமோத் 1 : 15
82) 1தீமோத் 2 : 6
* இந்தியா ஒரு கிறித்தவ நாடு 1974 அ. வேதமுத்து ஒய்வுபெற்ற தலைமை ஆசிரியர், கொட்டாரம், குமரி மாவட்டம்.

செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்"[83]

". . . . .

. . . .

அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்.

அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,
கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு

. . . . "[84]

"இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி

. . . . "[85]

". . . . . . பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்"[86]

". . . . .

. . . .

. . . .

. . . .

நம்முடைய ✝பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே"[87]

". . . . . அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது பலியையும் காணிக்கையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்

. . . .

. . . .

. . . ." என்றார்[88]

"இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்."[89]

---

83) தீத் 2 : 14
84) எபி 9 : 26-28
85) எபி 10 : 12
86) எபி 10 : 14
87) 1கொரி 5 : 7
88) எபி 10 : 5-7
89) எபி 10 : 10

✝பஸ்கா - பக்கம் 190 இணைப்பு I காண்க.

"அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும், நாடோறும் பலியிட வேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார்."[90]

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து . . . .
. . . .
. . . .
. . . ."[91]

"பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்."[92]

"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்."[93]

"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்."[94]

". . . . .
. . . . நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்."[95]

"*மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்."[96]

90) எபி 7 : 27　91) எபி 9 : 14　92) எபி 7 : 26
93) எபி 4 : 15　94) எபி 4 : 14　95) எபி 3 : 1
96) எபி 5 : 10　* மெல்கிசேதேக் - பக்கம் 192 இணைப்பு III காண்க.

"நமக்கு முன்னோடினவராகிய இயேசு * மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்."[97]

"தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,

. . . .

. . . .

. . . . சேரக்கடவோம்"[98]

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, ...

. . . .

. . . .

. . . .

வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்."[99]

என்றவாறு கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் திருவசனங்கள் கிறித்துவாகிய இயேசு தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து பலியிட்டார் எனத் தெளிவாக உணர்த்துகின்றன. தம்மைத்தாமே பலியாக்கினார் என்று கூறுவதன் மூலம் கிறித்து இயேசு தமது சரீரத்தையே பலிப்பொருளாக ஒப்புக்கொடுத்து பலியாக்கினார் என்றும் விளங்குகின்றது.

மேலும், இக்கருத்தினை 'இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டது' எனத் தெளிவாகக் கூறும் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருவசனங்களாலும் உறுதியாகக் கொள்ளலாம். ஆகவே, வானுலகை நீத்து நிலவுலகத்தில் வந்து தமது சரீரத்தையே பலிப்பொருளாகக் கொண்டு பலியாக்கிய கடவுள் கர்த்தராகிய கிறித்து இயேசுவே எனத் தெளிவாக அறியப்படுகிறது. இயேசு தம்மையே பலியாக்கியதால் '**அவித்தான்**' என்று அவரை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் எனத் தெளியலாம்.

---

97) எபி 6 : 20 * பக்கம் 192
98) எபி 10 : 21, 22
99) எபி 9 : 11, 12

தம்மைத்தாமே பலியாக்கிய கிறித்துவாகிய இயேசுவை '**அவித்தான்**' என்று மட்டும் குறிப்பிடாமல் '**ஐந்தவித்தான்**' என்று வள்ளுவர் குறப்பிடுவதால் '**ஐந்து**' எனும் சொல் பலியோடு தொடர்புடைய பொருள் உணர்த்த ஆளப்பட்ட சொல் என விளங்குகின்றது. 'ஐந்து' எனும் அச்சொல்லால் வள்ளுவர் உணர்த்த விரும்புவதாவது :

"சுவை,ஒளி, ஊறு,ஓசை, நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" - குறள் 27

எனும் குறளால் அவர் உணர்த்தும் 'ஐந்து' எனக் கருதலாம். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் 'ஐந்து' எனக் கொள்வதால் '**ஐந்தவித்தான்**' என்று சுட்டப்படுபவர் '**ஓரைந்தும் காப்பான்**' எனவும் அவ்வதிகாரத்தில் தானே வள்ளுவரால் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

காப்பான் என்றதால் பழுதடையாமல், குற்றமுடையதாயிராமல் பாதுகாப்பான் என்றது என அறியலாம். ஆகவே, புனிதமாயிருக்கும்படி, குற்றத்திற்கு நீங்கலாக்கி **மீட்கும் பொருட்டுக் காப்பான்** என்று விளங்கும். அவ்வாறு காக்கப்படுவதால் அவை ஐந்தும் பழுதற்றதாய், குற்றமற்றதாய் இருக்கும் எனவும் அறியலாம். **ஐந்துங்காப்பான்** என்று மட்டும் சொல்லி விடாது **ஓரைந்தும்** என அவை ஐந்தினையும் வள்ளுவர் ஒருங்கிணைத்துக் கூறியிருப்பது நோக்குதற்குரியது. **சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்** எனும் இவை ஐந்தும் ஒருங்கிணைந்து ஒரே அமைப்பாக அமைந்திருக்கும் அமைப்பு உடலமைப்பாகும். அதுவே சரீரம் எனப்படும்.

வானுலகை நீத்து நிலவுலகில் வந்து பலியிட்ட கடவுள் கிறித்து இயேசுவே என விளங்குவதாலும், 'ஐந்து' என்ற சொல்லால் வள்ளுவர் ஒரு சரீரத்தைப் பொருள்படுத்துவதாக விளங்குவதாலும் கிறித்து தம்மை ஒரே பலியாக்கினார் என உணர்த்தும் மேலே சுட்டப்பட்ட திருவசனங்கள் அவர் பலியாக்கிய பலிப்பொருளாக அவரது சரீரத்தையே குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்கது. இவ்விரண்டினையும் ஒப்புநோக்க, கிறித்து இயேசுவின் சரீரமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதெனத் திருவசனம் கூறுவதால், அவரது சரீரமே ஓரைந்துங்காக்கப்பட்ட புனிதத்தன்மையுடையது என்றும் விளங்குகின்றது. ஆகவே, '**ஐந்து**' எனும் சொல்லை '**அவித்தான்**' எனும் சொல்லுடன் இணைத்து வள்ளுவர் குறிப்பிடுவது **கிறித்து இயேசுவின் சரீரமே** என்பது தெளிவு.

கிறித்தவர் பரிசுத்த வேதாகமத்தில் 'ஐந்து' எனும் சொல்

'ஐந்து' எனும் சொல் கிறித்தவர் சமயப் புனித நூலின் முதல் பாகமான 'பழைய ஏற்பாடு' எனும் பகுதியில் பாவ நிவிர்த்தி மற்றும் குற்ற நிவாரண பலிகளுக்குரிய பிரமாணங்கள் கூறப்பட்டுள்ள 'லேவியராகமத்தில்' குறிப்பிடப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆராய்ந்து அறியத்தக்கதுமாகும்.

"ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டால், ஆசாரியன் அதின் நலத்துக்கும் இளப்பத்துக்கும் தக்கதாக அதை மதிக்கக்கடவன்; ஆசாரியன் மதிக்கிறபடி அது இருக்கக்கடவது.

தன் வீட்டைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக்கொள்ள மனதாயிருந்தால், நீ மதிக்கும் திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக்கொடுக்கக்கடவன்; அப்பொழுது அது அவனுடையதாகும்."[100]

"வயலைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டவன் அதை மீட்டுக்கொள்ள மனதாயிருந்தால் உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக்கொடுக்கக்டவன்; அப்பொழுது அது அவனுக்கு உறுதியாகும்."[101]

"சுத்தமில்லாத மிருகத்தினுடைய தலையீற்றானால், அதை அவன் உன் மதிப்பின்படி மீட்டுக்கொண்டு, அதனுடனே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக்கொடுக்கக்கடவன்; மீட்கப்படாமலிருந்தால், உன் மதிப்பின்படி அது விற்கப்படக்கடவது."[102]

"ஒருவன் பொருத்தனை பண்ணினது கர்த்தருக்குப் பலியிடத்தக்க மிருக ஜீவனானால் அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிப்பட்டதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக

. . . .
. . . .
. . . .
. . . .
. . . . அவன் மிருகத்திற்குப் பதிலாக மிருகத்தை மாற்றிக் கொடுப்பானாகில், அப்பொழுது அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுத்ததும் பரிசுத்தமாயிருப்பதாக.

100) லேவி 27 : 14, 15
101) லேவி 27 : 19
102) லேவி 27 : 27

அது கர்த்தருக்குப் பலியிடப்படத்தகாத சுத்தமல்லாத யாதொரு மிருகமானால், அதை ஆசாரியனுக்கு முன்பாக நிறுத்தக்கடவன்.

ஆசாரியன் அது நல்லதானாலும் இளப்பமானதானாலும் அதை மதிப்பானாக; உன் மதிப்பின்படியே இருக்கக்கடவது.

அதை மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானாகில், உன் மதிப்போடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக்கொடுக்கக்கடவன்."[103]

"ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன்."[104]

"ஒருவன் அறியாமல் பரிசுத்தமானதில் புசித்ததுண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒரு பங்கு அதிகமாய்க் கூட்டிப் பரிசுத்தமானவை களோடுங்கூட ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவன்."[105]

"ஒருவன் கர்த்தருக்குரிய பரிசுத்தமானவைகளில் குற்றஞ்செய்து அறியாமையினால் பாவத்துக்குட்பட்டால், அவன் தன் குற்றத்தினிமித்தம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படியே, நீ அவன்மேல் சுமத்தும் அபராதம் எவ்வளவோ, அவ்வளவு வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக் குற்ற நிவாரணபலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்து, பரிசுத்தமானதைக் குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தைச் செலுத்தி, அதினோடு ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய்க் கூட்டி, ஆசாரியனுக்குக் கொடுப்பானாக; குற்ற நிவாரண பலியாகிய ஆட்டுக்கடாவினாலே அவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அது அவனுக்கு மன்னிக்கப்படும்."[106]

"ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது, கொடுக்கல் வாங்கலிலாவது, தன் அயலானுக்கு மாறாட்டம்பண்ணி அல்லது ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு அல்லது தன் அயலானுக்கு இடுக்கண் செய்து,

அல்லது காணாமற்போனதைக் கண்டடைந்தும் அதை மறுதலித்து, அதைக் குறித்துப் பொய்யாணையிட்டு, மனிதர் செய்யும் இவை முதலான யாதொரு காரியத்தில் பாவஞ்செய்தானேயாகில்,

---

103) லேவி 27 : 9-13
104) லேவி 27 : 31
105) லேவி 22 : 14
106) லேவி 5 : 15,16

அவன் செய்த பாவத்தினாலே குற்றவாளியானபடியால், தான் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டதையும், இடுக்கண் செய்து பெற்றுக்கொண்டதையும், தன் வசத்திலே ஒப்புவிக்கப்பட்டதையும், காணாமற்போயிருந்து தான் கண்டெடுத்ததையும்,

பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்; அந்த முதலைக் கொடுக்கிறதும் அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங்கூட்டி, அதைத் தான் குற்ற நிவாராண பலியை இடும் நாளில் அதற்குரியவனுக்குக் கொடுத்துவிட்டு,

தன் குற்றநிவாரணபலியாக, உன் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்ற நிவாரணபலியாகக் கொண்டுவருவானாக.

கர்த்தருடைய சந்நிதியில் அவன் பாவத்தை ஆசாரியன் நிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவாளியாகச் செய்த அப்படிப்பட்ட எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றார்."[107]

"நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், ஒரு புருஷனானாலும், ஸ்திரீயானாலும் கர்த்தருடைய கட்டளையை மீறி மனிதர் செய்யும் பாவங்களில் யாதொரு பாவத்தைச் செய்து குற்றவாளியானால்,

அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிடக்கடவர்கள்; அப்படிப்பட்டவன் தான் செய்த குற்றத்தினிமித்தம் அபராதத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய்க் கூட்டி, தான் குற்றஞ் செய்தவனுக்குச் செலுத்தக்கடவன்."[108]

என்றவாறு கர்த்தர் மோசேயிடம் பேசிச் சொல்லியதாகக் கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளன. இத்திருவசனங்களை ஆராய்ந்து பார்க்கையில் ஒருவன் மனிதர் செய்யும் யாதொரு காரியத்தில் பாவஞ்செய்தானேயாகில், அவன் குற்றவாளியாகச் செய்த எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும்படி, பலியிட்டு பாவத்தை நிவிர்த்தி செய்கிறவன் ஆசாரியன் என்றும், அவன் ஒருவன் கர்த்தருக்கென்று நேர்ந்துகொண்ட வீட்டையாவது, வயலையாவது, மிருக ஜீவனையாவது, தசமபாகத்தில் எவ்வளவாவது மீட்டுக் கொள்வதற்கு மனதாயிருந்தால், மீட்கப்படவேண்டிய பொருள் பெறும்

107) லேவி 6 : 2-7
108) எண் 5 : 6, 7

மதிப்பினைப் பரிசுத்த ஸ்தலத்து சேக்கலின்படி கணக்கிடுபவன் என்றும், மீட்கப்பட வேண்டிய பொருளை ஒருவன் மீட்டுக்கொள்வதற்குக் கொடுக்கும்படி கணக்கிட்டு மதிக்கப்பட்ட மதிப்பினோடே அதிகமாகக் கூட்டிக் கொடுக்கவேண்டிய தொகையினையும், கர்த்தருக்குரிய பரிசுத்த மானவைகளில் குற்றஞ்செய்து பாவத்துக்குட்பட்டால், பரிசுத்தமானதைக் குறித்துத் தான் செய்த தப்பிதத்தினால் உண்டானதும் திரும்பச் செலுத்தவேண்டியதுமான நஷ்டத்தையும், சுமத்தப்படவேண்டிய அபராதத்தையும் கணக்கிட்டு வரையறுத்துக்கூறுபவன் என்றும் அறியலாம்.

மீட்கும் பொருள் :

மீட்கப்படவேண்டிய பொருளை ஆசாரியன் மதித்துக் கூறும் மதிப்பினோடே கூட்டிக் கொடுக்கப்படவேண்டிய ஒரு பங்கு தொகையைக் கணக்கிடுவதற்கு, மீட்கப்படவேண்டிய பொருளை ஆசாரியன் மதித்துக்கொள்ளும் முழு மதிப்பாயினும், பரிசுத்தமானதைக் குறித்து ஒருவன் செய்த தப்பிதத்தினால் உண்டானதும் திரும்பச் செலுத்த வேண்டியதுமான நஷ்டத்தின் முழு மதிப்பாயினும் அஃது ஐந்து சம பங்குகளின் கூட்டான முழு மதிப்பாகக் கணக்கிட்டுக் கொள்ளப்படுகின்றன. ஆகவே, ஆசாரியன் மதிப்பிடும் **மீட்கப்படவேண்டிய பொருளின் மதிப்பு 'ஐந்து' எனும் எண் மதிப்பாகக் கொள்ளப்படுகிறது** என அறியலாம். ஆகவே, **'ஐந்து'** எனும் எண் மதிப்பு **மீட்கப்படவேண்டிய பொருளின் மதிப்பு** என்பதால், அது **மீட்கப்படவேண்டிய பொருளைக் குறிக்கும்** என்பது தெளிவு. அதுவே அப்பொருளை மீட்கும்படி கொடுக்கப்படுவதாதலின் அதனை '**மீட்கும் பொருள்**' எனலாம்.

ஆகவே, 'ஐந்து' எனும் சொல் பாவ நிவிர்த்தியையும், பாவமன்னிப்பையும், அதனால் உண்டாகும் மீட்பையும், குற்ற நிவாரண பலியாகிய மீட்கும் பொருளையும், அதன் மதிப்பினையும் உணர்த்துகின்றது எனத் தெளியலாம். 'ஐந்து' என்பது சம பங்குகளின் கூட்டுத்தொகையாவதாலும், அது முழுமையாகிய பூரணத்தையும், கர்த்தருக்குப் பரிசுத்தம் எனப் பரிசுத்தமானதில் நேர்ந்து கொள்ளப்படுவதின் மதிப்பாவதால் பரிசுத்தத்தையும் உணர்த்துகின்றது எனவும் தெளியலாம்.

ஆகவே, 'ஐந்தவித்தான்' என்று வள்ளுவர் தம் குறளில் உணர்த்துவது பூரணமும், பரிசுத்தமுமான மீட்கும் பொருளைக் குற்ற நிவாரண பலியாக்கினான் என்பதுவே என விளங்குகின்றது.

"...........................

...........................அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார்; ....

....

....

....

....

என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அனேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத்தாமே சுமந்துகொள்வார்.

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத்தாமே சுமந்து, அக்கிரமக்காருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; ....

..................................."[109]

"மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு; இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"[110] .... என்றான்.

"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே."[111]

"......... மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்றார்.[112]

"எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே ....

................................"[113]

"இயேசு : பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்."[114]

---

109) எசா 53 : 10, 11, 12 110) யோ 1 : 29 111) 1பேது 1:19
112) மத் 20:28, மாற் 10:45 113) 1தீமோத் 2 : 6 114) லூக் 23 : 46

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் . . . .

. . . .

. . . .

. . . ."[115]

"வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும், ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்."[116]

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே."[117]

என்றவாறு கிறித்தவர் புனித நூலில் கூறப்பட்டுள்ள திருவசனங்ளை நோக்க, வானுலகை விட்டு இறங்கி நிலவுலகில் வந்த கர்த்தராகிய இயேசு கிறித்து பழுதற்ற பலியாக சரீரமும் அதன் உள்ளேயிருந்து இயங்கும் ஆவியும், ஆத்துமாவுமாகிய தம்மைத்தாமே முழுமையாக ஒப்புக்கொடுத்து, அநேகராகிய எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தன் ஜீவனைக் கொடுத்து, தம்முடைய சொந்த இரத்தத்தினாலே பாவநிவிர்த்தி செய்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார் என்று விளங்குகின்றது.

ஆகவே, '**ஐந்து** எனும் சொல் பூரணமாய் இணைந்து நின்று இயங்கும் **மனித சரீரத்தையும், ஆவியையும், ஆன்மாவையும் முழுமையாக ஒன்றாகச் சேர்ந்த நிலையில் குறிக்கும்** எனவும் தெளியலாம்.

ஒரு மாதம் முதல் அறுபது வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளையை மதிக்கும் மதிப்பாகக் கர்த்தர் மோசேயிடம் சொல்லிய திருவசனங்கள் நோக்குதற்குரியன.

"நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்; யாதாமொருவர் ஒரு விசேஷித்த பொருத்தனைபண்ணியிருந்தால், பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் உன் மதிப்பின்படி கர்த்தருக்கு உரியவர்கள்.

---

115) எபி 9 : 14　　116) எபி 9 : 12　　117) லேவி 17 : 11

ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை
ஐந்து வெள்ளிச் சேக்கலாகவும்,

. . . .

. . . .

ஐந்து வயது முதல் இருபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை
இருபது சேக்கலாகவும் . . . .

. . . .

. . . .

இருபது வயது முதல் அறுபது வயதுக்கு உட்பட்ட
ஆண்பிள்ளையை நீ பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலாகிய ஐம்பது
வெள்ளிச்சேக்கலாகவும், ...
. . . . மதிப்பாயாக."[118]

என்று கர்த்தர் மோசேயை நோக்கி சொல்லியதாகக் கிறித்தவர் புனித நூலில் கூறப்பட்டுள்ள திருவசனங்களில் காணப்படும் 'ஐந்து' எனும் எண் மதிப்பு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

ஈண்டு ஒரு மாதம் முதல் அறுபது வயதுக்கு உட்பட்ட ஆண் பிள்ளையின் மதிப்பு வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. அம்மதிப்புகள் ஐந்தின் மடங்காகக் கூறப்பட்டிருப்பதுவும், ஒரு மாதம் முதல் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையின் மதிப்பு வெள்ளிச் சேக்கல் அளவின்படியே 'ஐந்து' எனக் கொள்ளப்படுவதுவும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு ஆண்பிள்ளையின் மதிப்பு ஐந்து எனும் எண் மதிப்பாகக் கொள்ளப்படுவதால், அஃது ஐந்து எனும் சொல் மனித சரீரத்தையும், ஆவியையும், ஆன்மாவையும் குறிக்கும் எனும் கருத்துத் தெளிவினை உறுதிப்படுத்துகின்றது.

'**ஐந்து**' எனும் சொல் மீட்கப்பட வேண்டிய மனிதரையும், மீட்கும் பொருளையும், ஆசாரிய முறைமைப்படி ஆசாரியன் மதிப்பிட்டுக் கொள்ளும் மதிப்பிற்குரிய சொல் என அறியப்பட்டது. ஆகவே, 'ஐந்து' எனும் அச்சொல் மனிதருக்கு வழங்கப்படுகின்ற மதிப்பாகிய சிறந்த உயர் நிலைகளையும் உணர்த்தும் எனலாம். ஆகவே, அச்சொல் அரசன், குரு, ஞானாசிரியன் என்ற உயர்நிலைகளைக் குறிப்பிடுவதற்கும் ஆகிவரும் ஆகுபெயர் என உய்த்தறியலாம். '**ஐந்து**' எனும் அச்சொல் முன்னர் விளக்கப்பட்டுள்ளதன்படி (பக்கம் 91) வான் நீத்து நிலவுலகில் மனிதராக வந்த கடவுளாகிய இயேசு கிறித்துவைக்குறிக்கும்

118) லேவி 27 : 2, 6, 5, 3, 4

என்றறியப்படுவதால், அரசன், குரு, (ஞானாசிரியன்) என்றிருக்கும் அவரது பெருமைக்குரிய உயர்ந்த நிலைகளில் அவரை மதிப்பிட்டுக்குறிப்பிடுவதற்கு ஆகி வரும் சொல் எனலாம்.

மனிதருக்கு வழங்கப்படுகின்ற மதிப்பிற்குரிய '**ஐயன்**' '**ஐயர்**' எனும் சொற்கள் ஒரெழுத்தொருமொழியாகிய '**ஐ**' என்பதன் அடியாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். '**ஐ**' என்பதற்கு **அரசன், குரு (ஞானாசிரியன்) கடவுள்** எனவும் '**ஐந்து**' எனவும் கழகத் தமிழ் அகராதியில் பொருள் கண்டறியலாம். ஆகவே, அரசன், குரு (ஞானாசிரியன்) என்ற உயர்நிலைகளுக்குரிய மனிதராகிய இயேசு கிறித்துவை அந்நிலைகளுக்கேற்ற மதிப்பிட்டுக் கொள்ளும் 'ஐந்து' எனும் மதிப்பு **அரசன், குரு, ஆசாரியன், மீட்பர், கடவுள்** (ஐந்து நிலையிலும் தலைவன்) எனும் அவரது உயர்நிலைகளை உணர்த்தும் பொருட்டு, 'ஐ' எனும் ஒரெழுத்தொருமொழியாகி ஆண்பால் மற்றும் சிறப்பு விகுதி ஏற்று கீழ்க்காணுமாறு அமையப்பெறும்.

(ஐந்து) = **ஐ** + **அன்** = **ஐயன்**
(ஐந்து) = **ஐ** + **அர்** = **ஐயர்**

'**ஐயன்**' என்பதற்கு '**அரியரபுத்திரன்**' என்றும் '**கடவுள்**' என்றும் கழகத் தமிழ் அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. கழகத் தமிழ் அகராதியிலும் வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதியிலும் '**ஐயன்**' என்பதற்கு **உயர்ந்தோன், அரசன், குரு** என்பன பொதுவான பொருள்களாகவும் கூறப்பட்டுள்ளன.

'**ஐயர்**' என்பதற்கு '**உயர்ந்தோர்**' என்றும் **வானோர்** என்றும் வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. கழகத் தமிழ் அகராதியில் '**ஐயர்**' என்பதற்குப் '**பெரியோர்**' என்றும் **பெருமையிற் சிறந்தோர்** என்றும் **தேவர்** என்றும் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. பாதிரிமார் பட்டப் பெயர் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள சொற்பொருட்களை நோக்க, **ஐயன்** என்பதற்கும், **ஐயர்** என்பதற்கும் **பெருமையிற் சிறந்த குருவாகவும் அரசனாகவும் உயர்ந்தோனாகவுமிருக்கின்ற வானவராகிய கடவுள் குமாரன்** எனும் பொருள் விளங்குகின்றது. 'ஐந்து' எனும் சொல் இயேசு கிறித்துவைக் குறிக்கும் என்று அறியப்பட்டுள்ளது. அவரைக் குருவாகவும், அரசனாகவும், வானவராகவும் கடவுளாகவும் குறிப்பிடும் திருவசனங்கள் கிறித்தவர் சமயப் புனித நூலில் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு :

"நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்"[119]

"...

தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக்கொள்கிறான் .... பிலாத்து அவரை நோக்கி, நீ யூதரின் அரசனா? என்று கேட்க, அவர் "அவ்வாறு நீர் சொல்கிறீர்" என்று பதில் கூறினார்"[120]

"இவன் தன்னைக்கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும் இராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர் மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்.

பிலாத்து அவரை நோக்கி : நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்திரமாக : நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.[121]

"என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்"[122]

"தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது; அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது"[123]

"வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்."[124]

---

119) மத் 23 : 10
120) லூக் 23 : 2, 3 திருவிவிலியம்
121) லூக் 23 : 2, 3 பரிசுத்த வேதாகமம்
122) யோ 6 : 38
123) திருவிவிலியம் யோ 1 : 1
124) திருவிவிலியம் யோ 1 : 14

"
. . . .

. . . .

நம் பெருமைமிக்க கடவுளும் மீட்பருமாகிய
இயேசு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படப்போகிறது."[125]

இத்திருவசனங்கள் இயேசு கிறித்துவைக் குருவாகவும், அரசனாகவும் வானவராகவும் கடவுள் குமாரனாகவும், மீட்பராகவும் மிகத்தெளிவாக உணர்த்துகின்றன.

ஐயர் என்பதற்குப் பாதிரிமாரின் பட்டப்பெயர் என்று கூறப்பட்டிருப்பதால் அது கிறித்தவப் போதகன்மார் அல்லது குருமார் என்னப்படுகிறவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் பட்டப்பெயர் என விளங்கும். இயேசு கிறித்துவைப் போதகர் என்றும் ஐயர் என்றும் குறிப்பிடும் திருவசனங்கள் கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படுகின்றன.

"அதற்குச் சீமோன்; ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான்."[126]

"அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்து
போகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்.

. . . .

. . . .

. . . ."[127]

"இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்"[128]

"அப்பொழுது இயேசு என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சொன்னபோது, பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும்; ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக்கொண்டிருக்கிறார்களே. என்னைத் தொட்டது யார் என்று எப்படி கேட்கிறீர் என்றார்கள்."[129]

"அப்பொழுது யோவான் அவரை நோக்கி: ஐயரே ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு

---

125) தீத்து 2 : 13 திருவிவிலியம்
126) லூக் 5 : 5
127) லூக் 8 : 24 128) லூக் 17 : 13
129) லூக் 8 : 45

அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம் என்றான்."[130]

"அப்பொழுது யோவான் அவரை நோக்கி : போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான்."[131]

"அப்பொழுது நியாய சாஸ்திரிகளில் ஒருவன் அவரை நோக்கி : போதகரே, நீர் இப்படிச் சொல்லுகிறதினால் எங்களையும் நிந்திக்கிறீரே என்றான்."[132]

என்றவாறு காணப்படும் இத்திருவசனங்கள் இயேசு கிறித்துவை 'ஐயர்' என்றும் 'போதகர்' என்றும் குறிப்பிடுவதாலும், முன்னர் மேலே எடுத்துக்காட்டியிருப்பதன்படி அவர் ஒருவரே குரு எனப்படுவதாலும் 'ஐயர்' என்பது பாதிரி எனப்படும் கிறித்தவ குருவின் பட்டப்பெயர் எனப்படுவதாலும், ஐயர் எனும் சொல் தாம் ஒருவரே குருவாயிருக்கிற கிறித்துவை மட்டுமே குறிக்கும் எனத் தெளியலாம்; குருவாயிருக்கிற கிறித்துவாகிய இயேசுவை 'ஐயர்' எனும் சொல் குறிப்பதாலும் அச்சொல் 'ஐந்து' என்றும் அரசன், குரு, ஆசாரியன், மீட்பர், கடவுள் என்றவாறும் பொருள் உணர்த்தும் 'ஐ' எனும் ஒரெழுத்தொருமொழியை அடியாகக் கொண்டுள்ளமையாலும், திருவள்ளுவர் தமது குறளில் ஆண்டுள்ள 'ஐந்து' எனும் சொல்லால் மேற்கண்ட ஐந்து உயர்நிலைகளுக்குமுரிய இயேசு கிறித்துவையே குறிப்பிடுகின்றார் என்பது மேலும் தெளிவடைகின்றது.

ஆகவே, 'ஐந்தவித்தான்' என்ற சொல்லை ஆண்டு பூரணமும் பரிசுத்தமுமான மீட்கும் பொருளைக் குற்றநிவாரண பலியாக்கினான் என உணர்த்தும் திருவள்ளுவர், வானுலகை நீத்து நிலவுலகாகிய இவ்வுலகில் வந்து தம்மைத்தாமே பலியாக்கிய கிறித்து இயேசுவையே வான் நீத்தாராகவும், கடவுளாகவும், ஐந்தவித்தானாகவும் குறிப்பிட்டுள்ளார் என்பது முடிவு.

'ஐந்தவித்தான்' எனும் சொல் இறந்த காலத்தை உணர்த்துவதாயினும், அது வினையாலணையும் பெயராக ஆளப்பட்டுள்ளது. ஆகவே, அச்சொல் ஐந்தவித்தலாகிய பலியிடுஞ் செயலைச் செய்தவருக்கு ஆகிவந்தது என அறியலாம்.

---

130) லூக் 9 : 49 131) மாற் 9 : 38
132) லூக் 11 : 45

குற்றஞ்செய்தவனுக்குப் பாவமன்னிப்பும் மீட்பும் உண்டாகும்படி, பாவநிவிர்த்தி செய்யும்படி மீட்கும் பொருளாகிய குற்ற நிவாரணபலியைப் பலியிடுகிறவன் ஆசாரியன் என்று முன்னர் விளக்கப்பட்டது. ஆகவே, ஐந்தவித்தலாகிய பலியிடுஞ் செயலைச் செய்தவராகிய ஐந்தவித்தான் என்றழைக்கப்படுபவன் ஆசாரியன் என்ற நிலையிலும் குறிப்பிடப்படுகிறார் என்று அறியலாம். ஈண்டு ஐந்தவித்தான் என்று குறிக்கப்படுபவர் தம்மைத்தாமே பலியாக்கிய இயேசுகிறித்து என்று அறியப்படுவதாலும், அவரை மகா பிரதான ஆசாரியர் என்றும், நித்திய பிரதான ஆசாரியர் என்றும் முன்னர் சுட்டப்பட்டுள்ள கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தின் திருவசனங்கள் மிகத்தெளிவாகக் கூறுவதாலும் ஐந்தவித்தான் என்ற சொல் மீட்கும் பொருளாகிய குற்றநிவாரண பலியாகத் தம்மைத்தாமே பலியாக்கிய நித்திய பிரதான ஆசாரியராயிருக்கிற இயேசு கிறித்துவையே குறிப்பிடுவதற்கு வள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது என்பது முடிவு.

11. திருக்குறள் உணர்த்தும் 'பொறிவாய் - சிலுவை'

இயேசு கிறித்துவைத் தம்மைத்தாமே பலியாக்கிய பிரதான ஆசாரியன் என்ற நிலையில் '**ஐந்தவித்தான்**' என்று உலகுக்கு தெரியப்படுத்தும் திருவள்ளுவர், அவரைப் **பொறிவாயில் ஐந்தவித்தான்** எனும் சொற்றொடரால் குறிப்பிடுகின்றார். திருவள்ளுவர் ஆண்டுள்ள '**பொறிவாய்**' எனும் சொல்லுக்கு ஐம்பொறி என்றும் ஐம்புலன் என்றும் உரையாசிரியர்கள் பொருள் கூறுவர். ஆயினும், வள்ளுவர் ஆண்டுள்ள சொற்றொடரால் பொறிவாய் என்பதற்கு ஐந்தவித்தலாகிய தம்மைத்தாமே பலியாக்கி செயற்கரிய செயலை நிறைவேற்றிய பொறிவாய் என்று பொருள் விளங்கும். பொறிவாய் எனும் அச்சொல்லின் பொருளை திருக்குறள் பாயிரத்தின் அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் கண்டறியலாம். அறன் வலியுறுத்துவதற்காகக் கடவுள் வானுலகை நீத்தார் என்று வானத்தைவிட்டு இறங்கி வந்த கடவுளின் நோக்கத்தினை அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் உணர்த்துகிறார். அவ்வதிகாரத்தில் அவர் இயற்றிவைத்துள்ள

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை" - குறள் 37

எனும் குறளில் ஆளப்பட்டுள்ள '**சிவிகை**' எனும் சொல் '**பொறிவாய்**' எனும் சொல்லால் உணர்த்தப்படும் பொருள் என விளங்குவதால் '**சிவிகை**' எனும் அச்சொல்லை ஆராய்ந்து அறிதல் அவசியமாகிறது.

* '**சிவிதல்**' என்பதற்கு **உதிர்தல்** என்பது பொருள். †'**உதிர்**' என்பதற்கு **உதிர - சாவ** என்பது பொருள். ஆகவே, **சிவிதல்** என்பதற்கு **உயிரை உதிர்த்தலாகிய சாதல்** என்பது பொருள் எனக் கொள்ளலாம். எனவே, **சிவிகை** எனும் சொல்லை **சிவி+கை** எனப்பகுத்து அறியலாம். ****கை** என்பதற்கு **கைமரம்** என்பது பொருள். **கை மரம்** என்பது மரத்தினால் செய்யப்படும் **உத்தரம்** போன்ற அமைப்பைக் குறிக்கும்.

---

* Tamil Lexicon - supplement, University of Madras 1939
† எம். வின்சுலோ தமிழ்-ஆங்கில அகராதி 1995
** எம். வின்சுலோ தமிழ்-ஆங்கில அகராதி 1995

எனவே, '**சிவிகை**' என்பது மரத்தினால் செய்யப்படுவது என்றும், சாவுடன் தொடர்புடையது என்றும் விளங்குகின்றது. '**சிவிகை**' என்பதற்கு **மனிதரால் சுமந்து செல்லப்படுவது** என்றும், **பலவுருக்களாகச் செய்யப்படுவது** என்றும் 'அபிதான சிந்தாமணி'யில் விளக்கம் கூறப்பட்டுள்ளது. ஆகவே, ஈண்டு '**சிவிகை**' என்பது **உயிரை உதிர்த்தலாகிய சாவுக்கென்று மனிதர் சுமந்து செல்லும்படி அதற்கேற்ற ஓர் உருவில் செய்யப்படுவது** எனப் பொருள் விளங்குவதாலும், இக்கருத்துக்களால் இயேசுகிறித்துவின் செய்தியைக் கூறுமிடத்து உணரப்படுவது '**சிலுவை**' என்பதாலும், திருவள்ளுவர் ஐந்தவித்தான் எனும் சொல்லால் இயேசு கிறித்துவையே குறிப்பிடுகின்றார் என்பதாலும் '**சிவிகை**' என்பதற்குச் '**சிலுவை**' எனப் பொருள் கொள்ளலாகும்.

"சிலுவை பாரசீகர், மேதியர், சீரியர், கர்காதியர் இவர்கள் உபயோகித்த வாதைக் கருவி. ரோமர் சிலுவையைத் தண்டனை செய்யும் கருவியாகக் கையாடினார்கள். இக்கருவிக்குப் பூர்வீகத்தில் பல பெயர் கள் இருந்தன. பிந்தின காலத்திலே இதற்குக் குரூக்ஸ் (Crux) என்னும் லத்தீன் பதம் பொதுவாய் வழங்கினது" என்ற குறிப்பு எ.சி. கிலேற்றன் என்பவர் இயற்றிய வேத அகராதியில் (பக்343-ல்) காணப்படுகிறது. ஆகவே, சிலுவை என்பதன் மறுபெயரே சிவிகை எனக் கருதலாம்.

ஆகவே, மேற்கண்ட குறளில் வள்ளுவர் உணர்த்தும் கருத்து ஆராய்ந்து உணரத்தக்கதாகும்.

சிவிகை = சிலுவை

பொறுத்தான் = சுமந்து சகித்தவன் (வினையாலணையும் பெயர்)

ஓடு = கபாலம் (கபாலத்தலம்)

ஊர்ந்தான் = சென்றான்
(ஊர்தல் = செல்லுதல் - கழகத்தமிழகராதி)

இடை = துன்பம்

எனப் பொருள் அறியலாம்.

ஆகவே, அறத்தினை வலியுறுத்தும் பொருட்டு, சிலுவையில் அடையும் சாவினை ஏற்க வேண்டி, அச்சிலுவையினைச் சுமந்து, சகித்து கபாலத்தலத்திற்குச் சாவுப் பயணமாகச் சென்றவனது சாவுத்துன்பத்தை, இதுவே அறத்தின் பலன் எனத் தவறாக எண்ணி அறத்தைச் செய்யாதிருத்தல் வேண்டாம் என்பது மேற்கண்ட குறளால் வள்ளுவர் உணர்த்தும் கருத்து என உய்த்தறியலாம்.

"அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்."[133]

"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு,
அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய
சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்."[134]

என்றவாறு கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படுகின்ற திருவசனங்கள் மேற்கண்டறிந்த குறள் உணர்த்தும் கருத்தினை ஒப்புமைத் தெளிவுடன் உறுதிசெய்கின்றன.

அறன் வலியுறுத்துவதற்கு வான் நீத்த கடவுளாகிய நீத்தாரின் சாவுத்துன்பத்தை அறத்தின் பலன் எனத் தவறாக எண்ணி அறத்தைச்செய்யாதிருத்தல் வேண்டாம் எனக் கூறிய வள்ளுவர்,

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்" - குறள் 38

என்ற குறளைத் தொடுத்துக்கூறி, வாழ்நாளில் வீழ்நாளாகிய சாவுத் துன்பத்தைத் தரும் நாள் வந்து சேராதிருப்பதற்கு அறம் செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தும் கருத்து சிந்தனைக்குரியது.

வீழ்நாள் படாது அமைகின்ற வாழ்நாளாலாகிய நீடுவாழ்வை விரும்பும் ஒருவன் உயிர்வாழ்தலின் வீழ்ச்சியாகிய சாவின் நாள் வந்து தன்னைச் சேரக்கூடாதென இம்மையில் நன்று எனத்தக்க அறத்தினைச் செய்வானாயின், அவ்வறச் செயல் நல்வாழ்வுக்குரிய வழியில் அவனை வாழவிட்டு, உயிர் வீழ்ச்சியாகிய சாவின் நாளுக்குரிய தீங்கு, இம்மையில் நேரிடும் சாவுக்குப்பின் மறுமையில் உயிர் எழுச்சி அடைந்து வாழும் வாழ்நாளில் அவனைப் பின் தொடராதபடி அவனுக்குப் பின்னே வழி அடைத்து நிற்கும் கல் போன்று அவனுக்குப் பாதுகாவலாக அமையும் என்பது மேற்கண்ட குறளால் வள்ளுவர் உணர்த்தும் கருத்து விளக்கம் என உய்த்துணரலாம்.

ஆராய்ந்து அறிதற்கு மேலே சுட்டப்பட்டுள்ள இரண்டு குறள்களையும் ஒன்றோடொன்று கருத்தால் வள்ளுவர் இசைத்துள்ளாராதலின் அவ்விரண்டு குறள்களின் கருத்துகளையும் தொகுத்து நோக்க,

---

133) யோவான் 19 : 17
134) எபிரெயர் 12 : 2

வான் நீத்தாராகிய கடவுள் வீழ்நாள் சேராது அமையும் வாழ்நாளாலாகிய நீடுவாழ்வை மனுக்குலம் அடைதல் வேண்டி, அறன் வலியுறுத்தியதால் இம்மையில் சாவுத்துன்பத்தை அடைந்தாராயினும், அச்சாவுத்துன்பம் பின் தொடராதபடி அவருக்குப் பாதுகாவலாய் துணைநின்று உயிர் எழுச்சி அடைந்த வாழ்நாளாகிய மறுமையை அடையும் நாளில் வீழ்நாள் படாது அமையும் நீடுவாழ்வை அவருக்குப் பயனாகப் பெற்றுக்கொடுத்துக் காப்பது அவ்வறத்தின் ஆற்றலே; ஆகவே, சாவுத்துன்பத்தைக் கண்டு அறத்தினைச் செய்யாதிருந்துவிட வேண்டாம், அதன் பயனாகிய மறுமையையும் நீடுவாழ்வையும் கருத்திற்கொண்டு அறத்தினைச் செய்தல் வேண்டும் எனவும் வள்ளுவர் அறிவுறுத்துகின்றார் எனத் தெளிவாக விளங்குகின்றது. இதனால் இயேசுகிறித்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் திருவள்ளுவர் கருத்திற்கொண்டு உணர்த்துகின்றார் என்பது தெளிவு.

ஆகவே, '**பொறிவாயில் ஐந்தவித்தான்**' என்ற சொற்றொடரால் இயேசுகிறித்துவைச் சுட்டிக்காட்டும் திருவள்ளுவர் ஆண்டுள்ள '**பொறி**' எனும் சொல்லால் குறிப்பிடப்படுவது இயேசு ஐந்தவித்தலாகத் தம்மைத் தாமே பலியாக்கிய **சிலுவையே** என்பதும், அஃது ஈண்டு அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தில் '**சிவிகை**' எனும் சொல்லால் குறிக்கப்படுகின்றது என்பதும் முடிவு.

12. திருவள்ளுவர் சுட்டும் 'அந்தணர்' இயேசு கிறித்துவே

திருக்குறள் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தையும் நீத்தார் பெருமை அதிகாரத்தையும் இணைத்து நிற்கும் **'ஐந்தவித்தான்'** எனும் சொல்லைப் போன்று **'அந்தணன்'** எனும் மற்றொரு சொல்லும் ஆராய்ந்து அறியப்படுதல் அவசியம்.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் கடவுளுக்குச் சூட்டப்பட்டுள்ள பெயர்கள் ஒரேவிதமான ஈறுடையனவாக இசைவாக ஆளப்பட்டிருப்பது போல, இப்பகுதியில் காணப்படும் அந்தணன் என்ற சொல் நீத்தார் பெருமை கூறப்பட்டுள்ள பகுதியில் நீத்தார் எனும் சொல் ஈறுக்கு இசைவாக, அர் எனும் விகுதியுடன் 'அந்தணர்' என்று ஆளப்பட்டுள்ளது சிறப்பாகும்.

அந்தணன் = அந்து + தண + அன்

அந்தணர் = அந்து + தண + அர்

என்றவாறு அச்சொற்களைப் பகுத்தறியலாம்.

'ஓம் ஸ்ரீ விருட்ச சூல அந்துராய நமஹ' என்று சமஸ்கிருத மொழியில் சொல்லப்படுவதற்கு, **சூலத்தில் சிலுவையில் பலியானவரே உம்மை நமஸ்கரிக்கிறேன்** என்பது பொருள் எனவும், அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கே பொருந்துகிறது எனவும் திரு. சீனிவாசப்பட்டாசாரியா எனும் அறிஞர் கூறியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழியில் ***அந்து** என்பதற்குக் **கொலை, முடிவு** என்பன பொருளாகக் கழகத் தமிழ் அகராதியில் கூறப்பட்டுள்ளன. ஆகவே, **அந்து** என்பதற்குக் **கொலையினால் உண்டான முடிவாகிய அந்தம்** என்றும், அது **சாவு** என்றும் பொருள் கொள்ளலாகும்.

அந்தம் என்பதற்குச் **சாவு** என்ற பொருளைக் கழகத் தமிழ் அகராதியில் காணலாம்.

ஆகவே, அந்து என்பதற்குச் சாவு என்று பொருள்.

---

* தமிழ்மொழியகராதி - கதிரைவேற்பிள்ளை 1993

தணத்தல் என்பதற்கு **நீங்கல், பிரிதல், போதல்** என்று கழகத் தமிழ் அகராதியில் பொருள் காணலாம்.

தண என்பதற்கு '**நீங்க**' என்று வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதியில் பொருள் கண்டறியலாம்.

அந்தண நாபி என்பதற்கு **நச்சுத்தன்மையைப் போக்குமொரு முதன்மையான மருந்து** என்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி முதன்மடலம் முதற்பகுதியில் பொருள் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, அந்தணர் என்பதற்குச் சாவைப் போக்கியவர் என்றும் சாவு நீங்கப் பெற்றவர் என்றும் பொருள் கொள்ளலாகும். ஈண்டு சாவு நீங்கியவர் என்பது பொருத்தமாகும்.

அந்தணர் என்பதற்குப் பிராமணர் என்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில் பொருள் கூறப்பட்டுள்ளது. பிராமணர் என்ற சொல்லை, பரம்+அண்+அர் எனப் பகுத்தறியலாம்.

பரம் + அண் + அர் = பிராமணர் (பர-பிரா)

நிலைமொழியின் முதலெழுத்தாகிய **'ப'** - **'பி'** எனவும், ஈற்றயலெழுத்தாகிய **'ர'** - **'ரா'** எனும் நெடிலாகவுந்திரிந்து பிராமணர் என்ற சொல்லாயிற்று.

'**பரம்**' என்பதற்கு '**உடல்**' என்றும், '**மேலுலகம்**' என்றும் வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது.

'**பரம்**' என்பதற்கு '**உடல்**' என்றும், '**மோக்கம்**' என்றும் கழகத்தமிழ் அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. '**மோக்கம்**' என்பதற்கு '**வீடுபேறு**' என்றும் '**மோட்சம்**' என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, '**பரம்**' என்பதற்கு **வீடு பேறாகிய மோட்சம்** எனும் **மேலுலகம்** எனப் பொருள் கொள்ளலாகும்.

* **அண்** என்பதற்கு **அண்ண** - **சேர** என்பது பொருள். ஆகவே, **அண்ணு** என்பதற்கு **சேரு** எனப் பொருள் கொள்ளலாம்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியில்,

அண்ணுதல் = நெருங்குதல்

அண் → அணு → அணுகு

அணுகுதல் = கிட்டுதல், நெருங்குதல்

---

* வின்சுலோவின் தமிழ்-ஆங்கில அகராதி 1995

அணர்தல் = மேனோக்கிச் செல்லுதல்

அண் → அண → அணர்

என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்டல் - நெருங்குதல்
அண்டுதல் - நெருங்குதல்
அண்ணித்தல் - பொருந்துதல்
அணன் - பொருந்தியவன்
அணத்தல் - தலையெடுத்தல்; / to lift the head
அண்ணல் - பெருமையிற் சிறந்தோன், கடவுள்

என்றவாறு கழகத்தமிழ் அகராதியில் காணப்படுகிறது.

மேலே கண்ட சொற்கள் அனைத்தும் 'அண்' எனும் சொல் அடியாக அமைந்துள்ளவையே. மேலும், அவை ஒன்றோடொன்று பொருளாலும், தொடர்புடையவையே. ஆகவே '**அண்**' என்பதற்கு **நெருங்கிச் சென்று பொருந்து** எனப் பொருள் கொள்ளலாகும். ஆகவே, **பிராமணர்** என்பதற்கு **வீடு பேறாகிய மோட்சம்** எனும் **மேலுலகை நெருங்கிச் சென்றடைந்து மேலுலகப் புனித உடலைப் பொருந்தியவர்** என்று பொருள் கொள்ளலாம்.

ஆகவே, **அந்தணன்** என்பதற்குப் **பிராமணன்** எனப் பொருள் கொள்வதாயிருப்பினும், **சாவு நீங்கி, தலையை உயர்த்தி, எழுந்து, மேனோக்கிச் சென்று, வீடுபேறாகிய மோட்சம் எனும் மேலுலகை அடைந்து புனித உடலைப் பொருந்திய பெருமையிற் சிறந்த கடவுள்** எனப் பொருள்படுவது தெளிவு. ஆகவே, **அந்தணன், பிராமணன்** எனும் சொற்கள் **கடவுளாகிய இயேசு கிறித்துவையே குறிக்கும்** என்பது முடிவு. இயேசு கிறித்து உயிர்த்தெழுந்தபின் பரம் ஏறியதாலேயே பிராமணர் எனும் சொல் அவரைக் குறிப்பதாகும் எனக் கருதலாம்.

'முதல் முதல் அந்தியோகியாவிலே கிறிஸ்துவின் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று' என்று கிறித்தவரின் சமய நூலில் கூறப்பட்டுள்ளது (அப் 11 :26) அதுபோல வான் நீத்து நிலவுலகில் வந்த கடவுளாகிய கர்த்தர் என்னும் கிறித்து இயேசு சிலுவையில் மரித்து, பின் உயிர்த்தெழுந்து, வானுலகிற்கு ஏறிச்சென்ற உலக ஆன்மீக வரலாற்று நிகழ்வை அறிந்து, இயேசு கிறித்துவின் சீடரானவர்கள் இந்தியாவில் தமிழரால் அந்தணர் என்றும் பிராமணர் என்றும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கலாம். இஃது ஆய்வுக்குரியது.

நீத்தார் பெருமையில் அந்தணர் பூண்ட தன்மையாகக் கூறப்பட்டுள்ள செந்தண்மையும் ஆராய்ந்து அறியத்தக்கது.

செந்தண்மை என்பது **செம்மை + தண்மை** எனப் பகுத்தறியப்படும். * **தண்மை** என்பதற்கு **இன்பம்** என்பது பொருள். ஆகவே, செந்தண்மை என்பது செம்மையான இன்பம் என்பதாகும். நீத்தாராகிய கடவுளைக் குறித்து சாவு நீங்கிய நிலையில் அடையும் இன்பமாகக் கூறப்படுவதால் அது நிலையான பேரின்பத்தைக் குறிக்கும் எனலாம். ஆகவே, **செந்தண்மை பூண்டு ஒழுகலான்** என்றது **வானுலகின் நிலையான பேரின்ப வாழ்வை அடைந்து ஒழுகலான்** என்பது எனத் தெளியலாம்.

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. - குறள் 39

எனும் குறள் ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

ஆகவே,

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் - குறள் 30

என்று வள்ளுவர் கூறிய குறளின் கருத்தாவது:

“அந்தணர் என்றழைக்கப்படுபவராகிய நீத்தார் தமது அறத்தின் வலிமையால் சாவு நீங்கி எழுந்து தான் முன்னிருந்ததும், நீத்துவிட்டதுமான வானுலகை மீண்டும் அடைந்து தமக்கு முன்பிருந்த பேரின்ப வாழ்வை அவ்வறத்தின் பயனாக நிலையாகப் பெற்று வாழ்தலால் தன்னை அறவோர் என்று மற்றெவ்வுயிர்க்கும் விளங்கக் காட்டியவன் என்பதாகும்.

தம்மைத்தாமே பலியாக்கியதால் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தவராக வரலாற்றில் அறியப்படுகின்ற இயேசு கிறித்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி, கிறித்தவர் சமய நூலில் காணப்படும் திருவசனங்கள் குறள் உணர்த்தும் கருத்துடன் ஒப்பு நோக்குதற்குரியன.

இயேசு கிறித்துவின் ஊழியக்காரனாகிய பேதுரு தமக்கு, முன்பாகக் கூடியிருந்த ஜனங்களை நோக்கி:

---

* கழகத்தமிழ் அகராதி 1991

"இஸ்ரவேலரே . . . .

. . . .

. . . .

. . . .

. . . . . . இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்.

தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது."[135]

"இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார். இதற்கு
நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்"[136]

என்றான் என்றும், இயேசு கிறித்துவின் ஊழியக்காரனாகிய பவுல் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி இயேசுவைக் குறித்துப் பேசும்போது,

"அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள்
நிறைவேற்றினபின்பு, அவரை மரத்திலிருந்து இறக்கி,
கல்லறையிலே வைத்தார்கள்.
தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்."[137]

என்றும் கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

"நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை
நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி,
இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும்
அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்கராகவும்
தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்"[138]

என்று பேருதுவும், அப்போஸ்தலரும் கூறிய திருவசனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும்,

". . . . .

. . . . கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே."[139]

---

135) அப்போஸ்தலர் 2 : 22-24
136) அப் 2 : 32
137) அப் 13 : 29, 30
138) அப் 5 : 30, 31
139) ரோமர் 8 : 34

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்."[140]

". . . . .

கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்கு மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.

அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார்; . . . .
. . . .
. . . ."[141]

"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும்,

பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்ருளினார்."[142]

"இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.

---

140) 1கொரி 15 : 20
141) 1கொரி 15 : 3-6
142) பிலிப் 2 : 6-11

இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்."[143]

. . . .

. . . .

. . . .

. . . . இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம்,
மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக்
காண்கிறோம்.[144]

". . . . . பரலோகத்திற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்."[145]

. . . .

. . . .

. . . .

. . . . கிறிஸ்துவானவர் . . . .
. . . . பரலோகத்திலேதானே
இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில்
பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்."[146]

"இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்."[147]

"மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம் மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை"[148]

என்றும் இயேசு கிறித்துவைக்குறித்து கிறித்தவர் சமய நூலில் கூறப்பட்டுள்ளன.

மேற்கண்ட திருவசனங்களைத் தொகுத்துப் பார்க்க, இயேசு கிறித்து வானத்திலிருந்து இறங்கினார், சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்யப்பட்டு மரித்தார்; மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, ஐந்நூறு பேருக்கும் அதிகமானோருக்கு தரிசனமானார்; வானங்களுக்கு மேலாக ஏறினார்; பரலோகத்தில் பிரவேசித்திருக்கிறார்; பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தர் என்று மேலான நாமம் தந்தருளப்பட்டார்;

143) எபி 1 : 3, 4
144) எபி 2 : 9
145) மாற்கு 16 : 19
146) எபி 9 : 24
147) எபே 4 : 10
148) ரோ 6 : 9

மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார்; மகிமையின் பிரகாசமும் தேவனுடைய தன்மையும் உடையவராய், மகத்துவமான தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் என்று விளங்குகின்றது. இஃது அவருடைய **நீடுவாழ்வின் பேரின்ப நிலையின் மேன்மையாகக்** காணப்படுகிறது. ஆகவே, இதனை **இயேசு கிறித்து பூண்டு ஒழுகி எவ்வுயிர்க்கும் தன்னை அறவோர்** என விளங்கக் காண்பித்த **செந்தண்மை** எனலாம்.

மேலும் அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி, மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராதலின் எல்லாவற்றிற்கும் மேலான நாமம் தந்தருளப்பட்டார் என்றறியப்படுவதால், தம்மைத்தாமே வெறுமையாக்கி கீழ்ப்படிதலாகிய அறத்தினைச்செய்து, அவ்வறத்தின் பயனாக உயர்த்தப்பட்டு மேலான நாமம் பெற்றார் என்று தெளிவாக அறியலாம். இங்ஙனம் விளங்கும் தெளிவினை மேலே கண்டறிந்த திருக்குறள் கருத்துத் தெளிவுடன் ஒப்பு நோக்க, **இயேசு கிறித்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து அடைந்த மேன்மையையே** வள்ளுவர் **செந்தண்மை** எனும் சொல்லால் உணர்த்துகின்றார் என்பது தெளிவு.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் - குறள் 30

13. பொய்தீர் ஒழுக்க நெறி

வானுலகை நீத்து உலகத்தில் வந்த கர்த்தராகிய கிறித்து இயேசு என்னும் இரட்சகர் தம்மைத்தாமே பலியாக்கியதால், அவரை ஐந்தவித்தான் என்று குறிப்பிடும் திருவள்ளுவர் திருக்குறள் கடவுள் வாழ்த்துப்பகுதியில்,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" - குறள் 6

என்று கூறிவைத்துள்ள குறளில் காணும் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் எனும் சொற்றொடரை ஆராய்ந்து அறிதல் அவசியம்.

பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார் என்று வள்ளுவர் கூறினாராதலின், பொய்தீர் ஒழுக்க நெறி நில்லாதார் நீடுவாழார் என்றும், பொய்தீரா ஒழுக்கநெறி நின்றார் நீடுவாழார் என்றும் விளங்கும். பொய்தீரா ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழார் என்பது பொய் தீராது கலந்திருக்கும் ஒழுக்க நெறி நின்றார் வாழ்நாள் நிலையாமல் சாவு அடைவர் என்பதுவாகும். ஆகவே, பொய்மை சாவு உண்டாக்கும் என உணர்த்தப்படுகிறது என்றறியலாம். பொய் ஒழுக்கம் தீராது கலந்திருக்கும் ஒழுக்க நெறியைப் பொய் ஒழுக்கம் எனலாம். பொய் ஒழுக்கம் என்பது ஈண்டு மெய் ஒழுக்கத்தின் கண்ணே பொய்மை கலந்திருப்பது என உணர்த்தப்படுகிறது. மெய் ஒழுக்க நெறியில் சாவுண்டாக்கும் பொய்மை கலந்ததுவும், அப்பொய்மையால் சாவுண்டானதுவும் முன்னர் ஆதிமனிதன் ஆதாம் நஞ்சுண்டமைந்த நிகழ்வின் ஆய்வில் விளக்கப்பட்டுள்ளது.

"பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவுந் தரும்" - குறள் 275

எனும் குறள் ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கது.

இறைவன் உலகைப்படைத்து அதனை ஆளும்படிக்கு ஆதிமனிதன் ஆதாமையும், அவன் மனைவி ஏவாளையும் படைத்தார். அவர்களுக்கென்று ஏதேன் என்றொரு தோட்டத்தை உண்டாக்கி, அவர்களை அதிலே இருக்க வைத்தார். இவ்விருவருடைய ஆயுள் நீடித்திருக்க வேண்டும் என்று எண்ணிய இறைவன், அத்தோட்டத்தின் நடுவே தாம் முளைக்கப்பண்ணின நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளில் அதனைப் புசிப்பவர்க்கு

சாவுண்டாகும் என்று அறிந்திருந்தார். ஆகையால், ஆதாமை நோக்கி:
". . . . . நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்"[149]

என்றுகூறி நீடுவாழ்வுக்குரிய மெய் ஒழுக்க நெறியைக் கற்பித்து,
". . . . .
. . . . அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்"[150]
என்று சொல்லி, அக்கனியைப் புசிக்க விரும்பாதிருக்கக் கட்டளையிட்டார்.

மெய்யுரைத்த தேவனைப் பொய்யராக்கத் துணிந்த சர்ப்பமானது தன்னைப் படைத்த இறைவனுக்கு விரோதமான பகைவனாய் நின்று, அவர் படைத்த ஆதிமனிதன் ஆதாமின் மனைவியை நோக்கி :

"நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ"[151]

என்று வினவி, அவளுடைய வாய்மொழியாக,

"நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம் ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்"[152],

என்ற பதிலைச் சொல்லக் கேட்டு, இறைவன் அவர்களுக்குக் கற்பித்திருந்த மெய் ஒழுக்க நெறியை அறிந்துகொண்டான் என்று விளங்கக் கண்டறியலாம்.

"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு" - குறள் 424

எனும் வள்ளுவரின் குறள் ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கது. சர்ப்பமானது தான் எண்ணிய பொருளை ஆதாமின் மனைவிக்கு விளங்கக் கூறி அவள் வாய்மொழியால் தான் அறிய முனைந்த இறைவன் கூறிய மெய்ஒழுக்க நெறியை நுண்பொருளாகக் கேட்டு அறிந்துகொண்டது என்பது தெளிவாக விளங்குகின்றது. அங்ஙனம் அறிந்துகொண்ட பின்பு ஆதாமின் மனைவியை நோக்கி :

149,150) ஆதி 2 : 17
151) ஆதி 3 : 1
152) ஆதி 3 : 2, 3

". . . . .

. . . . நீங்கள் சாகவே சாவதில்லை.

நீங்கள் இதைப்புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்"[153] என்று கூறிய கூற்றினை ஆராய்ந்து அறிதல் அவசியம்.

தங்களை உண்டாக்கின தேவன் தங்களுக்குக் கொடுத்த அறக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்திராமல், சர்ப்பம் சொல்லிய கூற்றை ஏற்று நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை ஆதிமனிதர் புசித்ததால் உண்டான பலன் நோக்குதற்குரியது.

". . . . . ஸ்திரீயானவள் . . . .
. . . .
. . . . அதின்
கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள்;
அவனும் புசித்தான்.
அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டன.
. . . .
. . . ."[154]

"பின்பு தேவனாகிய கர்த்தர்; இதோ, மனுஷன் நன்மை,
தீமை அறியத்தக்கனவாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்;
. . . .
. . . ."[155]

என்று கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளன. இவ்வசனங்களை மேலே கண்ட சர்ப்பத்தின் கூற்றுடன் ஒப்பு நோக்க,

"நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள்
திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை
அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும்
தேவன் அறிவார்"

என்று சர்ப்பம் கூறினது மெய் என விளங்கும்.

ஆயினும்,

"ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம்
தொளாயிரத்து முப்பது வருஷம்; அவன் மரித்தான்"[156]

153) ஆதி 3 : 4, 5   154) ஆதி 3 : 6, 7
155) ஆதி 3 : 22   156) ஆதி 5 : 5

என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதால்,

"நீங்கள் சாகவே சாவதில்லை"

என்று சர்ப்பம் கூறினது பொய் எனவும் தெளிவாக விளங்குகின்றது. ஆகவே, சர்ப்பமானது மிகவும் தந்திரமாய் மெய்மையுடன் பொய்மையைக் கலந்தது என அறியலாம்.

சர்ப்பம் கூறிய கூற்றின் மெய்மையின் பலன் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியால் கிடைக்கப் பெறுவதாயினும், நன்மையாகிய அப்பயன் சாவுண்டாக்கும் தீமையுடன் கலந்திருந்ததனாலேயே தேவன் அக்கனியை மனிதர்க்கு விலக்கிக் கட்டளை கொடுத்தார் எனத் தெளியலாம். ஆகவே, தேவன் ஆதிமனிதர்க்குக் கொடுத்த அறக்கட்டளையே பொய் தீர்ந்த மெய் ஒழுக்க நெறி எனவும் தெளியலாம். ஆகவே, பொய் தீர் ஒழுக்க நெறி என்பது, பொய்மை சாவுண்டாக்கும் என்பதால் ஒழுகக் கூடாதென விலக்கி, வாய்மையால் மெய்யுணர்ந்து வாழ்வதற்கு ஏற்று ஒழுகத்தக்கதென பொய் அற இறைவன் கூறும் சத்தியநெறியே என அறியலாம்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" - குறள் 291

எனும் குறள் ஈண்டு நினைவிற்கொள்ளத்தக்கது.

இறைவன் கூறிய பொய்தீர்ந்த மெய் ஒழுக்க நெறியுடன் சர்ப்பமானது தனது தந்திரத்தால் மெய்யும் பொய்யும் கலந்து கூறிய கூற்றால் ஆதிமனிதர் வஞ்சிக்கப்பட்டனர் என ஆன்மீக வரலாற்றில் தெளிவாக அறியப்படுகின்றது. சர்ப்பம் கூறிய பொய்யினை ஏற்று, ஆதிமனிதர் இறைவனின் கட்டளையை மீறி புசிக்கக் கூடாத கனியைப் புசித்ததனால் பூமியில் சாபமும், சாவும் உண்டாயிற்று எனவும் அறியலாம். ஆகவே, மனிதர் யாவரும் அடைந்து வரும் சாவினை நீக்கி அவர்கள் இழந்துபோகும் நீடுவாழ்வினை மீட்டுக்கொள்வதற்கு, உலக ஒழுக்கத்தில் சர்ப்பத்தின் மூலம் கலந்திருக்கின்ற பொய்மை தீர்க்கப்படுவதற்குக் கிறித்தவர் சமய நூலில் காணப்படும் இறைவன் கூறிய தீர்ப்பு நோக்குதற்குரியது.

". . . . . தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப்
பார்த்து . . . .
. . . .

. . . .

. . . .

உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்"[157] என்று கூறப்பட்டுள்ளது.

மேலே கண்ட இறைவனுடைய வசனத்தில் உன் தலை என்று சுட்டப்படுவது பொய்யையும் பெய்யனையும் குறிக்கும் என்றும், குதிங்கால் என்பது சத்தியத்தைக் (வாய்மையை) குறிக்கும் என்றும், நசுக்குவார் என்றதால் பொய்யையும் பொய்யனையும் தீர்ப்பவராக 'அவர்' என்று சுட்டப்படுபவர் பொய்மையையும் அதனால் வரும் சாவையும் நீக்கி மீட்கும் செயலைச் செய்பவர் என்றும் விளங்கும். சாவு நீக்கி மீட்கும் செயலைச் செய்தவர் ஐந்தவித்தான் என்றும் கர்த்தராகிய கிறித்து என்னும் இரட்சகராகிய இயேசு என்றும் முன்னர் தெளிவாக விளக்கப்பட்டது.

மனிதர் யாவரும் சாவினைக் கடந்த உயிர்வாழ் நிலையாகிய மறுமையை அறியாது வாழ்ந்துகொண்டிருப்பதைக் கண்ணுற்ற இறைவன், பொய் தீர்ப்பது மனிதரால் கூடாது என்பதால், அப்பொய்யினைத் தீர்த்து மெய் ஒழுக்கத்தை வலியுறுத்தி நீடு வாழ்வினை உணர்த்துவதற்கும், மெய் ஒழுக்கமாகிய அறத்தின் பயனாக நீடு வாழ்வினை மனிதர்க்கு அளிப்பதற்கும், வானுலகை விட்டு இறங்கி மனிதர் வாழும் நிலவுலகிற்கு மனிதர் சாயலாகி வந்தார். தம்மைத்தாமே பலியாக்கும் செயலாகிய ஐந்தவித்தலைப் பொறிவாயாகிய சிலுவையில் நிறைவேற்றி, சாவினை மேற்கொண்டு, உயிரோடெழுந்து தம் நீடுவாழ்வை மனுமக்களுக்கு விளங்கச் செய்தார்.

ஆகவே, இறைவன் போதனையாகிய அறக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழ்தலாகிய அறம் செய்து வாழ்பவர் எவரும் நீடுவாழ்வடைவர் என மனிதர் அறிந்து அதற்குத்தக வாழும் பொருட்டு, பொய்தீர் ஒழுக்க நெறியாகிய சத்தியத்தை, வானுலகை நீத்து உலகத்தில் வந்த கடவுளாகிய இயேசு கிறித்து மனிதருக்குப் போதித்து அறிவுறுத்தலானார். அதனை வள்ளுவரும் ஈண்டு வலியுறுத்துகின்றார். எனவே,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்றார் என்பது தெளிவு.

157) ஆதி 3 : 14, 15

அத்தியாயம் - 5

14. திருவள்ளுவர் கூறும் வான் சிறப்பு

அறன் வலியுறுத்துவதற்குக் கடவுள் வான் நீத்தார் எனும் செய்தியைத் திருவள்ளுவர் திருக்குறள் பாயிரத்தில் வியப்பூட்டும் வகையில் விளக்கியுள்ளார் என்று முன்னர் இந்நூலில் ஆராய்ந்து தெளிவாகக் கூறப்பட்டது. கடவுள் இருந்ததும், நீத்ததுமான வானுலகின் சிறப்பினை மிகவும் எளிமையாக விளங்கிக் கொள்ளும் வகையில் வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளார். அவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ள குறட்பாக்களை அவைகளின் கருத்து உணர்த்துதற்பொருட்டு, கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

1. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
   தான்நல்கா தாகி விடின் - குறள் 17

2. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
   வாரி வளங்குன்றிக் கால் - குறள் 14

3. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
   பசும்புல் தலைகாண்பு அரிது - குறள் 16

4. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
   உள்நின்று உடற்றும் பசி. - குறள் 13

5. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
   வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு - குறள் 18

6. தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
   வானம் வழங்கா தெனின் - குறள் 19

7. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
   எடுப்பதூஉம் எல்லாம் மழை - குறள் 15

8. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
   துப்பாய தூஉம் மழை - குறள் 12

9. வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. - குறள் 11

10. நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு - குறள் 20

இங்ஙனம் வரிசைப்படுத்திக்கொண்ட இக்குறட்பாக்களின் கருத்துகளை இக்கிரமப்படி தொகுத்துப் பின்வருமாறு அறியலாம்.

1. திரண்டு எழுந்த மேகம் தன்னிலிருந்து மழையைப் பெய்து தராதாகிவிட்டால் நெடுங்கடலும் தன் நீர் அளவில் குறைந்து விடும் - 17

2. பெருங்காற்றைப் போன்று மிகுதியான வெள்ளத்தைப் பெய்து தரும் புயலென்னும் மழை வளம் குன்றிய காலத்தில் உழவர் நிலத்தினை ஏரினால் உழமாட்டார். - 14

3. விசும்பு எனும் வானத்து மேகத்திலிருந்து மழைத்துளி விழுமாயின் நிலத்தில் பசும்புல் முளைக்கும். விசும்பின் துளி விழாதாயின் பசும்புல் முளைத்தலைக் காண்பது அரிது. - 16

4. விண்ணில் பரந்து விரிந்திருக்கின்ற நீரானது மழையாகப் பெய்யாது பொய்ப்பின் அகன்ற உலகத்தினுள் வாழும் உயிர்களிடத்து பசி நிலைத்து நின்று வருத்தும். - 13

5. ஆகவே, வானம் வறண்டுவிடுமானால் மழையை நிலத்திற்கு வழங்காதாகையால், வானத்திலிருப்பவர்க்கு இந்நிலவுலகில் சிறப்பொடு செலுத்தப்படும் பூசனை எனும் வாழ்த்தும், வணக்கமும் செலுத்தப்படாமல் தொழுகை அற்றுப்போகும். -18

6. வானம் மழையை வழங்காதெனின் தொழுகையற்றுப்போகும் அகன்ற இவ்வுலகில் தானம், தவம் ஆகிய இரண்டும் நிலைத்திராது ஒழிந்து போகும். -19

7. இங்ஙனம், ஒரு காலம் பெய்யாது உலகிலுள்ளோரின் வாழ்வைக்கெடுப்பதும், அதினாலே கெட்டார்க்கு ஆதரவாய் மற்றொரு காலத்தில் பெய்து வாழ்வின் வீழ்ச்சியிலிருந்து அவர்களை எடுத்து நிறுத்தி வாழ்வு பெறச் செய்வதுமாகிய எல்லாம் ஆவதற்கு வானத்துச் சிறந்த மழையே காரணமாகும். -15

8. உண்பார்க்கு உண்ணத்தக்க நல்லுணவுகளை விளைவித்து தருவதும், இவ்வுணவுப் பொருள்களில் கலந்து நிலத்தின் விளைபொருள்களாகிய உணவோடு உணவாக இருக்கும் பொருளும் மழையே. -12

9. இங்ஙனம், தானம், தவம், பூசனை என எல்லாமாய் அமையும் உலக வாழ்வு நடைபெற்று வருவதற்கு அவசியமான மழை உணவாகவும், வானிலிருந்து வழங்கப்பட்டு வருவதால்தான் அஃது அமிழ்தம் என்று உணரப்படுகின்றது. -11

10. வானத்தில் பரந்து விரிந்திருக்கின்ற, மழையாகப் பெய்யும், நீர் இன்றிப் புசிப்பும், குடிப்பும் உடைய உலக வாழ்வு அமையாது. அதுபோல வானுலகிலிருந்து பூவுலகிற்கு ஒழுக்கம் கற்பிக்கப்பட்டாலொழிய பூவுலகிலுள்ள எவருக்கும் ஒழுக்கம் தானாக அமைவதில்லை. ஆகவே, வான் இன்றி அமையாது ஒழுக்கு என்றார் வள்ளுவர் என விளங்குகின்றது. - 20

வான் இத்தனை சிறப்புடையது என்று வள்ளுவர் கூறும் குறட்பாக்கள் உணர்த்துகின்றன.

வான் சிறப்பு இதுவே என உணர்த்தினாராதலின் நிலமிசை வாழ்விற்கு இத்தகைய வான் சிறப்பே காரணம் எனவும் வள்ளுவர் உணர்த்துகின்றார் என விளங்குகின்றது. நிலமிசை வாழ்விற்கு வான் மழையே ஆதாரமாயிருப்பதால் உலகிலுள்ளோரெல்லாம் வானோக்கியே வாழ்கின்றனர். இதனை வள்ளுவர் செங்கோன்மை எனும் அதிகாரத்தில் 'வானோக்கி வாழும் உலகெல்லாம்' எனும் சொற்றொடரால் குறிப்பிட்டுள்ளார்.

வான் இன்றி அமையாது ஒழுக்கு என்பதால், இத்தனை சிறப்புடைய வானத்திலிருந்த கடவுள் அவ்வானுலகை விட்டு இறங்கி, நிலவுலகில் வந்து இவ்வுலகிலுள்ளோர் யாவருக்கும் ஒழுக்கம் அமையும் பொருட்டு, அறன் வலியுறுத்தலானார் என்றும், நிலவுலகினும் மறுமை வாழ்வுக்குரிய வானுலகே சிறப்பானது என்றும் வள்ளுவர் பாயிரத்தில் நன்கு விளக்குகின்றார் என்பது தெளிவு.

15. அகல்விசும்பு உளார் கோமான் இந்திரன்

கடவுள் இருந்த வானுலக சிறப்பைக் கூறிய வள்ளுவர் அக்கடவுள் வான் நீத்தாராகி அடைந்த பெருமையைக்கூறும் நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில் இயற்றி வைத்துள்ள,

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி" - குறள் 25

என்ற குறளை ஈண்டு ஆராய்ந்து தெளிதல் அவசியம்.

'ஐந்தவித்தான்' எனும் சொல் முன்னர் விளக்கப்பட்டுள்ளது. அச்சொல் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்த இயேசு கிறித்துவை 'ஐந்து' எனும் எண்ணலளவையாகு பெயராலும், அவித்தான் எனும் செயல் விளக்கம் தரும் வினைமுற்றுச் சொல்லாலும் குறிப்பிட்டு உணர்த்தியதென அறியப்பட்டது.

'ஐந்து' எனும் சொல் இக்குறளில் மேலும் சிறப்பாக ஆளப்பட்டிருப்பதை உய்த்துணரலாம். ஐந்தவித்தானின் ஆற்றலும், அவ்வாற்றல் அறியப்படுவதற்குப் போதுமாய் அமையும் சாட்சியும் இக்குறளில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. ஐந்தவித்தான் ஆற்றலுக்கு சாட்சியாகக் கூறப்பட்டுள்ள '**அகல் விசும்புளார் கோமான் இந்திரனே**' எனும் சொற்றொடர் நோக்குதற்குரியது. **கோமான், இந்திரன்** எனும் சொற்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

அரசன் என்றும் தலைவன் என்றும் ஒரே பொருட்களைத் தரும் கோமான், இந்திரன் எனும் இவ்விரு சொற்களும் ஒன்றோடொன்று இணைத்துக் கூறப்பட்டுள்ளமையால், அவை உணர்த்தும் ஒரே பொருள் இரட்டிப்பாய் வருதல் குற்றமாகுமென்பதால் அவற்றால் மேற்காட்டிய பொருள்கள் தவிர்த்து இரு வேறு பொருள்கள் உணர்த்தப்படுமென அறியலாம். எனவே, இந்திரன் எனும் சொல்லை ஈண்டு ஆராய்ந்து அறிதல் அவசியம்.

அச்சொல்லை,

ஐந்து + திரு + அன் = (ஐந்திரன்) (ஐ→இ) இந்திரன் என்று பகுத்தறியலாம். இதில், நிலைமொழியாகிய ஐந்து எனும் சொல்லின் முதலுயிராயிருக்கும் 'ஐ' எனும் எழுத்து 'இ' எனத் திரிந்து 'இந்திரன்' எனும் சொல் அமைந்துள்ளது.

'**இந்திரன்**' என்ற சொல் '**ஐந்தவித்தான்**' என்ற சொல்லுடன் தொடர்புடையதாகக் குறள் உணர்த்துவதாலும், ஐந்தவித்தான் என்ற சொல்லின் அடியாயிருக்கும் '**ஐந்து**' எனும் சொல்லே '**இந்திரன்**' என்ற சொல்லின் அடியாயும் அமைந்திருப்பதாலும், ஐந்தவித்தான் எனும் வினையாலணையும் பெயரால் குறிப்பிடப்படுபவரும் அச்சொல்லின் அடியாய் அமைந்துள்ள 'ஐந்து' எனும் தனிச்சொல்லாலும் அறியப்பட்டவருமாகிய, **கடவுளாயிருந்து வான் நீத்து, மனிதரான இயேசு கிறித்துவையே இந்திரன்** என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார் என விளங்குகின்றது. **ஐந்து** எனும் சொல்லுடன் '**திரு**' எனும் சொல் புணர்தலால் **இந்திரன்** எனும் சொல் அமைவதால் அச்சொல், இயேசு கிறித்து மீண்டும் அடைந்த வானுலகத் திருத்தன்மையை குறிப்பிடுவதற்கு வள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது, எனவும் அறியலாம்.

+'**திரு**' என்பதற்குத் '**தெய்வத்தன்மை** என்பது பொருள். **இந்திரன்** என்பதற்குக் '**கடவுள்**' என்பது பொருள். ஆகவே, **திருத்தன்மை** அடைந்தார் என்பது **கடவுள்தன்மை** அடைந்தார் என்பதாகும். ஈண்டு அது, கடவுளாயிருந்து, வான் நீத்து நிலவுலகில் மனிதரானவர் மீண்டும் வானுலகிற்சென்று மீண்டும் கடவுளேயானார் என்பதாகும். ஆகவே, இந்திரன் எனும் சொல், வான் நீத்து நிலவுலகில் 'ஐந்து' என்ற சொல்லின் அளவாய் மதிக்கப்பட்ட மனிதராகி, தம்மைத்தாமே பலியாக்கிய ஐந்தவித்தானாகி மீண்டும் வானடைந்த இயேசு கிறித்துவையே கடவுளேயானார் எனக் குறிப்பிடுகின்றது என்பது தெளிவு. ஆகவே, ஐந்தவித்தான் ஆற்றல் என்றது சாவு நீங்கல் அடைந்து வானுலகிற்சென்று கடவுள் தன்மையடைந்த ஆற்றல் எனத் தெளியலாம்.

++ **கோமான்** என்பதற்குப் **பெருமையிற் சிறந்தோன்** என்பது பொருள்.

ஆகவே,

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி

என்ற குறள் உணர்த்தும் கருத்தாவது :

வானுலகத்திலிருந்திறங்கி வந்து மனிதராகி ஐந்தவித்தானான கடவுள் மீண்டும் வான் சென்று செந்தண்மை பூண்டு பெருமையிற் சிறந்த கடவுளேயாகி, அகன்ற வானத்திலுள்ளார் என்பதுவே அவரது ஆற்றலுக்குப் போதுமான சான்றாக அமைந்துள்ளது என்பதாகும்.

+ கழகத்தமிழ் அகராதி 2003
++ கழகத்தமிழ் அகராதி 2003

16. திருவள்ளுவர் கூறும் நீத்தார் பெருமை

திருவள்ளுவர் நீத்தார் பெருமை கூறுவதற்கு இயற்றி வைத்துள்ள குறட்பாக்களைக் கிறித்தவர் சமயப் புனித நூலில் காணப்படும் இயேசு கிறித்துவைப் பற்றிய திருவசனங்களுடன் ஒப்பு நோக்கி குறள்வழி வள்ளுவர் உணர்த்தும் கருத்துக்களைத் தெளிவாக அறியலாம்.

"ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது."[158]

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; . . . ."[159]

"பிள்ளை வளர்ந்து ஆவியிலே பெலன் கொண்டு,
ஞானத்தினால் நிறைந்தது"[160]

". . . . . தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம்

சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது"[161]

"தம் முழுநிறைவும் அவருள் குடிகொள்ளக்
கடவுள் திருவுளம் கொண்டார்"[162]

"அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும்
ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்துபோம்.
அறிவானாலும் ஒழிந்துபோம்.
நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ்
சொல்லுதலும் குறைவுள்ளது.
நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்"[163]

"இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு

---

158) யோ 1 : 1
159) யோ 1 : 14
160) லூக் 2 : 40
161) கொலோ 2 : 9
162) கொலோ 1 : 19 திருவிவிலியம்
163) 1கொரி 13 : 8-10

போகப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். . . . .
. . . ."[164]

"பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.

நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்."[165]

"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை."[166]

"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் . . . .
. . . ."[167]

"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது"[168]

"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்"[169]

என்கிற திருவசனங்களை

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" - குறள் 28

எனும் குறளுடன் ஒப்புநோக்கலாம். மேலே கண்ட திருவசனங்களால் இயேசு கிறித்து கிருபையினாலும், சத்தியத்தினாலும், அன்பினாலும் பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்து நியாயப்பிரமாணத்தையும், தீர்க்க தரிசனங்களையும் நிறைவேற்றும் மாந்தராக அறியப்படுகின்றார். இங்ஙனம் அறியப்பட்ட கருத்தினை உணர்த்த வேண்டியே இயேசு கிறித்துவை நிறைமொழி மாந்தர் எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என விளங்குகின்றது. நிறைமொழி

---

164) லூக் 4 : 1, 2
165) யோ 15 : 9, 10
166) யோ 15 : 13
167) 1யோ 3 : 16
168) 1யோ 4 : 9
169) மத் 5 : 17

என்பது நிறைந்தமொழி எனவும், நிறைவாக்கும் மொழி எனவும் வள்ளுவரால் தொள்ளப்பட்டுள்ளது என உணரலாம்.

"வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே
குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள்
கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து
விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும்
நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்"[170]

என்றவாறு பொதுமொழி பெயர்ப்பு திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ள திருவசனத்திலிருந்து, பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள கிருபையும் சத்தியமும் என்பது அருளும் உண்மையும் என்றறியலாம்.

ஆகவே, அருளும், உண்மையும், அன்பும், ஞானமும், வலிமையும் (ஆற்றலும்) நிறைந்து நியாயப்பிரமாணத்தையும், தீர்க்க தரிசனங்களையும் நிறைவேற்றுவதற்கு வந்த காரணம் கூறுதல் வேண்டியே இயேசு கிறித்துவை நிறைமொழி மாந்தர் என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் எனத் தெளியலாம்.

இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்

"....................
....
.... இதோ ஒரு கன்னிகை
கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்,
அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.

தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்து கொள்ள அறியும் வயது மட்டும் அவர் வெண்ணையையும், தேனையும் சாப்பிடுவார்.

அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும், நன்மையைத் தெரிந்து கொள்ளவும், அறிகிறதற்கு முன்னே, நீ அருவருக்கிற தேசம் அதின் இரண்டு ராஜாக்களால் விட்டுவிடப்படும்"[171]

"பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது.

அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள்.

---

170) யோ 1 : 14 திருவிவிலியம் (பொது மொழி பெயர்ப்பு)
171) ஏசா 7 : 14-16

அவருக்குப் பன்னிரண்டு வயதானபோது அவர்கள் அந்தப் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப்போய், பண்டிகை நாட்கள் முடிந்து திரும்பி வருகிறபோது பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார். இது அவருடைய தாயாருக்கும் யோசேப்புக்கும் தெரியாதிருந்தது.

அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று அவர்கள் நினைத்து, ஒரு நாள் பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்திலும், அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள்.

காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்.

மூன்று நாளைக்குப் பின்பு அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள்.

அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள்.

தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி: "மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே" என்றாள்.

அதற்கு அவர், "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா? என்றார்"[172] என்றவாறு கண்டறியப்படும் கிறித்தவர் சமயத் திருவசனங்களை நோக்க, நன்மை தீமை எனும் இருமை பற்றிய கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கதாக உணரப்படும்.

ஈண்டுக் கூறப்பட்டுள்ள கன்னிகையினிடத்தில் பிறக்கும் பிள்ளை தீமை இன்னதென்றும், நன்மை இன்னதென்றும் இருமை வகை அறிந்து தீமையை வெறுக்கிறதாகவும், நன்மையைத் தெரிந்து கொள்வதாகவும் கூறப்படுகிறதென விளங்குகின்றது. இவ்விருமை வகையறிந்து செயல்படும் வயதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறித்து பன்னிரண்டு வயது பிள்ளையாயிருந்தபோது, தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்து அவர்கள் பேசினதைக் கேட்டு, அவர்களை

172) லூக் 2 : 40-49

வினாவிக்கொண்டிருந்தார் என அறியலாம். அவரைத் தேடிவந்த அவருடைய தாயாரிடம் 'என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா ?' என்றதினால் இயேசு கிறித்து தனது பன்னிரண்டாவது வயதிலேயே தேவாலயத்திற்கும், போதகத்திற்கும், வேத காரியங்களுக்கும், கடவுளுக்கும் (தேவனுக்கும்) உரியவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியதென்று அறிந்து செயல்பட்டார் என உணரலாம். ஆகவே, **தீமையை வெறுத்து, நன்மையைத் தெரிந்து கொள்ள அறிந்தவராய் தேவனுக்குரியவைகளில் தன்னைக் கருத்தாய் இருத்தி, செயல்பட்டமையை இருமைவகை தெரிந்து அறம்பூண்ட தன்மையாகக் கொள்ளலாம்.**

கிறித்தவர் சமயத் திருவசனங்கள் உணர்த்தும் இக்கருத்துகளுடன் திருவள்ளுவர் இயற்றிவைத்துள்ள

"இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு" - குறள் 23

எனும் குறளினை ஒப்புநோக்க, மேலே உய்த்தறிந்த கிறித்துவாகிய இயேசு தன்னைத் **தேவகாரியத்தில் ஈடுபடுத்திக் கொண்ட செயலைக் கூறவேண்டியே இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார்** என்று திருவள்ளுவர் கூறியுள்ளார் என்பது தெளிவு. மேலும் அவர் வான் சிறப்பும், நிலமிசை நீடுவாழ்வு பற்றியும் கூறியிருப்பதால் நிலவுலக வாழ்வாகிய இம்மையும், வானுலக வாழ்வாகிய மறுமையும், நன்மையும், தீமையும் ஆகிய இவ்விரு இருமையையும் இக்குறட்பாவில் வள்ளுவர் உணர்த்துகின்றார் எனக் கொள்ளலாம்.

வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்"[173]

"இதோ கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடே கூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது"[174]

---

173) ஆதி 3 : 15
174) ஏசாயா 40 : 10

"ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு தளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்."[175]

". . . . . . . ஈசாயின் வேரும் புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார்; அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கை வைப்பார்கள் என்று ஏசாயா சொல்லுகிறான்."[176]

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார்.

அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும். இஸ்ரவேல் சுகமாய் வாசம் பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே."[177]

"இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்.

அந்நாட்களிலும், அக்காலத்திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன்; அவர் பூமியிலே நியாத்தையும், நீதியையும் நடப்பிப்பார்.

அந்நாட்களில் யூதா இரட்சிக்கப்பட்டு, எருசலேம் சுகமாய்த் தங்கும்: அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவருடைய நாமம்"[178]

"மாரியும், உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,

அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்"[179]

---

175) ஏசா 11 : 1
176) ரோ 15 : 12
177) எரே 23 : 5, 6
178) எரே 33 : 14-16
179) ஏசா 55 : 10 11

"........................

தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி,

....

....

....

....

அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார்."[180]

"அந்த ஸ்திரீ அவரை நோக்கி : கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.

அதற்கு இயேசு : உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்"[181] என்கிற திருவசனங்கள் கிறித்தவர் சமயப் புனித நூலில் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுப்பின், ஆதிமனிதன் ஆதாமையும், அவன் மனைவியையும் வஞ்சித்து உலகைக்கெடுத்து, தேவனுக்கு விரோதமாக எழும்பி செயல்பட்ட தலையை நசுக்குவதற்கும், ஆதாமின் சந்ததியாராகிய மக்களை மீட்டு, காத்து ஆளுகை செய்வதற்கும் கர்த்தராகிய ஆண்டவர் வருவார். கிளை எனப்படுகிறவராய் முளைத்து, எழும்பித் தோன்றுவார். கர்த்தர் என்பது அவருடைய நாமம். கிறித்து எனப்படுகிற மேசியாவாகிய இயேசுவே அவர். அவர் ஸ்திரீயின் வித்து என்று குறிப்பிடப்படுகிறார் என்றறியலாம்.

தீர்க்கத்தரிசனமாக உரைக்கப்பட்ட இயேசு கிறித்துவின் பிறப்பு பற்றிய இச்செய்தி ஒரு வித்து முளைத்து, எழும்பி, செழித்து நின்று பலன் தருவதற்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது எனத் தெளிவாக விளங்குகின்றது. இங்ஙனம் தீர்க்கதரிசிகள் கூறிய இச்செய்தியுடன்,

"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" - குறள் 24

என்னும் குறளை ஒப்பு நோக்கலாம்.

கர்த்தராகிய கிறித்து இயேசு வருவார் என்று தீர்க்கதரிசிகள் கூறியிருப்பதால், அவர் வருவார் என முன்னறிவிக்கப்பட்ட கருத்து உணர்த்த வேண்டியே திருவள்ளுவர் இயேசு கிறித்துவை "வரன்"

180) அப் 13 : 22, 23
181) யோ 4 : 25, 26

என்று தம் குறளில் குறிப்பிடுகின்றார். அதுபோலவே, இயேசு கிறித்துவின் பிறப்பை, தீர்க்கதரிசிகள் வித்தின் உவமை விளங்கக் கூறியிருப்பது போல உவமையினால் தெளிவுபடுத்த எண்ணியும், கிறித்துவாகிய இயேசு வருவார் என வித்து முளைத்தெழும்புவதற்கு நிலத்தில் ஊன்றி வைக்கப்படுவது போன்று தீர்க்கதரிசிகளால் முன்னரே சொல்லி வைக்கப்பட்டது எனும் கருத்தை உணர்த்தவும் வேண்டியே '**வரன் எனும் வைப்பிற்கோர் வித்து**' எனும் சொற்றொடரைத் திருவள்ளுவர் ஆண்டுள்ளார் என்று தெளிவாக விளங்குகின்றது.

வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டற்று

"இயேசு கற்பித்தபடியே சீஷர்கள் போய், பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள்.
சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார்"[182]

"அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசிர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து : நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து : நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்;

இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.

. . . .
. . . .
. . . .
என்றார்"[183]

என்றவாறு புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல்நாளிலே இயேசு கிறித்து தமது சீடர்களுடன் பஸ்காவைப் புசித்த நிகழ்ச்சியை நற்செய்தி எழுதின மத்தேயு குறிப்பிட்டுள்ளார். அந்நிகழ்ச்சியை நற்செய்தி எழுதின லூக்கா என்பவர் குறிப்பிடுகையில்,

"பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக்

---

182) மத் 26 : 19, 20
183) மத் 26 : 26-29

கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

போஜனம்பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து : இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்"[184] என்று கூறியுள்ளார்.

அதே நிகழ்ச்சியை இயேசு கிறித்துவின் ஊழியக்காரனாயிருந்த பவுல் என்பவர் எழுதுகையில்,

"......................

....

கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து : இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார்.

ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்"[185] என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலே எடுத்துக்காட்டியுள்ள திருவசனங்களை நோக்க, கிறித்துவாகிய இயேசுவின் மரணத்திற்குப் பின்பு அவரை நினைவு கூரும்படி செய்யப்படவேண்டிய நினைவுகூருதலின் செயலைத் தம்முடைய சீடர்களுக்கு இயேசுகிறித்து சொல்லியிருக்கிறார் என்று அறியலாம். அவரை நினைவுகூரும் அச்செயல் அவரது மரணத்தை உலகுக்குத் தெரிவிக்கும் செயல் எனவும் அறியப்படுகின்றது.

---

184) லூக் 22 : 19, 20
185) 1கொரி 11 : 23-26

உலக மக்களின் மீட்புக்காகத் தன் உயிரைக் கொடுத்த ஐந்தவித்தலால் மரணமடைந்த இயேசு கிறித்து உயிர்த்தெழுந்தவராகவும், உலக, ஆன்மீக வரலாற்றில் அறியப்படுவதால், அவரது மரணத்தை நினைவுகூர்ந்து செய்யும் செயலை ஆசரிப்பது (முறைப்படி செய்வது) மக்களின் மீட்புக்காகத் தேவ அன்பின் நிறைவின் வெளிப்பாடாகத் தன் உயிரைக் கொடுத்த அவரது செயலால் அவர் அடைந்த பெருமையை உலகுக்குத் தெரிவிப்பதற்குத் துணையாக நிற்கும் செயல் எனலாம்.

உலக மக்களின் வாழ்வில், தம்மைச் சார்ந்து அன்பு பாராட்டி வாழ்ந்து இறந்தவர்களின் வாழ்வினையும், பிறர்பால் அவர்கள் பாராட்டின அன்பின் ஈடுபாடுகளையும் பின்வரும் வருடங்களில் நினைவுகூர்ந்து, அவர்களது மரணநாளை ஆசரிப்பது உலக நடைமுறையில் வழக்கம். அதுபோன்று இயேசு கிறித்துவின் மரணமும் அவர் தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டபடியே வரலாற்றில் ஆசரிக்கப்பட்டு வருகிறது. அவர் பஸ்காவை ஆசரித்ததும் சிலுவையில் அறையப்படுவதற்குப் பிடித்துக் கொண்டுபோகப்படுவதற்கென்று காட்டிக் கொடுக்கப்பட்டதுமான நாள் **வியாகுல வியாழன்** என்றும், அவர் சிலுவையில் அறையப்பட்டு மரணம் அடைந்த நாள் **புனித வெள்ளி** என்றும், அவரை நினைவுகூர்ந்து கிறித்தவ சமயத்தாரால் தொடர்ந்து ஆசரிக்கப்பட்டு வருகிறது. கிறித்தவ சமயத்தாரால் ஆசரிக்கப்பட்டுவரும் இம்முறைமை இயேசு கிறித்துவின் பெருமையை உலகுக்குத் தெரிவிப்பதற்குத் துணையான சாட்சியாக வரலாற்றில் நிலைத்துள்ளது.

ஆகவே, கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள திருவசனங்களால் அறியப்படுகிற கருத்துகளுடன்,

> "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
> இறந்தாரை எண்ணிக்கொண் டற்று" - குறள் 22

எனும் திருவள்ளுவரின் குறட்பாவை ஒப்பு நோக்கலாம்.

வானுலகை நீத்து நிலவுலகில் வந்து தன் இன்னுயிரைத் துறந்த கடவுளது பெருமைக்குத் துணையாக, வையத்துள் இறந்தாரை நினைவு கூருவதாகிய எண்ணத்தைத் திருவள்ளுவர் தம் குறளில் கூறியுள்ளார்.

இயேசு கிறித்து வானுலகை நீத்து நிலவுலகிற்கு வந்த கடவுள் என்று அறியப்பட்டுள்ளதாலும், அவர் தன் இன்னுயிரைத் துறந்தவர் என்பதாலும், அவரது மரணம் அவரது பெருமையை உலகுக்குத் தெரிவிக்கும் வகையில் கிறித்தவ சமயத்தாரால், வையத்துள்ள

இறந்தாரை நினைவுகூருவதைப் போன்று நினைவுகூரப்படுவதாலும், திருவள்ளுவர் மேற்கண்ட குறளில் கூறும் கருத்து இயேசு கிறித்துவுக்கே பொருந்துமென்றும், இயேசு கிறித்துவின் மரணத்தை நினைவுகூருவதையே திருவள்ளுவர் உணர்த்துகின்றார் என்றும் தெளியலாம்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி

தேவ அன்பு இன்னதென்று உலக மக்கள் அறிந்துகொள்ளும்படி தன் இன்னுயிரைத் துறந்த இயேசு கிறித்துவின் பெருமையைக் கூறி, கிறித்து இயேசுவின் அன்பு, கடவுள் அன்பே என விளங்கச் செய்த திருவள்ளுவர் வான் நீத்த கடவுளின் கோபம் பற்றியும் நீத்தார் பெருமையில் குறிப்பிட்டுள்ளார். கடவுள் கோபம் பற்றி அவர் கூறியுள்ள,

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது" - குறள் 29

எனும் குறளை வான் நீத்த கடவுளாகிய இயேசு கிறித்துவின் கோபம் பற்றிக் கிறித்தவர் சமயப் புனித நூல் கூறும் செய்தியுடன் ஒப்பு நோக்குதல் அவசியம்.

வான் உலகை நீத்து, நிலன் உலகின் நிறைமொழி மாந்தராகி, உலக மக்கள் நீடுவாழ்வு பெறுவதற்காகத் தன் இன்னுயிரைத் துறந்ததனால் அன்பெனும் குணத்தின் உயர் நிலையை அடைந்த பெருமைக்குரிய கடவுளின் கோபம் வெளிப்படுமாயின் அதைக் கணப்பொழுதேனும் பொறுத்தல் அரிது என வள்ளுவர் தன் குறளால் உணர்த்தக் கூறியுள்ளார். ஆகவே, வான் உலகை நீத்த கடவுள் என அறியப்படுகிற இயேசு கிறித்துவின் கோபம் கணமேனும் காத்தல் அரிது எனக் கூறப்படுவதாகக் கருதலாம்.

கிறித்தவரின் பரிசுத்த வேதாகமத்தில் குமாரனாக் குறிப்பிடப்படும் இயேசு கிறித்துவின் கோபத்தைப் பற்றி,

"குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சகாலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்"[186]

குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ

186) சங் 2 : 12

ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்"[187] என்று கூறப்பட்டுள்ளது.

"சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது"[188]

"கர்த்தர் வருகிறார்; அவருடைய கோபத்தின் ஆயுதங்களும், தேசத்தையெல்லாம் அழிக்க, வானங்கவிழ்ந்த கடையாந்தர தேசத்திலிருந்து வருகிறது"[189]

". . . . . . . சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்தினால் அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே பூமி தன்னிடத்தைவிட்டு நீங்கும்படி வானத்தை அதிரப்பண்ணுவேன்"[190]

". . . . .

. . . .

. . . பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்.

வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்"[191]

"இதோ, கர்த்தருடைய நாமம் தூரத்திலிருந்து வரும்; அவருடைய கோபம் எரிகிறதும் கனன்று புகைகிறதுமாயிருக்கும்; அவருடைய உதடுகள் சினத்தால் நிறைந்து, அவருடைய நாவு பட்சிக்கிற அக்கினிபோல இருக்கும்."[192]

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.

நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்."[193]

---

187) யோ 3 : 36
188) ரோ 1 : 18
189) ஏசா 13 : 5
190) ஏசா 13 : 13
191) லூக் 21 : 25, 26
192) ஏசா 30 : 27
193) 2தெசலோ 2 : 7, 8

"பர்வதங்களையும், கன்மலைகளையும் நோக்கி; நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்."[194]

என்று கூறப்பட்டுள்ள திருவசனங்கள் தேவனுடைய கோபத்தின் தன்மையை நன்கு வெளிப்படுத்துகின்றன. இத்திருவசனங்களை நோக்க, அவை இயேசு கிறித்துவின் வருகையையும் அவருடைய கோபத்தையும் இணைத்து வெளிப்படுத்துகின்றன. மேலும் அவரது கோபத்தின் விளைவுகள் மனிதரால் பொறுத்தற்கு அரிதானவை, தாங்கிக்கொள்ள எவராலும் இயலாதவை என்று விளங்குகின்றது. ஆகவே, அவரது கோபம் கடுங்கோபம் என்றும், பற்றியெரிகிற பட்சிக்கிற அக்கினி போன்றது எனவும் அறியலாம்.

திருவள்ளுவர் தம் குறளால் உணர்த்தும் மேலே கண்ட கருத்துடன் கிறித்தவர் திருவசனங்கள் கூறும் மேலே கண்ட கருத்துகள் ஒப்புமையுடையனவாகவுள்ளன என அறியலாம். ஆகவே, திருவள்ளுவர் இயேசு கிறித்துவின் வருகையினையும் அவ்வருகையின் போது வெளிப்படும் அவரது கோபத்தினையும் உலகிற்கு உணர்த்த வேண்டியே

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது"

என்றார் எனத் தெளியலாம்.

சிறப்பு மிக்க வானுலகத்தை நீத்தாராகிய கடவுளின் பெருமையை நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறி வைத்துள்ள குறட்பாக்களை, அவை உணர்த்தும் கருத்தறிதல் பொருட்டுக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
   வேண்டும் பனுவல் துணிவு - குறள் 21

2. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
   மறைமொழி காட்டி விடும் - குறள் 28

3. இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
   பெருமை பிரங்கிற்று உலகு. - குறள் 23

---

194) வெளி 6 : 16, 17

4. உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து - குறள் 24

5. சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு - குறள் 27

6. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று - குறள் 22

7. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் - குறள் 30

8. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி - குறள் 25

9. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் - குறள் 26

10. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. - குறள் 29

இங்ஙனம் முறைப்படுத்தப்பட்ட குறட்பாக்களின் கருத்துகளைப் பின்வருமாறு அறியலாம்.

1. தன் உறைவிடமாகிய வானத்தில் தனக்கிருந்த ஒழுக்கத்து மேன்மையை விட்டுப் பிரிந்து (நீத்து) நிலவுலகிற்கு இறங்கி வந்து, அறன் வலியுறுத்தி வாழ்ந்து, செயற்கரிய செயலைச் செய்ததனால் உலகெங்கும் பரவியதாகிய வான் நீத்தாரது (கடவுளின்) பெருமையைத் தொகுத்துக் கூறவேண்டும் என்பதே திருக்குறள் எனும் பனுவலின் நோக்கமாகும். - 21

2. வானுலக வாழ்வாகிய ஒழுக்கத்தின் மேன்மையை நீத்து, இறைவன் மொழியாகிய திருக்கட்டளையை நிறைவாக்குவதற்கு அருளும் உண்மையும், அன்பும் ஞானமும், வலிமையும் (ஆற்றலும்) ஆகிய இறைத்தன்மையின் சகல நிறைவும் உள்ள மாந்தராகியவரது பெருமையைக் குறள் சொற்களின் உள்ளே மறைத்து வைத்து மொழிந்தாலும், அவரது பெருமையைக் கூறும் அம்மறைமொழியை ஆராய்ந்து பார்ப்பவருக்கு அது வான் நீத்தாராகிய கடவுளின் பெருமையைக் காட்டிவிடும். - 28

3. தன் உறைவிடமாகிய வானத்தில் தனக்கிருந்த ஒழுக்கத்து மேன்மையை விட்டுப் பிரிந்து நிலவுலகிற்கு வந்த கடவுள், இம்மையாகிய இவ்வுலக வாழ்வில் நன்மையும் தீமையுமாகிய இருமையும் கலந்துள்ள வகை தெரிந்தும், மறுமையாகிய வானுலகை அறிந்தும் இங்கு அறம் பூண்டார். அவரது பெருமை உலகெங்கும் பரவலாயிற்று. - 23

4. முளைத்தெழும்பி வருமென நிலத்தில் புதைத்து வைக்கப்படும் வைப்பிற்குரிய வித்தைப் போன்று வானுறையும் கடவுள் வான் நீத்து இறங்கி நிலவுலகில் தோன்றுவதற்கு, 'அவர் வருவார்' என்று முன்னதாக இறைவன் சொல்லி வைத்த வார்த்தையால் குறிக்கப்பட்டவராகிய வானவர் அறிவைத் தாழ்ப்பாளாகக் கொண்டு, ஓரைந்துமாகிய (ஐந்தின் மதிப்பாக மதிக்கப்படும்) மனிதரைக் காப்பவராயினார். - 24

5. ஐந்தின் வகையாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் இவற்றுளமைந்து அறியப்படும் இருமையாகிய நன்மை தீமை வகை தெரிந்து விலக்க வேண்டுவன விலக்கி கொள்ளத்தக்கன கொண்டு வாழ்பவர்க்கு மட்டுமே உலகினைக் கட்டிக் காத்தல் இயலுமாதலின், அவருக்கே உலகு நிலைக்கும். - 27

6. இறந்தாரை நினைவிற்கொள்வதைப் போன்று எண்ணத்தக்க விதத்தில், வான் நீத்தாராகிய கடவுள் தன் இன்னுயிரைத் துறந்தாராதலின் அதனை நினைவுகூருதல் அவரது பெருமைக்குத் துணைக் கூறலாகும். - 22

7. அந்தமாகிய சாவு தணத்ததால் (நீங்கலானதால்) உயிருடன் எழுந்து மீண்டும் வான் சென்று, வானுலகில் தனக்கு முன்னிருந்த புனிதத்தன்மையின் பேரின்ப நிலையாகிய செந்தண்மையை மீண்டும் அடைந்ததினால் தன்னை அறவோர் என்று எவ்வுயிர்க்கும் விளங்கச்செய்தார். ஆகையினால் அந்தணர் எனப்பட்டார். - 30

8. நிறைமொழி மாந்தராகி ஐந்து எனும் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்ததால் ஐந்தவித்தானான வான் நீத்த கடவுள் மீண்டும் வான் சென்று முன்பு தாம் பலியாக்கிய ஐந்தின் (தமது) செந்தண்மை பூண்டு பெருமையிற் சிறந்த கடவுளேயாகி அகன்ற வானத்திலுள்ளார் என்பதுவே அவரது ஆற்றலுக்குப் போதுமான சான்றாக அமைந்துள்ளது. -25

9. செயற்கரிய செயலைச் செய்தற்குக் கற்றறியாத உலக மக்களாகிய சிறியர், நன்மை தீமை எனும் இருமை கலந்துள்ள உலக வாழ்வாகிய இம்மையும், செயற்கரிய செயலைச் செய்து அடையும் வீடு பேறாகிய மறுமையுமாகிய இருமை வகை கற்றுத் தெரிந்து வீடு பேறு அடையும் பொருட்டு, செயற்கரிய செயலைச் செய்வாரானவர் பெருமைக்குரிய பெரியர். - 26

10. குன்றேறி நின்றாற்போன்று நற்குணமாகிய அன்பின் உயர்நிலை அடைந்தவராயினும், அவரது கோபம் (வெகுளி) அளவிற்பெரிதாதலின், கணமேனும் அதனைச் சகித்தல் அரிது. - 29

மேலே கண்ட குறள் உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்து நோக்க, வானுலக ஒழுக்கத்தை நீத்தாராகிய கடவுள் நிறைமொழி மாந்தராகி நன்மை தீமையாகிய இருமை வகை தெரிந்து, ஈண்டு அறம் பூண்டு, ஐந்தின் வகை ஒரைந்துங் காப்பானாகி, செயற்கரிய செய்வாராய்த் தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்ததால் ஐந்தவித்தான் எனப்பட்டு, தன் இன்னுயிரைத் துறந்ததனால் அடைந்த அந்தமாகிய சாவு நீங்கலாகி உயிருடன் எழுந்ததனால் அந்தணர் எனப்பட்டு, மீண்டும் தான் முன் நின்று ஒழுகிய ஐந்தின் திருத்தன்மையாகிய வானுலகப் புனிதத்தன்மையின் பேரின்ப நிலையை அடைந்து கடவுளேயாகி இந்திரன் எனப்பட்டு, தான் அடைந்த கடவுள் தன்மையை தன் ஆற்றலுக்குச் சான்றாக எவ்வுயிர்க்கும் விளங்கச்செய்தார்.

செயற்கரிய செய்து அதன்பின் உயர்நிலை அடைந்தவராயினும் அவரது கோபம் அளவிற்பெரிதாகையால் அதனைச் சகித்தல் அரிது. செயற்கரிய செய்த அவரது இறப்பை நினைவுகூருதல் அவரது பெருமைக்குத்துணையாய் நின்று புகழ் சேர்க்கும். மீண்டும் வான் சென்று மீண்டும் கடவுளேயான அவரது பெருமையைத் திருக்குறளின் உள்ளே மறைத்து வைத்து வள்ளுவர் குறட்பாக்களை இயற்றிவைத்துள்ளார் எனத் தெளிவாக விளங்குகின்றது. இங்ஙனம் விளங்கும் கருத்துக்களால் வள்ளுவர் கூறும் கடவுள், வான் நீத்த செய்தி இயேசு கிறித்துவையே குறிக்கும் என அறியலாம். ஆகவே, வள்ளுவர் நீத்தார் பெருமையில் கூறும் பெருமைக்குரியவர் இயேசு கிறித்துவே என்பதால், வள்ளுவர் கூறும் இறைச் செய்தி கிறித்தவர் இறைச் செய்தியே என்பது மேலும் தெளிவு பெறுகின்றது.

அத்தியாயம் - 6

17. கடவுளைச் சுட்டும் திருக்குறள் சிறப்புச் சொற்றொடர்கள்

சிறந்த வானுலகின் பேரின்பநிலை ஒழுகிய கடவுள் வான் நீத்தார் என்றும், நிறைமொழி மாந்தர் ஆனார் என்றும், தம்மைத் தாமே பலியாக்குதலாகிய ஐந்தவித்தல் எனும் செயற்கரிய செயலைச் செய்து, தன் இன்னுயிரைத் துறந்தும் சாவு நீங்கியதால் அந்தணர் என்றும், உயிர்த்து, எழுந்து மீண்டும் கடவுளேயாகியதால் 'இந்திரன்' என்றும், அழைக்கப்படுபவராய் வானுலகிலுள்ளார் என்றும் கடவுளின் பெருமையை அறிந்த திருவள்ளுவர் தன் குறட்பாக்களால் அதனை உலகுக்கு மறைமொழியால் அறிவிக்க துணிவு கொண்டு அப்பெருமைக்குரிய கடவுளை வாழ்த்த விரும்பி, தான் இயற்றிய திருக்குறள் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தை முதன்மையாக்கி வைத்துள்ளார்.

அ) வேண்டுதல் வேண்டாமை இலான்

கடவுள் வாழ்த்து எனும் அவ்வதிகாரத்தில் காணும்

> "வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை இல" - குறள் 4

எனும் குறளில் வள்ளுவர் ஆண்டுள்ள 'வேண்டுதல் வேண்டாமை இலான்' எனும் சொற்றொடர் ஈண்டு ஆராய்தற்குரியதாகும். வேண்டுதல் வேண்டாமை இலான் என்பது வேண்டுதல் இலான் என்றும், வேண்டாமை இலான் என்றும் விரிவாக்கம் அடையும். வேண்டாமை இலான் என்றதால், அது வேண்டுதல் உளான் என்று விளங்கும். ஆகவே, வேண்டுதல் வேண்டாமை இலான் என்றது வேண்டுதல் இலானும், வேண்டுதல் உளானுமாகியவன் என்றது என அறியலாம்.

வேண்டுதல் இலாதவனே வேண்டுதல் உளானாயிருப்பது எங்ஙனம் என எண்ணுதல் இயல்பு. வேண்டுதல் இலானும் உளானுமாகியவன் என அறியப்படுவதாலும், இலதாகிய வேண்டுதலும், உளதாகிய வேண்டுதலும் ஒன்றேயாக இருத்தல் கூடாதாகையாலும், அச்சொற்றொடரால் இருவேறு வேண்டுதல்கள் உணர்த்தப்படுகின்றன என விளங்கும்.

கடவுள் வான் நீத்தார் எனும் செய்தி கிறித்தவர் சமயச் செய்தி என்பதாலும், இயேசு கிறித்துவையே கடவுளாகத் திருவள்ளுவர் கூறுகின்றார் என்பது தெளிவு பெற்றுள்ளமையாலும் இயேசு கிறித்துவின் வேண்டுதலையும் வேண்டாமையையும் குறித்து, அஃதாவது இலதாகிய வேண்டுதலையும் உளதாகிய வேண்டுதலையும் குறித்து கிறித்தவர் சமயப் புனித நூல் கூறும் செய்தி நோக்குதற்குரியதாகும்.

"பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவ நிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை."[195]

"இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை.

"பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்."[196]

"பலியை அல்ல இரக்கத்தையும், தகன பலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்."[197]

"மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்."[198]

"பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்த மாட்டீர்கள்."[199]

". . . . .
. . . .
. . . .
. . . .
. . . . இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.[200]

---

195) சங்கீதம் 40 : 6
196) மத்தேயு 9 : 12-13
197) ஓசியா 6 : 6
198) மீகா 6 : 8
199) மத் 12 : 7
200) மத் 10 : 8

". . . . . அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது; பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்.

சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்."[201]

நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக் குறித்து மேற்சொல்லியபடி பலியையும் காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவ நிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்ன பின்பு;

தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்."[202]

"எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை."[203]

"சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."[204]

". . . . . ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்"[205]

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால்

201) எபி 10 : 5, 6
202) எபி 10 : 8, 9
203) அப் 17 : 25
204) ரோ 11 : 36
205) 1யோ 2 : 1

இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்."[206]

மேற்கண்ட கிறித்தவர் சமயத் திருவசனங்களைத் தொகுத்து நோக்க, சகலமும் இறைவனாலும், அவர் மூலமாயும், அவருக்காகவும், இருக்கிறது. ஆகவே, தமக்கு யாதொன்று தேவையானது போல மனிதர் கைகளில் யாதொன்றும் அவர் வேண்டுவதில்லை. ஆகையால், அவர் நன்மைகளையே இலவசமாய்க் கொடுக்கிறார். பாவம் செய்கிற மனிதரின் அறியாமையின் நிமித்தம் அவர்களின் பாவ நிவிர்த்திக்கென்றும், பரிசுத்தவான்களைக் காப்பதற்கென்றும் அவர்களுக்காகவும் பரிந்து பேசுகிற வேண்டுதல் உடையவராகக் கடவுள் இருக்கிறார் என்று விளங்குகிறது.

ஆகவே, வேண்டுதல் வேண்டாமை இலான் என்று வள்ளுவர் கூறியதின் கருத்தாவது:

இறைவன் பலியையும் காணிக்கையையும் விரும்பாததினால் சர்வாங்க தகனபலிகள், பாவநிவாரணபலிகள் ஆகியவைகளில் தனக்கு யாதொன்றும் மனிதர் கைகளில் வேண்டுபவராயிராமல், நிலவுலகில் வாழும் மனிதர் அடையும் துன்பம் இலதாகும்படி மனிதரிடம் மனத்தாழ்மையையும், இரக்கத்தையும் விரும்பி, ஆசாரிய முறைமைப்படி மனிதரின் பாவநிவிர்த்திக்கென்று பரிந்து பேசுகிற வேண்டுதல் செய்பவரும், இறைவன் அன்பினால் பரிந்து பேசுகிற வேண்டுதலை ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பு அருளும் இரண்டாவது ஆசாரிய முறைப் பிரமாணத்தை நிலைநிறுத்துவதற்குத் தம்மைத்தாமே பலியாக்கியதினால் முதலாவது ஆசாரிய முறைப்பலிகளை (அவி) வேண்டுதல் இல்லாமல் பலிசெலுத்துதலை (அவித்தல்) நீக்கிப் போட்டவருமானவர் என்பதாகும்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று" - குறள் 259

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" - குறள் 260

எனும் குறட்பாக்கள் ஈண்டு நினைவுகூரத்தக்கவை.

---

206) ரோ 8 : 26, 27

ஆ) மலர்மிசை ஏகினான்

கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் திருவள்ளுவர் இயற்றிவைத்துள்ள

“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்” - குறள் 3

எனும் குறளில் ஆளப்பட்டுள்ள ‘மலர்மிசை ஏகினான்’ என்ற சொற்றொடர் ஈண்டு ஆராய்தற்குரியது.

‘ஏகினான்’ என்று வள்ளுவர் யாரைச் சுட்டுகின்றார் என்றும், ‘மலர்’ எனும் சொல்லால் அவர் உணர்த்தும் பொருள் யாதெனவும் அறிதல் அவசியமாகும்.

“மற்போர் என்பது மனிதன் அறிந்த மிகப் பழமையான விளையாட்டுக்களுள் ஒன்று . . . . அக்காலத்தில் மற்போரில் வெற்றிபெறும் மல்லன் மக்களால் பெரிதும் மதிக்கப் பெற்றவனாக இருந்தான்.

. . . .
. . . .
. . . .

மிகுந்த அறிவும் அனுபவமும் உடையவரே சிறந்த மல்லராக ஆவார். அவர்க்குத் தன்னம்பிக்கையும் துணிவும் தேவை . . . .
. . . .
. . . .

மற்போருக்குத் தொழில் நுட்பத்திறமையுடன் உடல் வலிமையும் விரைவில் வினையாற்றும் சக்தியும் தேவைப்படும். . . . .”

என்ற குறிப்பு கலைக்களஞ்சியம் 1961 தொகுதி எட்டில் காணப்படுகிறது. இந்த மற்போர் அபிதான சிந்தாமணியில் மல்லயுத்தம் என்ற சொல்லால் விளக்கப்பட்டுள்ளது.

மற்போர் என்ற சொல்லை **மல் + போர்** எனப் பகுத்தறியலாம். **மல்** என்பதற்கு **வலிமை, வளமை** என்று கழகத் தமிழ் அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. தன் உடல் வலிமையால் ஒருவன் செய்யும் போர் மற்போராகும். ஆகவே, **மல் என்னும் சொல் மனித உடலைக் குறிப்பது** என விளங்குகின்றது. வலிமையின் வளமை கருதி மற்போர் புரிவோரை **மல்லன்** என்றும் **மல்லர்** என்றும் குறிப்பிடும் சொற்களில் **‘மல்’** எனும் சொல் அடிச்சொல்லாக அமைந்திருப்பதைக் கண்டறியலாம்.

*மலடன்** என்ற சொல்லிற்குப் பிள்ளையில்லாதவன் என்பது பொருள். ****மலடி** என்ற சொல்லிற்குப் பிள்ளைப் பேறில்லாதவள் என்பது பொருள். ஆகவே, இச்சொற்கள் **பிள்ளை** என்றும் **பாலன்** என்றும் சொல்லப்படும் குழந்தையுடன் தொடர்புடைய சொற்களாக அறியப்படுகின்றன. மேலும் அச்சொற்கள் **உடலைக் குறிக்கும் மல்** எனும் அடியாய்த் தோன்றி அமைந்திருப்பவை என்பது நோக்குதற்குரியது.

மேலே விளக்கப்பட்ட **மலடன், மலடி** எனும் சொற்கள் **பிள்ளையாகிய பாலகப்பருவ குழந்தையுடன் தொடர்புடையனவாக** அமைந்திருப்பதாலும் **மல்** எனும் சொல் **உடலைக் குறிப்பதாலும்,** வலிமை கருதி மல்லர் எனும் சொல் அமைந்திருப்பது போன்று குழந்தையின் பாலகப்பருவத்தின் மென்மை கருதியும், இளமை கருதியும் அக்குழந்தையைக் குறிப்பிடுவதற்கு மல் எனும் சொல் அடியாய் ஒரு சொல் ஆளப்படுதல் ஏற்புடையதாகும்.

மலர் என்று வள்ளுவர் தம் குறளில் ஆண்டுள்ள சொல்லை **மல் + அர்** என்று பகுத்தறியலாம். மல் என்பது உடலைக் குறிப்பதாலும் ஈண்டு மலர் எனும் சொல் மென்மையையும், இளமையையும் குறிப்பதற்கு ஏற்புடையதாதலானும், அது பாலகப்பருவ உடலை (சரீரம்) உடைய மனிதக் குழந்தையைக் குறிப்பிடுவதற்கு ஏற்புடையதே. 'அர்' என்பது சமயத் தலைவர்க்கு வழங்கப்படும் சொற்களின் சிறப்பு விகுதி.

கடவுள் வாழ்த்துக் கூற வந்த வள்ளுவர் அவ்வதிகாரத்தில் '**மலர்மிசை ஏகினான்**' என்று வாழ்த்துக்குரிய கடவுளைச் சுட்டிக்காண்பித்துள்ளார் என அறியலாம். மலர்மிசை ஏகினான் என அவர் சுட்டிக் காண்பித்துள்ள கடவுள், வான் நீத்தார் என்பதால் அவரை நீத்தார் பெருமையில் நிறைமொழி மாந்தர் என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். வானுறை கடவுளே வான் நீத்தாராகவும் வள்ளுவரால் கூறப்பட்டுள்ளமையால் மலர்மிசை ஏகினான் எனும் சொற்றொடரும் நிறைமொழி மாந்தர் எனும் சொற்றொடரும் ஒப்புநோக்குதற்குரியன.

திருக்குறள் பாயிரத்தில் ஒருவரையே கடவுளாகவும் அவரையே நீத்தாராகவும் தெளிவாகக் கூறிய திருவள்ளுவர், கடவுள் வான் நீத்தார் எனும் செய்தி கூறுவது போன்று வான் நீத்த கடவுள் மாந்தரானார் எனும் செய்தியையும் உணர்த்தியுள்ளார். கடவுள் வான் நீத்து

---

* கழகத்தமிழ் அகராதி 2003

* நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதி 1984

நிலவுலகில் மாந்தரானார் என உணர்த்தப்படுவதால் மாந்தராவதற்குக் குழந்தையாகப் பிறந்து தோன்றுதல் இயல்பு என்பது விளங்கும்.

வான் நீத்த கடவுள் செயற்கரிய செயலைச் செய்தவர். ஆதலின், அவர் செயற்கரிய செயலைச் செய்வதற்கு ஏற்ற நிறைமொழியாக **முழு வளர்ச்சி அடைந்த மனிதர் என உணர்த்துவதற்கு மாந்தர்** எனும் சொல்லை நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் ஆண்டுள்ளார் என அறியலாம். அதுபோல **மாந்தராவதற்கு வான் நீத்த கடவுள் நிலவுலகில் பிறந்து தோன்றிய குழந்தைப் பருவத்தைக் குறிப்பிட்டே 'மலர்'** எனும் சொல்லைக் கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தில் வள்ளுவர் ஆண்டுள்ளார் என மேலே விளக்கப்பட்டுள்ள சொல்பொருளைக் கருத்திற்கொண்டு, தெளியலாம்.

குழந்தையாகிய மலரின் பிறப்பும், செடி, கொடி, மரங்களின் பூவாகிய மலரின் மலர்தலும் ஒப்புமையுடையனவே. பூ மொட்டானது இதழ் விரிதலால் மலர்கிறது எனப்படுகிறது. ஆகவே, மலர்தல் என்பதற்கு மொட்டவிழ்தல், விரிதல், பரத்தல் எனும் சொற்களால் கழகத் தமிழ் அகராதியில் பொருள் உணர்த்தப்பட்டுள்ளது. அதுபோலவே, மனிதர்க்குப் பிறக்கும் குழந்தையும் தாயின் கர்ப்பத்தில் தன் கைகளையும் கால்களையும் தன் உடலோடு மடிவித்த நிலையில் பூவின் மொட்டினையொத்திருந்து, பின் வெளிப்பட்டுப் பிறக்கும்போது மொட்டவிழ்ந்து இதழ் விரிதல் போன்று தன் கால்களையும், கைகளையும் விரித்து, பரத்து மலர் எனக் காட்சியளிக்கும். ஆகவே, மலர் எனும் சொல் பாலப்பருவக் குழந்தைக்கு ஆகிவருதல் ஒப்புமையாலும் ஏற்புடையதே.

பாவம் என்பது **மலம்** என்ற சொல்லுக்குப் பொருளாகக் கழகத் தமிழ் அகராதியில் கூறப்பட்டுள்ளது. '**மலப்பாண்டம்**' என்பதற்கு **உடல்** என்னும் பொருள் கூறப்பட்டுள்ளது. ஆகவே, பாவம் உடைய உடல் கொண்டு வாழும் மனிதரை அச்சொல் உணர்த்துகிறதெனக் கருதலாம் (எ.டு. மலன்) **மலசகிதர்** என்பதற்கு **மும்மலம் நீங்கப்பெற்றவர்** என்றும் அவ்கராதியில் பொருள் கண்டறியலாம். **மலரவன், மலரோன்** எனும் சொற்கள் **பிரமன்** எனும் **கடவுள் குமாரனைக்** குறிப்பிட ஆளப்படும் தமிழ்ச் சொற்களாகும். அத்தமிழ்ச் சொற்கள் '**மலர்**' எனும் அடியாகத் தோன்றி அமைந்திருப்பது நோக்குதற்குரியதாகும்.

வானத்தமலர்

. . . .
. . . .
. . . .
. . . .

வானத்தமலர் சேனை கிரகித்து முடியாத
மகிமைப்ர தாபம் மிகுத்தோன், - அதி
ஞானத்துடன் உலகும், பரமும், அதில், நிறைந்த
யாவும் நெறியில் பகுத்தோன்,
மேன்மைப் பொருள தாகத் தேவ மகத்துவத்தின்
விளங்கும் அனந்த சுகத்தோன், - அக்கி
யானத் திருள் அகலத் தான் இப்புவியில் உற்ற
அந்த முடி வில்லாத சுந்தர கிறிஸ்துநாத - என்
. . . .
. . . .
. . . ." 207

என்றவாறு வேதநாயகம் சாஸ்திரியார் அவர்கள் இயற்றிய கிறித்தவ கீர்த்தனையில் அவர் ஆண்டுள்ள 'வானத்தமலர்' என்ற சொல் கவனத்தில் கொள்ளத்தக்கது. *வானத்தமலர் எனும் அச்சொல்லுக்குப் **பரிசுத்தர்** என்ற பொருள் அடிக்குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, **அமலர்** என்பதற்குப் **புனிதர்** என்று பொருள் என அறியலாம்.

அமலர் என்ற சொல்லிற்கு எதிர்ச்சொல்லே மலர் என்பதாகும். ஆகவே, மலர் எனும் சொல் புனிதரல்லாத பாவமாந்தரைக் குறிப்பது எனக் கருதலாம். கிறித்தவர் சமய நூலில் குழந்தையாகப் பிறந்து மாந்தராகிய இயேசு கிறித்துவைக் குறித்துக் கூறப்பட்டுள்ள திருவசனங்கள் ஈண்டு நோக்குதற்குரியவை.

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு
குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர்
தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர்,
ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய
பிதா, சமாதானப் பிரபு எனப்படும்"[208]

---

207) கிறிஸ்தவ கீர்த்தனைகள் (கீர்த்தனை 79) & அடிக்குறிப்பு, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் 1972 பக். 57
208) ஏசாயா 9 : 6

". . . . .

. . . .

. . . . இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்"[209]

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"[210]

"அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பாட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை"[211]

"அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை;

. . . .

. . . .

. . . .

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்"[212]

"கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிற வர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்"[213]

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் . . . .

. . . .

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

---

209) ஏசாயா 7 : 14
210) லூக் 2 : 11
211) 1யோ 3 : 5
212) 1பேது 2 : 22-24
213) எபி 9 : 28

நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.[214]

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி,
அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய
பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்
கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக்
கொடுப்பேன்; . . . .
. . . ."[215]

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."[216]

". . . . . . . கிறிஸ்து உலகத்தில் வந்தபோது, பலியையும்
காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஆனால் ஓர் உடலை
எனக்கு அமைத்துத் தந்தீர்.

. . . .

. . . .

. . . .

என்கிறார்."[217]

". . . . . மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்"[218] என்றவாறு இயேசு கிறித்துவைப் பற்றிக் கூறும் திருவசனங்கள் கிறித்தவரின் புனித நூலில் காணப்படுகின்றன. அத்திருவசனங்களைத் தொகுத்து நோக்க,

கர்த்தராகிய கிறித்து என்னும் இரட்சகராகிய வல்லமையுள்ள தேவன் தமக்கென்று அமைந்த மனித உடல் உடைய பாலகனாகப் பிறந்தார் என்றும், அவர் பாவமில்லாதவர் என்றும், மனிதருடைய பாவத்தைத் தீர்க்கும்படி அநேகருடைய பாவத்தைத் தாமே தமது சரீரத்தில் சுமந்தார் என்றும் அறியலாம். ஆதலின் பாவம் அறியாத அவர் நம்முடைய பாவங்களினால் பாவமாக்கப்பட்டார் என்றும் அறியலாம்.

---

214) ஏசா 53 : 4, 5, 6
215) ஏசா 53 : 12
216) 2கொரி 5 : 21
217) எபி 10 : 5 திருவிவிலியம்
218) ரோமர் 8 : 3

பாலகனாகப் பிறந்த இயேசு கிறித்து பாவமில்லாதவர் என்பதால் புனிதராகிய அவரை அமலர் எனலாம். ஆகவே, வேத நாயகம் சாஸ்திரியார் அவர்களும் தான் இயற்றிய மேலே சுட்டிக்காட்டப்பட்ட கீர்த்தனையில் இயேசு கிறித்துவை வானத்தமலர் எனக்குறிப்பிட்டுள்ளார், எனக் கருதலாம். மனிதரின் பாவங்களைச் சுமந்ததினால் பாவமாக்கப்பட்ட அவர் மனிதரின் பாவங்களைச் சுமந்து தீர்க்க பாவ மாம்சத்தின் சாயலாகிய மனித உடல் உடையவரானதால் அவரை **'மலர்'** எனவும் குறிப்பிடுதல் பொருந்தும். ஆகவே, **கடவுள் எனும் வானத்து அமலர் வான் நீத்து நிலத்து 'மலர்' எனும் குழந்தை மாந்தர்** ஆனார் என அறியலாம். எனவே, 'மலர்' எனும் சொல்லால் கிறித்து என்னும் இரட்சகராகப் பிறந்த இயேசுவாகிய குழந்தையையே திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவு. ஆகவே, **மலர் எனும் சொல் இயேசுவாகிய குழந்தையின் மனித உடலைக் குறிக்கும்** என்பது துணிபு.

ஏகினான் என்றதன் பொருள்

'மலர்மிசை ஏகினான்' எனும் சொற்றொடரில் காணப்படும் 'ஏகினான்' எனும் வினைமுற்றுச் சொல்லும் ஈண்டு ஆராய்ந்தறிதற்குரியது.

'**ஏகினான்**' எனும் சொல் '**ஏகு**' எனும் வினைச்சொல் அடியாய்த் தோன்றிய வினைமுற்றாகக் கொள்ளப்படுமாயின், ***ஏகுதல்** என்பதற்குப் **போதல், கடத்தல், கழலுதல்** எனப் பொருள் உண்டென்பதால் **ஏகினான்** என்பதற்குப் **போனான், கடந்து சென்றான், பிரிந்து சென்றான்** என்று பொருள் கொள்ள வேண்டியதாகும். அங்ஙனம் போனான் எனப் பொருள் கொள்வதாயின், அது தன்னை விட்டுப் பிரிந்து சென்றான் என்பதையே உணர்த்தும். ஆசிரியராயினும், குருநாதராயினும் தன்னை விட்டுச் சென்றானின் மாணடி சேரவேண்டும் என்பரோ, அன்றி தன்னை வந்தடைந்தானின் மாணடி சேர வேண்டும் என்பரோ என்பது சிந்தித்து உணரத்தக்கதாகும். போனான் என்பதோ, வந்தான் என்பதோ எது ஏற்புடையது. போனான் என்பது தன்னை விட்டுப் பிரிந்து சென்றான் என்பதை உணர்த்தும்; வந்தான் என்பது தன்னிடத்தில் வந்து சேர்ந்தான் என்பதை உணர்த்தும். ஆகவே, போனான் என்பது பொருந்தாது, வந்தான் என்பதே பொருந்தும். ஆகவே, ஏகினான் என்பதற்கு வந்தான் என்று பொருள் கொள்வதே ஏற்புடையதாகும்.

---

* கழகத்தமிழ் அகராதி 2003

ஏகினான் என்பதற்குப் போந்தான், எழுந்தருளினான்; நடந்தான் என்னலுமொன்று என திரு.வி. கலியாணசுந்தரனார் அவர்கள் தமது நூலில்++ பொருள் கூறியுள்ளார். **போந்து** என்பதற்கு **வந்து** என்று கழகத்தமிழ் அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. ஆகவே, **போந்தான்** என்பதற்கு **வந்தான்** என்பது பொருளாகும். ஆகவே, ஏகினான் என்பதற்குப் போந்தான் எனப் பொருள் கொள்ள அது வந்தான் எனும் பொருளை உணர்த்தும்.

வான் நீத்தார் என்பது வான் விட்டுப் பிரிந்து, இறங்கி, நிலமிசை வந்தார் என்பதாகும். ஆகவே, ஏகினான் என்பதற்கு நிலமிசை இறங்கி, ஏகினான் எனப் பொருள் விளங்கும். ஆகவே, மலர்மிசை ஏகினான் என்பது வான் நீத்த கடவுள் நிலவுலகில் இறங்கி வந்து குழந்தையாகிய மலர் எனும் மனித உடலில் ஏகினான் என்று உணர்த்துகிறதென விளங்குகின்றது. வந்தேகினான் என விளங்குவதால் ஏகினான் எனும் சொல் வந்தான் எனும் பொருளுடன் வந்த நோக்கமாகிய மற்றொரு பொருளையும் உணர்த்துகிறதென அறியலாம்.

வான் நீத்து நிலவுலகிற்கு வந்த கடவுள் குணம் எனும் குன்றாகிய அன்பு நிறைந்த 'ஐந்து' எனும் மதிப்பிற்குரிய நிறைமொழி மாந்தரானார் என்று நீத்தார் பெருமையில் கண்டறியப்பட்டதாலும், **மாந்தராக வந்த கடவுள் குழந்தையாகிய மலர் ஆனார்** என்று கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உய்த்துணரப்பட்டுள்ளதாலும் **குழந்தையாய்த் தோன்றிய கடவுள் மனித சரீரத்தில் ஒன்றித்தார்** என்று உணரலாம். ஆகவே, வான் நீத்து வந்த கடவுள் குழந்தை எனும் மலராகிய மனித சரீரத்தில் தன்னை ஒன்றுபடுத்த வந்தார் என்று தெளியலாம். ஆகவே, கடவுள் மலர்மிசை ஏகினது கடவுளும் மனிதனும் ஒருமித்தலை உணர்த்துகிறதெனலாம். ஆகவே, ஏகினான் என்ற சொல் வான் நீத்த கடவுள் தன்னைக் குழந்தை எனும் மாந்தர் உடலின் மேல் உயிர் வந்து ஒன்றித்தல் போன்று ஏக (அடைந்தேக) வந்தோன், ஆதலால் ஏகினான் என்று உணர்த்துதல் தெளிவு.

"அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே"

என்பது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் எனும் நூலில் காணப்படும் பத்தாம் சூத்திரமாகும். இச்சூரத்திரத்தில் ஆளப்பட்டுள்ள

++ திருக்குறள் விரிவுரை (பாயிரம்) 1948 பக் 77 - திரு. வி. கலியாணசுந்தரனார்

ஏகனாகி என்னும் சொல் ஈண்டு கவனத்தில்கொண்டு அதன் பொருள் ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும்.

ஏகம்	-	ஒன்று, உடன்பாடு
ஏக குரு	-	உடன் கற்றோன்
ஏக சாதர்	-	சகோதரர், உடன் பிறந்தவர்கள்
ஏக பாவம்	-	ஒரே தன்மை
ஏகோபித்தல்	-	ஏக மனதாயிருத்தல், ஒன்றாதல்
ஏகமாய்	-	ஒன்றாய்
ஏகமாயிருத்தல்	-	ஒன்றாயிருத்தல்

என்பன போன்ற சொற்களை மேலே ஆராய்ந்தறிந்த தெளிவுடன் ஒப்பிட்டு நோக்க, **ஏகினான்** எனும் சொல் ஏகம் எனும் சொல்லடியாகத் தோன்றி அமைந்த வினைமுற்று எனவும் **(உடலுடன்) பொருந்தி ஒன்றாயிருத்தல் எனும் பொருளையே உறுதிபடுத்துகிறது** எனவும் விளங்கும்.

'**மலர்**' எனும் சொல் **குழந்தையின் உடலையும், ஏகினான்** எனும் சொல் **ஒன்றித்தான்** எனவும் பொருள் உணர்த்துவதால் '**மலர்மிசை ஏகினான்**' என்பது மாந்தராகும் பொருட்டு மனிதமாம்ச சரீரத்தில் தன்னை ஒன்றுபடுத்தி **குழந்தையாகத் தோன்றிய கடவுளாகிய இயேசு கிறித்துவையும்** அவரது பிறப்பையுமே **உணர்த்துகின்றது** எனத் தெளியலாம்.

18. திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்து

கடவுள் வான் நீத்தார் என்றும், நிலவுலகிற்கு இறங்கி வந்து, நிறைமொழி மாந்தராகி, செயற்கரிய செயலைச் செய்து பெருமைக்குரியவரானார் என்றும் அறிந்த திருவள்ளுவர் வான் நீத்த கடவுளின் பெருமையைக் கூறுவதற்கு நீத்தார் எனும் அதிகாரத்தை அமைத்தது போல, தான் கூறிய பெருமைக்குரிய கடவுளை வாழ்த்துக்குரியவர் எனத் தான் ஏற்றுக் கொண்டுள்ளமையால் அவரை வாழ்த்த எண்ணி, விருப்பமுற்று கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தை அமைத்து திருக்குறள் பாயிரத்தின் முதல் அதிகாரமாக வைத்து, '**கடவுள் வான் நீத்தார்**' என்று தான் கூறமுனைந்த செய்தியின் எழுவாயாக அவ்வதிகாரத்தைச் சிறப்பித்துள்ளார்.

கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் வள்ளுவர் இயற்றி வைத்துள்ள குறட்பாக்களைக் கீழ்க்காணுமாறு முறைப்பபடுத்தி அவற்றின் கருத்துக்களை அறியலாம்.

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
   பகவன் முதற்றே உலகு - குறள் 1

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
   நற்றாள் தொழாஅர் எனின் - குறள் 2

3. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
   தாளை வணங்காத் தலை - குறள் 9

4. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
   மனக்கவலை மாற்றல் அரிது - குறள் 7

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
   பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு - குறள் 5

6. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
   யாண்டும் இடும்பை இல - குறள் 4

7. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
   நிலமிசை நீடுவாழ் வார் - குறள் 3

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. - குறள் 8

9. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார் - குறள் 10

10. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் - குறள் 6

இங்ஙனம் வரிசைப்படுத்திக்கொண்ட குறட்பாக்களால் வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளை அதே கிரமப்படி கீழ்க்காணுமாறு அறியலாம்.

1. அகரம் முதலிய எழுத்தெல்லாமாகிய *பகம் என்னும் **ஞானத்தை** ஆதிமுதலாய்க் கொண்டு உலகினைப் படைத்தும் பகுத்தறிந்தும் வாலறிவனாக விளங்கும் இறைஞானவானாக இருக்கின்ற பகவன் அகரமுதல எழுத்தெல்லாமாகிய அறிவினை ஆதிமுதற்றே உலகிற்குப் பகர்ந்திருக்கின்றான். (குறள் 1)

இக்கருத்திற்கு ஒப்புமையுடைய கிறித்தவர் சமயத்திருவசனங் களாவன :

"ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம்பண்ணி, நல்யுக்தியான அறிவுகளைக் கண்டடைகிறேன். . . . .

. . . .

. . . .

ஆலோசனையும் மெய்ஞ்ஞானமும் என்னுடையவைகள், நானே புத்தி, வல்லமை என்னுடையது.

. . . .

. . . .

. . . .

. . . .

கர்த்தர் தமது கிரியைகளுக்குமுன் பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்.

---

* கழகத்தமிழ் அகராதி 2003

பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம்பண்ணப்பட்டேன்.

ஆழங்களும் ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே நான் ஜநிப்பிக்கப்பட்டேன்.

மலைகள் நிலைபெறுவதற்கு முன்னும், குன்றுகள் உண்டாவதற்கு முன்னும்,

அவர் பூமியையும் அதின் வெளிகளையும், பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்குமுன்னும் நான் ஜநிப்பிக்கப்பட்டேன்.

அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கே இருந்தேன்; அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும் உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுகளை அடைத்துவைக்கையிலும், சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும் நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; . . . .

. . . .

. . . ."[219]

"(குமாரானாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களா னாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.[220]

---

219) நீதி 8 : 12-30
220) கொலோ 1 : 14-18

இத்திருவசனங்கள் மேலே கண்டறிந்த குறள் உணர்த்தும் கருத்தினை உறுதி செய்கின்றன. ஆகவே, கடவுள் அறிவைக் கற்பிக்கும் குருவாகத் திருவள்ளுவரால் உலகிற்கு உணர்த்தப்படுவது இக்குறளாலேயே என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

2. பகவானாக இருக்கின்ற வாலறிவனிடம் கசடறக் கற்றறிந்த அறிவின் வழி ஒழுகி, அவரது திருவடியைச் சேர்ந்து, அவரை வணங்கி வாழ்த்தாதிருந்தால் வாலறிவனாகிய அப்பகவன் உலகமுதற்கொண்டு பகுத்தும், பகிர்ந்தும், பகர்ந்தும் அளித்த வாலறிவினைக் கற்றதனால் நிலமிசை வாழ்வோருக்கு பயன் ஏதும் உண்டாவதில்லை (குறள் 2)

3. தனது திருவடியைச் சேர்ந்து, தன்னை வணங்குவோருக்கு நீடிய வாழ்வினைக் கொடுக்க வேண்டுமென எண்ணுகின்ற குணமாகிய பூரண அன்புடைய பகவனது திருவடியில் நின்று அவரை வணங்காதவனது தலை, புலனறிதற்குரிய பொறியில் வாலறிவினைப் பெற்றுக்கொள்ளும் வலியின்மையால் நீடிய வாழ்விற்குரிய பொய்யற்றுத் தீர்ந்த அறமாகிய மெய்யறிவினைப் பற்றிக்கொள்ளும் நற்குணம் எதுவும் இல்லாது நீங்கி விடும். (குறள் 9)

4. வான் ஒழுக்கத்தை நீத்து, நிறைமொழி மாந்தராகி இருமை வகை தெரிந்து, அறம் பூண்டு ஐந்தின் வகை தெரிந்து, ஓரைந்துங் காப்பானாகி, தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்து தன் இன்னுயிரைத் துறந்து, ஐந்தவித்தானாகி, சாவு நீங்கி உயிருடன் எழுந்து செயற்கரிய செயலைச் செய்ததினால் அன்பின் உயர்நிலை அடைந்து, மீண்டும் கடவுளேயாகி, தனக்கு உவமை இல்லாதவனாய் நீடு வாழ்ந்திருப்பவரது திருவடி சேர்ந்தாருக்கு மனக்கவலையை நீக்கிவிடுவது எளிது. அல்லாதார்க்கு அரிது (குறள் 7)

5. இறைவன் பொருளாகிய பகவன் பகர்ந்த செம்பொருளாம் வாலறிவு சேர்க்கும் புகழுதற்குரிய பொய்யற்றுத் தீர்ந்த மெய்யாகிய நல்லொழுக்கம் புரிந்தார் மாட்டு முன்பு துன்பத்திற்கும், மனக்கவலைக்கும் காரணமாகி, பின்பு இறப்பாகிய இருளில் சேர்க்கும் இருவினையாகிய பொய்யின் அகவினையும் புறவினையும் சேராது. (குறள் 5)

6. மனிதருக்கு பாவமன்னிப்பு அருளும்படி பாவநிவிர்த்திக்கென்று ஆசாரிய முறைப்படியான பலியையாவது காணிக்கையையாவது

தனக்கு வேண்டுமென்று மனிதர் கைகளில் பெற்றுக்கொள்ளத் தேவை இல்லாதவனும், தம்மைத் தாமே பலியாக்குதலாகிய ஐந்தவித்தலைச் செய்ய அன்பினால் பாவமன்னிப்புக்கென்று பரிந்து பேசுகின்ற வேண்டுதலை உடையவனுமாயிருப்பவனாகிய கடவுளின் அடியைச் சேர்ந்தார்க்கு எங்குமே துன்பம் இராது.
(குறள் 4)

7. மனித மாம்ச சரீரத்தில் தன்னை ஒன்றுபடுத்தி குழந்தையாகி குமாரனாகத் தோன்றிய கடவுளின் பெருமைக்குரிய அடியினைத் தங்கள் நிலவுலக வாழ்வாகிய இம்மையில் சேர்ந்தவர் யாவரும் மறுமையாகிய நீடிய வாழ்வு அடைவர் (குறள் 3)

8. அறமாகிய பொய்தீர் ஒழுக்க நெறி எனும் வானுலக ஒழுக்கத்து நீடுவாழ்தலினால், சாவு நீங்கி என்றென்றைக்கும் உயிருடன் இருக்கும் மறுமையின் நீடிய ஆயுளுள்ளவனானதால், அறக்கடலாளனாயிருப்பவனாகிய கடவுளின் அடியினைச் சேர்ந்தார்க்கு அறமல்லாத பொய் கலந்துள்ள பிறக்கடலாயிருக்கின்ற இம்மையாகிய இவ்வுலக வாழ்வினை வாழ்ந்து கடந்து வானுலக வாழ்வாகிய மறுமையை அடைவது எளிது. அல்லாதார்க்கு அரிது.
(குறள் 8)

9. இறைவன் அடி சேர்பவர் அனைவரும், பெருங்கடல் போன்ற இம்மையாகிய இவ்வுலக வாழ்வினை வாழ்ந்து கடந்து மறுமையாகிய சிறப்புடைய வானுலக வாழ்வினை அடைவர். இறைவன் அடி சேராதார் மறுமையாகிய வானுலக வாழ்வினை அடையார்.
(குறள் 10)

10. வான் நீத்து நிலவுலகின் 'ஐந்து' என மதிக்கப்படும் நிறைமொழி மாந்தராகி சிலுவை எனும் பொறிவாயில் தம்மைத்தாமே பலியாக்கிய கடவுள் (ஐந்தவித்தான்) பொய் தீர்த்து, கற்பித்து, வலியுறுத்தும் தூய அறிவாகிய மெய் ஒழுக்க நெறிப்படி வாழ்பவர் நீடு வாழ்வார்.
(குறள் 6)

வான் சிறப்பு கூறியதன் நோக்கம்

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் இயற்றிவைத்துள்ள குறட்பாக்கள் உணர்த்தும் மேலே கண்டறிந்த கருத்துகளை நோக்க, நிலவுலகில் வாழும் மக்கள் யாவரும் சிறப்புடைய வானுலகின் நீடுவாழ்வை அறியாமல், நிலமிசை வாழ்வே பெரிதென்று எண்ணி,

இருள்சேர் இருவினைப் பயனாக அறமல்லாத பிறவாகிய பொய் ஒழுக்கத்தினால் எங்குமே துன்பம் அடைந்து, நிலமிசை நீடுவாழ்வை இழந்து இறப்பதினால் மனக்கவலையுடன் வாழ்ந்து வருகின்றனர் என பூவுலக மக்களின் வாழ்நிலையினைத் திருவள்ளுவர் நன்கு அறிந்துள்ளார் என்று அறியலாம்.

ஆகவே, மக்கள் யாவரும் துன்பம் நீங்கி மனக்கவலையற்ற நீடுவாழ்வு அடைவதற்கு அவர் விருப்பங்கொண்டு, நிலவுலக வாழ்வினும் வானுலக வாழ்வே நீடுவாழ்வுடையது என அவர்களுக்கு உணர்த்தி, நிலவுலகினும் வானுலகே சிறப்புடையது என அறிவுறுத்த எண்ணி வான் சிறப்பையும் கூறியுள்ளார் என்றும் அறியலாம்.

நிலவுலக மக்கள் நீடு வாழ்வு அடைவதற்கென்று கடவுள் வான் நீத்தார் என்ற செய்தியைத் திருவள்ளுவர் மக்களுக்குக் கூறி, மக்களனைவரும் வான் நீத்த கடவுளின் அடியைச் சேர்ந்து அவர் கற்பித்துத் தருகின்ற மெய் ஒழுக்க நெறிப்படி வாழ்ந்து அவரைத் தொழுது வணங்கினால் அவர் அருளால் மனக்கவலை மாறும், துன்பம் இராது, நீடுவாழ்வு பெறலாம். ஆகவே, வான் நீத்து, குழந்தையாக குமாரனாகத் தோன்றிய கடவுளின் திருவடியினைச் சேருங்கள் என்று போதனை தந்து இறைவனோடு மனிதரை ஒருமனப்படுத்தி சேர்க்க முனைந்துள்ளார் என்றும் தெளிவாக அறியலாம்.

கடவுள் வாழ்த்துக் கூற முனைந்த திருவள்ளுவர் வாழ்த்துக்குரிய பெருமைமிக்க கடவுளோடு மனிதரை சேரும்படி அழைத்து, போதிக்கும் அறிவுரையைக் கடவுள் வாழ்த்துப் பகுதியில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

எனவே, மனிதர் யாவரும் கடவுளோடு மனம்பொருந்தி அவரைத் தொழுது, வணங்கி, அவர் கற்பிக்கும் மெய் ஒழுக்க நெறிப்படி வாழ்வதையும், அங்ஙனம் போதிப்பதையுமே கடவுள் வாழ்த்தாகத் திருவள்ளுவர் கருதியுள்ளார் என எண்ணித் துணியலாம்.

19. கிறித்தவர் சமயப் புனித நூலில் நீடுவாழ்வு

திருவள்ளுவர் திருக்குறள் எனும் தனது நூலில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இயற்றிவைத்துள்ள,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்" - குறள் 3

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்" - குறள் 6

எனும் இவ்விரு குறட்பாக்களிலும் நீடுவாழ்தல் பற்றிக் கூறியுள்ளார்.

நீடுவாழ்தல் என்பது மனிதர் தங்கள் வாழ்நாட்களாகிய ஆயுட்காலம் நீடித்து நீண்டகாலம் வாழ்வதாகும். மனிதர் நீடுவாழ்வதற்கு வள்ளுவர் அறிவுரை கூறியுள்ளதால் நீடுவாழ்வு உண்டென்று வள்ளுவர் நம்பினார் என அறியலாம். வள்ளுவர் நம்பின நீடுவாழ்வு வான் நீத்து வந்த கடவுளால் அருளப்படுவதெனவும் விளங்குகின்றது. ஆகவே, வான் நீத்து நிலமிசை வந்த கடவுளாகிய கர்த்தர் என்னும் இயேசு கிறித்துவை விசுவாசித்து வாழும் அவருடைய சீடர்களாகிய கிறித்தவர்களின் சமய நூலில் கூறப்பட்டுள்ள வாழ்வு பற்றிய திருவசனங்கள் நோக்குதற்குரியன.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற
தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன்
தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக"[221]

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற
தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ
நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர்
உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும்
உன் தாயையும் கனம்பண்ணுவாயாக."[222]

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும்
தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருக்கும்படி, குறையற்ற

221) யாத்திராகமம் 20 : 12
222) உபாகமம் 5 : 16

சுமுத்திரையான நிறைகல்லும், குறையற்ற சுமுத்திரையான படியும் உன்னிடத்தில் இருக்கவேண்டும்"[223]

"வழியருகே ஒரு மரத்திலாவது, தரையிலாவது குஞ்சுகளாயினும், முட்டைகளாயினுமுள்ள ஒரு குருவிக்கூடு உனக்குத் தென்படும்போது, தாயானது குஞ்சுகளின் மேலாவது முட்டைகளின் மேலாவது அடைகாத்துக்கொண்டிருந்தால், நீ குஞ்சுகளோடே தாயையும் பிடிக்கலாகாது.

தாயைப் போகவிட்டு, குஞ்சுகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம்; அப்பொழுது நீ நன்றாயிருப்பாய்; உன் நாட்களும் நீடித்திருக்கும்."[224]

". . . . . கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும், பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படிக்கு,

நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி; உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து,

அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக."[225]

"அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில், விருட்சத்தின் நாட்களைப் போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்."[226]

"உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது"[227]

---

223) உபாகமம் 25 : 15
224) உபாகமம் 22 : 6, 7
225) உபாகமம் 11 : 18, 19, 20
226) ஏசாயா 65 : 22
227) எபேசியர் 6 : 2, 3

"நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும், நான் உனக்கு விதிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளையும், கட்டளைகளையும் கைக்கொள்ளுகிறதினாலே உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி,

நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலே கைக்கொள்ளுவதற்காக, உங்களுக்குப் போதிக்க வேண்டும் என்று உங்கள் தேவனாகிய கர்த்தர் கற்பித்த கற்பனைகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே"[228]

"அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப்பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன்; இப்படிச் செய்வதினால், தானும் தன் குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் ராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள்."[229]

"பாவி நூறு தரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன ? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்.

துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால் நிழலைப்போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை."[230]

"அவர் உம்மிடத்தில் ஆயுசைக் கேட்டார்; நீர் அவருக்கு என்றென்றைக்குமுள்ள தீர்க்காயுசை அளித்தீர்"[231]

"ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்; அவர் வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும்."[232]

"நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்."[233]

"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்."[234]

---

228) உபாகமம் 6 : 1, 2
229) உபாகமம் 17 : 20
230) பிரசங்கி 8 : 12, 13
231) சங்கீதம் 21 : 4
232) சங்கீதம் 61 : 6
233) சங்கீதம் 91 : 16
234) சங்கீதம் 23 : 6

"நன்மையைக் காணும்படி ஜீவனை விரும்பி நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்?"[235]

"என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது.

அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும்."[236]

"என் மகனே, கேள் என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்; அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும்."[237]

"கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப் பண்ணும். . . . ."[238]

"ஞானம் தன் வீட்டைக்கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து,

. . . .

. . . .

. . . .

புத்தியீனனை நோக்கி : எவன் பேதையோ அவன் இவ்விடத்தில் வரக்கடவன்

. . . .

. . . .

. . . .

. . . .

. . . .

. . . .

என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்."[239]

என்றவாறு கிறித்தவர் சமய நூலின் பழைய ஏற்பாடு எனும் முதல் பகுதியில் கூறப்பட்டுள்ள பல திருவசனங்களில் நீடுவாழ்வு பற்றிய கருத்துகளைக் கண்டறியலாம்.

---

235) சங்கீதம் 34 : 12
236) நீதிமொழிகள் 3 : 1, 2
237) நீதிமொழிகள் 4 : 10
238) நீதிமொழிகள் 10 : 27
239) நீதிமொழிகள் 9 : 1-11

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஜீவ அப்பம் நானே.

உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்.

இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே,

நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

. . . .

. . . .

. . . .

என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.

. . . .

. . . .

. . . .

ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.

வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த *மன்னாவைப் போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.[240]

"ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."[241]

---

(240) யோவான் 6 : 47-58
(241) யோவான் 8 : 51
* மன்னா - பக்கம் 192 இணைப்பு II காண்க

"இயேசு . . . . நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;"

உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவசிக்கிறாயா என்றார்.[242]

"நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்"[243]

"தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்வான்."[244]

என்றவாறு இயேசு கிறித்துவின் பல திருவசனங்கள் நீடுவாழ்வு பற்றிக் கூறுவனவாகக் கிறித்தவரின் சமயப் புனித நூலான பரிசுத்த வேதாகமத்தின் 'புதிய ஏற்பாடு' எனும் இரண்டாம் பகுதியில் காணப்படுகின்றன.

மேற்கண்ட திருவசனங்களை ஆழ்ந்து நோக்க, அவைகளில் 'உன் நாட்கள்' என்றது வாழ்நாள் என்றும், '**நீடித்திருக்கும்படி**' என்றது **நீடித்து வாழ்வது** என்றும் விளங்குகின்றது. அது நெடுநாள் என்றும், அநேக நாள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்ஙனம் கூறப்பட்டுள்ள நெடுநாள் வாழ்ந்திருக்கும் "**நீடித்த வாழ்வு**" **நீடுவாழ்வு** எனப்படும்.

மேலும், உனக்குக் கொடுக்கிற தேசத்திலே **உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு** என்றும், **பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கு** என்றும், **தங்கள் ராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள்** என்றும் காணப்படும் சொற்றொடர்கள் உணர்த்தும் வாழ்வு என்பது **நிலமிசை நீடுவாழ்வு** என்று தெளிவாக அறியலாம். அதுவே இவ்வுலக வாழ்வாதலின் இம்மை எனவும் கொள்ளப்படும்.

மேலும், மரியாமலிருக்கும்படி என்றும், என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றும், என்றென்றைக்கும் மரணத்தைக்

---

(242) யோவான் 11 : 25, 26
(243) யோவான் 4 : 14
(244) யோவான் 12 : 25

காண்பதில்லை என்றும் கூறப்பட்டுள்ளதால், அஃது உயிர் நீடித்த நாளாய் உடலை விட்டுப் பிரியாமல் நிலைத்திருப்பதைக் குறிக்கின்றது எனவும், அதுவே நீடித்து வாழ்வது எனவும் அறியலாம். அதுபோலவே, மரித்தாலும் பிழைப்பான் என்றும், என்றென்றைக்கும் பிழைப்பான் என்றும் கூறப்பட்டுள்ளதால் அது மரணத்திற்குப் பின்பு உயிர் பிழைத்து, பின்பு என்றென்றைக்கும் மரணமடையாமல், உயிருடனிருந்து நீடித்து நிலையாக வாழ்வது என விளங்குகின்றது. நிலையான அவ்வாழ்வே நித்திய ஜீவன் என்று ஈண்டு எடுத்துக்காட்டப்பட்டுள்ள திருவசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என அறியலாம். ஆகவே, அது மறுமையின் நீடு வாழ்வு என்றறியப்படுகிறது.

உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றதால், **வான் நீத்து நிலவுலகிற்கு வந்த கர்த்தராகிய இயேசு கிறித்துவை நிலமிசை (இம்மையில்) நம்பினோர் மறுமையாகிய வானுலக வாழ்வினை அடைந்து நீடுவாழ்வார்** என்னும் தெளிவு பெறலாம். நீடித்து வாழும் அக்காலத்தையே **நித்திய ஜீவகாலம்** என்று திருவசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கக் காணலாம்.

எனவே, மரணத்தைக் காணாமலும், மரித்தாலும் பிழைத்து என்றென்றைக்கும் மரியாமலும் நீடித்த நாட்களாய் (நீண்ட, நெடுங்காலமாய்) வாழும் வாழ்வு என்றறியப்படுகின்ற **கிறித்தவர் சமய நூல் கூறும் நீடிய வாழ்வினையே திருவள்ளுவர் தம் குறட்பாக்களில் நிலமிசை நீடுவாழ்வு எனக்குறிப்பிட்டுள்ளார்** எனக் கருதலாம்.

20. சிவஞானபோதம் சுட்டும் ஆதிமனிதர் ஆதாம், ஏவாள்

இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் தோன்றி வேரூன்றியுள்ள சமயம் சைவசமயம். இச்சமயத்தின் இறையியல் கொள்கைகளை விளக்கும் பதினான்கு நூல்கள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டிற்கு உட்பட்ட காலத்தில் எழுந்துள்ளன; அவை சைவ சித்தாந்த சாத்திரங்கள் என்றும், மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் வழங்கப்படுகின்றன. இவற்றுள் மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் என்ற நூலே முக்கியமானதாகப் பலராலும் பயின்று பாராட்டப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்தத்தைத் தெளிவுபெற விளங்கிக்கொள்ள கிறித்தவ அறிஞர்கள் பலர் அதனை ஆர்வமுடன் பயின்று நூற்களும் எழுதியுள்ளனர். சிவஞானபோதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்து அறிவது அவசியமென்று அவர்கள் உணர்த்தியுமுள்ளனர். சைவசித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் தலைமையானதாக விளங்குகின்ற சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களாலானது.

"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என்பது சிவஞானபோதத்தில் காணப்படும் முதல் சூத்திரமாகும்.

அவன் அவள் அது என இச்சூத்திரத்தில் காணப்படுகின்ற சொற்களைச் சுட்டுச்சொற்கள் என்பர் அறிஞர். அவை சுட்டும் பொருள் யாது என அறிந்து தெளிதல் அவசியமாகின்றது.

'**அவனி**' என்பதற்குப் '**பூமி**' என்பது பொருள் பூமியைப் பெண்ணாகக் கருதி பூமித்தாய் என வழங்குவது மரபு. பூமியைப் பெண்பாலினத்ததாகக் குறிப்பிடுவதற்குரிய **அவனி** எனும் சொல் '**இ**' என்னும் பெண்பால் விகுதியுடையதாக அமைந்துள்ளது.

அனைத்து உயிர்களுக்கும் தாய் எனக் கருதப்படும் பூமியின் மண்ணினாலே ஆதிமனிதன் உருவாக்கப்பட்டான் என்று கிறித்தவர் சமயத் திருவசனங்களை எடுத்துக்காட்டி முன்னர் விளக்கப்பட்டது. ஆகவே, ஆதிமனிதன் அவனியிலிருந்து எடுக்கப்பட்ட மண்ணினாலே

உருவாக்கப்பட்டான் என்று கொள்ளலாகும். ஆகவே, ஆதிமனிதனை ஆண்பாலினமாகக் குறிக்கும் பொருட்டு **அவனி** எனும் சொல்லின் பெண்பால் விகுதியாகிய 'இ' என்னும் உயிரீறு நீக்கப்பட்டு அச்சொல் **அவன்** என்றாகியுள்ளது. ஆதிமனிதன் அவனியிலிருந்து எடுக்கப்பட்டபடியினால் **அவன்** என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளான். **அவனே ஆதாம்** என்று கிறித்தவர் சமயப் புனித நூலாகிய பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளான்.

> "ஆதாம் என்பது எபிரெய பாடம். ஆதாம்
> என்பதற்கு மண்ணால் ஆனவன் என்பது பொருள்"[245]

என்று திருவிவிலியத்தில் விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆகவே, பூமியின் மண்ணால் உருவாக்கப்பட்ட ஆதிமனிதனே **எபிரெய மொழியில் 'ஆதாம்'** என்றும், **தமிழ் மொழியில் 'அவன்'** என்றும் வழங்கப்படுகிறான் என அறியலாம்.

இங்ஙனம் விளங்கும் காரண காரியம் பற்றியே அவன் அவள் எனும் சொற்கள் ஈண்டுப் பகுத்து ஆராயப்படுகின்றன.

அவன் எனும் சொல்லை '**அவ + அன்**' என்று பகுத்தறியலாம். '**அவ**' என்பதற்கு **நீக்கம்** என்றும், **நீக்கம்** என்பதற்குப் **பிரிவு** என்றும் கழகத் தமிழ் அகராதியில் பொருள் கண்டறியலாம். ஆகவே, '**அவ**' என்பதற்கு ஈண்டுப் **பிரித்தெடுக்கப்பட்ட** என்று பொருள் கொள்ளலாகும்.

பூமியைத் தாய் என்பர். தாயை அன்னை எனவும் அழைப்பர். ஆகவே, பூமியை அன்னை எனலாம்.

அன்மையம் - சரீரம், உடல்
அன்னயம் - உடல், தேசம், போசனமுள்ளது
அன்னவன் - அவன்
அன்னன் - அவன்
அன்னான் - அவன்
அன்னோன் - அவன்

மேலே கண்ட சொற்கள் அனைத்தும் 'அன்' என்பதன் அடியாய்த் தோன்றி அமைந்திருப்பவையே. ஆகவே, 'அன்' என்பது ஆண்பால் மனித உடலைக் குறிக்கும் எனத் தெளியலாம். அதுவே ஆண்பால் விகுதியாகவும் பயன்படுவது குறிப்பிடத்தக்கது.

---

245) திருவிவிலியம் (பொதுமொழிபெயர்ப்பு (95, 96)
அடிக்குறிப்பு பக்கம் 2

ஆகவே, **அவ + அன் = அவன்** என்பது பூமியாகிய அன்னையிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட மண்ணால் உருவாக்கப்பட்ட உடலையுடைய ஆதிமனிதனைக் குறிக்கும் என அறியலாம்.

அவள் எனும் சொல்லை **அவ+அள்** எனப்பகுத்தறியலாம். '**அவ**' என்பதற்குப் **பிரித்தெடுக்கப்பட்ட** எனப்பொருள் கொள்ளலாகும் என்பது மேலே விளக்கப்பட்டுள்ளது.

'**அள்**' என்பது பெண்பால் விகுதி. '**அள்**'* என்பதற்குக் கன்னம், காது, எனும் உடல் உறுப்புகள் பொருளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. **அள்ளு** ** எனும் சொல்லே **அள்** எனவும் குறிக்கப்படுகிறது. **அள்** *** என்பதற்கும், **அள்ளு** **** என்பதற்கும் **விலா எலும்பு** என்பது பொருள்.

அள்ளை ***** என்பதற்கு **விலாப்புறம்** என்பது பொருள். ஆகவே, **அள்** என்பதற்கு **உடல் உறுப்புகளில் ஒன்றாகிய விலா எலும்பு** என்பது பொருளாகும். ஆகவே,

அவ + அள் = அவள்

என்பதற்குப் **பிரித்தெடுக்கப்பட்ட விலா எலும்பு** என்று பொருள் கொள்ளலாகும்.

ஆதிமனிதன் ஆதாமை உருவாக்கின கர்த்தர் அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்தார் என்றும் தாம் மனிதனில் எடுத்த விலா எலும்பை மனிதப் பெண்ணாக உருவாக்கினார் என்றும் கிறித்தவர் சமயப் புனித நூலில் கூறப்பட்டுள்ளது. இது முன்னரும் எடுத்துக்கூறப்பட்டது. ஆகவே, அவள் எனும் சொல் அவன் எனும் சொல்லால் சுட்டியறியப்படும் ஆதிமனிதன் ஆதாமிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட விலா எலும்பினால் உருவாக்கப்பட்ட அவன் மனைவியைக் குறிக்கும் எனக் கருதலாம்.

---

* நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதி 1984

** நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழியகராதி 1984

*** செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி முதன் மடலம் - முதற்பகுதி 1985

**** 1. Tamil Lexicon - supplement University of Madras 1939
2. செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகரமுதலி முதன் மடலம் - முற்பகுதி 1985 தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை
3. பெருஞ்சொல்லகராதி - தொகுதி 1988 - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***** Tamil Lexicon supplement University of Madras 1939

“ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்”[246]

“**ஏவாள்** எனும் சொல்லும் ‘**அவள்**’ எனும் சொல்லும் ஒலி ஒப்புமையுடையவையே. மேலும் ‘அவள்’ எனும் சொல் உலகின் முதல் மனிதனின் மனைவியைக் குறிக்கிறது என அறியப்படுவதால் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் எனக்கொள்வது ஏற்புடையதே. சிவஞானபோதத்தின் பன்னிரண்டு சூத்திரங்களாலும் கூறப்படும் முழுக்கருத்தினையும் ஆராய்ந்து அறிய ‘அவன்’ எனும் சொல் உலகின் முதல் மனிதனாகிய ஆதாமையும், ‘அவள்’ எனும் சொல் ஆதாமின் விலாவிலிருந்து எடுத்து உருவாக்கப்பட்டவளும், ஜீவனுள்ளோருக் கெல்லாம் தாயாயிருப்பவளுமாகிய ஆதிமனிதன் மனைவி ஏவாளையும் சுட்டிக்காட்டும் என்பது மேலும் தெளிவு பெறும்.

அவன், அவள் எனும் சொற்களை இலக்கண முறையால் சுட்டுச் சொற்கள் என்பர். ஆயினும், ஈண்டு அவற்றை ஆராய்ந்து அறிந்த தெளிவினால் ‘அவனி’ எனும் பூமியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மண்ணினாலே உண்டாக்கப்பட்டவன் என்ற காரண காரியத்தைப் பற்றியதே ‘அவன்’ என்ற சொல் எனவும், பிரித்தெடுக்கப்பட்ட விலா எலும்பினால் உண்டாக்கப்பட்டவள் என்ற காரண காரியத்தைப் பற்றியதே ‘அவள்’ எனும் சொல் எனவும் அறியப்படுகின்றன. ஆகவே, அவன், அவள் எனும் சொற்கள் ஆதிமனிதனுக்கும், அவன் மனைவிக்கும் வழங்கப்பட்ட காரணப் பெயர்களே என விளங்குவதால் அவை காரணப் பெயர்ச்சொற்களே எனலாம்.

அவன் (ஆதாம்) அவள் (ஏவாள்) எனும் இருவரும் உலகின் முதல் மனிதர் என்பதால், அவர்கள் தனித்தனியே சுட்டியறியப்படுவதற்கென்று வேறு சொற்கள் ஏதும் அவசியமில்லாததினால் அவர்களுக்கே உரிய காரணப் பெயர்களால் மட்டுமே அவர்கள் சுட்டியறியப்பட்டிருத்தல் இயல்பே. அதுபோல அச்சொற்களாலேயே அவர்களது சந்ததியாரும் சுட்டியறியப்படுதல் இயல்பே. அங்ஙனம் அவர்களது சந்ததியார் சுட்டியறியப்பட்ட மரபுவழி பயன்பாட்டாலேயே அக்காரணப் பெயர்ச்சொற்கள் ஆதாம், ஏவாள் ஆகிய இருவருடைய காலத்திற்குப் பின்னர் சுட்டுச் சொற்கள் என்ற இலக்கண முறைக்கேற்ப வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம்.

---

246) ஆதி 3 : 20

21. பாவம் என்பது மலம் என்னப்பட்டது ஏன்?

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரோடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

என்பது சிவஞானபோதத்தில் காணப்படும் பன்னிரண்டாம் சூத்திரமாகும்.

இச்சூத்திரத்தில் ஆளப்பட்டுள்ள '**மலம்**' எனும் சொல் குறிப்பிடத்தக்கதாகும். முதலாம் சூத்திரத்தில் '**மலத்துளதாம்**' என்றும், நான்காம் சூத்திரத்தில் '**சகசமலம்**' என்றும், பத்தாம் சூத்திரத்தில் '**மலமாயை**' என்றும் சொற்கள் காணப்படுகின்றன. இங்ஙனம் சிவஞான போதத்தில் ஆளப்பட்டுள்ள '**மலம்**' எனும் சொல் உணர்த்தும் பொருள் யாது என அறிதல் அவசியம்.

'**மலம்**' என்பதற்கு '**அழுக்கு**' என்ற பொருளே பல அகராதிகளில் பொதுவானதாகக் காணப்படுகின்றது. அஃது உடலின் உறுப்புகளினின்று வெளியேற்றப்படும் வியர்வை போன்ற கழிவுப் பொருட்களைக் குறிப்பிடுகின்றது. ஆயினும், பெரும்பாலும் ஆசன வழியே வெளியேறும் கழிவே மலம் என மக்கள் அறிவர். இங்ஙனம் கழிவுப் பொருளைக் குறிக்கும் மலம் எனும் சொல்லை மெய்கண்டார் சிவஞானபோதம் எனும் ஆன்மீக நூலில் ஆண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலம் என்பதற்கு **அழுக்கு** என்பது பொதுவான பொருளாகக் கூறப்பட்டிருப்பினும் அதற்கு வேறு பொருட்களும் கூறப்பட்டுள்ளன.

மலம் - பந்தம், பாவம், எனவும்

மலம் - குற்றம், தீவினை

எனவும் பொருள்கள் கூறப்பட்டுள்ளன எனக் கண்டறியலாம். கழகத் தமிழ் அகராதியில் **மலம்** என்பதற்குப் **பாவம்** என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது.

சமய அறிஞர்கள் **மலம்** என்ற சொல்லிற்குப் **பாவம்** என்றே பொருள் கூறுவர். ஆகவே,

'**மலத்துளதாம்**' என்றது **பாவத்தில் உள்ளது** என்பதாகும்.

சகசம் என்பதற்கு **உடன் பிறந்தது** என்பது பொருள். ஆகவே, **சகசமலம்** என்றது **மனிதருடனிருப்பதுவாகிய பாவம்** என்பதாகும். **மாயை*** என்பதற்குப் **பொய்** என்றும் **வஞ்சம்** என்றும் பொருள். ஆகவே, **மலமாயை** என்றது **பொய்யாகிய வஞ்சனையுள்ள பாவம்** என்பதாகும்.

ஆணவம், காமியம், மாயை எனும் இவை மூன்றும் மலம் என அபிதான சிந்தாமணியில் பொருளாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே, இவ்வுலகில் பிறக்கும் மனிதருடன் உள்ளத்தில் கலந்திருப்பனவாகிய ஆணவம், காமியம், வஞ்சனையுள்ள பொய்யாகிய மாயை ஆகியனவற்றிற்கு அம்மனிதரின் ஆசன வழியேயும், மற்றுள்ள உறுப்புகளின் வழியேயும் வெளியேற்றப்படும் கழிவுப் பொருளாகிய 'மலம்' ஒப்புமையாகச் சொல்லப்பட்டுள்ளது என அறியலாம்.

நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் அனைத்தும் **தரா** எனப்படும் பூமியின் அல்லது நிலத்தின் விளை பொருட்களே. தராவின் விளை பொருட்களாகிய இலைக்கறி, காய்கறி, கனிகள், தானியங்கள் ஆகியவற்றையே மனிதர் உணவாக உட்கொண்டு, உடலைப் பேணி, உருவாகி உயிர் வாழ்கின்றனர். மனிதர் அவ்வுணவுப் பொருட்களை உண்டபின் அவை செரிமானமடைந்து அவற்றில் காணப்படும் சத்துப்பொருட்கள் உடலுக்கு ஊனாகவும், தேவையான சக்தியாகவும் மாற்றப்பட்டு விடுகின்றன. சத்து அல்லாதனவாகிய அசத்துப் பொருட்களே எஞ்சிய கழிவுப் பொருளாக வெளியேற்றப்பட்டு, மலம் என்று சொல்லப்படுகிறது.

உடலுக்கு ஊனாகவும் சக்தியாகவும் மாற்றப்படும் சத்துப் பொருட்களும் கழிவாகிய மலமாக வெளியேறும் அசத்துப் பொருளும் நாம் உண்ணும் உணவில் ஒன்றோடொன்று பிரித்தறியப்படா நிலையில் கலந்திருப்பவையே. உட்கலந்திருக்கும் சத்து இன்னதென்றும் அசத்து இன்னதென்றும் பிரித்தறியாமல் நாம் உட்கொள்ளும் உணவை நம் சரீரமே பகுத்து அறிந்து மலத்தை வெளியேற்றுகின்றது. அங்ஙனம் மலம் வெளியேற்றப்படாதிருந்தால், குற்றம் உண்டாகி தீமை பயக்கும். உடல் ஆரோக்கியம் கெடும். நோய் உண்டாகும். பின் சாவும் உண்டாகும்.

ஆதிமனிதனை உருவாக்கிய கடவுள் அவனுக்கென்று உண்டாக்கின தோட்டத்தில் முளைத்த நன்மை தீமை இன்னதென்று அறியத்தக்க விருட்சத்தின் கனியில் நன்மையோடே தீமையும் கலந்திருக்கக் கண்டு, அதனை உண்ண வேண்டாம் என அக்கனியை அவனுக்கு விலக்கியிருந்தார். ஆயினும், சர்ப்பமானது தந்திரமாய் ஆதாமின்

* வின்சுலோவின் தமிழ் - ஆங்கில அகராதி 1995

மனைவியை வஞ்சித்ததால் அவர்கள் தேவன் விலக்கின மரத்தின் பழத்தைப் பறித்து, புசித்தனர். தரையில் முளைத்த மரத்தின் கனியில் நன்மையோடு கலந்திருந்தது தீமையாதலால் அது **தராவிடம்** என்று முன்னர் விளக்கப்பட்டது. **தராவிடம்** ஆகியிருந்த அக்கனியை ஆதிமனிதன் ஆதாமும் அவன் மனைவியும் புசித்ததனால் அவர்களது ஆயுள் சிதைந்து சாவு எய்தினர். அவர்களது சாவுக்குக் காரணமாய் **நன்மையோடே கலந்திருந்த தீமையை மலம்** எனலாம். அம்மலத்தின் தீய பலனாகிய சாவு நேரிடக் காரணமாயிருந்தது சர்ப்பத்தின் வஞ்சனையுள்ள பொய் வார்த்தையாகிய மாயையே. அம்மாயை அவர்கள் உள்ளத்தில் கலந்து ஆசையைத் தூண்டியதாலேயே கடவுள் அவர்களுக்குச் சொல்லியிருந்த கட்டளையினை மீறி செய்யக்கூடாத பொய் ஒழுக்கத்தைச் செய்தனர். அதுமுதல் மெய் ஒழுக்கமாக இறைவன் கற்பிக்கும் கட்டளையாகிய அறப்போதனையை அவர்கள் மீறிச் செயல்படுவதே, உலகின் முதல் கண்ணோட்டத்தில் பாவை (கண், பெண்-ஏவாள்) வழியாக உலகின் மாயையைப் பற்றிக் கொண்ட தீய செயலால் மனிதரில் நிலைத்துநிற்கும் பாவமாகும். ஆகவே, மனிதருள்ளத்து நன்மையோடே பாவமும் கலந்திருப்பதால் அப்பாவத்தை மலம் எனக் கருதியே இவ்வொப்புமை கூறப்பட்டுள்ளது என விளங்குகிறது.

உலகில் நிலைத்துவிட்ட அப்பாவத்தைப் போக்குவதற்கு வேண்டியே **கடவுள் வான் நீத்தார்.** ஆகவே, அவரது திருவடியைச் சேரவேண்டும் என்கிறார் திருவள்ளுவர். பாவமாகிய மலமே வான் நீத்த கடவுளின் திருவடியைச் சேர விடாமல் மனித்ரைத் தடுக்கிறது. ஆகவே, அம்மலத்தைக் கழுவிப் போக்க வேண்டும் என்கிறார் சிவஞானபோதத்தின் ஆசிரியர் மெய்கண்டார். அம்மலமாகிய பாவத்தை நீக்கி மனிதரை சுத்திகரிப்பதற்காகவே **கர்த்தராகிய இயேசு கிறித்து** என்னும் **உலக ரட்சகர் (மீட்பர்) தமது இரத்தத்தைச் சிந்தினார்** என்று கிறித்தவரின் பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. பாவ மன்னிப்புக்கென்று இரத்தம் சிந்துவதற்கு அவர் தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்ததால் அவரை '**ஐந்தவித்தான்**' என்று திருக்குறள் பாயிரத்தில் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். நிறைமொழி, மாந்தராகி ஐந்தவித்தலாகிய தம்மைத்தாமே பலியாக்குதலாகிய செயற்கரிய செயலைச் செய்தற்குக் குமாரனாகத் தோன்றிய இயேசு கிறித்து குழந்தையாகப் பிறந்ததை '**மலர்மிசை ஏகினான்**' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். மலர் என்று திருவள்ளுவரால் குறிப்பிடப்பட்ட **இயேசு கிறித்துவையே செம்மலர்** என்று மெய்கண்டார் சிவஞானபோதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

இந்தியா ஒரு பழம்பெரும் நாடு. இந்நாட்டவர் திராவிடர். அவர்கள் பேசிய மொழி தமிழ். தமிழர்களாகிய திராவிடர்களே இந்தியா முழுவதிலும் வாழ்ந்து வந்தனர். ஆகையால், இந்தியா ஒரு திராவிட தேசம் என்றும், 'தமிழ்த் தேசம்' என்றும் சிந்துசமவெளி மற்றும் பல ஆராய்ச்சி முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. உலகின் முதல் மனிதன் ஆதாம். அவன் தோன்றியது திராவிட இந்தியாவில் எனக் கருதப்படுகிறது. ஆதாமுக்கென்று தேவன் உண்டாக்கி அவனை வைத்திருந்த தோட்டம் '**திரமிடம்**' எனப்படும் முத்தியாகும்.

கடவுள் ஆதாமுக்கென்று உண்டுபண்ணின தோட்டத்தில் முளைத்த நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியில் நன்மையோடே கலந்திருந்த தீமை '**நஞ்சு**' எனப்படுகிறது. திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் வழியாக ஆதிமனிதன் ஆதாம் நஞ்சுண்டமைந்தவன் என உலகிற்கு அறிவிக்கப்படுகிறது. அவன் உண்ட 'நஞ்சு' 'தரா' எனும் நிலத்தின் விளைபொருளானதால் 'தராவிடம்' என்னப்பட்டது. ஆகவே, அதனை உண்ட **ஆதாம் ஒரு திராவிடன்** என்று அழைக்கப்படுகிறான். அவன் மனைவியும் அத்தராவிடம் உண்டவள்ாகையால் அவர்கள் இருவரும் திராவிடர் என்றறியப்படுகின்றனர். ஆகவே, அவர்களின் வழித்தோன்றல்களாகிய சந்ததியினர் அனைவரும் திராவிடரே.

திராவிடன் எனல் இழிவல்ல. அதுவே இறைநோக்கிற்கு முதன்மையுடைத்தாகும். 'திராவிடம்' என்பதும் 'திராவிடர்' என்பதும் ஆன்மீக நம்பிக்கையில் எழுந்த காரணப் பெயர்ச் சொற்களே. திராவிட வம்சாவழியினர் கொண்டுள்ள இவ்வான்மீக நம்பிக்கையை திராவிடர் விசுவாசம் எனலாம். அவ்விசுவாசத்தின் மேலெழுந்த ஆன்மீகத்தையும் அவ்வான்மீகச் சிந்தனையாளர்களின் நாகரீகத்தையும் சிதைக்க முற்பட்டு இவர்மேல் படையெடுத்து வந்த மாற்றாரே பிற்காலத்தில் இவர்தம் நம்பிக்கையையும், இறை உறவையும், பக்தி வாழ்வையும் இழிவுபடுத்த எண்ணி பழித்தும், இழிந்தும் திராவிடர் அடியொற்றிய கருத்துக்கள் அனைத்திற்கும் இழிபொருள் கற்பித்தனர் எனவும் மெய்ப்பொருள் கூற மறுத்து மறைத்தனர் எனவும் கருதலாம்.

பூமி முழுமைக்கும் படைக்கப்பட்டவன் ஆதிமனிதன் ஆதாம் ஒருவனே. ஆதலால் அவன் வழித்தோன்றிய வமிசவழியினரே பூமி மீதெங்கும் ஒரே இனமாகக் குடியிருந்தனர் எனலாம். உலகின் முதல்

மனிதன் திராவிடன் என்பதால் அவன் வழித்தோன்றிய இனம் திராவிட இனமே. அவர்தம் ஆன்மீக நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளாத மாற்றுக் கருத்துடையோர் பிற்காலத்தில் அவர்களிலிருந்து தங்களை வேறுபடுத்தி, பிரித்தறிய விரும்பி தங்களை வேறு இனமாகக் குறிப்பிட்டிருக்கலாம்.

இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் ஒருவனே என்பதால் பூமியெங்கும் ஒரே மொழியே பேசப்பட்டிருந்தது (ஆதி 11:1,6) எனக் கிறித்தவர் சமயநூல் கூறும் செய்தியை உறுதியாகக் கொள்ளலாம். அம்மொழி, படைக்கப்பட்ட ஒரே மனிதனாகிய ஆதாமின் தனிமையில் எழுந்த மொழி என்பதால், அது தமிழ் மொழி என்னப்பட்டது. அதுவே உலகின் முதல் ஆன்மீக மொழி எனலாம். ஒரே ஆன்மீக மொழி என்பதாலும், இறைவனோடு முதன்முதல் மனிதன் உறவாடிய மொழி என்பதாலும் தமிழ் ஒரு தூய ஆன்மீக மொழி எனலாம்.

உலகின் முதல் மனிதன் ஆதாம் ஒரு திராவிடன். அவனே திராவிடர்களின் ஆதி தகப்பன். அவன் வழித்தோன்றிய ஆன்மீகம் திராவிடர் ஆன்மீகம் எனப்படும். அவன் வழித்தோன்றிய நாகரிகம் திராவிடர் நாகரிகம் ஆகும். திருவள்ளுவர் கூறியுள்ள கண்ணோட்டம், நாகரிகம் என்பவைகள் உணர்த்துவது திராவிட ஆன்மீகத் தொடர்பான செய்தியே. நாகரிகம் வேண்டி ஆதிமனிதர் கண்ணோட்டத்தில் தவறியதால் அவர்கள் வழி உலக மக்கள் இழந்த நிலமிசை நீடுவாழ்வை அவர்கள் மறுபடியும் பெற்றுக்கொள்வதற்கேற்ற வழிமுறையாகிய அறம் எனும் மெய் ஒழுக்கநெறியைப் போதிப்பதற்கு எழுந்ததே திருக்குறள். ஆகவே, நஞ்சுண்டமைந்த திராவிடர் நம்பிக்கையை மையக் கருவாக்கியே மீட்புச் செய்தியை அறிவித்து அறன் வலியுறுத்துகிறார் திருவள்ளுவர். ஆகவே, திருக்குறள் ஒரு ஆன்மீக நூல் என்பதும் அவ்வான்மீகம் கிறித்தவர் சமயச் சிந்தனையே என்பதால் திருக்குறள் ஒரு கிறித்தவ நூல் என்பதும் தெளிவு

திராவிடன் வழித்தோன்றியமையாலும், திராவிடம் பற்றிய நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததாலும் கிறித்தவரின் முன்னோரின் சிந்தனையைத் திராவிடர் ஆன்மீகச் சிந்தனை எனலாம். திராவிடர் யாவரும் திரமிடர் ஆவதே இறைநோக்கம். இழந்து போனதைத் தேடிக் கண்டடைவதே கிறித்துவின் சிந்தை. ஆகவே, திராவிடர் ஆன்மீக அடிப்படையில் திரமிடம் நோக்கி எழுந்த ஆன்மீகம் என்பதால், கிறித்தவர் ஆன்மீகம் என்பது திரமிடர் ஆன்மீகம் என்றழைக்கப்படலாம். திருவள்ளுவர் தனது நூலாகிய திருக்குறளில் கிறித்தவர் சமயச்

செய்தியைக் கூறுவதால் கிறித்தவ நூல் எனப்படுவதுபோல திருக்குறள் ஒரு திரமிடர் ஆன்மீக நூல் எனவும் வழங்கப்படலாம்.

திராவிடர் நாகரிகத்திற்குக் காரணமாயிருப்பது திராவிடர் ஆன்மீகத்தில் எழுந்த நிலமிசை நீடு வாழ்வு பற்றிய விருப்பாகும். அது நன்மையும், தீமையும், வாய்மையும், பொய்மையும் இன்னதென்று பகுத்தறியும் செயலாகிய கண்ணோட்டம் உடைத்தாகும். பொய்மையும் தீமையும் தீர்த்து மெய் ஒழுக்க நெறியைக் கற்பித்து, இறைவனது மாணடியைச் சேர்ந்து வாழும் மக்களுக்கு இறைபக்தி உறவை ஏற்படுத்தி அவர்களுக்கு நீடு வாழ்வு அளிப்பது ஆன்மீகம். உலக ஆன்மீக, நாகரீக வரலாற்று ஆதிமனிதரின் உலக வாழ்வின் முதல் கண்ணோட்டம் அறிவு மயக்கமுள்ள கண்ணோட்டம் என்கிறார் திருவள்ளுவர். அதுவே உலக ஆன்மீக நாகரீக வரலாற்றுக் கண்ணோட்டம். அவ்வரலாற்றுக் கண்ணோட்டத்தைக் குறிப்பிட்டுக் கூறும் திருவள்ளுவர் உலகின் முதல் அரசனாகிய ஆதாம் ஒரு திராவிடன் என்று உலகிற்கு அறிவிக்கும் வகையில் அவன் நஞ்சுண்டமைந்த நிகழ்வினைத் தான் கண்ணோட்டம் எனும் அதிகாரத்தில் இயற்றிவைத்துள்ள,

“பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்” - குறள் 580

எனும் குறளினுள் செய்தியாக வைத்துள்ளார். ஆகவே, வரலாற்றுத் தெளிவுடன், **உலக ஆன்மீக, நாகரீக வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆதிமனிதன் ஆதாம் ஒரு திராவிடன்** என இந்நூல் வழி உலகிற்கு அறிவிக்கப்படுகிறது.

நல்வாழ்வுண்டாம் எனக் கூறும் வஞ்சமனத்தினரின் நஞ்சனைய சொற்களை நம்பி நஞ்சுண்டு ஆளுகையையும், வாழ்வையும் இழந்து ஏமாறுதல் வேண்டாம். அறிவுமயங்காமல், கருமஞ்சிதையாமல் கண்ணோடி ஆளுகையைத் திராவிடர்க்கு உரித்தாக்கிக் கொள்க என அரசாள்வோர்க்கும் மற்றுள்ள திராவிடர்க்கும் திரமிடம் நோக்குதற்குரிய அறிவுரையைத் திருவள்ளுவர் திருக்குறள் எனும் தனது நூலின் பொருட்பால் அரசியல் பகுதியில் கண்ணோட்டம் எனும் அதிகாரத்தில் இலைமறை காயாக வைத்துக்கூறுகின்றார் என்பது தெளிவடைந்த உண்மை.

திராவிடர் யாவரும் திரமிடம் எனப்படும் முத்தியாகிய வீடுபேறு அடைந்து நீடுவாழ்ந்திருக்கக் '**கடவுள் வான் நீத்தார்**' என்னும் உலக

ஆன்மீக வரலாற்றுச் செய்தியைத் திருவள்ளுவர் திருக்குறள் பாயிரத்தில் விளக்கிக் கூறியுள்ளார். அச்செய்தி கிறித்தவர்கள் நற்செய்தியாகக் கூறும் இயேசு கிறித்துவைப் பற்றிய இறைச் செய்தியேயாகும்.

ஆதியிலே தேவன் ஆதாமையும் ஏவாளையும் பூமியின் மண்ணினாலே தேவசாயலாக உருவாக்கினார். அவர்களுக்கென்று ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கினார். தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கச் செய்தார். தேவனாகிய கர்த்தர் மனிதனை நோக்கி: நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று சொல்லி, அக்கனியை விலக்கினார். சாவைத் தருமெனப்பட்டதால் அக்கனி '**விடம்**' எனவும் '**நஞ்சு**' எனவும் புலனாகிறது. அதுவே **தராவிடம்** எனவும் அறியப்படுகிறது. அக்கனியை '**நஞ்சு**' என்றே '**கண்ணோட்டம்**' எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அக்கனியைப் புசிக்காதிருக்கும்படி விலக்க தேவன் கொடுத்த கட்டளை அறக்கட்டளை எனப்படும். ஆதாமும், ஏவாளும் புசிக்கவேண்டாம் என்று தேவன் விலக்கின கனியை அவர் சொல்லிய அறக்கட்டளையை மீறி புசித்தனர். இச்செய்தி கிறித்தவர் சமய நூலில் காணப்படுகிறது. அக்கனியைப் புசித்ததனாலேயே **ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன்** என்று அழைக்கப்படுகிறான்.

தேவனுடைய அறக்கட்டளையை மீறியதால் அவர் மனிதருக்குக் கற்பித்த வாலறிவாகிய (தூய, நல்லறிவு) அறம் எனும் மெய் ஒழுக்கநிலை கெட்டு மனிதரின் வாழ்வு பொய்கலந்த பிற ஒழுக்கநிலை (பொய் ஒழுக்கம் - கூடா ஒழுக்கம்) வாழ்வாயிற்று. மனிதரின் அறன் மீறிய வாழ்வு தேவனுக்கு முன்பாகப் பாவமாகக் காணப்பட்டது. பாவம் செய்த மனிதருக்கும், பாவம் செய்வதற்கு மனிதரைத்தூண்டி, தேவனுக்கு விரோதமாய்ச் செயல்பட்ட சர்ப்பத்திற்கும் எதிராக தேவகோபம் வெளிப்பட்டு, தண்டனை உண்டாயிற்று. ஆகவே, மனிதர் தாம் வாழ்ந்திருந்த ஏதேன் என்றும், திரமிடம் என்றும் அறியப்படும் முத்தியையும், நீடுவாழ்வையும் இழந்தனர்.

மனிதரின் நல்வாழ்வாகிய நீடுவாழ்வு கெட்டுப்போவதற்கும், அவர்களுக்கு இழப்பு உண்டாவதற்கும் காரணமாயிருந்த சர்ப்பத்தின் தலையை நசுக்குவதற்குத் தேவன் தீர்மானித்தார். ஆகவே, தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து : உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும்

அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார்; அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். சர்ப்பத்தின் தலையை நசுக்குவதற்கு வரும் வித்து எனும் பொருள்பட அச்செய்தியை '**வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து**' என்று திருவள்ளுவர் தம் குறளில் குறிப்பிட்டுள்ளார். வருவார் என்று தேவனால் முன்குறிக்கப்பட்ட அவர் கடவுள் வார்த்தையாய் வானத்திலிருந்தார்.

அறன் அற்ற ஆதாமின் வழித்தோன்றல்களாகிய மனிதரின் வாழ்வை சீர்படுத்தவும், அதற்கென அறன் வலியுறுத்தவும், கெட்டுப்போனதை இரட்சிக்கவும், இழந்துபோனதைத் தேடவும், பாவத்தின் தண்டனையிலிருந்து மனிதர் மீட்கப்பட்டு, நல்வாழ்வாகிய நீடுவாழ்வை அடையும் பொருட்டு அவர்களுக்கு பாவமன்னிப்பாகிய மீட்பை அருளுவதற்கும், தராவிடத்தால் உலகில் நிலைத்துவிட்ட சாவினைப் போக்கி, நீடுவாழ்வினை அருளவும் வானத்திலிருந்த கர்த்தர் எனும் கடவுள் வானத்திலிருந்திறங்கி வந்தார் என்று கிறித்தவர் சமய நூல் கூறுகின்றது. கடவுள் வானத்திலிருந்திறங்கி இவ்வுலகிற்கு வந்த இச்செய்தியை உணர்த்த வேண்டியே '**கடவுள் வான் நீத்தார்**' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

'**கடவுள் வான் நீத்தார்**' என்றும், ஸ்திரீயின் வித்து எனப்படும் மலர்மிசை ஏகினான் என்றும், நிறைமொழி மாந்தரானார், நற்குணமெனும் அன்பின் உயர்நிலையடைந்து (மிகுதியால்) சிவிகை பொறுத்தான், ஒடு ஊர்ந்தான் (கபாலத்தலம் சென்றான்) என்றும், ஐந்தவித்தல் எனும் செயற்கரிய செயலைப் பொறிவாய் எனும் சிலுவை (சிவிகை)யில் தம்மைத்தாமே பலியாக்கியதால் நிறைவேற்றி, தன் இன்னுயிரைத் துறந்து, மரித்த பின்னும் உயிர்த்தெழுந்து, அதனால் அந்தணர் எனப்பட்டு, மீண்டும் பெருமையிற் சிறந்த கடவுளேயாகி, பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் இருப்பதால் '**அகல் விசும்புளார் கோமான் இந்திரனே**' எனப்படுகிறார் என்றும், அவரது மாணடி சேர்ந்தார் பொய்தீர் ஒழுக்க நெறி நின்று நீடுவாழ்வார் என்றும் கர்த்தராகிய இயேசு கிறித்துவைக் குறித்துத் திருவள்ளுவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

வான் நீத்த கடவுளின் பிறப்பும், இறப்பும், உயிர்ப்பும் பரமேறுதலும், மறுவருகையுமாகிய செய்தியைத் திருக்குறளில் கூறிய திருவள்ளுவர் அச்செய்தியை மறைமொழி என அவர் குறிப்பிடும் தன் குறள் மொழியினுள்ளே மறைத்துவைத்துக் கூறியுள்ளார். ஆகையால் அவர்

குறள் இயற்றிய நாட்களில் அச்செய்தியை வெளிப்படையாகச் சொல்லக் கூடாத கட்டுப்பாட்டுச் சூழல் அவருக்குத் தடையாயிருந்திருக்கலாம் எனக் கருத அஃது இடமளிக்கின்றது.

கிறித்துவாகிய இயேசுவின் பிறப்பையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும், பரம் ஏறுதலையும் ஆன்மீகச் செய்தியாகத் தீர்க்கதரிசியொருவனால் முன்னறிவிக்க இயலும். ஆனால் அதனை உலக வரலாற்றில் நிகழ்ந்து நிறைவேறின செய்தியாகக் கூறுவதற்கு அது நிகழ்ந்த காலத்திலோ அல்லது அதற்குப் பின்னரோ வாழ்ந்தவர்களால் மட்டுமே அது நிகழ்ந்ததென உறுதியாகக் கூற இயலும். அங்ஙனம் திருவள்ளுவர் இயேசு கிறித்துவின் பிறப்பும், இறப்பும், உயிர்ப்புமாகிய உலக ஆன்மீக வரலாற்றுச் செய்தியைக் கூறியிருப்பதால் அவர், கர்த்தராகிய கிறித்து என்னும் உலக இரட்சகராகிய இயேசு மக்களுக்காகப் பிறந்து, மரித்து, உயிர்த்த சமகாலத்தில் வாழ்ந்தவராகவோ அல்லது அக்காலத்திற்குப் பின்னர் வாழ்ந்தவராகவோதான் இருத்தல் கூடும். ஆகவே, திருவள்ளுவர் கிறித்துவின் பிறப்பிற்கு முன்னர் இவ்வுலகை விட்டுக்கடந்து சென்று விட்டவரல்ல என்பது தெளிவு.

திராவிடன் எனும் ஆதிமனிதன் ஆதாமின் வமிசவழியினராகிய திராவிடர் தம் ஆதி தகப்பன் உண்ட திராவிடம் தந்த பிறவிப்பயனாம் சாவினைப் போக்கி நிலமிசை நீடு வாழ்வு பெறவேண்டி, உலகப் பொருட்களின் பயன்தோறும் நன்மை தீமை பகுத்தறிந்து, பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்று, மலர்மிசை ஏகினான் மாணடி சேரும் ஆன்மீகச் சிந்தனையுடையோராகிய பகுத்தறிவாளராயினர்.

உலகின் முதல் மனிதன் ஆதாம் ஒரு திராவிடன் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளமையாலும், சிவஞானபோதத்தில் அவன் அவள் என்று ஆளப்பட்டுள்ள சொற்கள் ஆதிமனிதன் ஆதாமையும் அவன் மனைவி ஏவாளையும் சுட்டுவதாலும் அவன்வழி எழுந்த ஆன்மீகக் கருத்துக்களையே சிவஞானபோதத்தில் காணலாம். திராவிடர் ஆன்மா மலம் கழுவி அன்பரொடு மருவி திரமிடர் ஆன்மா ஆகுவதையே அது போதிக்கிறது. ஆகவே, சிவஞானபோதமும் ஒரு திரமிடர் ஆன்மீக நூலே எனலாம்.

திரமிடம் எனும் வீடுபேறடைந்து நீடுவாழ்வு பெறுதற்கு மலர்மிசை ஏகினான் எனத் திருவள்ளுவர் அழைக்கும் கர்த்தராகிய இயேசு கிறித்து என்றறியப்பட்ட கடவுளை அவர் இறைவன் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" - குறள் 10

எனக்கூறித் திருவள்ளுவர் திராவிடர் அனைவரையும் அவர்கள் இழந்த ஆளுகையையும், நல்வாழ்வையும் மறுபடியும் பெற்றுத் திரமிடராக நீடு வாழ்வதற்கு, உலக இரட்சகராக அறியப்படுகின்ற கடவுளாகிய இயேசு கிறித்துவின் பெருமையிற் சிறந்த திருவடியில் மனம்பொருந்தி கூடிச் சேருவதற்கு அழைப்பு விடுத்துள்ளார் எனப் புலனாகின்றது.

ஆகவே, மனித வாழ்வின் கேட்டுக்கும், இழப்புக்கும் காரணமாய் நின்று செயல்பட்ட சர்ப்பத்தின் தலையை நசுக்குவதற்கு வருவார் என்று முன்னறிவிக்கப்பட்டவர் திராவிடரின் மீட்பர் என்பதுவும், கிறித்து எனப்படும் மீட்பராகிய அவர் கர்த்தராகிய இயேசுவே என்பதுவும், வருவார் என்று திராவிடர் எதிர்பார்த்திருந்த அவரே நீடுவாழ்வினை அருள்பவர் என்பதால், அவரது மாணடியில் திருவள்ளுவர் மனிதர் அனைவரையும் கூட்டிச் சேர்க்கின்றார் என்பதுவும் தெளிவு.

இணைப்பு - I

பஸ்கா

"கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக. நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள். ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல்வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும், ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்கவேண்டும். செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்துகொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதிவரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, அன்று இராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள்.

பச்சையாகவும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல, அதின் தலையையும், அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக. அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல் விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக. அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா.

அந்த இராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருக ஜீவன்கள் மட்டும்,

முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன். நானே கர்த்தர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன். நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும். அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள்.

புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள் வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலிலிருந்து அறுப்புண்டு போவான். புளிப்பிடப்பட்ட யாதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாம்; உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள் என்று சொல் என்றார்." (யாத்திராகமம் 12 : 1-20)

பிற்காலங்களில், "ஆபிப் மாதத்தைக் கவனித்திருந்து, அதில் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கக்கடவாய்; ஆபிப் மாதத்திலே இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினாரே. கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில், உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவின் பலியாகிய ஆடுமாடுகளைப் பலியிடுவாயாக" (உபாகமம் 16 : 1, 2). "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும். உன்னுடைய வாசல்களில் எதிலும் நீ பஸ்காவை அடிக்கவேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிறபோது பஸ்காவை அடித்து, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொண்ட ஸ்தானத்திலே, அதைப் பொரித்துப் புசித்து, விடியற்காலத்திலே உன் கூடாரங்களுக்குத் திரும்பிப்போவாயாக." (உபாகமம் 16 : 5-7) என்ற வேதவசனங்களின்படி இந்தப் பஸ்கா பலி வீடுகளிலல்லாமல், தேவனுடைய ஆலயத்திலே பலியிடப்பட்டு குடும்ப விழாவானது ஆலய விழாவாக மாற்றியமைக்கப்பட்டது. பஸ்காவுடன் புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் இணைத்துக் கொள்ளப்பட்டது.

பஸ்காப் பண்டிகை கொண்டாடுவதற்காகப் புறத்தேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான யூதர்கள் எருசலேமுக்குப் போவார்கள். மற்ற

யூதர்களைப்போல, இயேசுவும் பண்டிகை காலத்திலே எருசலேமுக்குப் போவார். அவர் தாம் சிலுவையில் அறையப்படும்படி காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியில் தம்முடைய சீடர்களுடன் அன்பு விருந்து என்றும், ஐக்கிய விருந்து என்றும் இராப்போஜனம் என்றும் நற்கருணை என்றும் அழைக்கப்படும் பஸ்கா முறைமையை ஏற்படுத்தி, அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் அவருடைய திருச்சரீரத்தையும் இரத்தத்தையும் குறிப்பதாக ஏற்று போஜன பானமாகக்கொள்ளும்படி கட்டளையிட்டார்.

இணைப்பு - II

மன்னா :

மன்னா என்பது இஸ்ரவேலர் வனாந்திரத்தில் சாப்பிட்ட ஒருவிதமான ஆகாரம். அது வெள்ளையாகவும் கொத்துமல்லி போல சிறியதாயும் இருந்தது. இஸ்ரவேலர் அதைச்சமைத்து அல்லது அரைத்து அப்பமாகச் சுட்டுச் சாப்பிடுவார்கள். அதின் ருசி தேன் அல்லது ஒலிவ எண்ணெய் போல இருந்தது. அது இரவில் உண்டாகும். விடியற்காலத்தில் இஸ்ரவேலர் அதைப் பொறுக்கிக் கொள்ளவும் அதே நாளுக்குள்ளே அதைச் சாப்பிடவும் வேண்டும். அப்படியில்லாமல் அடுத்த நாளைக்காக எடுத்து வைத்தால் அது நாற்றமெடுத்துப்போகும்.

இயேசுகிறிஸ்து ஜீவ ஆகாரத்தைக் குறித்து இதை உவமையாய்ச் சொன்னபோது, இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சாப்பிட்ட மன்னாவைவிட ஜீவ ஆகாரம் மேன்மையானதென்பதைத் தெரிவிக்கிறார். பரிசுத்த பவுல் இதற்கு ஞானபோஜனம் என்னும் பெயர் சொல்லுகிறார். உபத்திரவப்பட்டவர்களுக்கு இயேசுகிறிஸ்து அருளும் உதவிக்கு மறைவான மன்னா என்று பெயர்.

இணைப்பு - III

மெல்கிசேதேக்கு :

இவன் சாலேமின் ராஜாவும் உன்னதமான தேவனின் ஆசாரியனுமாய் இருந்தான் என்றும், படையெடுத்துவந்த ராஜாக்களை வென்றபிறகு ஆபிரகாம் இவனுக்கு தசமபாகத்தைக் கொடுத்தான் என்றும் ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆபிரகாம் இவனுக்குத் தசமபாகங் கொடுத்ததினாலே எபிரேய வேதசாஸ்திரிகள் மெல்கிசேதேக்கைச் சிறப்பித்து அவன் தங்களுக்கு

வரும் மீட்பருக்கு முன்னடையாளமாய் இருந்தான் என்றும், அவன் அந்த மீட்பரின் ராஜத்துவத்தையும் அந்தமில்லாத ஆசாரியத்துவத்தையும் குறிப்பிடுகிறான் என்றும் நினைத்தார்கள்.

இதன்படி எபிரேயர்களுக்கு நிருபம் எழுதினவன் மெல்கிசேதேக்கு மீட்பராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருந்தான் என்னும் கோட்பாட்டை விவரித்துச் சொல்லுகிறான். இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அர்த்தமாம். இவன் தகப்பனும் தாயும் வமிச வரலாறும் இல்லாதவன். இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான் என்றும் தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக் கட்டளை பெற்றிருக்கிற லேவி புத்திரருடைய வமிச வரிசையில் வராதவன் என்றும், பிழைத்திருக்கிறான் என்று சாட்சி பெற்றவன் என்றும் குறிப்பிட்டுள்ளான்.

குறுக்க விளக்கம்

அப்	-	அப்போஸ்தலர், பரிசுத்த வேதாகமம்
ஆதி	-	ஆதியாகமம்
எண்	-	எண்ணாகமம்
எபி	-	எபிரேயர்
எபே	-	எபேசியர்
எரே	-	எரேமியா
ஏசா	-	ஏசாயா
ஓசி	-	ஓசியா
I கொரி	-	I கொரிந்தியர்
கொலொ	-	கொலொசேயர்
சங்	-	சங்கீதம்
I தீமோ	-	I தீமோத்தேயு
II தெச	-	II தெசலோனிக்கேயர்
நீதி	-	நீதிமொழிகள்
பிலிப்	-	பிலிப்பியர்
பேது	-	பேதுரு
மத்	-	மத்தேயு
மாற்	-	மாற்கு
மீகா	-	மீகா
யோ	-	யோவான்
I யோ	-	I யோவான்
ரோ	-	ரோமர்
லூக்	-	லூக்கா
லேவி	-	லேவியராகமம்
இராம	-	இராமலிங்கம்பிள்ளை
கா.சு	-	கா. சுப்பிரமணியபிள்ளை
சாமி. சிதம்	-	சாமி. சிதம்பரனார்
பரிப்	-	பரிப்பெருமாள்
வரத	-	ஜி. வரதராஜபிள்ளை

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

1. தென் இந்திய வரலாறு, முதற்பகுதி - 1994
   - கே.கே. பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், 14 பீட்டர்ஸ் சானல், சென்னை 600 014
2. தென் இந்திய வரலாறு (எம்.ஏ. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மேற்பட்டப்படிப்பிற்குரியது) 1987
   டாக்டர் ஏ. சுவாமிநாதன், தீபா பதிப்பகம், 45, லாசரஸ் சர்ச் ரோடு, சாந்தோம், சென்னை - 28
3. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், முதல் தொகுதி 1974
   பதிப்பாசிரியர் வே. ஆனைமுத்து, சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி2
4. பண்டைய தமிழகம் 1999 - பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், குமரன் பப்ளிஸர்ஸ்,
5. இந்திய சரித்திர வரலாற்றுக்குறிப்புகள் - 1983
   தேவகோட்டை பி. நாராயணன், புத்தகப் பூங்கா, 29, நல்லண்ண முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை 600 014
6. தமிழக வரலாறு 1993 - டாக்டர் ஏ. சுவாமிநாதன்,
   தீபா பதிப்பகம், 99 வீரவாஞ்சிநாதன் தெரு, பெருங்குடி, சென்னை - 96
7. தமிழ் இந்தியா 1995 - ந.சி. கந்தையா பிள்ளை
   திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை - 1
8. திராவிடத் தாய் 2000 - மொழி ஞாயிறு - ஞா. தேவ நேய பாவணர், தமிழ் மண் பதிப்பகம், 293, அகமது வணிக வளாகம்,
   திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
9. திருக்குறள் (மூலமும் பரிமேலழகருரையும்) 1939
   - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி & சென்னை
10. திருக்குறள் உரைக்களஞ்சியம் (பொருட்பால் - அரசியல்)
    - பத்மபூஷன் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர், பதிப்புத்துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை 625 021
11. திருக்குறள் விரிவுரை (பாயிரம்) 1948
    திரு. வி. கலியாணசுந்தரனார், சாது அச்சுக்கூடம் இராயப்பேட்டை, சென்னை
12. இந்தியா ஒரு கிறிஸ்துவ நாடு 1974
    அ. வேதமுத்து, ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், கொட்டாரம், குமரி மாவட்டம்.
13. கிறிஸ்தவ கீர்த்தனைகள் 1972
    கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், பார்க் டவுண், மெட்ராஸ் - 3
14. தமிழ்ச் சைவம், 1972
    தயானந்தன் பிரான்சிஸ், கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு, பார்க் டவுண், மெட்ராஸ் - 3

15. பரிசுத்த வேதாகமம் 1987
இந்திய வேதாகமச் சங்கம், 20 மகாத்மா காந்தி சாலை, பெங்களூர்.

16. திருவிவிலியம், (பொதுமொழி பெயர்ப்பு) 95-96
இந்திய வேதாகமச் சங்கம், 206 மகாத்மாகாந்தி சாலை, பெங்களூர் 560 001.

17. கழகத் தமிழ் அகராதி 1983
(கழகப் புலவர் தொகுத்தது)
திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 79, பிரகாசம் சாலை, (பிராட்வே) சென்னை - 108

18. தமிழ் - ஆங்கில அகராதி 1995
எம். வின்சுலோ, ஆசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், 5 ஸ்ரீபுரம், முதல் தெரு, மெட்ராஸ் 600 014

19. அபிதான சிந்தாமணி, 1984&1993
அ. சிங்காரவேலு முதலியார், ஆசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், 5 ஸ்ரீபுரம், முதல் தெரு, மெட்ராஸ் 600 014

20. தமிழ் மொழியகராதி 1984, 1993, 2002 நா. கதிரைவேற்பிள்ளை,
ஆசியன் எஜுக்கேஷனல் சர்வீஸஸ், புதுடில்லி - 110 016

21. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
முதன்மடலம் - முதற்பகுதி - 1985
மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவணர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை

22. Tamil Lexicon supplement 1939 University of Madras

23. இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு (கில்பர்ட் சிலேட்டர்) 1963 மொழிபெயர்ப்பாசிரியர், பன்மொழிப்புலவர், திரு. க. அப்பாத்துரை திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை - 1

24. பாட்டும் தொகையும் 1981
ஆசிரியர் குழு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 600 098

25. பதினெண் கீழ்கணக்கு - 1981
ஆசிரியர் குழு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 600 098

26. வேத அகராதி (ஒன்று முதல் ஐந்து பாகங்கள்) 1963
எ.சி. கிலேற்றன் ஐயர், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், பார்க் டவுண், மெட்ராஸ் - 3.

27. விவிலியக் களஞ்சியம் IV 1994. பதிப்பாசிரியர் 'தியாகு', விவிலிய அறிமுகம், தியான ஆசிரமம், சென்னை - 28.

* * *

நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ், நாகர்கோவில். ✆ : 233853

வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு முயற்சிகளின் பின்னணியில் தோன்றிய பல நூல்களில் திரு. ஞா. இராஜன் சிகாமணி அவர்களின் 'ஆதி மனிதன் ஆதாம் ஒரு திராவிடன்' எனும் இந்நூலும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

Dr. G. ஜாண் சாமுவேல்,
நிறுவனர், ஆசியவியல் நிறுவனம்.

தரா + விடன் → தராவிடன் என்னும் சொல்லின் திரிபு திராவிடன்; தமி + எழு + மொழி = தமிழ்மொழி என்பன போன்ற வேர்ச்சொல்லடிப்படையில், நூலாசிரியர் புதிய கோணத்தில் சிந்தித்துப் புதுப்பொருள் காண முனைந்துள்ளார்.

'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்' என்பது முதல் மாந்தன் ஆதாமைச் சுட்டுகிறது என அவர் காட்டும் காரணங்கள் இன்னும் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

பேராசிரியர். முனைவர் **யா.தா. பாசுகரதாசு,**
பாடத்திட்ட இயக்குநர், தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்.

'கடவுள் வான் நீத்தார்' எனும் வாசகத்தினை திருக்குறளின் முதல் மூன்று அத்தியாயங்களிலிருந்து பக்குவமாக வடித்தெடுத்து, 'கடவுள் இயேசுவில் உலகினை மீட்க வந்தார்' எனும் நற்செய்தியை வள்ளுவர் இப்படிக் கூறியுள்ளார் என்கிறார்.

Rev. Dr. ஜாஷ்வா சிரோன்மணி,
முதல்வர், கன்கார்டியா இறையியல் கல்லூரி.

திராவிடம் என்ற சொல்லுக்கு இதுவரையிலும் நாம் அறிந்திராத பல விளக்கங்களை ஆதிமனிதனாகிய ஆதாமுடன் தொடர்புபடுத்தி நூலாசிரியர் விளக்கியுள்ளார். தமிழ் மொழியிலிருந்தே தமது விளக்கங்களை முன் வைத்துள்ளார். திருக்குறளில் வரும் சில சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் ஆசிரியர் தரும் விளக்கங்கள் வியப்பை விளைவிக்கின்றன.

திரு. எம். சுந்தர் ஏசுவடியான்
நிறுவனர், உலக திராவிட மையம்.